# புதுமலர்

புதுமலர் பதிப்பகம்
ஈரோடு

**புதுமலர் - 6** ஏப்ரல் - சூன் 2024
திருவள்ளுவர் ஆண்டு 2055

| | |
|---|---|
| ஆசிரியர் | : **கண.குறிஞ்சி** |
| இதழ் முகவரி : | : 6, முதல் வீதி, சக்தி நகர் மேற்கு, திண்டல் (அஞ்சல்) ஈரோடு 638 012. |
| இதழ் தொடர்பு எண் | : **94433 07681** |
| மின்னஞ்சல் | : gana.kurinji@gmail.com |
| வடிவமைப்பு | : புதுமலர் |
| தனி இதழ் | : ரூ. 100 |
| ஆண்டுக் கட்டணம் | : ரூ. 400 |
| மூன்றாண்டுக் கட்டணம் | : ரூ. 1000 |

**நெறியாளர்கள்**

- **வீ.அரசு**
- **பொதியவெற்பன்**
- **ஜமாலன்**
- **ரவி குமாரசாமி**

இதழுக்கான கட்டணம் அனுப்பியவர்கள் உரிய தொகை அனுப்பிய பிறகு, மறவாமல் கீழ்க்காணும் தொடர்பு எண் மூலம் அதன் விவரத்தைத் தெரிவிக்குமாறு கனிவுடன் வேண்டுகிறோம் இல்லாவிடின், இதழை அனுப்புவதில் சிரமம் ஏற்படும்.

**புலனம் (வாட்ஸ்அப்) மூலம் தகவல் தெரிவிப்பதை உறுதியாகத் தவிர்க்கவும்**

ஆண்டுக்கட்டணம் குறித்துத்தகவல் தெரிவிக்க வேண்டிய தொடர்பு எண்: 94433 07681

***முன்னட்டை ஓவியம்-ஓவியர் சுந்தரன்***

புதுமலர் இதழுக்கு ஆண்டுக் கட்டணம் செலுத்த வேண்டிய வங்கிக் கணக்கு விவரம்

G. SHANMUGA SUNDARAM

INDIAN BANK, THINDAL BRANCH, ERODE

S/B A/C no. 7390 144 253 IFSC NO. IDIB000T202

**G Pay – 94433 07681 – G. Shanmuga Sundaram**

## உள்ளடக்கம்


**பக்கம்**

(1) இதழின் குரல் 04

(2) பாவேந்தர் - சில நினைவுகள் :

- ஈரோடு **தமிழன்பன்** 05

(3) தமிழ் நவீனத்துவ மரபில்
பாரதியும், பாரதிதாசனும்

**- ஜமாலன்** 08

(4) புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் கவிதைகளில்
தமிழும் சமூகமும்

**- முனைவர் ஆ. தனஞ்செயன்** 20

(5) பாரதிதாசனும் புதுமைப்பித்தனும்

**- பொதியவெற்பன்** 37

(6) பாரதிதாசன் தமிழ் பின் காலனியத்தின்
முன்னோடி!

**- இரா.முரளி** 49

(7) பாவேந்தர் தமிழ்

**- இராமமூர்த்தி** 55

(8) தி இந்து குழுமம் தமிழ் திசை சார்பாக
வெளியிடப்பட்ட **'என்றும் தமிழர் தலைவர்'**
பெருநூல் வெளியீட்டு விழா 77

(9) பாவேந்தரின் சிந்தனைப் பரிமாணங்கள்

**- கண. குறிஞ்சி** 85

(10) வட்ட மேசையில் சுயமரியாதை
இதழியலின் இருக்கை

**- மணிகோ பன்னீர்செல்வம்** 100

(11) கவிதையின் மையத்திலும் அதன் ஓரங்களிலும்
பாரதிதாசனின் ''அழகின் சிரிப்பு''

**- எஸ். சண்முகம்** 113

(12) பெரியார் ஒளியில் பாரதிதாசன்

**- செந்தலை ந. கவுதமன்** 118

## *இதழின் குரல்*

புதுமலர் இதழ் சார்பாக ஏற்கெனவே வள்ளலார் சிறப்பிதழ், கவிஞர் தமிழ் ஒளி சிறப்பிதழ் வெளியிட்டோம். இந்த இரண்டு ஆவணச் சிறப்பிதழ்களும் மிகப்பெரும் வரவேற்பைப் பெற்றன. இப்பொழுது பாவேந்தர் பிறந்த நாளும், நினைவு நாளும் வரக்கூடிய ஏப்ரலில் பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் குறித்த ஆவணச் சிறப்பிதழ் வெளிவருகிறது. இவ்விதழில் வழக்கம்போல் மிகச் சிறப்பான ஆய்வுக் கட்டுரைகள் வெளி வந்துள்ளன.

பாரதிதாசனை நினைவுகூரும் இம்மாதத்தில் இரண்டு கோரிக்கைகளைத் தமிழ்நாடு அரசுக்குச் சமர்ப்பிக்க விரும்புகிறோம். **பாரதிதாசன் அவர்களின் அனைத்துப் படைப்புக்களையும் ஆங்கிலம் உள்ளிட்ட பல்வேறு மொழிகளில் மொழியாக்கம் செய்து அரசே மலிவு விலையில் வெளியிட வேண்டும்.**

அடுத்து மூடநம்பிக்கைக்கு எதிராகக் குரல் கொடுத்த பகுத்தறிவுப் பாவலனாகத் திகழ்ந்தவர் பாரதிதாசன் அவர்கள். கவிஞரைப் போலவே மகராஷ்டிர மாநிலத்தில் மூடநம்பிக்கைக்கு எதிராகத் தொடர்ந்து குரல் கொடுத்துப் போராடி வந்தவர் டாக்டர் நரேந்திர தபோல்கர் அவர்கள். அது மட்டுமல்லாமல், மூட நம்பிக்கைகளை ஒழித்துக் கட்டச் சிறப்புச் சட்டம் இயற்றக் கோரிச் சமரசமில்லாமல் பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்து வந்தார் அவர். மூட நம்பிக்கைகளை அம்பலப்படுத்திப் பகுத்தறிவுக் கருத்துக்களைப் பரப்புரை செய்ததால் எரிச்சலுற்ற இந்து சநாதனவாதிகள் அவரைச் சுட்டுப் படுகொலை செய்தனர். இக்கொடிய செயலைக் கண்டித்து டாக்டர் நரேந்திர தபோல்கருக்கு ஆதரவாக மக்கள் கிளர்ந்தெழுந்தனர். எனவே மிகுந்த அறச்சீற்றத்தோடு போராடும் மக்களை அமைதிப்படுத்த மஹராஷ்டிர அரசு. நரேந்திர தபோல்கர் விரும்பிய மூடநம்பிக்கை ஒழிப்பு சட்டத்தைச் சட்டமன்றத்தில் நிறைவேற்றியது. அதே போல் தந்தை பெரியாரின் பகுத்தறிவுக் கோட்பாடுகளை எளிய வடிவில் மக்களிடம் கொண்டு சென்ற பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் நினைவாக மகராஷ்டிராவைப் போல் **மூடநம்பிக்கை ஒழிப்புச் சட்டத்தைத் தமிழக அரசு கொண்டு வர வேண்டும்**. இவ்விரு கோரிக்கைகளையும் நிறை வேற்றுவதே பாவேந்தர் பாரதிதாசன் அவர்களுக்குச் செய்யும் உண்மையான அஞ்சலியாக இருக்கும். இதற்கான அரசியல் அழுத்தத்தைச் சனநாயக சக்திகள் தமிழ்நாடு அரசுக்குத் தந்து விரைவில் மூடநம்பிக்கையற்ற தமிழ்நாட்டை உருவாக்கத் துணை நிற்க வேண்டும்.

# பாவேந்தர் - சில நினைவுகள்

**ஈரோடு தமிழன்பன்**

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் வாழ்ந்த காலத்தில் தமிழகம் அவரை அவர் தகுதிக்கு ஏற்பக் கொண்டாடவில்லை என்றாலும் அறவே கைவிட்டுவிடவில்லை. அவரைத் திராவிட இயக்கம் தூக்கிப் பிடித்ததால்தான் ந.பிச்சமூர்த்தி போன்றவர்களின் சிறப்புகள் பேசப்படாமற்போயிற்று என்று ஆய்வாளர்கள் சிலர் முன்வைத்த கருத்துகளும் உண்டு. ஆயின் திராவிட இயக்கம் பாரதிதாசனைத் தூக்கிப் பிடித்ததாலேயே அவரைத் தொட அஞ்சி விலகியவர்கள் பலர் என்பதே வரலாறு.விலகிய சிறப்புகளும் பல. உலகப்பார்வையோடு எண்ணிலாக்கவிதைகள் எழுதிய அவரை ஓர் உள்ளூர்க் கவிஞர் என்று சுருக்கிவைத்துத் திறனாய்வு செய்தவர்களும் உண்டு. நான் தக்க சான்றுகளோடு நோபல் பரிசு பெற்ற **பாப்லோ நெருதாவுடன்** அவரை ஒப்பிட்டுக் கட்டுரை எழுதியபோது அதை ஒப்ப முடியாமல் உள்ளம் கொதித்தவர்கள் உண்டு. முற்போக்கு இடதுசாரிப் பொதுவுடைமையாளர்களும், பெரியாரியத் தாக்கம் பெரிதாகப் பாரதிதாசனிடம் இருந்ததாலேயே அவரை உரிய இடத்தில் வைத்துப் பார்க்கவோ பாராட்டவோ முன்வரவில்லை.பாரதிதாசன் பாடல்களைத் தொகுத்து நோக்கினால் செம்பாதி தமிழ் உணர்வு முதன்மை கொண்டதாகவும் மற்றொரு செம்பாதி பொதுவுடைமை பற்றியதாகவும் இருக்கும் என்று பேராசிரியர் மருதநாயகம் குறிப்பிடுகிறார்.

நானா பொதுவுடையமைக்கு விரோதி ? என்ற தலைப்பிலேயே பாரதிதாசன் ஒரு கவிதையும் எழுதியுள்ளார். பொவுடைமைக் கட்சித் தலைவர் ஜீவாவின்பால் பேரன்புகொண்டவர் பாரதிதாசன்.

ஜீவா இறந்தபோது அவரைப்பாராட்டியும் அவர் மறைவுக்கு மனம் கலங்கியும் பாரதிதாசன் 1963ல் எழுதிய வெண்பாக்களே அவர் எழுதிய கடைசியான கவிதைகள் என்று ஜீவபாரதி உலகப்பண் பாட்டு என்ற நூலில் குறிப்பிடுகிறார்.ஆயின் அதற்குப் பிறகும் அவர் கவிதைகள் எழுதியுள்ளார். கொங்குநாட்டு மடத்துக்குளத்திலும் காஞ் சிபுரம் பச்சையப்பன் கல்லூரியிலும் நடைபெற்ற கவியரங்குகளில் தலைமையேற்றுக் கவிதைகள் வழங்கியுள்ளார். காஞ்சிக் கவியரங்கில் பாடிய தலைமைக் கவிதை பேராசிரியர் மு.பி.பாலசுப்பிரமணியம் நடத்திய தமிழாலயம் ஏட்டில் வெளிவந்தது. மடத்துக்குளத்துக் கவியரங்கக்கவிதை பழநி இளங்கம்பன் ஏட்டில் வெளியிடப்பட்டது. 1963 நவம்பரில் இராசிபுரம் அரங்கசாமி, தாம் நடத்துகிற மாநாட்டில் கலந்துகொள்ள வருமாறு ஒப்புதல்கேட்டுக் கடிதம் எழுதியிருந்தார்.அந்தக்கடிதம் பாரதிதாசனாருக்கு வந்தபோது நான் சென்னையில் அவர்வீட்டில் இருந்தேன். வருவதற்கில்லை என்ற மறுமொழியை எழுதுமாறு என்னைப் பணித்தார். ஆனால் இராசிபுரத்திற்கு ஒப்பினால் அப்படியே ஈரோட்டுக்கும்அழைத்துக் கொள்ளலாமே என்ற ஆசையில் அவரிம் நயமாகப்பேசி நான்தான் அதை இசைவுக்கடிதம் ஆக்கினேன்.

ஈரோட்டில் மூன்று நாள்கள் மிகுந்த மகிழச்சியோடு தங்கி யிருந்தார்; பல நிகழ்ச்சிகளில் பங்கேற்றார்.

தன் வீட்டை அடைமானம் வைத்துப் பெற்ற பணத்தில் பாண்டியன்பரிசு என்னும் தன்காவியத்தைத் திரைப்படமாக்கச் சென்னைவந்த பாரதிதாசன் ஏமாற்றங்களை அடுக்கடுக்காகப் பெற்று, உடல்நலமும் கெட்டு, சீர்குலைந்து போனார். அச்சூழ்நிலையில் ஒருநாள் அவரைப் பார்க்க வந்த நடிகவேள் எம்.ஆர்.இராதா “எதுக்கையா உங்களுக்கு இந்த ஆசை? பேசாமல் கவிதை எழுதிக் கொண்டிருப்பதை விட்டுவிட்டு இங்கு வந்து படம்கிடம்னு மாட்டிக்கிட்டு அழிஞ்சு போறீங்க?” என்று கேட்டார். இராதா சொன்னதே மெய்யாகப்போயிற்று. அவருக்கு வேண்டிய அரசியல் சுற்றமும் அருகில் இல்லை.சென்னை பொது மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார். அந்நிலையிலும் எனக்கு ஒருகடிதம் எழுதினார்.14.4.75-ல் எழுதப்பட்ட அக்கடிதம் அவர் எழுதிய கடைசிக்கடிதம் ஆகும். 21.4.75ல் பாரதிதாசன் இறந்துவிட்டார்.

புதுவையில் அவர் குடும்பம் தடுமாறித்தவித்தது. தலைமகனான மன்னர் மன்னனுக்குத் தக்க வேலைவாய்ப்பு இல்லை. அடைமானம் வைக்கப்பட்ட வீட்டையும் மீட்கமுடியாத நெருக்கடி. இந்நிலை யில்தான் மன்னர்மன்னன் புதுவை முதல்வராக அப்போதிருந்த சுப்பையாவைக் காணச் சென்றிருக்கிறார். பொதுவெளியில மன்னர்மன்னனும் சுப்பையாவை குறைகள் சொல்லிக் கொண்டிருந்த

காலம் அது. ஆனால் மன்னர்மன்னனைக் கண்டதும் நெகிழ்ச்சியோடு சுப்பையா வரவேற்று அன்புகாட்டினார்.சுப்பையாவை விட்டுவைப்பது தப்பையா என்றெல்லாம் பாரதிதாசன் குயில்இதழில் எழுதியதை மறந்துவிட்டு அவர்குடும்பத்துக்கு உதவ முதல்வர் சுப்பையா முன்வந்தார். அடைமானத்திலிருந்து வீட்டை மீட்டுக்கொடுத்தார்.

தக்கவேலை இல்லாமல் தவித்த மன்னர்மன்னனுக்கு அப்போது மத்திய அரசில் செய்தி ஒலிபரப்புத்துறை அமைச்சராக இருந்த நந்தினி சத்பதியிடம் பரிந்துரைத்து அகில இந்திய வானொலியில் வேலை வாய்ப்புக் கிடைக்கச்செய்தார்.

அப்போது மன்னரமன்னனிடம் சொல்லியது "கவிஞருக்குச் சோவியத்துக்குச் செல்லும் வாய்ப்பை நாங்கள் ஏற்படுத்திக் கொடுத்திருக்கவேண்டும் அங்கு நடந்த உலக அமைதிப்பேரவை மாநாட்டில் கலந்து கொள்ளக்கவிஞரை அனுப்ப வாய்ப்பு இருந்தது. எங்கள் பொதுவுடைமைக் கட்சி காட்டிய தயக்கம், அது நடைபெறாமற் போனது, அதற்கெல்லாம் பரிகாரமாக உனக்கு நான் இதைச் செய்யக் கடமைப் பட்டவன்"

ஆயின் என்ன துயரம்! ஒரு மாபெரும் கவிஞனின் விமானம் ஏறவேண்டும், வெளிநாடு காணவேண்டும் என்னும் ஆசைக்கனவு கானல் படகில் மூழ்கியே போயிற்று, நிறைவேறவில்லை.

❖❖❖

# தமிழ் நவீனத்துவ மரபில் பாரதியும், பாரதிதாசனும்

ஜமாலன்

*“தமிழ்ச்சுவையை இங்கிலீஷால் அறிய முடியுமா? தமிழ்ப் பாட்டின் இனிமை தமிழனுக்குத் தெரியவில்லை. இங்கிலீஷ்காரன் தமிழ்ப்பாட்டு நன்றாயிருக்கிறது என்று சொன்ன பிறகுதான் தமிழனுக்குத் தெரிகிறது.” பாரதிதாசன். (29, 1990)*

*“கவிதையில் தெய்வத் தன்மையிருக்கிறதென்கிறார்கள். அது வேண்டாம்; மனிதத் தன்மையிருந்தால் போதும். தெய்வத்தன்மை யென்று சொல்லிக் குட்டிச்சுவராகப் போய்விட்டோம்.” பாரதிதாசன் (20,1990)*

## 1. பாரதியும், பாரதிதாசனும்

“பாரதியார் இன்று நமக்கு வைத்து விட்டுப் போன சொத்துகள் பல, அவற்றில் முக்கியமானவற்றைக் குறிப்பிட வேண்டின் ஞானரதம், குயில்பாட்டு, பாஞ்சாலி சபதம், கனகசுப்புரத்தினம் என்ற பாரதிதாசன் என்று சொல்ல வேண்டும்” என்று தமிழ் நவீனச் சிறுகதைச் சிற்பிகளில் ஒருவரான புதுமைப்பித்தனால் (25,1986) குறிப்பிடப்பட்ட கனக சுப்புரத்தினம் என்கிற பாரதிதாசன் தமிழியக்கத்தின், தமிழ் மறுமலர்ச்சியின் முன்னொடிக் கவிஞர் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க வாய்ப்பில்லை. ஆனால், தமிழ் மறுமலர்ச்சியுடன் உருவான “தமிழ் நவீனத்துவம்” பாரதிதாசனை ஒரு மரபான தமிழ் பண்டிதக் கவிஞராகத் தமிழ் சீரிய இலக்கிய உலகம் எனும் சிறுபத்திரிக்கை சார்ந்த கலைமுதல்வாத உலகில் குறிநிலைப்படுத்தி வைத்துள்ளது. குறிப்பாக பாரதிக்கு தரப்பட்ட

நவீன வெளிச்சம் சிறுபத்திரிக்கை உலகில் பாரதிதாசனுக்கு தரப்படவில்லை என்பது தமிழ் இலக்கிய வரலாற்றில் எதிர்கொள்ள வேண்டிய முக்கியக் கேள்வி.

இதன் பின்னணியில் இயங்கியது கலை குறித்து தமிழில் இயங்கிய நவீனத்துவம் சார்ந்த ஆதிக்கப் பார்வையே. அதாவது மறுமலர்ச்சி கருதுகோள் முன்வைத்த கருத்தியல்களான "மனிதநேயம், பெண் விடுதலை, தனிமனித சுதந்திரம், சமூக முன்னேற்றம், கல்வி அறிவு, பகுத்தறிவு தர்க்கம், சமத்துவம், சகோதரத்துவம்" ஆகியவற்றைவிட கலைசார்ந்த அழகியல், இரசனைவாதம் குறித்த இந்திய மெய்யியல் சார்ந்த பார்வையே கலையை ஆள்வதாகத் தமிழ்ச் சூழலில் வேர் கொண்ட தமிழ் நவீனத்துவமே இதற்குக் காரணம். மேற்கத்திய நவீனத்துவம் வளர்ச்சியடையாத, குடியேற்றத் தமிழகத்தில் தொழிற்படும்போது நிகழ்ந்த தகவமைப்பு என்று இதனைக் கூறலாம். தொழில்துறை வளர்ச்சியடைந்த மேற்கத்திய சமூகத்தில் நவீனத்துவம் என்பது பகுத்தறிவு சார்ந்த மறுமலர்ச்சி யுகமாகவும், அறிவொளிக் காலமாகவும் மலர்ந்தது. அது மதத்தை, மத நம்பிக்கைகளை பொதுத்தளத்திலிருந்து தனித்தளத்திற்கு நகர்த்தியது. இதனைத் தமிழியம் சார்ந்த கருதுகோளாகப் புறவெளியிலிருந்து மதத்தை, அகவெளிக்குள் நகர்த்தியது என்று புரிந்து கொள்ளலாம். ஆனால், இந்தியாவில் நவீனத்துவம் வழக்கமாக இந்திய மெய்யியல் மற்றும் நிலமானியச் சிந்தனை அடிப்படையில், மதத்தையும், நம்பிக்கையை அகப்புற வெளிக்கானதாக மாற்றிக் கொண்டது. அதாவது, அகத்தில் மத நம்பிக்கையையும், புறத்தில் நாகரீகம் மற்றும் பகுத்தறிவுமான ஒரு கலப்பின இரண்டகத் தன்மைக் கொண்டதாக மாற்றிக் கொண்டது. அதனால் நவீனத்துவம் அகத்தில் கலை இலக்கியமாகவும், புறத்தில் அரசியலாகவும் வெளிப்பட்டது. குறிப்பாக, "தமிழ் நவீனத்துவம்" கலையை அகம் சார்ந்தும், அரசியலை புறம் சார்ந்தும் குறிநிலைப்படுத்திக் கொண்டது. அதன் விளைவு, கலை தனிவெளியிலும், அரசியல் பொதுவெளியிலும் இயங்குவதாக மாறியது.

இதற்குத் தோதான, ஓர் அரசியல் சமூகச் சூழல் சுதந்திரத்திற்கு முந்தைய, பிந்தைய இந்தியாவில் நிலவி வந்தது. அதில் உருவான ஆங்கிலம் படித்த ஒரு மேட்டிமை சார்ந்த குறிப்பாக பார்ப்பனியம் மற்றும் உயர்சாதிகளின் அழகியல் சார்ந்த பார்வையே கலைப் பார்வையாகத் தமிழில் ஆதிக்கம் பெறுகிறது. இப்பார்வை ஒருபுறம் தமிழின் மரபை மீறியதாகக் கூறிக்கொண்டு, தமிழை, தமிழ் இலக்கிய மரபைப் பல்கலைக் கழகங்களுக்குள் தள்ளியது. அங்கோ தமிழ் என்பது பழைமைவாதமாக உருப்பெற்றதே

தவிர, மரபின் தொடர்ச்சியானதாக அமையவில்லை. “இன்று, தமிழகத்தில் பழமையின் சிறப்பைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தால் போதும் என்னும் மனோபாவம் பொதுவாகப் பரவியிருக்கிறது. இது முன்னேற்றத்திற்கு வழி காட்டாது. பழைமையை உதறித் தள்ளிப் புது வழியை மேற்கொள்ளுபவன்தான் உண்மையான சேவை செய்தவன்.” (46,1990) என்று பாரதிதாசன் கட்டுரை ஒன்றில் குறிப்பிடுவதை கவனத்தில் கொள்ள வேண்டும். அதாவது பழைமைக்கும், மரபிற்குமான வேறுபாடு அறியாத ஓர் ஆய்வுப் பார்வையும், மரபைப் பேணுதல், போற்றுதல் என்ற பெயரில், பழைமையை போற்றும் ஒரு பார்வையுமே முன்னுக்கு வந்தது. சிந்தனையில் புதுமையும், வடிவத்தில் மொழி வெளிப்பாட்டில் பழமையும் என்பதாக அவை வெளிப்பட்டன. பழமை என்பது கால வழக்கொழிந்தது. மரபு என்பது காலத் தொடர்ச்சி கொண்டது. ஒரு சமூகம் பழமையைக் கைவிட வேண்டும். ஆனால், மரபைப் பேணவேண்டும். அதனால்தான் தொல்காப்பியம் மரபை ஒரு செய்யுள் உத்தியாக முன்வைக்கிறது. மரபு என்பது ஒரு சமூகத்தின் காலத் தொடர்ச்சியைப் பேணும் ஒரு காரணியாகும். மரபுகள் இல்லாவிட்டால் வரலாறு இல்லை. வரலாறு இல்லாவிட்டால் இனம் குறித்த கதையாடலே இல்லை. அதனால்தான் இனம் குறித்து நவீனத்துவ சிந்தனை வரலாறு என்கிற ஆணிவேர் மரபைத் தேடிச் செல்வதாக அமைகிறது.

இச்சூழலின் தொடர்ச்சியாக உருவான கலை மையவாதப் பார்வையானது சிறுபத்திரிகை மரபாகத் தமிழில் உருப்பெற்றது. காலனிய மற்றும் மேற்கின் பாதிப்பில் உருவான நவீனத்துவ கலைமரபு தமிழ்ச் சமூகத்தின் அகவெளியாகவும், நவீனத்துவ அரசியல்மரபு புறவெளியாகவும் வடிவம் பெற்றது. அதன் வெளிப்பாடாக, ‘தனித்தமிழ் இயக்கம்’, ‘திராவிட இயக்கம்’ போன்றவை தமிழ் மறுமலர்ச்சி அரசியலைப் பேசின. இவை இரண்டிலும் தமிழ் குறித்த இருவேறு உலகக் கண்ணோட்டம் இருந்ததைக் கவனிக்க வேண்டும். அதாவது, தனித்தமிழ் இயக்கம் சைவம் சார்ந்த, நம்பிக்கையை முன்வைக்கும் பக்தி மரபின் தொடர்ச்சியாகத் தமிழை முன்வைத்தபோது, திராவிட இயக்கம் சங்ககால இயற்கை சார்ந்த, தர்க்கநெறிப்பட்ட, அறம் சார்ந்த, சமயச் சார்பற்ற தமிழ் மரபை முன்வைத்தது. பக்தி மரபு பெரிய புராணத்தை முன்வைத்தபோது, பாட்டு மற்றும் தொகை நூல்களையும், திருக்குறளையும் முன்வைப்பதாகத் திராவிட மரபு அமைந்தது. இம்மரபுகளில் கலைசார்ந்து வெளிப்பட்ட இரண்டு இலக்கிய இயக்கங்களே பாரதியும், பாரதிதாசனும். அதில் பாரதி வைதீக நெறிவயப்பட்ட பாரத தேசியத்தையும், பாரதிதாசன் வைதீக எதிர்ப்பான தமிழ்த் தேசியத்தையும் முன்வைக்கும் கலை

இயக்கமாக முகிழ்ந்தனர்.

அதனால், மரபை மீறிய புதிய இலக்கிய ஆக்கத்தில் பாரதிக்குத் தந்த முக்கியத்துவத்தைக் கலை மையவாத தமிழ்ச் சிற்றிலக்கியத் தளத்தில் பாரதிதாசன் பெறவில்லை. காரணம், பாரதிதாசன், பாரதி போன்று வைதீக மரபில் தனது இலக்கியத்தைப் பெறாமல், அதற்கு எதிர் மரபில் குறிப்பாக தமிழின் தனித்துவ மரபில் கண்டடைந்ததே. அவ்வகையில் பாரதிக்கு நிகராகவும், குறிப்பிட்ட சில நவீனக் கருத்தியலில் பாரதியை மீறியும் வெளிப்பட்டவர் பாரதிதாசன். என்றாலும், இறுதிவரை பாரதியைத் தனது குருவாக வரித்துக் கொண்டவர். பாரதியின் அரசியலுக்கும், மெய்யியலுக்கும் எதிரான நிலைபாடு கொண்டிருந்தாலும், பாரதிதாசன், பாரதியின் மீது அளவற்ற மதிப்பை வைத்திருந்தார் என்பதே வரலாறு. பாரதியின் வரலாற்றை எழுதி அதனைத் திரைப்படமாக்கும் முயற்சியில் இறுதிவரை பாரதிதாசன் ஈடுபட்டு வந்துள்ளதைக் காணமுடிகிறது. அவரது வாழ்வின் இலட்சியமாக அதனைப் பதிவும் செய்துள்ளார்.

"நான் பாரதிதாசன் என்று புனைபெயர் வைத்துக் கொண்டுள்ளேன். அதற்குக் காரணம், அப்போது அவர் என் உள்ளத்தில் முதலிடம் பெற்றிருந்ததுதான். சாதிக் கொள்கையை நன்றாக, உண்மையாக எதிர்த்தவர் பாரதியார்தாம்! அவருக்கு முன் பன்னூற்றாண்டுகளுக்கு முன் அவ்வாறு சாதிக் கொள்கையை எதிர்த்த வரை நான் கண்டதில்லை. பாரதி எதிர்த்துப் பணிபுரியத் தொடங்கிய பன்னாட்களுக்குப் பின்னரே பெரியார் இயக்கம் தோன்றியது. பாரதியாரை நான் ஆதரித்ததும் பாரதிதாசன் என்று நான் புனைபெயர் வைத்துக் கொண்டதும், ஏதாவது ஒரு கூட்டத்தாரிடம் நன்மையை எண்ணியன்று. சாதி ஒழிப்பு விளம்பரம் ஆதல் வேண்டும் என்பதற்காகவும் பாரதியாரைப் போல எளிய நடையில் மக்களுக்கு இன்றைக்கு வேண்டிய கருத்தை வைத்துப் பாடல் இயற்ற வேண்டும் என்பதைப் புலவர்க்கு நினைவூட்ட வேண்டும் என்பதற்காகவுமே" என்று பாரதிதாசன் குறிப்பிடுவதைச் சுட்டுகிறார் கு.வெ. பாலசுப்ரமணியன்.

நவீனத்துவத்தின் புதிய இலக்கிய வடிவம், பொதுவான மனிதநேயச் சிந்தனை, பெண் விடுதலை, கல்வி, மறுமலர்ச்சி என பாரதி முன்னெடுத்த நவீனக் கூறுகளில் அவரது வேதச்சார்பு மற்றும் அத்வைதம் அவரைக் காலனியம் உருவாக்கிய இந்தியப் பெருந்தேசியத்திற்குள் அடைக்கலமாக்கியது. பாரதிதாசனையோ தமிழின் அவைதீக மரபு குறிப்பாக சங்கப்பாடல்களும், திருக்குறளும் சரியான நவீனத்துவக் கருத்தியலுக்குள் அதன் பகுத்தறிவு மெய் யியலுக்குள் கொண்டுவந்து, வைதீக, சனாதன, பார்ப்பனிய எதிர்ப்பாளராக, சுயமரியாதையாளராகக் கட்டமைத்தது. பாரதி

மதத்தை அதன் கருத்தியலை, நம்பிக்கையை ஏற்றுக்கொண்டார். ‘‘பாரதிக்கு எல்லா மதமும் ஒன்று. கூடுமானால் மதமே இல்லையென்றாலும் பரவாயில்லை.’’ (30,1990) என்று பாரதிதாசன் குறிப்பிடுகிறார். ஆனால், பாரதி தேசபக்தியும், தெய்வபக்தியும் ஒன்று என்பதாகக் கொண்டவர். பாரதிதாசனோ மதத்தையும், அதன் கருத்தியலையும், நம்பிக்கைகளையும் கடுமையாக எதிர்த்தார். ஒரு மதச்சார்பற்ற இலக்கிய ஆக்கத்தைத் தமிழின் மரபான பார்வையாகக் கொண்டிருந்தார். தமிழருக்கு மதமோ, சாதியோ இல்லை என்பதிலும், தமிழ் என்பது ஓர் ஆழ்தள சமூக நனவிலியாக அவரது கலை உற்பத்திக்கான மையப் புள்ளியாக அமைந்துள்ளது. அவரது ஒட்டுமொத்த இலக்கிய இயக்கமும் சுழலும் புள்ளி அல்லது அச்சாணி தமிழ்தான். தனது மொழியால் தமிழை முடிந்தவரை வெளிப்படுத்திவிடும் வேட்கையே அவரது இலக்கிய உற்பத்திக் களனாக இருந்துள்ளது. தமிழைப் பாட அவர் சலிப்புற்றதேயில்லை. தமிழ் என்ற பொது உடலைக் கட்டமைப்பதிலும், உலகளாவிய மனிதநேயத்தினை அதன் பொருட்திணிவாக்குவதிலும், உயிர், உடல் என அனைத்தும் தமிழ்தான் என்று காட்டுவதிலும் பாரதிதாசனுக்கு நிகரான மற்றொரு இலக்கியவாதியைத் தமிழ் வரலாற்றில் காண்பது அரிது.

‘‘தமிழுக்கு அமுதென்று பேர்’’ என்று கூறுவதில் தமிழ் ஓர் அழிவற்ற வாழ்வை அனைவருக்கும் தரும் ஒன்று என்பதையும், அதுவே அனைவருக்குமான வேராக உள்ளது என்பதையும் முழங்கியவர். அவர்தான் தமிழ் வரலாற்றில் ஒரு புதிய தமிழை, தமிழியக்க உணர்வுடன் படைத்தவர். காரணம், தமிழ் மரபில் கிளைத்து, தமிழுக்கு எதிரான வைதீகம் சார்ந்த, சமஸ்கிருத மரபை எதிர்த்தும் வேரூன்றி நின்றவர். தமிழ் மரபில் பல காப்பியங்களை அவர் எழுதுவதற்கான காரணம் சமஸ்கிருத காப்பிய மரபிற்கான சவாலை அவரது ஆழ்மனம் ஏற்றுக்கொண்டு இயங்கியது என்பதாக எண்ணத் தோன்றுகிறது. (முத்தமிழ் என்றுக் கூறிக்கொண்டு தமிழில் நாடகமே இல்லை என்பதால் நாடகங்களை நிறைய எழுதியதாக அவர் குறிப்பிடுவதில் உள்ள அவரது உள்ளக் கிடக்கையை ஒப்பிட்டு அறியலாம்.) அதாவது, நவீன இலக்கிய வடிவில் காப்பியம் என்ற பழைய வடிவை முன்கை எடுத்து அவர் படைத்திருப்பதற்குக் காரணம், சமஸ்கிருதக் காப்பிய மரபிற்கான ஒரு மொழிவயப்பட்ட சவால் என்றே கருதத் தோன்றுகிறது. காரணம், பாரதியின் ‘‘பாஞ்சாலி சபதம்’’தான் பாரதிதாசனை மிகவும் கவர்ந்த ஒன்றாக இருந்ததை அவர் சுட்டிக் காட்டுகிறார். தமிழை இவ்வளவு எளிமையாக அனைவருக்கும் புரியும் வண்ணம், வாசிப்பின்பம் நல்கும் விதத்தில் எழுதமுடியுமா என்று அவர்

தனது வியப்பைப் பதிவு செய்கிறார். அதன் பாதிப்பில் அவர் பல காப்பியங்களை எழுதுகிறார். பின்னாளில் குறிப்பாக மணிமேகலை மற்றும் கண்ணகி காப்பியத்தை எழுதுவதும் ஒரு இடையீட்டுப் பிரதியாகத் தமிழ்க் காப்பியத்தை கொள்வதால்தான். பாஞ்சாலி என்கிற சமஸ்கிருத பாரத மரபிற்கு ஒரு மாற்று மரபாக அவர் படைத்தவையே அவரது பல காப்பியங்கள். அக்காப்பியங்களில் முழுக்க தமிழ் மக்கள், தமிழ் நிலம், தமிழ் வாழ்வு, தமிழர்கள் என்பதையும், ஓர் இலட்சிய தமிழகத்தையும் கற்பனை செய்கிறார்.

அவர் படைக்க விரும்பிய இலட்சியத் தமிழர்களைப் பாத்திரங்களாகக் கொண்டே அவரது காப்பியங்கள் படைக்கப் பட்டுள்ளன. பல அந்நியர்கள் குறிப்பாக ஆரியர்களின் மேலாதிக்கத்திலிருந்து தமிழை காப்பதும், அதன் தனித்தன்மைகளை நிறுவுவதுமே அவரது கனவு. ‘‘குறிஞ்சித் திட்டு’’ இதற்கு ஒரு சான்றாகக் கொள்ளலாம்.அவரது இலட்சியத் தமிழகத்தை ஓர் குறியீடாகக் கொண்டும், அதன் மீதான மதங்களின் ஆதிக்கம் உருவான சதியையும் பேசுகிறது அக்காப்பியம். ஒரு அறிவார்ந்த, அற உணர்ச்சி கொண்ட தமிழ்ச் சமூகமே அவரது இலட்சியம் என்பதை அவரது காப்பியங்களில் உணர முடிகிறது. முடியாட்சியை ஒழித்து குடியாட்சியை, அதாவது மக்களாட்சியைக் கொண்டுவரும் அவரது காப்பிய முடிவுகளுக்கு மாறாக, அவரிடம் மூவேந்தர்களின் ஆட்சி குறித்த பெருமித உணர்வு இருந்ததைக் காணமுடிகிறது. தமிழ் மறுமலர்ச்சிக்கு அக்கனவு அவசியம் என்று அவர் கருதியிருக்கக் கூடும். ஏனென்றால், பழமைவாதத்தை எதிர்ப்பவராக அவர் இருந்துள்ளார், அதேநேரத்தில் மூவேந்தர் ஆட்சியைத் தமிழ்ப் பெருமித மரபாக அவர் காண்கிறார். தமிழ்தேசியப் பார்வையில் அதற்கான நியாயம் அதில் உள்ளது என்றாலும், அதன்பின் ஒரு மொழிப்பாசிசம், முடியாட்சியின் எதேச்சதிகாரம் ஒளிந்திருப்பதை அவர் கவனிக்கத் தவறியுள்ளார் என்பதைவிட, அதை அன்றைக்கான தேவையாக அவர் கருதியிருக்கக் கூடும். காரணம் தமிழர்கள் விழிப்பு கொள்ள வேண்டும், தன்னைத் தற்காத்துக் கொள்ள மறத்தமிழனாக மாற வேண்டும் என்பதை ஒரு போர்ப் பரணியாக தனது பல கவிதைகளில், பாடல்களில் முன்வைக்கிறார்.

தமிழ் ஒரு தெய்வீக மொழி என்ற கருத்தை அடியோடு மறுப்பவராக இருந்துள்ளார். தமிழ் மனித முயற்சியால், மனிதார்த்த உணர்வை அடிப்படையாகக் கொண்டு கட்டமைக்கப்பட்ட ஒரு மொழி என்ற கருத்தைக் கொண்டவராக இருந்துள்ளார். ‘‘தமிழ் சிவபெருமானால் செய்யப்பட்டது சிவபெருமானால் ஆராய்ந்து திருத்தம் செய்து தரப்பட்டது என்று கூறி மன நிறைவு அடைந்து தூங்கிக் கொண்டிருந்ததால்தான் இன்று தமிழின்

நிலை வருந்தத்தக்கதாகிவிட்டது. தமிழுக்கும் தெய்வத்திற்கும் தொடர்பிருக்கிறது என்றால் அந்த தெய்வம் எது? அப்படி என்று ஒன்று இருக்கிறதா?'' (64,1990) என்று கூறும் பாரதிதாசன் தமிழை ஓர் இயற்கை சார்ந்த மொழியாகவே முன்வைக்கிறார். இயற்கை குறித்த சங்கத்தமிழின் தாக்கம் அவரது பல கவிதைகளில் நிறைந்தோடி இன்பம் பயப்பதாக அமைந்துள்ளது. இயற்கை என்பது இரண்டுவிதங்களில் அவரிடம் பொருள்கொண்டதாக அமைகிறது. ஒன்று, தமிழ்ச் சங்க மரபில் பாடப்படும் இயற்கை. மற்றது, மறுமலர்ச்சிக்காலம் இறைவனுக்கு மாற்றாக முன்வைத்த இயற்கை. ஆக, இயற்கையைப் பாடுதல் என்பது தமிழ் அறிவொளி மரபின் புத்தெழுச்சியாக அவரிடம் இலக்கிய வடிவம் கொள்கிறது. மொழியின் அசையும், இசையும் அவருக்கு மிக முக்கியமானதொரு கோட்பாட்டுச் சிந்தனையாக அமைந்திருப்பதை அவரது இசை குறித்த பல பேச்சுகளில் வாசிக்க முடிகிறது. ஆக, தமிழ் என்பது தெய்வீக மொழி என்ற சைவச் சார்பான தமிழை நிராகரித்து, அதனை தொன்மை மரபுவாய்ந்த நாகரீகமான சமூகத்தின் இயற்கை சார்ந்த மொழியாக, பகுத்தறிவிற்கு உட்பட்ட மொழியாக மறு ஆக்கம் செய்துகாட்டும் பணியை தனது எழுத்தியக்கமாகக் கொண்டுள்ளார்.

**2. பாரதிதாசனின் குடும்பக் காப்பியங்கள்**

சி. சுப்ரமண்ய பாரதியின் கவிதா மண்டலத்தைச் சேர்ந்த பாரதிதாசன் பாரதியின் வேதஅத்வைதசமஸ்கிருத மரபிலிருந்து வெளிவந்தபின் திராவிடப்பகுத்தறிவு தமிழ் மரபில் எழுதப்பட்ட பல காப்பியங்களில் ஒன்று ''குடும்ப விளக்கு'' மற்றும் ''இருண்ட வீடு''. இவ்விரு காப்பியங்களும் பிரதிஎதிர்பிரதி (வெளிச்சம் X இருட்டு) என்ற அமைப்பில் எழுதப்பட்டவை. ஒரு திராவிடத் தமிழ் இலட்சியக் குடும்பத்தை ''குடும்ப விளக்கு'' முன்வைத்தால், இன்றைய மேல்தட்டுக் குடும்பம் ஒன்றின் நிலவுடமையின் பழம் மதிப்புக் கொண்ட கல்வியற்ற தன்மையை கூறுவதாக அமைந்துள்ளது ''இருண்ட வீடு''. கல்வி என்பது நவீனத்துவச் சிந்தனையின் மறுமலர்ச்சிவாதம் முன்வைத்த அறிவொளியை பரப்பும் விளக்கு என்பதே இரண்டு காவியங்களின் அடிப்படை படிமமாக அமைந்துள்ளது. ஒன்றில் கல்வி ஒளிவீசுவதால் அக்குடும்பம் இலக்கிய வகைப்பட்ட இலட்சியக் குடும்பம் ''குடும்ப விளக்காக'' ஒளி வீசுகிறது. மற்றது, கல்வி ஒளியேற்றப்படாத ''இருண்ட வீடு'' ஆகிறது என்பதை தனது கவித்துவ இயற்கை சார்ந்த கற்பனைப் பொருளாக முன்வைக்கிறார். கல்வியை அறிவொளியின் அடிப்படையாக முன்வைப்பது அவரது பல எழுத்துக்களில் காண முடிகிறது. கல்வி இல்லாத பெண்ணைக்

களர் நிலத்திற்கு ஒப்பிடுகிறார் பாரதிதாசன் என்பது அனைவரும் அறிந்த ஒன்றுதான். காரணம் பெண்கள் ஒரு சமூகத்தின் மறுஉற்பத்திக்கான காரணியாக அமைந்துள்ளனர். அவர்கள் கல்வி பெறுவதும், சமஉரிமை பெற்று அறிவாற்றலுடன் விளங்குவதுமே ஒரு நல்ல சமூகத்திற்கான அடிப்படை என்பதை வலியுறுத்தும் வகையில் அவர் எண்ணற்ற பெண் பாத்திரங்களை தனது காப்பியங்களில் படைத்துக் காட்டுகிறார்.

பாரதிதாசனின் வெளிப்பாட்டு முறையில் கவிதையும், குறிப்பாக அவரது காப்பியக் கவிதைகளும் தலையாய இடத்தைப் பிடிக்கக் கூடியதாக அமைந்துள்ளது. அவரது காப்பியங்களில் மையமான பாத்திரத்தைப் பெண்களே ஆற்றும்படி அமைத்திருப்பது கவனத்தைக் கவருவதாக உள்ளது. “குறிஞ்சித் திட்டு” என்ற காப்பியத்தில் வரும் ஆரியத்தின் குறியீடான “விநோதை” என்ற பெண் பாத்திரம் மிக வலுவானதாக அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். பொதுவாக பிற காப்பியங்களில் அவரது பெண் என்ற படிமம் தமிழ் மொழி தொடங்கி, தமிழ் நிலம், தமிழ் உணர்வு, தமிழ்ச் சங்க மரபின் அகம், தமிழரின் நம்பிக்கை, வழிபாடு என பல வடிவங்களில் உருப்பெறுவதாக அமைந்துள்ளது. அவர், பாரதியின் பாதிப்பில் பெண் விடுதலை, சமூக சீர்திருத்தம், சாதி மறுப்பு, தீண்டாமை எதிர்ப்பு ஆகியவற்றைப் பேசத் தொடங்கினாலும், ஆரம்பகாலத்தில் அதில் பாரதம், தெய்வ நம்பிக்கை, தேசபக்தி உள்ளிட்ட வடமொழி வழிப்பட்ட பாரத தேசம் குறித்த படிமமே ஆட்கொண்டிருப்பதைக் காணமுடிகிறது.

பாரதிதாசன் “பாரதத்தை ‘தெய்வீகத் திருநாடு‘ என்றும், நாலுவேதத்தின் தாய்‘, ‘அறு சமயத்தின் தாய்‘ என்றும் போற்றுகின்றார்.” (29,2007) என்பதைக் குறிப்பிடுகிறார் முருகுசுந்தரம். “பசுவைப் பலபடப் பாராட்டுகிறார் பாவேந்தர். நாடெங்கும் பசுச்சாலைகள், புல்வெளிகள், பசுக்குளங்கள் அமைக்க வேண்டுமென்று மக்களைக் கேட்டுக் கொள்கிறார்.” (39,2007) இவ்வாறு, இளமையில் முருக பக்தராகவும், தீவிர சைவக் குடும்பத்திலும் பிறந்து வளர்ந்த பாரதிதாசனின் அறி வியக்கப் பரிணாமம் என்பது இளமையில் காந்தியவாதி, தேசியவாதி என்று பாரதியின் பாதிப்பில் இருந்து, பின்னாளில் பெரியாரியர், தமிழ்த் தேசியர், பகுத்தறிவுவாதி என்ற நிலைக்கு வளர்ச்சியுறுகிறது. தமிழில் மறுமலர்ச்சிக்கான சிந்தனையை முன்வைக்கும் வலுவான கருத்துக்களை இயற்கையோடு இணைந்த கவித்துவ உவமைகளாக அவர் முன்வைக்கிறார். குறிப்பாக, குடும்ப விளக்கின் நாயகிகளான தங்கம், நகைமுத்து இருவரும் தமிழின் இலட்சியப் பெண் பிம்பங்களாக அவரால் உருவகப்படுத்தப்

பட்டுள்ளனர். இக்காப்பியங்களை 1942ல் முதல் பகுதி, 1944ல் இரண்டாவது பகுதியும், இருண்ட வீடும், 1948ல் மூன்றாவது பகுதி, 1950ல் நான்கு மற்றும் ஐந்தாவது பகுதி என எட்டு ஆண்டுகளில் இதனை முழுமைப்படுத்தி முடித்துள்ளார்.

முழுக்கக் குடும்பம் என்ற அமைப்பே ஓர் அதிகாரத்தின், சமூகத்தின் அடிப்படை அலகாக இருப்பதை உணர்ந்து, அதிலிருந்து சமூகச் சீர்திருத்தத்தை உருவாக்க முனைகிறார். அக் குடும்பத்திலும்கூட, திருமணம் ஆன மணமக்களை தனிக்குடித்தனம் வைத்தல், காதலித்தவர்களே என்றாலும் கருத்தொருமிப்பு இல்லாமல் போனால், இருவரும் பிரிந்து வேறு திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்பதையும், பெரியார் கூறிய கர்ப்ப ஆட்சி என்பதை பெண்கள் நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதையும் முன்வைப்பவராக உள்ளார். பகுத்தறிவுக்கு ஒவ்வாத பழங் கருத்துக்களை எதிர்த்தும், துறவறம் போன்ற இல்லற எதிரப்பை நகைச்சுவையாக மறுத்தும் பேசுகிறது இக்காப்பியம்.

**“ஞாலத் தொடர்பினால்**
**நல்லின்பம் காணலன்றி**
**ஞாலத் துறவில் இன்பம்**
**நண்ணுவதும் ஏலுமோ?** (குடும்ப விளக்கு)

என்று இல்லறத்தைப் போற்றி துறவறத்தை மறுக்கிறது. காரணம், தமிழ் மரபில் துறவறம் இல்லை. அதோடுகூட, இக்காப்பியம் வள்ளுவரின் இல்லறவியல் குறட்பாக்களின் ஓர் ஊடிழைப் பிரதியாக (intertextual), காப்பிய நாடகமாக எழுதிக் காட்டப்பட்டதாக அமைந்துள்ளது. ஒரு அறம் சார்ந்த குடும்பத்தின் இல்லற ஒழுக்கத்துடன், அவர்களது கல்வி அறிவும், சமூகத் தொண்டிற்கான வேட்கையும், உறவுகளிடையே உருவாகும் தமிழ் மொழி சார்ந்த இலக்கிய இன்பமும் எனத் தனது காப்பியத்தை இல்லறமே நல்லறம் என்ற பார்வையில் விரிவுபடுத்தி உள்ளார். ஆனாலும், வள்ளுவரின் துறவறவியலை ஏற்காமல் மறுப்பதாக அமைந்துள்ளது கருதத்தக்கது. காரணம், முத்தமிழ், முச்சங்கம், மூவேந்தர்கள், முக்கனிகள் போல தமிழ் மரபு அறம், பொருள், இன்பம் என்கிற மூன்று நிலைகளையே வாழ்வியல் அடிப்படையாக முன்வைக்கிறது. சமஸ்கிருத தர்மாக் கோட்பாட்டின் நால்வேதம், நால்வர்ணம், நான்கு ஆசிரமங்கள், நான்கு நிலைகள் என்கிற தர்மா, அர்த்தா, காமா, மோட்சா என்பது தமிழின் அறக்கோட்பாட்டிற்கும், வாழ்நிலைக்கும் புறம்பானது. அதனால் வீடு, வீடுபேறு உள்ளிட்டவை, துறவறம் ஆகியவற்றைப் பாரதிதாசன் எதிர்த்து எழுதியிருப்பது அவரது தமிழ் மரபின் ஆழத்தை உணர்த்துவதாக உள்ளது. திருக்குறளில் உள்ள துறவறம், வீடுபேறு உள்ளிட்ட சமணம் சார்ந்த

நம்பிக்கைகளை பாரதிதாசன் புறந்தள்ளியிருப்பது கவனப்படுத்த வேண்டிய ஒன்று. காரணம், சமஸ்கிருத தர்மாக் கோட்பாட்டிற்கு எதிராகத் தமிழின் அறக் கோட்பாட்டை முன்வைப்பதே. பாரதி சமஸ்கிருத தர்மாக் கோட்பாட்டை ஏற்றுக் கொண்டவர். ஆனால், பாரதிதாசனோ தமிழ் அறக் கோட்பாட்டை ஏற்றுக் கொண்டவர் என்பதை இக்காப்பியங்கள் வழி உணர முடிகிறது. காப்பியத்தில் இடையிடையே திருக்குறள் நேரடியாகப் பயன்படுத்தப்பட்டாலும், பாரதிதாசன் முன்வைக்கும் இல்லறம் என்பது திருக்குறள் முன்வைக்கும் இல்லறவியலின் இருபது அதிகாரங்களுடன் ஒப்பு நோக்க, இது திருக்குறளின் அறநிலைப்பாட்டில் நின்று அதனை ஒரு காப்பியமாக்கும் முயற்சியாகக் கருதமுடிகிறது. எப்படி சமஸ்கிருத தருமக் கோட்பாடுகளை விளக்க மகாபாரதம், இராமாயணம் என்று இரு காப்பியங்கள் உருவாக்கப்பட்டதோ, அப்படி தமிழ் அறத்தை விளக்கும் காப்பியமாக விளங்குகிறது ‘‘குடும்ப விளக்கு’’ மற்றும் ‘‘இருண்டவீடு’’ என்ற இவ்விரு காப்பியங்களும்.

இன்றைய நவீன பெண்ணிய நோக்கில் குடும்பம் ஓர் அரசின் அடிப்படை அதிகார அலகாக உள்ளது என்பதும், அதில் பெண் அடக்குமுறைக்கு ஆளாக்கப்படுபவளாக இருக்கிறாள் என்பதும் முன்வைக்கப்படுகிறது. இத்தகைய பார்வைகளுடன் பாரதிதாசனை அணுகும் போது இடர்படும் இடங்கள் இக்காப்பியத்தில் இல்லாமலில்லை. சங்க மகளிரின் அகக் காதலை நவீன குடும்ப அமைப்பிற்குள் இருத்தும் ஒரு தமிழ் பொற்கால கற்பனாவாதம் பாரதிதாசனிடம் இருப்பதை மறுத்துவிட முடியாது. ஆனால், அத்தகைய கற்பணாவாதம் ஒரு சமூக முன்னேற்றதிற்கான கனவை விதைப்பதாக அமைந்துள்ளது என்பதே முக்கியம். அது சமூக மறு உற்பத்திக்கான கற்பனாவாதமாக அமைந்திருப்பதும் கூடுதல் முக்கியத்துவத்தைத் தருவதாக உள்ளது. பாரதிதாசன் அடிப்படையில் பகுத்தறிவான, சுயமரியாதை உள்ள, ஒரு கற்பனைவயப்பட்ட இலட்சியத் தமிழ்ச் சமூகத்தைத் தனது கவிதைகள், காப்பியங்களில் கட்டமைக்க முயலுகிறார். அவரது அக்கற்பனைகள் உணர்ச்சிகளை மையமிட்டதாக அமைந்துள்ளது.

பகுத்தறிவை தனது உலகப்பார்வையாகக் கொண்ட பாரதிதாசன், உணர்ச்சிக்கு அதிகம் முக்கியத்தவம் தருபவராக உள்ளார் என்பது முரணாகத் தோன்றலாம். அவர் உணர்ச்சிக்கும், அறி விற்குமான வேறுபாட்டை நன்கு உணர்ந்தவராக உள்ளார். இது குறித்து, ‘‘நூலறிவும் உணர்வும்’’ என்று தனியானதொரு உரையே நிகழ்த்தி உள்ளார். அதில் உண்மை, மெய்மை ஆகியவற்றின் வேறுபாட்டை விளக்குகிறார். ‘‘உண்மை என்பது உள்ளத்தின் தன்மை, அதாவது, உட்புறத்தின் இயல். மெய்மை என்பது

மெய் (உடல்)யின் தன்மை. அதாவது, மேற்புறத்தின் இயல்'' (16,1990) என்கிறார். ''தார்க்கீக அறிவிற்கும் உணர்வுக்கும் உள்ள வித்தியாசம் என்னவெனில் தார்க்கீக ஞானமானது செயலில் வருவது துர்லபம். ஒன்றை அறிந்ததற்கு அறிந்தபடி செயல் செய்வதற்கும் இடையில் தாமதமேயின்றி அறிவும் செயலும் ஒரே நேரத்தில் நிகழ்வது உணர்வு.'' (18,1990) என்று உணர்விற்கு ஒரு புதிய விளக்கத்தை தருகிறார். அதாவது உணர்வு என்பது அறிவும் செயலும் ஒரே நேரத்தில் நிகழ்வது என்கிறார். அறிவு உடனடிச் செயல்வடிவம்பெற உணர்வு முக்கியம் என்பது அவரது பார்வையாக உள்ளது.

''உணர்ச்சி தேவை! உணர்ச்சி பிழைபடுவதில்லை. அது உண்மை.'' என்கிறார். ஆக, அறிவு செயலாக மாறும் ஒன்றே உணர்ச்சி என்பதாகப் பாரதிதாசனது உணர்ச்சி குறித்த கருத்தாக்கம் உள்ளது. ஆக, அறிவைச் சமூகத்தில் கொழுத்துவதன் மூலம் அது உணர்ச்சியாகப் பரவும். அதற்கு அடிப்படை அறிவார்ந்த ஒரு சமூகத்தை உருவாக்குவதே. அறிவைப்பெற முதலில் உணர்ச்சியைத் தூண்ட வேண்டும். தூண்டப்பட்ட உணர்வு அறிவால் செயல்வடிவம் பெறும் என்பதே அவரது உணர்ச்சி குறித்த கோட்பாடாக உள்ளது. அதனால்தான் அவரது கவிதைகள் அறிவாரந்த சமூகத்திற்கான கருத்துக்களை உணர்ச்சிகரமாக பாடுவதாக அமைந்துள்ளது. இசையுடன் கூடியதாகப் பாக்களை அமைப்பது என்பது, எளிமையாக மக்களிடம் பரவும் என்பதுடன் அது மனதில் பதிந்து ஒரு மந்திரமாகச் செயல்படும் தன்மைக் கொண்டது. மதங்களின் மறைநூல்கள் இப்படி இசையுடன் பாடப்படுவதே, அதை நினைவில் நிறுத்திக் கொள்வது எளிது என்பதுடன் அதனைப் பாடப்பாட, ஏற்படுத்தும் உடல் இயைபு (லயம்) உடனடிச் செயல் வடிவம் கொண்டதாக மாறும். உள்ளத்தில் ஒரு மாற்றத்தை உருவாக்கும் என்பதே. அதனை வெறும் மரபுக் கவிதைகள் என்று ஒதுக்குவது தமிழ் அறிவொளி மரபைப் புரிந்துகொள்ள மறுக்கும் செயலே.

இறுதியாக, பாரதிதாசனின் இக் காப்பியங்கள் கீழ்கண்டப் பண்புகளை அடிப்படையாகக் கொண்டே கட்டமைக்கப்பட்டுள்ளது.

1. *இலட்சிய திராவிடத் தமிழ்க் குடும்பம்*
2. *அறிவார்ந்த மனிதர்களைக் கொண்டதாக அமையும் குடும்பம்*
3. *பெண் கல்வி, பெண் மையச் சிந்தனை, பெண்ணிய நோக்குநிலை*
4. *சாதி, மதமற்ற, பகுத்தறிவான அறிவுச் சமூகம்*
5. *பழந்தமிழ் அறநெறிப்பட்ட நவீனக் குடும்ப அமைப்பு*
6. *தன்னலமற்ற பொதுநலத்தை ஒவ்வொரு தனிமனிதனும்,*

*குடும்பங்களும் பேண வேண்டும்*

*7. குடும்பமும் நாடும் வேறு வேறல்ல, இரண்டும் ஒன்றுதான்*

தமிழில் மறுமலர்ச்சிக் காலத்தில் இயங்கியவர்கள் பாரதியும், பாரதிதாசனும் என்றாலும், பாரதி மறுமலர்ச்சியுடன் நின்றுவிட, பாரதிதாசன் மறுமலர்ச்சியுடன் தமிழ் அறிவொளி இயக்கத்தின் முன்னோடியாகத் தன்னை நிலை நிறுத்திக் கொண்டிருப்பதை அவரது இலக்கிய இயக்கம் வெளிப்படுத்துவதாக உள்ளது. தமிழை அவர் ஒரு மறுமலர்ச்சிக்கான கருவியாக மட்டும் பார்க்கவில்லை, அதனை அறிவிற்கான ஒரு அறிவொளிக்காலக் கருவியாக பார்க்கிறார். இக் கருத்தின் மீது பற்பல விமர்சனக் கண்ணோட்டங்கள் இருந்தாலும், தமிழ் அறிவொளிக் காலத்தின் முன்னத்தி ஏராக உள்ளார் பாரதிதாசன் என்பதை அவரது இலக்கியங்கள் மற்றும் இயக்கங்கள் தெளிவாக முன்வைப்பதாக உள்ளது.

**பார்வை நூல்கள்:**


1. *பாரதிதாசன் பேசுகிறார், பாவேந்தர் பாரதிதாசன், 1990, பூம்புகார் பதிப்பகம், சென்னை108.*
2. *பாவேந்தம் தொகுதி 3, பாரதிதாசன், 2009, தமிழ்மண் பதிப்பகம், சென்னை17*
3. *புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன், டாக்டர் சி. பாலசுப்பிரமணியன், 1986, பாரிநிலையம், சென்னை108*
4. *இந்திய இலக்கியச் சிற்பிகள் பாரதிதாசன், முருகு சுந்தரம், 2007, சாகித்திய அகாதெமி, புது தில்லி01*
5. *குறிஞ்சித் திட்டு, பாரதிதாசன், 1985, பாரிநிலையம், சென்னை108*
6. *பாவேந்தர் பாரதிதாசன் நூற்றாண்டு விழா மலர் 1991, பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி*


❖❖❖

# புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் கவிதைகளில் தமிழும் சமூகமும்

முனைவர் ஆ. தனஞ்செயன்

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன், எழுத்தறிவு பெற்ற தமிழர்களுடைய மனதை ஈர்த்துப் புதிய சிந்தனைகளை இலகுவாக விதைக்கக் கூடிய கவிதைகளப் படைத்தார். சாதிய ஏற்றத் தாழ்வு, மற்றும் மொழி, இனம், பிறப்புக் கோட்பாடு ஆகியவற்றின் அடிப்படை யிலான வைதிக மேலாதிக்கப் பிடியிலிருந்து தமிழர் சமுதாயத்தை விடுவித்து உய்விக்கச் செய்ய வேண்டும் என்பது அவருடைய முதன்மையான இலட்சியமாக இருந்தது. உழைக்கும் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கத்தில், அவர்களுக்குக் குரல் கொடுக்கவும் அவர் தயங்கியதில்லை.'' பெண்ணடிமை தீருக்குமட்டும் மண்ணடிமை தீரல் முயற்கொம்பே'' என்று உறுதிபட முழங்கியவர் அவரே. இவ்வாறு, பழமை வாதமும் பிற்போக்கான கண்ணோட்டமும் மலிந்துக் கிடந்த தமிழர் சமுதாயச் சூழலில் தாம் இயற்றிய கவிதைகளுக்கு ஆற்றல் வாய்ந்த சமூகச் செயல்பாட்டு விழுமியத்தை ஊட்டியவர் பாரதிதாசன். ‘‘பாட்டுத்திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்திட வேண்டும்'' என்று கவிதைக்கு ஒருவகைச் செயற்பாட்டு நோக்கத்தைப் படைத்துக் கொண்ட தமது ஆசானின் வழிவந்த பாரதிதாசன், தம்முடை கவிதைக்கு,'' கொலை வாளினை எடடா மிகு கொடியோர் செயல் அறவே'' என்றாற் போல் தீர்க்கமான இலட்சியப் பண்பைப் புகட்டிவர்.

கவிதை என்பது, வெறுமே அகவணர்வு வெளிப்பாட்டிற்கான. வடிகால் சாதனமாக அமைவது என்னும் நிலைப்பாட்டிலிருந்து

வேறுபடும் வகையில், சமுதாயத்தைப் பாதுகாக்கப் போராடுவோரின் ஆயுதமாகக் கவிதையின் பரிமாணத்தை வலிமை மிக்கதாக ஆக்கியது பாரதிதாசனின் சாதனையாகும். அந்த ஆயுதத்தை வலிமையும் மென்மையும் கலந்த கலைநயம் மிக்க சாதனமாகவும் வெவ்வேறு நோக்கங்களுக்குத் தக்கவாறும் கையாளுவதற்கு ஏதுவாகப் பலவகை யாப்பு வடிவங்களைப் பயன்படுத்திய திறம் என்பது நமது கவனத்தை ஈர்க்கக் கூடியது.

பொதுவாக ஒரு திரண்ட பொருளையோ குறுங்கதை அல்லது பெருங்கதையையோ எடுத்துரைப்பதற்கு ஒரே விதமான யாப்புக்குப் பதிலாகப் பலவகை யாப்பு வடிவங்களைப் பயன்படுத்தும் வழக்கம் புலவர்களால் பின்பற்றப்பட்டதை அடியொற்றி, அது மரபாக நிறுவப்பட்டதையே யாப்பியல் வரலாறு காட்டுகிறது. காலந்தோறும் புலவர்கள் எடுத்துக் கொண்ட பாடுபொருள்கள், அவற்றை விவரிக்கும் பாணிக்கு ஏற்றவாறு, யாப்பு வடிவங்களைக் கையாளுதல் என்பது, கதையின் நிகழ்வுகளுக்குரிய சூழல்கள், கதை மாந்தர்களின் மனவுணர்வுகள், பாடலைப் புனையும் பாவலனின் மனோபாவங்கள் ஆகியவற்றைப் புலப்படுத்துவனவாகச் செயல்பட்டன.

யாப்பு மரபில் புதிய போக்கினை வெளிப்படுத்திய வகையில் சிலப்பதிகாரத்திற்குத் தனியானதோர் இடமுண்டு. எழுத்துமரபில் புனையப்பட்டு, வில்லிசைப் பாடகர்கள், கணியான் கூத்துக் கலைப் பாடகர்கள், உடுக்கடிப் பாடகர்கள் போன்ற வாய்மொழி நிகழ்த்துநர்களால் பார்வையாளர்களுக்கு முன்னால் வாய்மொழியாக நிகழ்த்தப்பட்டுக், கதைப்பாடல்களாக வடிவங் கொண்ட‘ நாட்டார் இலக்கியப் பனுவல்கள்’ பல நம்மிடையே அச்சிடப்பட்ட நூல்களாக உள்ளன. இத்தகைய கதைப்பாடல்கள் வாய்மொழியாக நிகழ்த்துவதற்காக அண்ணாவி முதலிய கிராமியப் புலவர்களால் இயற்றப்பட்டவை. நிலைப்பனுவல்கள் என்னும் வகையில் ,அவை கதையை எடுத்துரைக்கவும், கதையின் வெவ்வேறு கட்டங்களை இசையோடு பாடுவதற்கும் இயலும் வகையில், வெவ்வேறு யாப்பு வடிவங்களால் (செய்யுள் அல்லது பாக்கள் ) யாக்கப்பட்டவையாக அமைந்தவை. இத்தகைய வடிவ ஒழுங்கை இரண்டாம் நூற்றாண்டினது எனக் கருதப்படும் சிலப்பதிகரத்தில் காணமுடியும். கதைப்பகுதியை எடுத்துரைப்பதற்கு அகவல் அல்லது ஆசிரியம் உள்ளிட்ட பாவடிவங்களையும், காப்பியப் பாத்திரங்கள் தமக்குள் ஊடாடி உரையாடுவது, புராணப் பாங்குடைய கதையை நிகழ்த்துவது, கண்ணகி முதலிய கதைமாந்தர்கள் தொடர்புடைய சம்பவங்களை நாடகம் போல் காட்சிப்படுத்திச் சித்திரிப்பது ஆகியவற்றுக்குத் திணைக்குடி மக்களின் இசைப்பாடல் வடிவங்களையும் ( நகலாக்கப் பாடல்கள்) இளங்கோவடிகள்

தம்முடைய காப்பியத்தில் கையாண்டிருந்தார். .வரிப்பாடல் ( கானல் வரி), குரவை( குன்றக்குரவை) போன்ற திணைக்குடிகளின் இசைப்பாடல் வடிவங்களைக் கையாண்டு அவர் படைத்தளித்த காப்பியமானது ஒரு பதிய வகைமாதிரியை உருவாக்கியது. அந்நூற் கதையோடு தொடர்புடையதும் அதன் சமகாலத்திய படைப்புமான மணிமேகலையில் கதைவிவரணை வடிவமாக அகவலே அன்றி, சிலம்பின் அவ்விவரணை வகை மாதிரி பின்பற்றப்படவில்லை. மேலும், ஏனைய ஐம்பெருங்காப்பியங்களிலோ, பெரியபுராணம், இராமாயணம், முதலிய நெடுங்கதை இலக்கிய நூல்களிலோ விருத்த வகைகள் பல கையாளப்பட்டனவே அல்லாமல், சிலம்பின் அவ்வகைமாதிரியின் தடயத்தைக் காணமுடியாற் போனது. ஆயினும், பக்தி இலக்கிய நூல்களில் நாட்டார் இசைப் பாடல்களை நகலாக்க முறையில் படைத்துக் கையாளும் மரபு தொடர்ந்தது. வகைமை, துணைவகைமை என்ற முறையில் பல யாப்பு வடிவங்களைப் பயன்படுத்துவது என்பது, பல்வேறு இலக்கிய நூல்களில் ஒரு மரபாகப் பின்பற்றப்பட்டாலும், அவற்றில் நாட்டார் இசைப்பாடல் வடிவங்களை நகலாக்கம் செய்துப் பயன்படுத்தும் வழக்கம் காணப்படவில்லை. இந்நிலையில் ஒரு மாற்றத்தைச் சிற்றிலக்கிய நூல் வகைகளில் பார்க்க முடிகிறது. சிற்றிலக்கிய நூல்கள் பலவகைப்பட்ட யாப்பு வடிவங்களைப் புதியனவாகப் படைத்துக் கொடுத்துப் பங்களிப்பை வழங்கியவையாகக் கூறப்படுகின்றன.அவற்றின் தோற்றம் குறித்துப் பேசும் போது, அகப்பாட்டு, புறப்பாட்டு, பத்திமைப் பாட்டு, நாட்டுப்புறப் பாட்டு என்ற நான்கின் வழிப்பட்டதாக அறிஞர் கூறுவர்.(தமிழண்ணல், 1971:324). இவற்றில் முதல் மூன்றும் பொருண்மை அடிப்படையில் அமைந்த நிலையில், நான்காவதான' நாட்டுப்புறப் பாட்டு' என்பது, 'வாய்மொழிப் பாடல் வழியில்' வந்த சிற்றிலக்கிய நூல்களைக் குறிக்கிறது. வாய்மொழிப் பாடலின் வடிவமைப்புக் கூறுகள் தழுவியவையாக உருவான யாப்பு வடிவங்கள் பல பிற்கால இலக்கிய நூல்களில் மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டன. எழுத்து வழக்கிலான பாடல் மரபில் வாய்மொழிப் பாடல் மரபைப் பிணைத்து உருவாக்கும் ஒருவகைப் படைப்பிலக்கிய பாணி சிலம்பில் தோற்றம் பெற்றதாயினும், சிற்றிலக்கிய நூல்களிலேயே அதன் பயன்பாடு வலிமைப் பெற்றது. பதினைந்து முதல் பதினேழாம் நூற்றாண்டு வரையிலான காலப் பகுதியைச் சிற்றிலக்கியக் காலம் என்று அறிஞர்கள் அடையாளப்படுத்துவர் .அத்துடன், நாயக்கர் ஆட்சிக் காலத்தைச் சிற்றிலக்கியக் காலமாக அணுகுவர். ( தமிழண்ணல், 1971: 332) பதின்மூன்று முதல் பதினெட்டாம் நூற்றாண்டுக்கு இடைப்பட்ட காலமே சிற்றிலக்கியக் காலம் என்றும் வரையறுப்பர். (அ.மார்க்ஸ்,2009:24). இவ்வகையில்

தோன்றிய இலக்கிய நூல்களைத் தொண்ணூற்றாறு என்பர்.

பொதுவாகக் காலந்தோறும் படைக்கப்பட்ட தனிப்பாடல்கள், கதை விவரணை தழுவிய நூல்களில் கையாளப்பட்ட யாப்பு வடிவங்களை அடியொற்றி அவற்றின் கவிதைப் போக்கினை, நான்காக வகைப்படுத்துவர். அதாவது, சங்கப் பாடல்கள் வழி நிறுவப்பட்ட அகவல், வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்பனவற்றுக்கு அப்பால் இருபதாம் நூற்றாண்டில் பாரதி, பாரதிதாசன் ஆகியோர் காலத்திற்கு முன்பு வரையில் பல நூற்றாண்டுகளாக நிலவியது, தமிழ்ப் புலவர்களின் மரபுக் கவிதைப் போக்காகும். இவ்விரு கவிஞர்களின் தடத்தின் வழியே செயல்பட்டதனை மறுமலர்ச்சிக் கவிதைப் போக்கு என்பர். மற்றொன்று, எழுத்து, கசடதபற போன்ற இதழ்களின் ஊடாகத் தமிழ்க் கவிதை மரபில் புகுந்த புதுக்கவிதைப் போக்காகும். மற்றொன்று,' நாட்டார் கலையின் பகுதியென இனம்காணத் தக்க சந்தக் கவிதை' என்னும் போக்காகும்.( ஞானி, 2007: 393).

சந்தக் கவிதைப் போக்கு என்பது ஒருவகையில், திணைக்குடிகளின் வாய்மொழிப் பாடல் வடிவங்களைப் போன்மையாக்க முறையில் படைத்துச் சிலம்பில் கையாளப்பட்ட இசைப்பாடல்களை அடியொற்றிய விளைவாகும். வாய்மொழிப் பாடல்களைப் போலவே, எதுகை, மோனை, இயைபு(சந்தம் அல்லது ஒலிஇயைபு) முதலிய ஒலிக்கூறுகள், சொற்கள் அல்லது அடிகள் திரும்ப வருதல், அளவொத்த அடிகள் இடம்பெறுதல் போன்ற அவற்றின் வடிவக் கூறுகளைத் தழுவிப் பாடல் இயற்றும் புலவர், கவிஞர்களின் படைப்புகளை முன்னிட்டே சந்தக் கவிதைப் போக்கு என்பது ஆளப்பட்டுள்ளது. இந்தச் சந்தக் கவிதைப் பாணி என்பது, சிற்றிலக்கிய நூல்களில் கணிசமாகப் பின்பற்றப்பட்டது.

சிற்றிலக்கியங்கள் தம்முடைய சிலவகைப் பலவீனங்கள் காரணமாக எதிர்மறை விமர்சனங்களை எதிர் கொண்டன. அதே சமயத்தில் அவற்றின் ஈர்க்கத் தக்க சில அம்சங்கள் காரணமாக 19/20 ஆம் நூற்றாண்டுகளில் மறுமலர்ச்சிக் கவிஞர்களான பாரதி, பாரதிதாசன் போன்றோரிடம் ஒருவகைத் தாக்கத்தையும் ஏற்படுத்தின. குறிப்பாகச் சொல்வோமானால், சந்தக் கவிதை மரபு என்பது, அவ்விரு கவிஞர்களிடத்தும் செலுத்திய தாக்கமானது குறிப்பிடத்தக்கது.. அவர்களுடைய தாக்கத்திற்கு ஆட்பட்ட , அவர்தம் சமகாலத்திய கவிஞர்களிடத்தும், பிந்தைய கவிஞர்களிடத்தும் இச்சந்தக் கவிதை வெவ்வேறு வகைகளில் வெளிப்பட்டது. வடிவம், உள்ளடக்கம், உத்தி என்பன போன்ற பல்வேறு கூறுகளை அடியொற்றித் தமிழ்க்,கவிதை மரபுக்குப் புதிய பரிமாணம் கொடுத்த பாரதியாரின் படைப்புகளில் கருத்துப்புலப்பாட்டு ரீதியில் செயல்பட்ட

இழைவுக் கூறுகளில் சந்தநயம் என்பது இன்றியமையாதது. கவிதையில் இயல்பாக ஒலியியைபுகள் விரவி வருமென்பது நாம் அறிந்த ஒன்று. ஆனால், அமைதியான வாசிப்பு அனுபவத்தைக் கடந்து, கேட்டல், கட்புல ஈர்ப்பு ஆகியவற்றின் வாயிலாகப் பனுவற் பொருள் என்னும் உலகிற்கு அருகே வரச்செய்து, குறைந்த எழுத்தறிவுத் திறனுடைய மக்களிடத்தும் ரசனைத் திறமுடைய ஈர்ப்பை ஊட்டவல்லதாகத் தமிழ்க் கவிதையின் உறைவிட வா யிலைத் திறந்து விட்டவர் பாரதி. அதாவது, வெகுமக்கள் இலக்கியப் பண்புகளை உட்செறித்தவையாகக் கவிதை அமைய வேண்டும் என்பதை வலியுறுத்தி, அதைச் சார்ந்த செல்நெறியில் முன்னோடியாகச் செயல்பட்டவர். அதனை அவர் பாஞ்சாலி சபதம் நூலின் முகவுரையில் முதன்மையானதாக வலியுறுத்தினார்

" எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக் கூடிய சந்தம், பொதுமக்கள் விரும்பும் மெட்டு, இவற்றினை உடைய காவியமொன்று தற்காலத்தில் செய்து தருவோன் நமது தாய்மொழிக்குப் புதிய உயிர் தருவோனாகிறான். ஓரிரண்டாண்டு நூற் பழக்கமுள்ள தமிழ் மக்கள் எல்லோருக்கும் நன்கு பொருள் விளங்கும்படி எழுதுவதுடன், காவியத்துக்குள்ளே நயங்கள் குறைபடாமலும் நடத்துதல் வேண்டும்".(பாரதியார் கவிதைகள்,1971:340)

பாஞ்சாலி சபத முகவுரையில் பாரதி வலியுறுத்திய வெகுமக்களை நோக்கிய கவிதைக்கான உத்திகளை, அந்நூலுக்கானவையாக மட்டுமல்லாமல், தம்முடைய பெரும்பான்மையான கவிதைகளுக்கும் அடிப்படையானவையாகப் பயன்படுத்தியிருந்தார். பாரதிக்கு முன் சில காலமாகப் பாடுபொருள், உத்திமுறைகள் போன்றவற்றை அடியொற்றித் தமிழ்இலக்கியப் புலம் மிகவும் தொய்வடைந்திருந்ததாக மதிப்பிடுவர். அந்தக் காலப் பகுதியில் மிகவும் அதிகமாகப் பிரபந்தம் அல்லது சிற்றிலக்கிய வகையைச் சேர்ந்த நூல்களே இயற்றப்பட்டன. நகலெடுப்பது போல் ஒன்றைப் போன்று மற்றொன்று எனப் பல்கிப் பெருகிய இவ்வகை நூற்பெருக்கத்தைப் புற்றீசல் படைஎடுப்போடு ஒப்பிட்டனர். ஆனால், இவ்வகை நூல்கள் சிலவற்றின் ஊடாகச் செறிவுப் படுத்தப்பட்ட நாட்டார் யாப்பு வடிவங்களான பாட்டு, கண்ணி, சிந்து முதலியன பரவல்படுத்தப்பட்டன. சிந்துக்குத் தந்தை என்று பாரதிதாசனால் புகழப்பட்ட பாரதியின் கவிதைகளில் பெருமளவில் தாக்கம் செலுத்தியவை மேற்குறித்த நாட்டார் யாப்பு வடிவங்களே என்பது குறிப்பிடத்தக்கது.

பாரதியின் கவிதைகளில் தாக்கம் ஏற்படுத்திய நாட்டார் யாப்பு வடிவங்கள் என்பன, உழைக்கும் கிராமத்து மக்களால்

நேரிடையாகப் படைக்கப்பட்டு, வாய்மொழியாகப் பரவிய பாடல்கள் அல்ல என்றும் அவை, சிறுநகரங்கள், சிற்றூர்களில் ஆர்வமாகப் படிக்கப்பட்ட குஜிலி இலக்கியங்கள் என்றும் அனுமானிப்பர். அதாவது, பாரதியிடம் காணப்படுவது, நேரிடையான வாய்மொமி இலக்கியத் தாக்கமாக இல்லாமல்,குஜிலி இலக்கிய வழியாலான தாக்குறவாக இருக்க வாய்ப்புண்டு என்பர். அது போலவே, பாரதியை அடியொற்றி எழுதிய பாரதிதாசனிடமும் குஜிலி இலக்கியச் செல்வாக்கை அடையாளம் காண்பர்.(ஆ. இரா. வேங்கடாசலபதி, 2004: 97). அதே வேளையில், பாரதியிடம் காணப்பட்ட சிற்றிலக்கிய வகைகளின் செல்வாக்கையும் சுட்டிக்காட்டுவர் ( தமிழண்ணல். 1971: 364)

வெகுமக்கள் ஈர்ப்புக்கு உரிய கலை வடிவமாகத் தமது கவிதைக்குப் பரிமாணம் கொடுத்துப் புதுவழி காட்டிய முன்னோடியாகச் செயல்பட்டவர் பாரதியார் என்றால், அவருடைய வழித்தடத்தில் சென்று, கவிதையின் பாடுபொருளைப் பல நிலைகளில் சமூகவயப்படுத்தியவர் பாரதிதாசன் எனலாம்.. அகவய உணர்வுகளுக்கும் தேசபக்தி, தெய்வ பக்தி பற்றிய உணர்வுகளுக்கும் வடிகால்களாக அமையும் வகையில், சிந்து முதலிய யாப்புகளைப் பாரதி பயன்படுத்தினார் என்றால், சமூகப் பிரச்சினைகளையும் இனம், மொழி பற்றிய கருத்துகளையும் எடுத்துரைக்க அச்சிந்து வடிவங்களையே பாரதிதாசன் கணிசமாகப் பயன்படுத்தினார். இன்னொன்றையும் குறிப்பிட வேண்டும். பக்தி இயக்கத்தின் தாக்கம் காரணமாகத் தமிழ்ச் செய்யுள் மரபு என்பது, சமயமயப்படுத்தலுக்கு( sacralisation ) ஆளாயிற்று. இருபதாம் நூற்றாண்டில் பாரதியால் அதுவே மேலும் நவீனப் பாங்கோடு செறிவூட்டப்பட்டது. ஆனால், பாரதிதாசனோ தமது பகுத்தறிவுக் கண்ணோட்டம் காரணமாகத் தமிழ்க்கவிதை மரபில் சமயச் சார்பற்ற நிலையைப் புகுத்தினார். அத்துடன், ஏற்கனவே சமயம் மற்றும் பௌராணிகத்தால் பிணைப்புற்றுக் கிடந்தவற்றை விடுவிக்கும் (desacralisation) சிந்தனைகளையும் தம்முடைய கவிதைகள் வாயிலாகப் பரப்பினார்.

பாரதியாரின் வழித்தோன்றலாகப் பார்க்கப்படும் பாரதிதாசன், சமூக, அரசியல் கோட்பாடுகளில் தாம் கொண்ட பிணைப்பின் காரணமாக முன்னவரிலிருந்து முற்றிலும் எதிர்நிலை வயப்பட்ட அடையாளம் உடையவர். அவருக்குரிய ஒரு தனித்த கருத்தியல் உருவம் என்பது அவர்தம் இயக்கநெறி சார்ந்த கவிதைகள் வாயிலான செயல்பாடுகளால் அமைந்தது. அவருடைய படைப்பாளுமையைப் புரட்சிக் கவிஞர் என்னும் முன்னொட்டுத் தொடர் பொருத்தமாக முன்னிறுத்துகிறது. அவரைப் பற்றிய

பின்வரும் இயல்பான மதிப்பீடு நாம் நினைவிற் கொள்ளத்தக்கது:

" பாரதியாருக்குப் பின் வந்த கவிஞர்களுள் ஈடிணையற்றவரான பாரதிதாசன் திராவிடக் கழகத்தின் கவிஞர் எனலாம். பாரதிதாசன் சீர்திருத்த இயக்கம், திராவிட இயக்கம், நாத்திக இயக்கம், பொதுவுடைமை இயக்கம் என்பவற்றோடு தொடர்படையவர். ஆனால், தமிழியக்கத்துக்குட்பட்டதே அவர் மற்றைய இயக்கங்கள். அவர் உயிரியக்கமே தமிழால் நிகழ்ந்ததெனலாம்.. அவரது இசை, காவியம், கவிதையெங்கும் தமிழியக்கம் பரந்து நிற்கிறது." "ஆனால்,பாரதிதாசனில் அந்தணர் எதிர்ப்பு இந்து சமய எதிர்ப்பாகவும் காணப்பட்டது. அவர் கோயிலையும் உருவ வழிபாட்டையும் கண்டித்துப் பாடியுள்ளார். பரத நாட்டையும் இந்திய விடுதலையையும் அவர் பாடவில்லை. பாரதியாரிடம் இருந்த பழமைப்பற்றுப் பாரதிதாசனிடம் காணப்படவில்லை. அந்தணர் தமிழ்நாட்டில் செல்வாக்குப் பெற உதவிய சமய நெறியையும் தத்துவ நெறியையும் பாரதிதாசன் முற்றாக வெறுத்தார். அந்தணரையும் அவர்கள் செல்வாக்குக்குக் காரணமான இந்து சமயத்தையும் பல சந்தர்ப்பங்களிலே தாக்கினார். சமயக் கொள்கைகள் பல, அவருக்கு மூடக் கொள்கைகளாகத் தெரிந்தன. இயற்கை நெறிக் காலத்தில் இருந்தது போலக் காதலும் வீரமுமே தமிழ்ச் சமூக வாழ்விற் சிறப்பிடம் பெற வேண்டுமென்று விரும்பினார். அவர் வள்ளுவர் காட்டிய அறநெறியிலும் மதிப்பு வைத்திருந்தார்." (ஆர்.வேலுப்பிள்ளை,2010: 216 217).

புரட்சிக் கவிஞர் பற்றிய ஒருவகைக் கருத்தியல் படிமமாக அமைந்த மேற்குறித்த கூற்று, அவர்தம் கவிதைப் படைப்புகளின் உந்தாற்றலை உள்வாங்கிக் கொள்ளவும், அவற்றின் பொருண்மையை விளங்கிக் கொள்வதற்கும் உரிய வழிகாட்டும் குறிப்புகளை, அக்காலத்திய அரசியல் சமூகச் சூழல்களோடு பொருத்தி நோக்குவதற்கும் உதவக் கூடியது.,

தமிழ் மொழி, இனம், பண்பாடு, வைதிக எதிர்ப்பு, கடவுள் மறுப்பு, உழைக்கும் பாட்டாளிகளின் உரிமைக்குக் குரல் கொடுத்தல் என்று பரந்துப் பட்ட கொள்கைகளின் திட்ட நிரலைத் தம்முடைய கவிதைகளின் பாடுபொருளாக அரவணைத்துக் கொண்டு இயங்கிய பாரதிதாசன், அதனை வெகுமக்களிடம் கொண்டு செல்வதற்கு ஏற்ற வகையில், மிகவும் எளிமைப் பண்பும் ஈர்க்கும் தன்மையும் நிறைந்த நயமிக்க ஊடகமாகத் தம் கவிதையைப் பயன்படுத்தினார். பாரதி விழைந்து வெளிப்படுத்திய வெகுமக்கள் அளாவிய கவிதை பற்றிய கருத்துப்புலப்பாட்டு நெறியை ( பாஞ் சாலி சபதம் முகவுரை) பாரதிதாசன் தம் கவிதைகள் எங்கும் விரவியிருக்கும் வகையில், அழகியல் ரீதியிலான சமூகச்

செயல்பாடாகப் படைப்பாக்கப் பணியில் ஈடுபட்டார். கவிதையை வாசிப்பவன் மௌனமாகத் தனக்குள் பொருளை உள்வாங்கி, அகவயமாக ரசித்து ஆனந்தப் பட்டுக் கொள்வதற்கு உரிய சாதனமாக அல்லாமல், தமது கொள்கைத் திட்ட நிரலுக்கு ஏற்ப, விழிப்பணர்வை ஊட்டிச் சிந்திக்கவும் ஆவேசம் கொள்ளவும், எதிர்வினை ஆற்றவும் வாசகனை உசிப்பி எழுப்பும் வீறுணர்வுத் தன்மை மிக்கத் தூண்டுகோலாக அமையும் வகையில் அவருடைய கவிதை செயல்பட்டது.'' கொளைவாளினை எடடா மிகு கொடியோர் செயல் அறவே, குகைவாழ்ஒரு புலியே உயர் குணமேவிய தமிழா "( வாளினை எடடா)," மானிடச் சங்கமம் நானென்று கூவு". என்பனவற்றில் உள்ள உணர்ச்சித் தூண்டல் உதாரணமாகும். சமூக, அரசியல் தழுவிய வீறுணர்வு மட்டுமே அவருடைய கவிதையின் சாராம்சமாகக் குறுக்கிவிடவும் முடியாது. ' பண்டைய இயற்கை நெறிக்கால காதல் மற்றும் வீரம் என்பன தமிழ்ச் சமூக வாழ்வில் சிறப்பிடம் பெற வேண்டும் என்று விரும்பினார் என்பது அவரைப் பற்றிய ஒரு கருத்து அதற்கேற்ப காதலையும் இயற்கை உலகையும் அவர் பாடுவதற்கு அவர் கையாண்ட யாப்பு நடையில் ஒரு மென்மையான போக்கு காணப்பட்டது. தமிழ் மொழியைப் பற்றிய அவருடைய கவிதைகளில் மிக உயரிய பக்தி உணர்வு புலப்பட்டெதனலாம். சைவ, வைணவப் புலவர்கள் தங்கள் கடவுளர்களைப் பாடுவதற்கு பக்தி(அன்பு) பற்றிய கருத்துருவத்தைப் பயன்படுத்தியதைப் போல், பாரதிதாசன் தமிழைத் தாயாகவும், உயிராகவும், காதலியாகவும் வரித்துக் கொண்டு பாடினார். நாயகன் நாயகி முதலிய பாவனைகளில் தன்னை வைத்துக் கொண்டு கடவுளைப் போற்றும் பக்தி இயக்கச் சிந்தனையைத் தமது கண்ணன் பாட்டில் பாரதி வெளிப்படுத்தினார். முற்றிலும் இல்லையாயினும் ஒருபகுதி அளவில் ஒப்பிடக்கூடிய வகையில், தான் தன் உயிரினும் தாய்மொழிக்குத் தெய்வத்திற்குரிய புனிதப் படிமத்தை ஊட்டும் வண்ணமாக பாரதிதாசன் தமிழைப் போற்றினார் இவ்வாறு, பலவகைப்பட்ட பொருண்மைகளை உட்கொண்ட கவிதையின் வடிவத்தைப் பரவலான விநியோக வீச்சுக்கு ஏற்றவாறு செறிவூட்டிக் கையாண்டார். ஓசை,சந்தம் அல்லது ஒலிஇயைபு, உள்ளிட்ட சிலவகைக் கூறுகள் ஆதிக்கும் செலுத்தக் கூடிய நாட்டார் யாப்பு வடிவங்களான தெம்மாங்கு உள்ளிட்ட சிந்து வகைகள், கண்ணி, பாட்டு முதலிய இசைப்பா வடிவங்கள் கவிதையில் ஒருங்கிணைத்துக் கொள்ளப்பட்டன.. கவிதை இசைப்பாங்கானதாக மாறியதற்கு ஒரு வரலாறு உண்டு. பாரதிக்கு முன்னர், சிற்றிலக்கியங்களில் சில நூல்கள் இசைப்பாங்கான நாட்டார் பாடல் வடிவங்களைக் கையாண்டுத் தனித்த அடையாளம் பெற்றன. அவற்றை நாட்டுப்புறப்பாட்டின்

வழிப்பட்டது அல்லது நாட்டுப்புறச் சிற்றிலக்கியங்கள் என்று வகைப்படுத்தினர் (தமிழண்ணல், 1971: 334). அவற்றுள் பள்ளு, குறவஞ்சி போன்றவைக் குறிப்பித்தக்கவை. மற்றொரு நிலையில், பொதுவெளியில் மக்களிடையே காத்தவராயன், மதுரைவீரன் போன்ற கதைகளைப் பாட்டாகப் பாடி நிகழ்த்துவதற்கும் கூத்து அல்லது நாடகமாக நிகழ்த்துவதற்கும் ஏற்ற பிரதிகள் இயற்றப்பட்டன. கிராமியப் புலவர்கள், அண்ணாவிகளால் இயற்றப்பட்ட இவ்வகை நூற்பிரதிகள் விருத்தப் பாக்களையும் சந்தப் பாடல்களையும் கொண்டவை. கதையை எடுத்துச் சொல்லும் விவரணை முறையும் பாத்திரங்கள் உரையாடுவதற்குக் கண்ணிகள், தெம்மாங்கு முதலிய சிந்துப் பாடல்களும் அமைந்துப் பொதுவெளி நிகழ்த்துகையைப் பொலிவுமிக்கவையாக ஆக்கின.( உம்: காத்தமுத்து நாடகம்) இவ்வாறே, சிறு, பெருநகரங்களில் மக்களிடையே , அவ்வப்போது நடக்கும் எதிர்பாராத, அதிர்ச்சியூட்டும் நிகழ்வுகளான கொலை, தற்கொலை, கொள்ளை, இரயில்விபத்து ஆகியவற்றைப் பற்றிக் குறுங்கதைப் பாடலாக இயற்றித் தோலிசைக் கருவிகளை இசைத்துப் பாட்டாகப் பாடிக் கதை சொல்லும் ஒருவகை நிகழ்த்துகை மரபும் வழக்கத்தில் இருந்தன. இவ்வகைப் பாடல்கள் கொலைச் சிந்துகள் என்னும் பெயரில் மலிவு விலை நூல்களாகவும் வெளியிடப்பட்டன. ( காண்க: அ. மருததுரை,1991).

எழுத்திலக்கிய மரபும் வாய்மொழி இலக்கிய மரபும் இணைந்தவையாக அச்சு ஊடக வழியாக ஒருவகை நிலைப்பனுவலாக (idealised text) உருவம் கொடுக்கப்பட்ட நிலையில், அப்பனுவலையே ஆதாரமாக்க கொண்டு, வெகுமக்கள் முன்னிலையில் வீதியிலோ, திறந்த வெளியிலோ வாய்மொழி நிகழ்த்துகை, நாடகம் அல்லது கூத்து மற்றும் ஆட்ட நிகழ்த்துகை என்பன போன்ற படிமுறையின் இறுதி விளைவாக அமையும் கலைப்பாங்கான கருத்துப்புலப்படுத்தமே (artistic communication) பாரதி போன்ற புதுயுகக் கவிஞர்கள் தங்கள் கவிதையை முன்னிறுத்தி எதிர்நோக்கியது. அதுவே “ எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக் கூடிய சந்தம், பொதுமக்கள் விரும்பும் மெட்டு “ என்னும் கூற்றில் வெளிப்பட்ட கருத்தியல் சாராம்சமாகும்.

பாரதிதாசன் படைத்த கவிதைகளில் கணிசமானவை மேற்குறித்த கருத்தியல் சாராம்சத்தைத் தம்மியல்பாக உட்கொண்டிருப்பவை எனலாம். யாப்பு வடிவங்களில் அகவல் என்பது ஒரு சுருக்கமான அல்லது நீண்ட பொருளை ஆற்றொழுக்காக விவரிப்பதற்கு ஏற்ற வடிவமாகும். அவ்வாறே, அறுசீர்களில் அமைந்தவை உள்ளிட்ட விருத்த வகைகள் என்பன, ஒரு கருத்து, சிந்தனை, சமூகப்

பிரச்சினை, மனவுணர்வு, நெடுங்கதை என்று எப்பொருளையும் எளிமையான சொற்கள் தழுவிய தெளிந்த நீரோடை போன்ற நடையில் எடுத்துரைக்க ஏற்றவாறு கவிஞரின் கவிதை இயற்றும் வினைத் திறனை வெளிப்படுத்த உதவுகின்றன என்பதற்குப் பல கவிதைகள் சான்றாக உள்ளன. அழகின் சிரிப்பு நூலில் உள்ள 'அழகு' என்ற தலைப்புக் கவிதை,(எண்சீர் விருத்தம்), இயற்கைப் பொருட்கள் மட்டுமல்லாமல் சமூக உலகின் நடத்தைகளிலும் எங்கும் வியாபித்திருக்கும் அருவுருவான அழகு என்னும் கருத்தை உயிரோட்டம் நிறைந்த ஒரு காட்சிப் படிமமாகச் சித்திரிக்கிறது. உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கு மிகவும் ஏற்ற வடிவம், விருத்தமாகும் என்னும் கருத்து (மு..வரதராசன், 2007: 25 ) புரட்சிக் கவிஞரின் பல பாடல்களில் உறுதி பெறுகிறது. கருத்தும் உணர்ச்சியும் கலந்த ரௌத்திரத்தை வெளிப்படுத்துவதாக அமைந்த,

**" இருட்டறையில் உள்ளதடா உலகம், சாதி**
**இருக்கின்ற தென்பானும் இருக்கின் றானே!**
**மருட்டுகின்ற மதத்தலைவர் வாழ்கின் றாரே**
**வாயடியும் கையடியும் ஓய்வ தெந்நாள்?"**

என்ற இப்பாடலடிகள் ஒரு நல்ல எடுத்துக் காட்டாகும்.

தமிழ் மொழி சமூக அடையாளம் தமிழர் என்ற இனவுணர்வும் தமிழ்மொழியைத் தம் உயிரினும் மேலானது என்று போற்றும் மனப்பாங்கும் அம்மொழிக்குப், பண்பாட்டு அடையாளச் சின்னங்களில் ஒன்று என்பதற்கு அப்பால், ஒட்டுமொத்த சமுதாயமும் தனது புனிதச் சின்னத்திற்கு கொடுக்கும் மரியாதையை விட, மேலதிகமான அளவில் தகுதிநிலையக் கொடுத்துத் தமிழை அணுகுவதற்கு அடிப்படைகளாகும். தமிழின்பால் புரட்சிக் கவிஞர் காட்டிய நேயமானது, வேறு எந்தக் கவிஞர்களிடமிருந்தும் எவளிப்பட்டதை விட, மிகவும் மேலானது என்று மதிப்பிடுவர்..''தமிழுணர்வின் வீறு பாரதிதாசனிடம் வெளிப்பட்ட அளவுக்கு வேறு யாரும் வெளிப்படுத்தவில்லை'' என்ற கூற்றும்(267) " தமிழ் அவரைப் பொறுத்தவரை தெய்வம். தமிழை வணங்க அவரது பகுத்தறிவுணர்வு தடையாக இல்லை''(267) என்பதும் தமிழுக்கு அவர் படைத்திருந்த புனிதப் பண்புருவத்தின் அளப்பற்ற நிலையை நாம் புரிந்து கொள்ள உதவும். தமிழ் மீதான அவருடைய ' பக்தியணர்வை'யும் அதற்குரிய புனித எல்லையைத் தாண்டுவதற்கு யாரையும் அனுமதியேன் என்ற நிலைப்பாட்டையும் அறிந்து கொள்வதற்கு மிகவும் வெளிப்படையான ஓர் எடுத்துக்காட்டு உண்டு. அதாவது, ஒரு தருணத்தில் பெரியார் தமிழை இகழ்ந்துப் பேசிய போது, அதற்காகப் பெரியாரை எதிர்த்துப் பேசியவர்

பாரதிதாசன்( ஞானி, 2007: 259).என்பதுதான் அச்சான்றாகும்.

மேற்குறித்த பாரதிதாசனின் தமிழுணர்வு பற்றிய கருத்துநிரலைத் தாங்கிப் பற்றுவன பின்வரும் பாடற்சான்றுகள்.

**தமிழுக்கு அமுதென்று பேர் அந்தத்**
**தமிழ்இன்பத் தமிழ்எங்கள் உயிருக்கு நேர் !**
**தமிழுக்கு நிலவென்று பேர் இன்பத்**
**தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர் !**
**தமிழுக்கு மணமென்று பேர் இன்பத்**
**தமிழ்எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர் !**
**தமிழுக்கு மதுவென்று பேர் இன்பத்**
**தமிழ்எங்கள் உரிமைச்செம்பயிருக்கு வேர் !**

( இன்பத் தமிழ்)

இயற்கையில் காணப்படும் நிலவு, மணம், வான், தேன், தீ என்பனவற்றோடு தமிழை ஒப்பிடுவதோடு மட்டுமல்லாமல், அதனை உயிருக்கு இணையானது, சமூக வளர்ச்சிக்கு நீராதாரம் போன்றது, வாழ்க்கையின் நில ஆதாரம், தமிழர் உரிமை எனும் பயிரின் வேர், இளமைக்கு உரமூட்டும் பால், புலவர்களுக்கு வேல் போன்ற ஆயுதம், தமிழர் உயர்வின் எல்லையற்ற வானம், அறிவைத் தாங்கும் தோள், கவிதைத் திறனை உரசி அளவிடும் வாள் என்று தமிழைப் பலவகைக் கூறுகளோடு ஒப்பிடுவதில் தனியொரு பாணியைப் பாரதிதாசன் கையாளுகிறார். ஒருவகைப் பக்திப் பரவச நிலையில் நம்பிக்கை மரபில் தோய்ந்துக் கடவுளைப் போற்றிக் கொண்டாடும் புலவனைப்போல், எமக்கு' எல்லாமும் நீயே' என்று தமிழை முதன்மைப் படுத்துகிறார். அனைத்திற்கும் மேலாக, தமிழர்களைப் பெற்றெடுத்த தாய்(" தமிழ் எங்கள் பிறவிக்குத் தாய்") என்று தாயின் இடத்தில் தமிழை வைத்துப் போற்றுவது என்பது குறிப்பிட்ட சமுதாயத்தின் பண்பாட்டுத் தளத்தில், ஏனைய பண்பாட்டுக் கூறுகளில் அடங்கும் மற்றொன்று என்னும் சாதாரண நிலைக்கு அப்பால் மிக உயரிய இடத்தில் வைத்து நோக்கத் தக்கது என்பதையே சுட்டுகிறது.

பொதுவாகத் தமிழர் சமூகத்தின் பண்டைய சமூக நிலையைப் பற்றி ஆராயும் அறிஞர்கள், அதனைத் தாய்வழிச் சமூகம் என்றும், தாய்த் தெய்வ வழிபாட்டினது என்றும் அடையாளப்படுத்துவர். நிலம், பயிர் உற்பத்தி, விருத்தி ஆகியவற்றோடு பெண்ணை இணைத்து நோக்கிய தொல்குடிகளின் சிந்தனைகளை அடியொற்றித் தோன்றிய கருத்துருவமே தாய்த்தெய்வ வழிபாடாகும்.. ஆனால், பாரதிதாசன் தமிழ்ச் சமூகத்தின் தோற்றமூலத்தின் வித்தாகவும், அதன் விருத்தியாகவும் தமிழையே காண்கிறார். பாதுகாப்பு

அரணாகவும் தமிழே திகழ்கிறது. ஆதியில், நிலவிய தாய்த் தெய்வ வழிபாடு என்ற இடத்தில், அதாவது, தற்காலத் தமிழ்ச் சமூகத்தில் தமிழையே தாய்த்தெய்வமாக நிலைநிறுத்தும் உட்பொருளையே அவருடைய தமிழைப் போற்றும் ஏனைய பாடல்கள் வாயிலாகவும் நாம் அனுமானித்துக் கொள்ளத் தோன்றுகிறது. பாரதிதாசன் ஏற்றுக் கொண்ட தமிழ்த் தேசிய அரசியலை அடியொற்றி, இவ்வனுமானம் பொருந்துவதாகவும் உள்ளது. தமிழர் சமூகத்தில், இடைக்காலத்தில் தோன்றி, அதனைப் பிளவுப்படுத்தும் எதிர்மறைச் சக்திகளாகச் செயல்படும் சாதி, சமயம் ஆகியவற்றை அழித்தொழித்து, பிளவுப்பட்டுக் கிடப்பதை ஒன்றுபடுத்தும் ஆற்றல் தமிழிலேயே உள்ளது என்பதே அவரது நம்பிக்கை. இந்தக் கோணத்தில் அணுகத் தக்கவையாக சாதி, சமயம் பற்றிய அவர்தம் பாடல்கள் உள்ளன. தமிழைச் சிவனோ, அகத்தியனோ படைத்தனர் என்பதை அவர் ஏற்க வில்லை. “ சும்மாதான் சொன்னார் உன்னை ஒருவன்பால் துளிர்த்தாய் என்றே” (அழகின் சிரிப்பு) என்பது அவருடைய மறுப்பாகும். வட்டார வேற்றுமை, சாதி, சமய வேறுபாடுகள், சமூக ஏற்றத்தாழ்வு போன்ற எதிர்மறைக் கூறுகளைக் களைவதன் வாயிலாகச் சமூகத்தை ஒருமைப்படுத்தும் பிணைப்பாற்றல் கொண்டதாகத் தமிழை முன்னிறுத்துவது ஒரு சரியான கண்ணோட்டமாகும். வாய்மொழி அல்லது குரலொலி, எழுத்து வழக்கு என்பனவற்றை அடியொற்றித் தோன்றும் மொழிக்குப் பருண்மை உருவிலான நம்பிக்கை உணர்வை ஊட்டும் ஒரு புனிதச் சின்னத்திற்கு இணையான அடையாளமாகத் தமிழை நிறுத்துவதில் ஒரு தர்க்க நியாயம் உண்டு.

வடமொழியைத் தேவபாஷை என்று உயர்த்தியும், தமிழை நீச பாஷை என்று தாழ்த்தியும் மதிப்பிடுவது, தமிழர் சமூகப் பண்பாட்டை சமஸ்கிருதவயமாக்குவது ,மனுவின் பிறப்புக் கோட்பாட்டை அடியொற்றிச் சமூக ஏற்றத் தாழ்வை நிறுவுதல் என்பன உள்ளிட்ட வைதிக மரபினரின் ஆதிக்கத்தைத் தடுத்துநிறுத்துவதில் முனைந்து நின்ற திராவிட இயக்கத்தின் முன்னோடிகளான பெரியார், அண்ணா, ஆகியோருக்கு நிகராக இருந்தவர் பாரதிதாசன். அத்துடன், பாரதிதாசனின் தனித்திறன்களே திராவிட இயக்கத்தைத் தமிழ் மக்களுக்குள் ஆழமாகப் பதிவு செய்தன. ( ஞானி, 2007:267) எனவே, திராவிட இயக்கத்தின் கருத்தியல்களைத் தாம் படைத்த கவிதைகள் வாயிலாக மக்களிடம் எடுத்துச் சென்று பரப்புவதில் அவர் ஆற்றிய பங்கு முதன்மையானது.

தமிழ் மொழியைத் தமிழர் சமூகத்தின் கூட்டுத் திரளின் ஆற்றலாகவும் ( collective force) அச்சமூகத்தின் பிரதிநிதித்துவ மாற்று அடையாளமாகவும் ( emblem ) பாரதிதாசன் கவிதைகள்

முன்னிறுத்தின. மொழியை வெறும் கருத்துப்புலப்பட்டுச் சாதனமாக அணுகுவோரின் கருத்திலிருந்து வேறுபடுவது இது. சமூகத்தின் ஒருங்கிணைந்த அடையாளமாகவும் முதன்மையான பண்பாட்டுக் கூறாகவும் திகழ்வது. அதே வேளையில், தம்முடைய திராவிட இயக்கச் சிந்தனைகளை எடுத்துரைக்க வல்லதான பாடல்களை இயற்றி, வெகுமக்கள் நோக்கிய கருத்துப் பரவலுக்குத் தமிழைப் பயன்படுத்திய நிலையில், அதன்பால் சமகாலத்தியத் தன்மையை ஊட்டினார். அதனுடைய ஒருபகுதி வெளிப்பாடுகளில் ஒன்றுதான், கருத்துகள், சிந்தனைகள் தழுவிய பாடுபொருளை நயமாக எடுத்துரைப்பதற்கு ஏற்றவாறு, கவிதை அல்லது பாடல் என்ற வடிவத்தைச் செழுமைப்படுத்திக் கையாண்டமையாகும். சமகாலத்திய சூழலோடு பொருந்தும் வண்ணம் மக்களை ஈர்க்கும் சக்தி யுடையதாகக் கவிதையின் வடிவக் கூறுகளில் (formal features) நேர்த்தியைப் படைக்க வேண்டும் ஏன்று வலியுறுத்திய பாரதி இங்கு நினைவு கூரப்பட வேண்டியவர். அவர் வலியுறுத்திய கவிதையின் கருத்துப் புலப்பாட்டுப் பாங்கு என்பது பாரதிதாசனின் கவிதைகளில் இயல்பாகப் பொருந்தியது. வழிவழியாக வந்த செழுமை வாய்ந்த கவிதை மரபும், அவர் காலத்திற்குச் சற்று முற்பட்டுத் தொடர்ந்து வந்த வெகுமக்கள் கவிதை மரபும் ஒருங்கிணந்தவையாகப் பாடல்கள் அவரிடமிருந்து வெளிப்பட்டன. எளிய பதங்களும், ஓசை ஒழுங்கும் ,உவமை, உருவக உத்திகளுமாக நிறைந்த மரபுக்கவிதைகளைப் படைத்தளித்தது ஒருபுறமெனில், மறுபுறம், காவடிச்சிந்து என்பதன் வாயிலாகப் பரவலாக அறியப் பட்ட சிந்து வகைப்பட்ட இசைப்பாடல்கள் பலவற்றைப் படைத்தார். அவற்றுள் கணிசமானவை, காலந்தோறும் வேண்டும் தருணங்களில் இசைநிகழ்த்துகை நடத்துவதற்கு ஏற்ற நிலைப்பனுவலாக அமைந்தன.

**இனிமைத் தமிழ்மொழி. எமது எமக்கு**
**கின்பத் தரும்படி வாய்த்தநல் லமுது!**
**கனியைப் பிழிந்திட்ட சாறு எங்கள்**
**கதியில் உயர்ந்திட யாம்பெற்ற பேறு !**
**தனிமைச் சுவையுள்ள சொல்லை எங்கள்**
**தமிழினும் வேறெங்கும் யாங்கண்ட தில்லை!**
**நனியுண்டு நனியுண்டு காதல் தமிழ்**
**நாட்டினர் யாவர்க்குமே தமிழ் மீதில்!**

..........................................................................

**“தமிழென்று தோள்தட்டி ஆடு நல்ல**
**தமிழ்வெல்க வெல்க என்றே தினம் பாடு!”**

(எங்கள் தமிழ் )

இவ்வாறு, சந்தநயம் தோய்ந்த பாடல்கள் பலவற்றை இயற்றித் தமிழ்மொழி மீதான ஈடுபாட்டைப் புலப்படுத்தியதோடு, தமிழர்களிடம் தம் தாய்மொழிப் பற்றி ஊட்டினார்.

## *பெண் விடுதலை*

பெண்கள், ஆண்களால் உருவாக்கப்பட்ட கருத்துலகின் ஒடுக்குமுறை, அடிமைத் தளையிலிருந்து விடுதலைப் பெற்றுத் தங்களுக்குரிய சுய அடையாளத்தோடு ,ஆணுக்கு நிகராக வாழவேண்டும் என்று எழும்பிய போர்க் குரல்களுக்கு இடையே உரக்க வீறு கொண்டு எழுந்தது பாரதிதாசனின் கவிதைக் குரலாகும்.

கைம்மைப் பழி என்ற அவருடைய கவிதை அதற்கொரு சான்று :

**கோரிக்கை அற்றுக் கிடக்குதண்ணே இங்கு**
**வேரில் பழுத்த பலா மிகக்**
**கொடியதென் றெண்ணிடப் பட்டதண்ணே குளிர்**
**வடிக்கின்ற வட்டநிலா!**
**சீரற்றி ருக்குதையோ குளிர் தென்றல்**
**சிறந்திடும் பூஞ் சோலை சீ**
**சீஎன்றிகழ்ந்திடப் பட்டதண்ணே நறுஞ்**
**சீதளப் பூ மாலை!**

கைம்பெண்களின் நிலையை எடுத்துரைக்க சிந்து இசைப்பா வடிவங்களில் ஒன்றைத்( சிந்து கண்ணி) தேர்ந்தெடுத்துக் கொள்கிறார். வேரில் பழுத்த பலா, கொடியதென்று கருதப்படும் குளிர்நிலா, தென்றல் சிறந்திடும் பூஞ்சோலை, இகழப்படும் நறுஞ்சீதளப் பூமாலை, விலக்கப்படும் நறுங்கனி, நஞ்சென்று சொல்லபட்டும் வீணை நரம்பின் தொனி, சூடத்தக்கதல்ல என்று புறக்கணிக்கப்படும் கிரீடம், தொடத்தகாதது எனப்படும் தேன்நிறந்த பொற்குடம் என்று இப்படிப் பல இயற்கைப் பொருட்களுடன் மறுமணத்திற்கு மறுக்கப்படும் இளங்கைம்பெண்ண ஒப்பிடுகிறார்.

தமிழர் மரபுச் (சாதி) சமூகங்களிலோ, சிலவற்றின் உட்பிரிவுகளிலோ 'மணமுறிவு' செய்து கொண்ட பெண்ணும், கணவனை இழந்தவரும் மறுமணம் புரியும் வழக்கம் நிலவுகிறது. ஆனால், அது பரவலாகத் தமிழ்நாட்டில் இல்லை. சமூகமாறுதல் என்பது, ஒரு தொடர்படிமுறையாக இருப்பினும், பெண்ணை அடிமைப்படுத்தும் கருத்துருவங்களும் வழக்கங்களும் ஏனைய பிற்போக்கு நடைமுறைகளும் நமது சமூகத்தில் நகமும் தசையுமாகவே உள்ளன. இந்நிலையில் 'கைம்மைப் பழி'யின் கருப்பொருள் சமகாலப் பிரச்சினையே ஆகும். அப்பிரச்சினையைப்

பேசும் முறையில், நேர்மறை எதிர்மறை நிலைப்பட்ட பொருட்களை எதிரிணையாக நிறுத்தி நம்மை முன்னிலைப் படுத்தி உரையாடும் பாணியைக் கையாளுகிறார். இந்தச் சிந்துவகைப் பாட்டில், கவிஞரின் ஏனைய விருத்த வகைப்பட்ட பாடல்களில் வெளிப்படும் இலகுவான கருத்துப்புலப்பாட்டுப் பாங்கு இல்லையாயினும், மடக்கடிகளின் ஈற்றில் இடம்பெறச் செய்யும் இயைபொலிச் சொற்கள் வாயிலாக எழுப்பும் சந்தநயத்திலும் உத்தியிலும் தோயும் கவிஞரின் மன ஈடுபாட்டை அறிய முடிகிறது. கைம்மைக் கொடுமை, கைம்பெண் நிலை, இறந்தவன்மேல் பழி, கைம்மைத் துயர், கைம்மை நீக்கம் போன்ற பிற பாடல்களும் சிந்து வகைப் பாடல்களாக அமைந்தவை.

**மார்க்சியர் அறியத் தவறிய புரட்சிக் கவிஞர்**

உழைக்கும் பாட்டாளிகள், அடித்தள மக்களிடம் பாரதிதாசன் பரிவுமிக்கவராக விளங்கினார். அவர்களுடைய உரிமைகளுக்காகப் போர்க்குணம் மிக்க பாடல்கள் வாயிலாகக் குரலெழுப்பினார். அவரிடம் திராவிட இயக்கச் சார்புநிலையே கூடுதலாக இருந்தது என்றும், பொதுவுடைமை, புரட்சி போன்ற கருத்துக்களில் அழுத்தம் கொண்டிருந்த போதிலும் அவரை மார்க்சியர் என்று கூற முடியாது என்றும் கூறுகிறார் ஞானி. அதே சமயத்தில், மார்க்சியத்தின் அடிப்படைக் கருத்துகள் அவரிடம் வெளிப்படையாக இல்லையாயினும், அந்நோக்கத்தில் ஒருவர் ஆய்வில் ஈடுபட்டால், மார்க்சியத்தின் அடிப்படைக் கூறுகள் சிலவற்றையேனும் பாரதிதாசனிடமிருந்து வகுத்துக் கொள்ள முடியும் என்கிறார். திராவிட இயக்கம், மார்க்சிய இயக்கம் ஆகியவற்றின் இணைப்புப் பாலமாக விளங்கியவராக அவரை மதிப்பிடுகிறார். தமிழ்ச்சூழலை எதிர்மறையாக நோக்கிய மார்க்சியர்கள், அது காரணமாக, பாரதிதாசனை இகழ்ந்துரைத்ததை நாம் ஏற்க முடியாது என்று வாதிடும் ஞானி, மார்க்சியர்கள் பாரதிதாசனிடமிருந்துக் கற்றுக் கொள்ளத் தவறிவிட்டனர் என்கிறார்( 2007: 267).

இந்தக் கருத்துக்களின் பின்புலத்தில் பாரதிதாசன் உழைக்கும் மக்களின் உரிமைகளுக்காகப் பாடிய பாடல்களைக் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்:

**“ புதியதோர் உலகம் செய்வோம்–கெட்ட**
**போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்**
**பொதுவுடைமைக் கொள்கை திசைஎட்டும் சேர்ப்போம்**
**புனிதமோடதை எங்கள் உயிரென்று காப்போம்”**
**( புதிய உலகு செய்வோம்)**

**“சித்திரச் சோலைகளே ! உமை நன்கு**
**திருத்த இப் பாரினிலே முன்னர்**

**எத்தனை தோழர்கள் ரத்தம் சொரிந்தன**
**ரோ! உங்கள் வேரினிலே!**
**( நீங்களே சொல்லுங்கள் )**
**பாடுபட்டீர்கள் பருக்கை இல்லாதொரு**
**பட்டியில் மாடென வாழ்கின்றீர் மதக்**
**கேடர்கள் காலிலே வீழ்கின்றீர் ஒண்ட**
**வீடுமில்லாமலே தாழ்கின்றீர் !**
**( பலி பீடம்)**

இவ்வாறு புரட்சிக் கவிஞர் உழைக்கும் மக்களைச் சுரண்டும் அநீதியாளர்களுக்கு எதிராகவும் உழைப்பாளிகளுக்குச் சார்பாகவும் எழுதிய கவிதைகள் பலவாகும். முற்போக்கான சிந்தனைகள் மக்களிடம் சென்றடைய வேண்டும் என்பதற்காக எளிமையான பொருள் புலப்பாட்டு. நோக்கத்தை அடியொற்றி, கண்ணி, பாட்டு, என்பனவற்றோடு சந்தநயம் தோய்ந்த சிந்துப் பாடல் வடிவங்கள் பலவற்றைத் தம்முடைய கவிதைளின் படைப்பாக்கத்தில் கையாண்டார்.

**“பிறவியில் உயர்வும் தாழ்வும் சொல்லல் மடமை இந்தப்**
**பிழைநீங்குவதே உயிருள்ளாரின் கடமை நம்மில்**
**குறைசொல வேண்டாம் உறவினர் பகை நீங்குங்கோள் உங்கள்**
**குகையினை விட்டே வெளிவருவீர் சிங்கங்காள்!”**

( சகோதரத்துவம்)

இவ்வாறு, இசைப்பாடல் மரபைத் தழுவிய சிந்து வடிவங்களைக் கையாண்டு, புரட்சிக்கவிஞர் எழுதிய பாடல்கள் ஏராளமாகும். நாட்டாரின் வாய்மொழி மரபில் முதன்மையானதாக அறியப்பட்டது, தெம்மாங்கு ஆகும். இது, பத்து வகையான சிந்துப்பாடல்களில் ஒன்றாகும். ஏனைய சமநிலைச் சிந்து, வியநிலைச் சிந்து, நொண்டிச் சந்து, வழிநடைச் சிந்து, ஆனந்தக் களிப்பு, காவடிச் சிந்து, வளையல் சிந்து,தங்கச் சிந்து, குள்ளத்தாராச் சிந்து ஆகிவற்றின் செல்வாக்கினைப் பாரதிதாசன் பாடல்கள் பலவற்றில் காணவியலும்.

இவ்வெதார்த்தம் காரணமாகவே, பாரதிதாசனின் தொடக்கநிலைப் பாடல்களை நாட்டார் யாப்பு மரபைத் தழுவியவையாகவும் ( வெகுசனப் பண்பாடு), பிற்காலக் கவிதைகளைச் செவ்வியல் தன்மையினவாகவும் அடையாளங் காண்பர். தம்முடைய கணிசமான பாடல்களில் நாட்டார் அழகியலைக் கையாண்ட பாரதிக்கு இணையாக எத்துணை அளவிற்கு பாரதிதாசன் தம்முடைய பாடல்களில் நாட்டார் அழகியலைக் கையாண்டிருக்கிறார் என்பதைத் தனி ஆய்வில்தான் மதிப்பிட முடியும். மேலும், அவ்வழகியலின்

இயல்பைக்' குஜிலி' அச்சுவடிவப் பாடல்களை அடியொற்றிக் குறுக்குவது பொருந்துமா என்பதையும் மேற்கொண்டு விவாதிக்க வேண்டும்.

....................................

**சான்றாதாரங்கள்**


*ஞானி, 2007 : தமிழ்க் கவிதை ஞானி கட்டுரைகள் 3,சென்னை: காவ்யா*

*தமிழண்ணல், 1971: புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு, மதுரை: மீனாட்சி புத்தக நிலையம்*

*தனஞ்செயன்,ஆ.''பாரதியார் கவிதைகளில் நாட்டார் அழகியல்'',காக்கைச் சிறகினிலே மாத வெளியீடு: சென்னை*

*திருஞானமூர்த்தி, 1998: பாரதிதாசன் படைப்புகளில் அரசியல், மேலைச்சிவபுரி : தனலட்சுமி வெளியீடு*

*பாரதிதாசன்,1980: பாரதிதாசன் கவிதைகள், இராமச்சந்திரபுரம்: செந்தமிழ் நிலையம்*

*பாரதிதாசன்,2002: பாரதிதாசன் கவிதைகள் ,சென்னை: மணிவாசகர் பதிப்பகம்*

*வரதராசன்,மு. 2007: தமிழ் இலக்கிய வரலாறு,புது தில்லி: சாகித்திய அகாதெமி*

*வேங்டாசலபதி ஆ. இரா.2004: முச்சந்தி இலக்கியம், நாகர்கோவில்:*

*வேலுப்பிள்ளை,ஆ.2010: தமிழ்இலக்கியத்தில் காலமும் கருத்தும், சென்னை: குமரன் புத்தக இல்லம்*

*Dhananjayan,A.2001:" Tamil Symbol for Cultural Identity as reflected in the Poems of Bharathidasan",in G. Karunanidhi, R. Balachandran(Editors),Literature and Society - Twentieth Century Tamilnadu, Tirunelveli: Manonmaniam Sundaranar University*


❖❖❖


*ஆ. தனஞ்செயன்.*
*மேனாள் தலைவர்*
*நாட்டார் வழக்காற்றியல் துறை.*
*தூய சவேரியார் கல்லூரி.*
*பாளையம் கோட்டை.*

# பாரதிதாசனும் புதுமைப்பித்தனும்

பொதியவெற்பன்

**சிற்றிதழார் நோக்கில் பாரதிதாசன்:**

**பாரதிதாசனும் மணிக்கொடியாளரும்**

"தமிழ்க் கலை இலக்கியச் சூழலில் அதிகமும் புறக்கணிக்கப்பட்ட கவிஞர் பாரதிதாசன். குறிப்பாக நவீன இலக்கிய உலகம் பாரதிதாசனைப் பொருட்படுத்தவே இல்லை. இத்தனைக்கும் 'மணிக்கொடி' இதழில் எழுதிய கவிஞர் பாரதிதாசன். ஆனால் பாரதிதாசன் படைப்புகள் குறித்து ரசனை சார்ந்தோ விமர்சன ரீதியாகவோ சிறுபத்திரிகைகளில் ஒரு கட்டுரையும் படித்த நினைவில்லை." சுகுணா திவாகர். இது ஒரு பகுதி உண்மையே. பாரதிதாசனுக்கும் மணிக்கொடியாளர்க்கும் இடையில் ஊடாடிய உடன்பாடுகளும்,முரண்பாடுகளும் விரிவாக இனங்காணப்பட வேண்டியனவே! பாரதியை மகாகவிஞராக முன்னிறுத்தியது மட்டுமல்லாமல், பாரதிதாசனையும் தொடர்ந்து வெளியிட்டுப் போற்றியதும் மணிக்கொடியே.

பாரதிதாசனை மறுதலித்த நவீனத்துவச்சூழலில் இருவர்க்கும் இடையே புரிந்துணர்வின் அலைநீளம் ஒத்திசைந்த தரப்புகள் மனங்கொள்ளத்தக்கனவே! இத்தொடர்பில் ஏலவே சுட்டிக்காட்டியனவற்றிற்கும் அப்பாலான வெவ்வேறு தரப்புகளை இனி ஒத்துறழ்ந்தே காண்போம்:

**'கண்டுகொள்ளாமல் ' தன்னுணர்ச்சியோடு'**

**விலக்கும் மனோபாவம்**

"பொதுவாக கடந்த 50 ஆண்டுக்காலமாகவே திராவிட இயக்க இலக்கியவாதிகளின் படைப்புகள் தமிழ் ஆய்வுலகத்தால் 'கண்டு கொள்ளப்படாமல்' ஆனால் தன்னுணர்ச்சியோடு விலக்கப்பட்டன. பாவேந்தரும் இந்த விதிக்கு உட்படுத்தப்பட்டவரே. கடந்த 10 ஆண்டுகளாகத்தான் இந்த நிலைமை மாறி வருகிறது." தொ•பரமசிவன் (2001)

சிற்றிதழ் நவீனத்துவவாதிகள் மத்தியிலிருந்து பாரதிதாசனை இவ்வாறு 'கண்டுகொள்ளாமல் தன்னுணர்ச்சியோடு 'விலக்கும் மனோபாவம்' பரவலாக வெளிப்பட்டது:

"பாரதிதாசன் கவிதைகளில் ஒன்றுகூட எக்காரணம் கொண்டும் தேறாது. ஞானி முழுவதுமாக, பாரதிதாசனை நிராகரிக்காதது ஆச்சர்யந்தான்." எம்.டி.முத்துக்குமாரசுவாமி ('அஸ்வமேதா')

இத்தொடர்பில் எமக்கிடையே விவாதக்களம் தொடர்கின்றது. இப்பதிவு இருவேறு நவீனத்துவ ஊடாட்டங்களின் உட்கிடையான அரசியலையும் வரலாற்றையும் பேசிநிற்பது. மாறாக எம்டிஎம் தரப்புகள் முற்றிலும் கவிதையியல் தொடர்பானவையே.ஆதலால் அத்தொடர்பிலான அவர் பங்களிப்புகள் மீதான மதிப்புடன் அவருடன் நான் முரண்படும், உடன்படும் தரப்புகளுடன் அது தனியே பேசப்பட வேண்டியது என்பதால் அது குறித்து விரிவாகப் பேச இங்கே இடமில்லை.

"பாரதிதாசன் கவிதைகூறல் முழுக்க முழுக்க மரபின் பாற்பட்டதே தவிர புதிதானதுமில்லை. மிகுந்த பெயரும் புகழும் பெற்ற அவருடைய கொடை என்ற ஒன்று யோசித்தால் வெறுமனேதான் இருக்க வேண்டிவரும் புதுக்கவிதை என்பதே பார்ப்பனர்களின் கொடைதான்."

அழகியசிங்கர் ('நவீன விருட்சம்:84' ஏப்.சூன் 2009)

தேமேன்னே இரும் ஓய்! அதென்ன புதுக்கவிதைன்னா அக்ரகாரத்துக்குன்னே அகரமானியமா பிரத்தியேகமா ஒங்கள வாக்குண்ணே தாரைவாக்கப்பட்ட பிரமதேய ஏரியாவாங்காணும்?

இவ்வாறாகப் பாரதிதாசனை முற்றாக நிராகரிக்கும் மனோபாவத்துக்கு ஊடாகத் திராவிட இயக்க ஒவ்வாமை, தமிழ் மரபறியாமை, சனாதனப் பார்ப்பனிய உள்நோக்கம், மரபுக்கவிதைப் புறக்கணிப்பு, மேட்டிமை மனோபாவம் ஆகியவை தொழிற்படலாயின.

"பாரதிதாசனை இருட்டடிப்புச் செய்வது என்பது தமிழ், தமிழன், தமிழ்நாடு என்னும் அடையாளங்களைத் துடைத்தெறியும் மகிழ்ச்சியின் தொடக்கம் என நாம் உணரவேண்டும்." ஈரோடு

தமிழன்பன் (' தமிழன்பன் கவிதைகளில் சமூகம்')

**பாரதிதாசன் நிதியளிப்புக்குழுவில் தோழர் புதுமைப்பித்தனும்; ஏனைப்பிற மணிக்கொடியாளரும்**

"பாரதிதாசனுக்கு நிதியளிப்புத் தொடர்பாகச் சென்னையில் நடந்த கூட்டம் (1946 பிப்ரவரி) ஒன்றுக்குப் பார்வையாளராகப் புதுமைப்பித்தன் சென்றிருக்கின்றார். அதே நாளில் நண்பர் மீ.ப. சோமுவுக்கு எழுதிய கடிதத்தில் அந்த நிகழ்வை இப்படிக் குறிப்பிட்டிருந்தார்;

" இன்று பாரதிதாஸன் நிதி ஆதரவுக் கூட்டம் ஒன்று சென்னையில் நடந்தது. எனக்குப் பாரதிதாஸன் பாட்டுகளில் சற்றுக் கவர்ச்சியுண்டு. அதனால் அதில் கலந்துகொண்டேன். அங்குபோன பிறகு பாட்டுக்கும் மேடைக்கும் ரொம்பத்தூரம் என்பதைக் கண்டேன். பலர் பேசினார்கள். பாரதிதாஸனை உபயோகித்துக் கொண்டார்கள்." ('அன்னை இட்ட தீ')" .ய.மணிகண்டன் ('மணிக்கொடி மரபும் பாரதிதாசனும்') இத்தொடர்பில் கவனங்குவிக்க வேண்டியதெல்லாம் அக்கூட்டம் யாரால் கூட்டப்பட்டது? அதில் யார் யார் உறுப்பினராகத் தெரிந்தெடுக்கப் பட்டனர்? புபி எவ்வாறு விதந்தோதப்பட்டார்? என்பன குறித்தேயாம்:

"கவிஞர் பாரதிதாசன் நிதிக்கமிட்டிக்கூட்டம் நேற்று மாலை 6 மணிக்குக் கமிட்டிக் காரியாலயத்தில்,தலைவர் நாமக்கல் என்.கிருஷ்ணராஜ் ரெட்டியார் தலைமையில் நடைபெற்றது. தோழர் புதுமைப்பித்தன், ஸ்ரீ பால், கம்பதாசன். குஞ்சிதம் அம்மையார் பி.ஏ, எல்.டி., நால்வரும் கமிட்டி உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்." சி.என்.அண்ணாதுரை ('திராவிட நாடு'*1921-1946)

இதற்கும் அப்பாலாக திராவிட இயக்கத்தினருக்கும் மணிக்கொடியாளர்க்கும் இடையேயான ஊடாட்டங்கள் குறித்தும் மேலதிகத் தரவுகளைக் காண்போம்:

இக்குழு பின்னால் விரிவாக்கப்பட்ட. போது மணிக்கொடியாளரில் டி.எஸ்.சொக்கலிங்கம், வரா இருவர் பெயரும் இடம் பெற்றுள்ளன. 2871946. அன்று நிகழ்ந்த நிதியளிப்புவிழாச் சொற்பொழிவாளர் பட்டியலிலும் வரா, 'சிவாஜி' இதழாசிரியர் திருலோக சீதாராம் பெயர்களும் இடம்பெற்றுள்ளன. இத்தகவல் யாவும் முருகு. இராசாங்கத்தின், 'பாரதிதாசன் பெற்ற பொற்கிழி' கட்டுரையில் இடம்பெற்றுள்ளன ('பாரதிதாசன் பொற்கிழி, தமிழியக்கம்')

**தமிழவனின் தாறுமாறான 'தமிழுணர்வின் வரைபடம்'**

"தமிழ்த்துறை பலவற்றிலும் புதுத்தமிழ் இலக்கியம் வளராததற்கு அண்ணா அவர்களின் புதுத்தமிழ் கற்பனை எழுத்துக்குத் தொடர்புண்டு" "புதுத்தமிழ் என்று இலக்கிய வரலாறு அங்கீகரித்துள்ள தமிழ் செல்லப்பாவாலும் க.நாசு புதுமைப்பித்தன் மௌனி மணிக்கொடியாலும் உருவானதுதான். புதுமைப்பித்தனையும் மணிக்கொடியையும் தவிர, இங்கு பெயர் குறிப்பிட்ட யாரும் பாரதிதாசனைப் புரிந்து கொள்ளவும் இல்லை, அங்கீகரிக்கவும் இல்லை. தமிழ் இலக்கிய வரலாற்றை வரையறைப்படுத்த இந்த விஷயங்கள் முக்கியமானவை." தமிழவன் ('தீராநதி' திச.2009) தமிழவன் மாதிரித் தொடர்பில்லாமல் மாற்றி யோசிக்க மற்றெவராலுமே இயலாது. தமிழ்த்துறை பலவற்றிலும் புதுத்தமிழ் இலக்கியம் வளராதற்கு அண்ணாமீது இப்படிக்கூட பழிபோட வேறு எவராலும் முடியுமா? பாரதி பரம்பரை, பெரியார் பரம்பரை இரண்டிலுமே ஒருசேர இயங்கிய பாரதிதாசனுக்கும் மணிக் கொடியாளர்க்கும் இடையிலான உடன்பாடுகளும் முரண்பாடுகளும் நோக்கத்தக்கனவே.

'காக்கைச் சிறகினிலே' இதழில் இத்தொடர்பில் மணிகண்டன் எட்டுக்கட்டுரைகளை மூலபாட ஆய்வுக்கூறுகளுடன் முன்வைத்தார். அத்துறையில் புது வெளிச்சம் பாய்ச்சின அக்கட்டுரைகள். நானும் சில கட்டுரைகளை முன்வைத்தேன். பின்னர் இருவர் கட்டுரைகளும் நூலுருப் பெற்றன.இவற்றாலும் இன்னொரு பக்கம் திராவிட இயக்கப் பங்களிப்புகள் தொ.ப.வின் ஆய்வுக்கட்டுரையாலும் தமிழவன் தரப்புகள் தகர்ந்தே போயின. பருக்கைப்பதமாக ஒரே ஒரு சான்று:

"கடந்த பத்தாண்டுகளில் வெளிவந்துள்ள ஆராய்ச்சி எழுத்துக்கள் திராவிட இயக்க இலக்கியப்பங்களிப்பு குறித்த முதற்கட்ட ஆராய்ச்சிகளைத் தகர்த்து எறிந்துள்ளன என்பதையும் கண்கூடாகவே உணரமுடிகின்றது. இரண்டாவது கட்டத்தில் தேசியவாதிகளும் ,மூன்றாவது கட்டத்தில் பொதுவுடைமையாளர்களும் உயர்த்திப் பிடித்த இந்திய தேசியம் பற்றிய எஸ்.வி.ராஜதுரை, வ.கீதா ஆகியோரின் அரசியல் விமர்சனங்கள் ஒருபுறம்; மறுபுறமாக அ.மார்க்ஸ், பொ வேல்சாமி, கோ.கேசவன் ஆகியோரின் இலக்கிய விமர்சனங்கள் இந்த இரண்டின் விளைவாகத் திராவிட இயக்கத்தின் பங்களிப்பு பற்றிய 'கொச்சையான' ஆராய்ச்சிகள் முடிவுக்கு வந்தன.' தொ.பரமசிவன் ('தமிழாராய்ச்சியின் வளர்ச்சி')தமிழவன் தரப்புகள் யமவாலும் தொபாவாலும் தகர்ந்து போகவே 'சிற்றேடு' காலாண்டிதழில் இருவரையும் மலினப்படுத்தி 12 ஆண்டுகளுக்கு முன்புவந்த யமவின் நூலுக்கு மதிப்புரை எனும் பெயரில் வன்மக்

காழ்ப்பு அவதூறு தூற்றப்பட்டது: "பாரதிதாசனைத் தொகுப்புச் செய்தால் பல இடங்களில் 'சபாஷ் ' கிடைக்கும்.சரி,மொத்தத்தில் தொகுப்புக்கு வந்த மணிகண்டனிடம் காணப்படும் மனோபாவம் தமிழ்த்துறையில் இன்று மலிந்துள்ள மனோபாவந்தான்."

"தொ.பரமசிவன் போன்ற ஆரம்ப நிலை ஆய்வாளர்களையே முன்னோடியாகக் கொண்டிருக்கும் இந்த ஆய்வாளர் பாதிக்கிணற்றைத் தாண்டியுள்ளார்" செ.துரைராஜ் (சிற்றேடு காலாண்டிதழ்: 9) இதற்கான எதிர்வினையையும் காண்போம்:

"மேலே குறிப்பிட்ட கட்டுரை (செது மதிப்புரை) ஏராளமான தகவல் பிழைகளைக் கொண்டிருப்பதுடன் பார்வைக் கோளாறும் கொண்டிருக்கிறது." "போகிற போக்கில் தேரை இழுத்துத் தெருவில் விடுவது போல்,தொ.பரமசிவன் மீதும் சேற்றைவாரி இறைக்கிறார் கட்டுரையாளர்" " ய. மணிகண்டன் அண்மையில் அவர் 'காக்கைச் சிறகினிலே' இதழில் எழுதிவரும்ஆய்வுக் கட்டுரைகள் தமிழக ஆய்வுலகத்தின் கவனத்தைக் கோருபவை; புதிய செய்திகளை முன்வைப்பவை; நிறுவப்பட்ட மதிப்பீடுகளைக் கலைத்துப் போடுபவை.இவற்றை எல்லாம் கருத்தில் கொள்ளாது,12 ஆண்டுகளுக்கு முன்பு வந்த ஒருதொகுப்புக்கு,25 ஆண்டுகளுக்கு முந்தைய ஆண்டுகளில் நின்று கொண்டு மதிப்புரை எழுதுவது அபத்தத்திலும் அபத்தம்." "இந்த மதிப்புரை அரை அவியல், முழு அவதூறு."பார்த்திப ராஜா (சிற்றேடு:10)

இத்தகைய காத்திரமான எதிர்வினைக்கு அப்புறமும் இதழறம் பேணாச் சிற்றேடு மீளவும் சப்பைக்கட்டு ஒத்தூதி குரங்கு, குட்டியை விட்டு ஆழம் பார்க்கும் திருப்பணிகளையே இதழிலும் அதன் பேரிலான முகநூற்கணக்கிலும் இன்னமும் தொடர்கின்றது. இதற்குமேற் பேசிநிற்க இதான்று இடம்.

மறுபக்கத்தில் அண்ணாவின் பார்வையிலே மறுமலர்ச்சி (மணிக்கொடி) எழுத்தாளர்கள். இது ஆச்சாரியார்க்குப் பதில்கூறுமுகமாக அண்ணாவால் முன்வைக்கப்பட்டது: "சுவையும் அழகும் கொண்ட வகையில் எழுதக் கூடியவர்கள் நம்மவர்கள் மட்டுந்தான், மறுமலர்ச்சி எழுத்தாளர்களுக்கு அவ்விதம் எழுதவே தெரியாது என்று அகம்பாவம் கொள்கிறேன் என்று எண்ணிக்கொள்ளப் போகிறார்கள் சொல்லிவிடு அவர்களுக்கு நான் அப்படிப் பட்டவனல்ல என்பதை ! அவர்கள் தோல்வி அடைவதற்குக் காரணம் அழகாக, அருமையாக எழுதத் தெரியாததால், அந்தத் திறமை இல்லாததால் அல்ல. அவர்களின் தோல்விக்குக்காரணம் அவர்கள் மனத்திலே தெளிவான திட்டமான கொள்கையும் அதைக் கடைப்பிடித்தாக வேண்டும் என்ற நேர்மையும் இருப்பதில்லை." அண்ணாதுரை ('தம்பிக்கு அண்ணாவின் கடிதங்கள்' தொகுதி:1

கடிதம்:7 26/06/1955) இத்தொடர்பில் மேலதிகப் புரிதல்களுக்கு என் 'கருமை செம்மை வெண்மையைக்கடந்து ' நூலையும் (2015 NCBH) ய.மணிகண்டனின் 'மணிக்கொடி மரபும் பாரதிதாசனும்' நூலையும் வாசிக்க( 2014 காலச்சுவடு).

**ய.மணிகண்டன் ஆய்வுத்தரப்புகள்:**

"பாரதிதாஸன் கவி; கனவுக் கோயில்களைக் கட்டி நம்மை அதில் குடியேற்றி மகிழ்கிறவர். 'குள்ளச்சிறு மனிதர்களின்' எத்து நூல்வைத்து அவரது காவிய மாளிகைகளை முழம்போட முயல்கிறவர்களுக்கு ஸ்ரீகனகசுப்புரத்தினம் இடைமறித்து நின்று தம் கருத்துக்களைக் காட்டி மிரட்டி ஒட்டிவிடுவார். பாரதிதாஸனைப் பழகி அனுபவிக்க வேண்மெனில் ஸ்ரீகனக சுப்புரத்தினத்தின் கருத்துக்களைக் கண்டு பயப்படுவது விவேகமல்ல; 'நட்ட கல்லும் பேசுமோ' என்று பாடியவரை விட இவர் பிரமாதமான தவறு எதுவும் செய்துவிடவில்லை. அவருடைய காவியங்களில் ராமாயணம் என்னும் பெரும் புளுகும், 'எங்கள் மடாதிபதி' 'சைவத்தை ஆரம்பித்த' விமரிசையும் இருந்தால் என்ன குற்றம்? அவர் கவி.... பாரதிதாஸனின் இன்னும் இரண்டொரு அம்சங்களைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன்.அவர் ஏதோ சுயமரியாதைக் கொள்கைக்கு அடிமையானவர், அதனால் அவரிடம் தேசபக்திப்பாடல்களைப் பார்க்க முடியாது.அந்த மட்டில் அவர் மட்டமான கவிஞரெனச் சிலர் சித்தாந்தம் பண்ணுகிறார்கள்.அப்படிப் பண்ணுகிறவர்களுக்கு 'உன்னை விற்காதே' என்ற பாட்டை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்."

**'கோட்டைப் பவுன் உருக்கிச்**
**செய்த குத்து விளக்கினைப் போன்ற குழந்தைகளைப்'**
**பார்க்கத் தெரியாத ரஸிகர்களைக் '**
**குருடேயும் அன்று நின் குற்றம்'**

என்று அவ்வையுடன் சேர்ந்தே ஆசிர்வதிக்க வேண்டியிருக்கிறது."

**"பரமசிவன் வந்துவந்து வரம்கொடுத்துப் போவார்**
**பதிவிரதைக் கின்னல்வரும் பழையபடி தீரும்**

எனச் சினிமாப்படங்களையே வியாஜமாகக் கொண்டு கடவுள்,சமயம் முதலிய அங்கீகரிக்கப்பட்ட சகல கருத்துகளையும் தாக்குபவர். தாக்குவதில் விசேஷ ருசியுடன் ( திருப்பணி செய்யும் பக்தர்களைப் போலல்லாமல்) சாக்கிய நாயனாராக நின்று கல்லாலடிப்பவர்.காவியமுறை, கட்டுக்கோப்பு, உவமை சமத்காரங்கள் ஆகியவற்றில் இவர் பாரதிக்குச் சளைத்தவரல்ல. அவருடைய புதிய உவமை நயங்களை மட்டும் தொகுப்பது என்றாலே ஒரு தனிப்பிரசுரம் வெளியிட முடியும்." புதுமைப்பித்தன் இத்தொடர்பில் புதுமைப்பித்தன் தவிர சிசுசெ, கநாசு, குபரா, வரா,

நபி, திசசொ,மணிக்கொடி சீனிவாசன் ஆகியோர்தம் புபி மீதான சாதக பாதகப் பார்வைகளையும் தம் மணிக்கொடி ஆய்வுத் தரப்புகளாக இந்நூலில் ஒருசேரத் திரட்டியே சிறப்பாகவே தொகுத்தளித்துள்ளார் மணிகண்டன்.

"தமிழ் நவீனத்துவத்தின் அடையாளமாகக் கருதப்படும் 'மணிக்கொடி'க்கும் திராவிட இயக்கக் கவிஞராகக் கொண்டாடப்படும் பாரதிதாசனுக்குமான உறவை ஆராயும் நூல் இது. பாரதிதாசனையும் அவருடைய கவிதைகளையும் மணிக்கொடி மரபினரான புதுமைப்பித்தன், குபரா, ந.பிச்சமூர்த்தி, கநாசு, சி.சு.செல்லப்பா முதலானோர் எவ்வாறு எதிர்கொண்டனர் என்பதை விளக்குகிறார் மணிகண்டன் ய . கெட்டிதட்டிப்போன மனப்பதிவுகளையும் முன்னெண்ணங்களையும் ஏராளமான புதிய செய்திகளோடு தகர்க்கும் சுவையான ஆராய்ச்சி நூல் இது." A.r. Venkatachalapathy . ('மணிக்கொடிமரபும் பாரதிதாசனும்' பின்னட்டை 'பிளர்ப்'பில்) பாரதியைப் பாரதிதாசன் ஏன், எவ்வாறெலாம் போற்றினார் என்பதை உணரொணாமல் அவர் வகிபாகத்தையே மறுதலிப்பர் ஒரு சாரார். போலவே பாரதிதாசனை ஏன் எவ்வாறெலாம் புதுமைப்பித்தனும், மணிக்கொடியாளரும் போற்றினர் என உணரொணாமலே அவர் வகிபாகத்தை மறுதலிப்பர் மற்றொரு சாரார். இவற்றை எதிர்கொள்ளும் தரப்புகள் மேற்கண்ட எம்மிருவர் நூல்களிலும் விரிவாகக் காணக்கிடக்கின்றன.

இத்தொடர்பில் திகசியின் 'பாரதிதாசனும் புதுமைப்பித்தனும்' கட்டுரையும் முகாமையானதாகும்

**பாரதிதாசனும் புதுமைப்பித்தனும்**

**அணுக்கத் தோழர்களே! திகசி.**

"பாரதிதாசன், புதுமைப்பித்தனைவிட 15 ஆண்டுகள் மூத்தவர் எனினும் இருவரும் சமகாலத்தவர்கள். நெருங்கிய நண்பர்கள். (பாரதிதாசன் 29/04/1891-21/04/1964 புதுமைப்பித்தன் 1906-1948)""மணிக்கொடியில் வந்த பாரதிதாசன் கவிதைகளைப் பாரதியின் சீடர்களில் ஒருவராகவும் பின்னாளில், 'சக்தி', 'மஞ் சரி' முதலிய பத்திரிகைகளின் ஆசிரியராகவும் இருந்த திஜரவும்; பேராசிரியர் கே.சுவாமிநாதனும் மற்றும் பலரும் மிக உயர்வாக மதித்தார்கள் ""புதுமைப்பித்தனும், பாரதிதாசனைக் கவிதா ரீதியிலும், கருத்து ரீதியிலும் பாரதியார்க்குப் பின்வந்த கவிஞர்களில் தலைசிறந்தவராகக் கருதினார். ஏனெனில், சுதந்தரம்,சமத்துவம், சகோதரத்துவம் என்னும் பாரதியின் உயிர்நாடியான கொள்கைக்குத் தமது வாழ்நாள் முழுவதும் பாரதிதாசன் விஸ்வாசமாய் இருந்தார் என்பதைப் புதுமைப்பித்தன் நன்கு உணர்ந்திருந்தார். பாரதிதாசனை ஒரு புதுமைக்கவி என்றும், ஒரு புரட்சிக்கவி

என்றும், புதுமைப்பித்தன் கருதினார். பாரதிதாசனின் பாண்டியன் பரிசு நூலுக்கு அவர் எழுதிய மதிப்புரையே இதற்குச் சான்றாகும்" தி.க. சிவசங்கரன்

**இருதலையும் ஒத்திசையும் புரிந்துணர்வின் அலைநீளம்.**

"பாரதியார் இன்று நமக்குவைத்துவிட்டுப் போன சொத்துக்கள் பல.இவற்றில் முக்கியமானவற்றைக் குறிப்பிடவேண்டின் ஞானரதம், குயில்பாட்டு, பாஞ்சாலிசபதம், கனகசுப்புரத்தினம் என்ற பாரதிதாஸன் என்று சொல்ல வேண்டும்." "பாரிசவாய்வும் பக்கவாதமும் போட்டலைக்கும் இன்றைய கவிதையுலகிலே அவருடைய பாட்டுகள்தான் நிமிர்ந்து நடக்கின்றன" "பாரதிதாஸனின் கற்பனை காலதேச வர்த்தமானங்களுக்கேற்ப, இன்றைய மக்களின் கேள்வியாக,பரிணமிக்கிறது. 'புரட்சிக்கவி'யில் கதாபாத்திர சிருஷ்டி அற்புதமானது;அமுதவல்லி என்ன,உதாரன் என்ன,மன்னன்தான் என்ன உயுருடன் நடமாடும் சித்திரங்கள். இதில் பாரதியாருக்குச் சமதையாக இருப்பவர்கள் இன்றைய கவிஞர்களில் பாரதிதாஸன் ஒருவர் தான் என்பது என் அபிப்ராயம்"புதுமைப்பித்தன்.

"இந்த விருத்தாசலமில்ல;அதான் புதுமைப்பித்தன் எனக்கு ரொம்ப வேண்டியவன். விக்டர் யூகோ(பிரெஞ்சு எழுத்தாளர்) மாதிரி நையாண்டியா, நகைச்சுவையா எழுதறதிலே கெட்டிக்காரன். என்மேலே ரொம்ப மதிப்பு வச்சிருந்தவன்.என்னமா எழுதுவான் தெரியுமா? ஒரு தடவை கந்தசாமி வீட்டுக்குக் கடவுள் வந்தார்னு எழுதியிருந்தான்.சிரிக்கச் சிரிக்கக் கருத்தாழத்தோடு அருமையா எழுதியிருந்தான்.மடமைத்தனத்தையும் பிற்போக்குவாதிகளையும் கிண்டல் பண்ணி எழுதியிருந்தான். கவனிப்பாரற்று சின்ன வயசுலேயே காசநோயாலே செத்துட்டான்பா எல்லாம் வறுமைதான் காரணம்"இது பொன்னடியானிடம் பாரதிதாசன். ('மணிக்கொடி மரபும் பாரதிதாசனும்) "இக்கருத்தை (பாரதியார் விட்டுச்சென்ற சொத்துபாரதிதாசன்)இன்றைய தமிழ் இலக்கியப் படைப்பாளர்களும் ஆய்வாளர்களும் கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை என்பது வருந்தத் தக்கதாகும். இது புதுமைப்பித்தனுக்கோ பாரதிதாசனுக்கோ நியாயம் செய்வதாகாது." "புதுமைப்பித்தன் பாதையில் நவீன இலக்கியத்தை வளர்க்க வேண்டும் என்று சொல்கிற எழுத்தாளர்கள் பாரதிதாசனைப் புறக்கணிப்பதையே தம்முடைய இலக்கியக் கொள்கையாகக் கொண்டுள்ளனர். பாரதிதாசன் பரம்பரைக் கவிஞர்களையும் கண்மூடித்தனமாக வெறுத்து ஒதுக்குகின்றனர். இவ்வாறு செய்வதன் மூலம் பாரதிதாசனை மட்டுமன்றிப் புதுமைப்பித்தனையும் அவமதிக்கின்றனர் என்பதே என் கருத்தாகும். இனவெறியும், ஜாதி வெறியும், மதவெறியும் தலைவித்தாடும் இன்றைய காலக்கட்டத்தில் தமிழ்ப்பற்றும் சமநீதி உணர்வும்

மங்கிக்கொண்டிருக்கும் இந்த வேளையில் மனிதநேயத்தையும் மனிதகுல விடுதலையையும் ஒற்றுமையையயும் உயர்த்திப் பிடித்த பாரதிதாசனும் புதுமைப்பித்தனும் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கான கலைங்கரை விளக்குகள் ஆவர்" தி.க.சிவசங்கரன்

நாற்பதுகளில் முத்தையா நடத்திய முல்லை மாத இதழ் அலுவலகத்தில் இருவரும் அடிக்கடி சந்தித்ததாகவும், இருவரும் மிக நெருங்கிய தோழர்களாக விளங்கினர் எனவும், முல்லை ஆசிரியரான தொமுசி தம்மிடம் பலமுறை கூறியதாகவும் தொடர்கின்றார். 29/07/1946 இல் நாவலர் பாரதியார் தலைமையில் அண்ணா ஏற்பாட்டில் நிதிதிரட்டும் குழுவில் அவரும் உறுப்பினராக இருந்ததைதையும் ;வேலையில் இல்லாமல் இருந்த தம் கடுமையான நெருக்கடிக்கிடையிலும் தம் பங்காக 100/ அன்பளிப்பாக வழங்கியமை குறிப்பிடத் தக்கதெனப் பதிகின்றார். "அரசியல் கொள்கை வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டுத் தமிழ் வளர்ச்சிக்குப் பாரதிக்குப் பின்னால் மிகச்சிறந்த பங்காற்றிய கவிஞர் பாரதிதாசன் என்பதே புதுமைப்பித்தன் உள்ளக்கிடக்கையாகும். எனவேதான் பாரதிதாசன் மீது மிக உயர்ந்த மதிப்பும் மரியாதையும் கொண்டிருந்தார்'" தி.க.சிவசங்கரன் ('கதைசொல்லி' பிப்.ஏப். 2007)

**பாரதி பரம்பரையும் பெரியார் பரம்பரையும்**

தி.ச.சொ(டி.எஸ்.சொக்கலிங்கம்) ஆரம்பத்தில் பெரியாரையும் சுயமரியாதை இயக்கத்தையும் படுமோசமாக அவமரியாதை செய்தவரே என்றாலும் ; காலகதியில் பெரியாரின் நிலைப்பாடுகளையும்; சுயமரியாதை இயக்க நியாயப்பாடுகளையும் புரிந்துணர்வுடன் அணுகத்தலைப்பட்டார்:

**"சுயமரியாதைக் காலிகளிடம் பொறுமை காட்டுவதுதான்**
**தர்மர் ராஜ்ஜியமென்றால் அந்த ராஜ்யம் நமக்கு**
**வேண்டியதில்லை. துஷ்டர்களை அடக்கி ஒடுக்கும**
**வீரராஜ்ஜியமே தமிழருக்கு வேண்டும்."**

('மணிக்கொடி' 19/01/1939) என்றெழுதிய திசசொவே பின்னர் "ஜஸ்டிஸ் கட்சியைத் தோற்றுவித்த ஸ்ரீ தியாகராயச் செட்டியாரும், டாக்டர் நாயரும் சுயநலக்காரர்கள் அல்ல, பெரிய தியாகிகள்" எனவும் புரிந்துணர்வுடன் எழுதவும் நேர்ந்தது.

இத்தொடர்பில் சொக்கலிங்கம் பற்றிய ஆய்வினை முனைவர் பட்டத்துக்குச் சமர்ப்பித்த பேரா. பா.மதிவாணன் தரப்புகள் முகாமையான கடவுத்திறப்புகளே: "இந்திய அரசியல் விடுதலைப்போர்க் காலத்தில், பார்ப்பனரால்லாதார் இயக்கமான நீதிக்கட்சி முதலியவற்றைக் கடுமையாகத் தாக்கிவந்த சொக்கலிங்கம் விடுதலைக்குப்பின், காமராஜர் குழுவிற்கு எதிராகப்

பார்ப்பனர் செயல்பட்டமையால் பார்ப்பனரல்லாதார் இயக்கங்களின் நியாயங்களை விளக்கினார்."

"இந்திய விடுதலைக்குப் பின்பு சமூக சாதிய முரண்பாடுகளும், மோதல்களும் அரசியலில் குறிப்பிட்ட போது, ஈவெரா பெரியாரின் நிலைப்பாட்டை வரவேற்க நேர்ந்தது." பா.மதிவாணன் (' டி.எஸ். சொக்கலிங்கம் அரசியல்/ இதழியல்') அவர்களுடைய ஏனைப்பிற சமாந்தரக்கலைஞர் எல்லாம் (வெ.சாமிநாத சர்மா திருவிக உட்பட) இட்லரைத் தேசபக்தியின் உருவமாக நேசபாவத்துடனேயே அணுகிநின்ற அன்றைய காலச்சூழலில் அவரைப் பாசிஸ்ட்டாக இனங்கண்டு எதிர்த்த இருவர் எவரெவரெனில் அவ்விருவர் புதுமைப்பித்தனும் மணிக்கொடி சீனிவாசனும் மட்டுமே!

அதற்கும் அப்பாலாகக் தமிழ்த்திரை உலகின் திருப்புமுனையான கலைஞரின் 'பராசக்தி' திரைப்படத்திற்குச் சனாதனிகளால் பலத்த எதிர்ப்பபு எழுந்த தருணத்தில் அதனைப் பொருட்படுத்தாது இசைவளித்த திரைத்துறைத் தணிக்கை அதிகாரி யார் என அப்போது ஜெமினிஸ்டுடியோ கதை இலாக்காவில் பணியாற்றிய அசோகமித்திரன் எடுத்துரைத்தார். அவர் நம் மணிக்கொடி சீனிவாசனேதான்! . இத்தொடர்பிலான மேலதிகப் புரிதல்களுக்கு என் 'திராவிட இயக்க ஒவ்வாமை நோயிலிருத்தல்' நூலிற் காண்க பாரதிதாசன் குறித்த புதுமைப்பித்தன் கட்டுரைக்கு ஊடாக நாம் மனங்கொள்ள வேண்டிய முகாமையான அம்சம் என்னவென்றால் அது அவருடைய சமாந்தர எழுத்தாளர்களான குபரா, கநாசு, சிசுசெ ஆகியோர் என்னதான் பாரதியாருக்கு அடுத்து, அவருக்குச் சமமான கவிஞர் எனக்கொண்டாடி நின்றாலும்கூட; (வராவைவும், மணிக்கொடி சீனிவாசனையும் தவிர) அவர்களால் கவி பாரதிதாசனை ஏற்றுக்கொள்ளும் அளவிற்கு கனகசுப்புரத்தினம் என்ற சுயமரியாதை மானுடனைச் செரித்துக்கொள்ளவே இயலவில்லை என்பதுதான்!

இதுதான் இருவேறு நவீனத்துவப் படிநிகராளியர்க்கும் இடையில் ஊடாடிய கருத்துச்சமரின் முகாமையான உட்கிடையாகும். ஆக. இவற்றாலும் பேரா.ய.மணிகண்டன் மணிக்கொடியியல் ஆய்வுத் தரப்புகளாலும்: இத்தொடர்பிலான என் பாரதிதாசன் குறித்த ஆய்வுக்கட்டுரைகளாலும் ('கருமை செம்மை வெண்மையைக் கடந்து.. ' நூலிற் காண்க. NCBH வெளியீடு) தமிழவன் தரப்புகள் தகர்ந்தே போயின.

**பாரதிதாசன் திரைப்பங்களிப்பு குறித்துச் சுகுணாதிவாகர் காணத்தவறிய பக்கங்கள்**

திராவிட இயக்கத்தவருள் முதன்முதலாகத் திரைப்படத்துறையில் உரையாடல், பாடல் ஆசிரியராக நுழைவினைநிகழ்த்தியவர்

பாரதிதாசனே.1938 இல் வரா கதைவசனம் எழுதி பிச்சமூர்த்தி நடித்து:வெளிவந்த 'ஸ்ரீராமானுஜர்' திரைப்படத்தின் ஒன்பது பாடல்களையும் ஒருசேர எழுதியவரும் பாரதிதாசனே ஆவார்.

'குமரகுருபரர்' நாடகம் முதற்பதிப்பின் முன்னுரையில்பாடல்களுக்கு எவ்வாறு இராகம் தாளம் அமைப்பது, எவ்வாறு மாற்றி அமைப்பது, குறிப்பிட்ட காட்சிகளுக்கு இன்னவகை நாட்டியத்தை நிகழ்விப்பது, ஒல்லும் வாயெலாம் நகைச்சுவையைச் சுட்டுவது என அவரால் டைரக்டருக்குக் குறிப்புகள் தரப்பட்டுள்ளன. தமிழர் படமெடுக்க ஆரம்பஞ் செய்த' அலங்கோலங்கள்' குறித்து பாரதிதாசனார் பாட்டுவிட்ட சுவையான சில பாட்டுக்கள் விருத்தத்தின் இலகு பாய்ச்சலாய்...:

**'தமிழ்நாட்டில் சினிமா'**

**"வடநாட்டார் போன்ற உடை, வடநாட்டார் மெட்டு**
**மாத்தமிழர் நடுவினிலே தெலுங்குகீர்த் தனங்கள்**
**வடமொழியில் ஸ்லோகங்கள்! ஆங்கில ப்ரசங்கம்**
**வாய்க்குதவா இந்துஸ்தான்! ஆபாச நடனம்**
**அடையுமிவை அத்தனையுங் கழித்துப் பார்த்தால்**
**அத்திம்பேர் அம்மாமி எனுந்தமிழ்தான் மீதம்"**

('பாரதிதாசன் கவிதைகள்' முதல் தொகுதி)

**"பரமசிவன் அருள்புரிய வந்துவந்து போவார்!**
**பதிவிரதைக் கின்னல்வரும், பழையபடி தீரும்!**
**சிரமமொடு தாளமெண்ணிப் போட்டியிலே பாட்டுச்**
**சிலபாடி மிருதங்கம் ஆவர்த்தம் தந்து**
**வரும்காதல்! அவ்விதமே துன்பம்வரும் போகும்"**

புதுக்கவிதையை பாரதிதாசனும் புதுமைப்பித்தனும் ஏற்கவில்லை.. நவீன கவிஞரூடே இளங்கோ கிருஷ்ணன் பாரதிதாசன், புதுமைப்பித்தன் குறித்து எடுத்துரைப்பது இங்கே மனங்கொள்ளத் தக்கதாகும்:

**பாரதிதாசம்-தமிழ் வரைவியலின் நவீனமுகம்.**

"பாரதிக்குப் பிறகு ஆற்றல் மிக்க கவிஞராகவும் தனி மனித இயக்கமாகவும் உருப்பெற்ற ஆளுமை என்றால் அது பாரதிதாசன்தான். பாரதி முதல் புதுமைப்பித்தன் வரை பல முன்னோடிகளின் அபிமானத்தைப் பெற்றவர். பு.பி பொதுவாக கவிஞர்களை மதிக்கமாட்டார் என்பார்கள். ஆனால், அவர் பாரதிக்குப் பிறகு பாரதிதாசன் மீதே பெரும் மதிப்புகொண்டிருந்தார். பாரதிதாசன் ஒருவரே கவிஞனுக்குரிய எல்லா அந்தஸ்துகளையும் அடைந்த தமிழ் ஆளுமை. அதற்கேற்ற தகைமையும் அவருக்கு

இருந்தது. பாரதிக்கே அமையாத மாபெரும் மாணவப் பட்டாளம் பாரதிதாசனுக்கு அமைந்தது. பின்னாட்களில் அவர்களில் பலர் புகழ்பெற்ற ஆளுமைகளாயினர்."

"கிட்டதட்ட உலகம் முழுதுமே புதுக்கவிதைக்குள் நுழைந்து விட்ட பின்னும் மரபில் கவிதை எழுதிக்கொண்டிருந்தவர் பாரதிதாசன். டி.எஸ்.எலியட், எஸ்ரா பவுண்ட், நிகோனர் பர்ரா, பெர்டோல்ட் ப்ரெக்ட், நெரூதா, ஆக்டோவியா பாஸ், ஆலன் கின்ஸ்பெர்க் போன்ற மேதைகள் கோலோச்சிய நாட்களில் இங்கு தமிழ் சிலம்பம் சுழற்றிக் கொண்டிருந்தவர் என்ற விமர்சனம் ஒன்று அவர் மீது உண்டு.

நம் மண்ணின் இரண்டாயிர வருட மரபு கொடுத்த அழுத்தம் அது. நெரூதாவுக்கும் எலியட்டுக்கும் இல்லாத ஒரு கவிதை யியல் தொடர்ச்சி நமக்கு இருக்கிறது. அதிலிருந்து பட்டென்று வெளியேறுதல் சுலபம் அல்ல. பிறகு மரபின் அத்தனை வளங்களையும் கற்ற ஒருவன் அதிலிருந்து வெளியே வருவது சாத்தியமே இல்லாத விஷயம்.

மரபில் எழுதினாலும் பெண் விடுதலை முதல் சாதி எதிர்ப்பு வரையான நவீன சிந்தனைகளே அவரின் பாடு பொருளாய் இருந்தன என்பதையும் நாம் கவனிக்க வேண்டும்.

"ஒரு கவிஞனாக அவர் சிந்தனை இயல்பாகவே பரிணாமம் அடைந்துகொண்டுதான் இருந்தது. மாற்றங்களை ஏற்றுக்கொண்டுதான் இருந்தது என்பதன் சான்றுகள் இவை.

தமிழ் என்பதையே ஒரு தொல்படிமமாக (Archetype) ஓர் உயர் விழுமியமாக நோக்கும் போக்கு ஒன்று பழங்காலம் முதலே நமக்குண்டு. பாரதிதாசன் அதன் நவீன காலத் தொடர்ச்சி. நிலத்தை வணங்கும் பண்பாடுகளுக்கிடையே மொழியை வணங்கும் பண்பாடு இது. நிலத்துக்கு இணையாக மொழியையும் போற்றி அதனையும் ஒரு தூலப் பொருளாய் கருதும் சிந்தனைப் போக்குக்கு சமகால முகம் கொடுத்தவர் என்பதுவே பாரதிதாசனின் முதன்மையான பங்களிப்பு. அந்தவகையில் தமிழ் அடையாளம் என்ற கருத்தியல் இருக்கும் வரை பாரதிதாசன் பெயர் நிலைத்திருக்கும்.

(இளங்கோ கிருஷ்ணன்

29/04/2022 முகநூற் பதிவிலிருந்து..)

❖❖❖

# பாரதிதாசன் தமிழ் பின்காலனியத்தின் முன்னோடி

இரா.முரளி

உலகை ஒற்றைத் தன்மை அமைப்பாகக் காலனியம் மாற்றி வந்தபோது அதை எதிர்த்து உருவான மெய்யியல் இயக்கம் பின் நவீனத்துவமாகும். வேற்றுமைகளைக் கொண்டாடுவோம் என்ற முழக்கத்துடன் பெருங்கதையாடல்கள், ஒற்றைப் பெரும் பண்பாட்டுத் திணிப்பு, அதிகார ஆதிக்கம் போன்ற எல்லாவற்றையும் எதிர்த்தது அது. ஆனால் அது இனக் குழுக்களின் விடுதலை, பண்பாட்டு மீட்பு என்பனவற்றைப் போற்றவில்லை. ஆனால் பின் காலனியம் என்ற கருத்தக்கம் காலனியத்திற்கு மாற்றாக இனக்குழுக்களின் பண்பாட்டு மீட்பு, தொன்மங்களின் புரிதல்கள் என்ற வகையில் மெய்யியலை முன்வைத்து பண்பாட்டு மேலாதிக்கத்திற்கு எதிராக உருவெடுத்தது. பின்காலனியம் ஏகாதிபத்திய எதிர்ப்புக் கொண்ட அரசியல் தத்துவம் ஆகும். பின்காலனியம் ஒரு மெய்யியல் அறிவுக் கோட்பாடு அல்ல.அது விடுதலைக்கன குரலாக இலக்கியம் மூலம் வெளிப்பட்டது. இலக்கியப் பரப்பில் ஆப்பிரிக்க எழுத்தாளர்கள் சினுவாஆச்சிபே, கூகிவாத்யாங்கோ போன்றவர்கள் பின்காலனிய எழுத்தாளர்களாக அடையாளம் காணப்பட்டனர். பின்னர் அது ஒரு கோட்பாட்டுத் தன்மையைப் பெற்றது பாலஸ்தீனிய சிந்தனையாளர் எட்வர்ட் சயித், இந்தியாவின் ஹோமி பாபா மற்றும் காயத்திரி ஸ்பிவக் போன்றவர்களால்தான். எட்வர்ட் சயித் எழுதிய ஓரியண்டலிசம் எனும் நூல் மிகவும் புகழ் பெற்றது. இவர்களின்

படைப்புகள் கிழைத் தேய நாடுகளின் பண்பாடுகள் பற்றிய ஒரு அரசியல் ஆய்வை மேற்கொள்ளத் தூண்டின.

பின் காலனியப் படைப்புகளின் ஆணிவேராக கருதப்படுவது இனக்குழுக்களின் மாண்புகளை காலனிய ஆதிக்கத்தின் பிடியிலிருந்து மீட்பது ஆகும். மேற்கத்திய ஆதிக்கப் போக்கினை எதிர்த்து பல தளங்களில் எழுச்சி அடைவதை முன்வைப்பதே பின் காலனியம். பண்டைய இலக்கியங்களிலிருந்தும், தொன்மங்களிலிருந்தும், வரலாற்றிலிருந்தும் இனக்குழுக்களின் தனித் தன்மையை மீட்டெடுபதே இதன் முறைமை ஆகும்.

இந்த அடிப்படையில் இந்தியா நீண்ட கால காலனியாதிக்கத்திற்கு உள்ளன நாடாகவும், பின்னர் ஒற்றைத் தன்மையை முன்வைக்கும் நவீனத்துவத்துவத்தின் பாதிப்பில் ஜனநாயகக் குடியரசாகவும் உருவெடுத்தது. இன்று ஒரே நாடு, ஒரேபண்பாடு, ஒரே மொழி எனும் முழக்கத்தை முன்னிறுத்தும் அளவிற்குச் சென்றுள்ளது. இந்தச் சூழலில்தான் தமிழகம் தன் தனித்தன்மையைக் காப்பாற்றும் வகையில் சுதந்திரம் பெறுவதற்கு முன்பு இருந்தே தன் குரலை எழுப்பியுள்ளது. சுதந்திரத்திற்குப் பின் இந்தி மொழித் திணிப்பு தமிழ் தேசீயத்திற்கான பெரும் எழுச்சியை உண்டாக்கியது. இந்த தமிழ் தேசிய எழுச்சிக்கு முதற்கட்ட முன்னுரை எழுதியவர் வள்ளலார் எனலாம். அதை தீவிரமாக்கிய முக்கிய இலக்கியவாதியாக பாவேந்தர் பாரதிதாசனைக் காணலாம்.

இனத்தைச் செய்தது மொழிதான் என்ற பாரதிதாசனின் வரிகள் அவர் மொழியை ஒரு சமூகப் பார்வையுடன் என்னவாகப் பார்க்கின்றார் என்பதை உணர்த்துகின்றது. இனம் மட்டுமல்ல இனத்தின் மனத்தைச் செய்ததும் மொழி எனும் போது ஒட்டு மொத்த தமிழர்களின் பண்பாடு என்பது தமிழ் மொழியால் உருவக்கப்பட்டது என்ற புரிதலை முன்வைக்கின்றார். இதுதான் தமிழின் பின் காலனிய செயல்பாட்டின் அஸ்திவாரம் எனலாம். இனத்தின் ஆணிவேராக தமிழைக் காணவைத்ததுதான் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர் என பாட வைத்தது. இந்தப் புரிதல் அல்லது இந்தப் பாடல் உணர்ச்சிவசப்பட்டு முழங்கிய முழக்கம் அல்ல. கூர்மையான பண்பாட்டு அரசியல் புரிதலுடன் ஒரு கவிதையாக முன்வைக்கப்பட்ட கருத்தியலாகும். இன்று மொழி அரசியல் பற்றிய பல்வேறு இயக்கங்களும் ஆய்வுகளும்ப் செழித்து வருகின்றன. அது வெறும் கருத்தியலாக அன்றி செயல் பாட்டுத் தளத்திலும் உந்து சக்தியாக செயல்பட்டுவருகின்றது. தமிழரின் மொழிப் பற்று என்பது எதோ தமிழனாகப் பிறந்து விட்டோம் என்ற அடையாளத்தால் ஏற்பட்ட இன அபிமானம் அல்ல. அது தமது வாழ்வியல், அரசியல்,வரலாறு ஆகியவற்றின் ஊடாக தமிழ்குலம்

பெற்ற அறம் சார்ந்த விழுமியங்களைப் போற்றும் செயலாகும். இதற்கனப் புரிதலுடன் கூடிய புரட்சிக் கவியின் முழக்கம் தமிழரை வீரு கொள்ள வைத்தது என்றால் அது மிகையில்லை.

வாழ்வும் வளமும் மங்காத தமிழ் எனும் வரியில் தமிழ் வெறும் ஒரு தொடர்பு மொழியாக அவரால் புரிந்து கொள்ளப்படவில்லை என்பது தெளிவாகின்றது. தமிழ் என்ற சொல்லை ஒரு பரந்து பட்ட தளத்தில் வைத்து அதற்குரிய பல பரிமாணங்களை அவர் உணர்ந்ததால்தான் அப்படி எழுத முடிந்தது.

" தமிழறியான் தமிழர்நிலை, தமிழர்நெறி, தமிழர்களின் தேவை, வாழ்வு தமையறிதல் உண்டோ? எந் நாளுமில்லை! தமிழறியான் சுவையே காணான்! சுமை சுமையாய் அரசியல் சீர் சுமந்தவர்கள் இதுவரைக்கும் சொன்ன துண்டோ தமிழ்க்கல்வி தமிழ்நாட்டில் கட்டாயம் என்பதொரு சட்டம் செய்ய?என்று கவிநயம் காணப் பேசுவது தமிழ்த் தேசிய அரசியல் அல்லவா? தமிழறியாதவர் தமிழர் நிலை அறியமுடியாது, அவர்களின் தேவைகளையும் புரிய முடியாது என்று அறுதியிடுவதும், தமிழிலேயேதான் தமிழர் கல்வி இருக்க வேண்டும் என்று கூறுவதும் பின் காலனியத்தின் முக்கிய புள்ளிகளாகும். கட்டாயத் தமிழ் கல்விக்கான சட்டம் பற்றி வலியுறுத்துவது இன்று மிக மிகத் தேவையான விடயமாகும். தமிழ்மொழியை பள்ளிகளில் மிகவும் பலவீனமானதாக ஆக்கிவிட்டோம். ஆங்கில அறிவுக்குத் தரும் முக்கியத்துவம் தமிழுக்கு இல்லை என்பது அறிந்ததே! தமிழை எழுத்துக் கூட்டிப் படிக்கத் தெரிவதனால் தமிழ் அறிந்தவராவதில்லை. தமிழ் பண்பாட்டை அதன் சிறப்புகளை, இலக்கியப் பங்களிப்புகளைப் புரிந்து கொள்ளும் அறிவே தமிழறிவாகும். நவீனத் தமிழ் படைப்புக்களைக் கூட அறியாத இளைஞர் கூட்டம் அதிகரித்து வருகின்றது. தமிழ்ப் பண்பாட்டு விழுமியங்கள் நவீன காலனிய நுகர்வியத்தால் விழுங்கப்பட்டு, உள்ளீடற்ற தமிழ் இளைஞர்கள் உருவாகும் ஆபத்து அதிகரித்து வருகின்றது. திருக்குறளைக் கூடப் படிக்க முடியாத, புரிந்து கொள்ள முடியாத, அல்லது தவறாக புரிந்து கொள்ளும் அவல நிலை உள்ளது. ஆங்கிலத்தையும் ஒரு தொடர்பு மொழியாக மட்டுமே புரிந்து, தெரிந்து வைத்திருக்கும் இத் தலைமுறை ஆங்கிலேயக் காலனியப் பண்பாட்டின், அதன் அரசியலின் தன்மை குறித்த எந்த அறிவையும் பெற்றிருக்க முடியாது.

**"ஆங்கிலநூல் அறிவுக்குச் சான்றிருந்தால் அதுபோதும் அலுவல் பார்க்க!**
**ஈங்குள்ள தமிழர்நெறி அவர்க்கென்ன தெரிந்திருக்கும்? இதுவு மன்றி,**
**மாங்காட்டுச் செவிடனெதிர் வடிகட்டி ஊமையரை வைத்ததைப்போல்**
**தீங்கற்ற தமிழறியான் செந்தமிழ்நாட்டலுவலின் மேற் செல்லலாமோ?"**

என்று பாரதிதாசன் உரைப்பது எத்தனைப் பேருக்கு உறைக்குமெனத் தெரியவில்லை. பாரதியின் உணர்வுநிலை மற்றும் வீரிய தமிழின் எளியநடை, பெரியாரின் மூடநம்பிக்கை எதிர்ப்பு, பெண்ணுரிமைக் கருத்தியல், கம்யூனிஸ்ட்டுகளின் பொதுவுடைமைக் கருத்துகள், உழைப்பாளர் உரிமைகள், மறை மலை அடிகளின் தனித்தமிழ்; தமிழர் எழுச்சி இவை அனைத்தின் ஒருங்கிணைப்பாக உருவானவர்தான் பாரதிதாசன்! "சாதிமதம் தமிழில்லை .அந்தச் சாதி மதத்தைத் தமிழ் கொள்வதுமில்லை" என நாட்டின் மிக முக்கியமான பிரச்சினையான சாதி மதம் குறித்து அவர் பாடியது கவனிக்கத்தக்கது. ஒரு புறம் தனித் தமிழ் அடையாளத்தை முன்வைத்தும், அதே சமயம் அது சாதி மத பேதமற்ற ஒரு சமுதாயம் என முன்வைக்கும்போது, அவர் தமிழ்ப் பற்று என்பதை இனவெறியாக அல்ல, சமத்துவத்தை வலியுறுத்துவதாகக் காணலாம். காலனியாதிக்கதிற்கு முன்பு சாதியம் கெட்டிபட்டிருந்த நிலை. காலனியம் அதைச் சற்று அசைத்தது என்பதை மறுக்க இயலாது. ஆனால் காலனியத்திற்கு மாற்றாக மரபை முன்னிறுத்தும் போது, மிகவும் கவனமாக அதன் கசடுகளை நீக்கி மானுட விடுதலை பேசும் நல்லறம் பற்றியே பறை சாற்றுவது என்பது ஒரு தமிழிய மறுமலர்ச்சித் தத்துவமாகக் காணலாம். "சாதி ஒழித்தல் ஒன்று நல்ல தமிழ் வளர்த்தல் மற்றொன்று; இதில் பாதியை நாடு மறந்தால் மறுபாதி துலங்குவதில்லையாம்'' என்று எனக்குப் பாரதி சொல்லித் தந்தார்'' என்று பாவேந்தர் கூறுகிறார். சாதி ஒழிப்புக்கு மொழி என்ன பாங்காற்ற வேண்டும் என்பதை தீவிரமாக ஆய்வுக்குட்படுத்தவேண்டும் என்பதை இது உணர்த்துகிறது.

''சேரிப் பறையர் என்றும் தீண்டாதோர் என்றும் சொல்லும் வீரர் நம் உற்றாரடி'' என்ற பாடல் வரிகள் உயர்சாதித் தமிழரிடம் உள்ள சாதிய வேற்றுமை உணர்வைக் கண்டு வேதனைப் படுகின்றது.

**“இருட்டறையில் உள்ளதடா உலகம்**<br>
**சாதி இருக்கின்ற தென்பானும் இருக்கின்றானே**<br>
**மருட்டுகின்ற மதத்தலைவர் வாழ்கின்றாரே**<br>
**வாயடியும் கையடியும் மறைவதெந்நாள்?**

“ இருட்டறையிலிருந்து வெளிவர தமிழ் ஒளிகாட்டும் என்பதே அவரின் புரிதல்.

**“எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்**<br>
**மங்காத தமிழென்று சங்கே முழங்கு”**

என்று முழக்கமிடும்போது ஏதோ தமிழ் எழுத்துக்களைப் போற்றுவதாகப் புரிந்தால் நாம் இன்னும் வளரவில்லை என்றுதான் அர்த்தம். தமிழ் இலக்கியங்கள் காட்டும் வரலாற்றுத் தரவுகள்,

மக்களின் வாழிவியல் கூறுகள், இவற்றின் சிறப்பை நாம் ஆழ்ந்தறிந்து புரிதல் என்பதையே அவர் தமிழறிவு என்பதின் மூலம் உணர்த்துகின்றார்.

**மேதினியை ஆளுபவன் சத்திரியனாம் மிக**
**நீதமுடன் வைசியன் என்று உயர்வு செய்தோர் மிக**
**நாதியற்று வேலைகள் செய்தே முன்பு**
**நாத்திறம் அற்றிருந்தவன் சூத்திரன் என்றே சொல்லி**
**ஆதியினில் மனு வகுத்தான் இவை**
**அன்றியும் பஞ்சமர்கள் என்பதும் ஒன்றோம்",**

(பாரதிதாசன் கவிததகள் 3, ஞாயமற்ற மறியல் 6)

**"சாதிப் பிரிவு செய்தோர்**
**தம்மை உயர்த்துவற்காக**
**நீதிகள் சொன்னோரடிசகியே**
**நீதிகள் சொன்னோரடி",**

(பாரதிதாசன் கவிததகள் 3, சமத்துவப்பாட்டு 45)

போன்ற எண்ணற்ற படைப்புக்களை சாதியத்தை எதிர்த்து முன் வைத்தவர் பாரதிதாசன். இவை சாதியம் என்பதை எப்படி பின் காலனியம் இங்கு அணுக வேண்டும் என்பதற்கான வழிகாட்டுதலாகவும் கொள்ளலாம். பின் காலனியம் என்பதே ஒரு இனத்தின் மீது மற்றொரு இனம் அடக்கு முறை செய்வதை எதிர்ப்பதாகும். ஒரு இனத்திற்குள்ளாகவே சாதிப் படிநிலைகள் உண்டாக்கி அதில் உயர்சாதி ஆதிக்கம் செய்யுமானல் அதை எதிர்பதும் பின் காலனியமாகும். பின் காலனியத்தின் ஆயுதங்கள் அந்தந்த மரபின் வேர்களிலிருந்தே எடுக்கப்படுகின்றன. அதைத்தான் பாரதிதாசன் செய்திருக்கின்றார். தமிழினம் என்றால் அது சாதி சமய பேதமற்ற ஒரு இனம் என்பதே அவரின் நிலைப்பாடு. அது தற்போது தீவிரத்தன்மை அடைவதை நாம் காணலாம். திராவிடம் என்ற பெருங்கதையாடல் இன்று தமிழினம் என்ற சொல்லாடலால் கேள்விகுள்ளாக்கப்பட்டுள்ளது. தமிழர் என்ற அடையாளம் பின் காலனிய அடையளமாக இன்று உருவெடுத்துள்ளது. பாரதிதாசனின் இந்த வகைப் புரிதலுக்கான தொடக்கப் புள்ளியாகக் கொள்ளலாம். பின் காலனியம் தமிழின் அழகை வர்ணிக்கும் இலக்கிய வகை அல்ல, அது அரசியல். கூர்மையான அரசியல் மெய்யியல். தமிழைக் கொண்டே அந்த அரசியலை கூர்மைபடுத்தினார் புரட்சிக் கவிஞர். பெரியார் தமிழைப் பழித்தபோதும், அவர் தமிழின் பக்கமே ஆணித்தரமாக நின்றார். பாரதி வேத தர்மம் பாடியபோதும், அதை நிராகரித்து நின்றவர் பாரதிதாசன்,

ஒரு புறம் இந்திய விடுதலைக்கானப் போராட்டம், மறுபுறம்

தமிழின விடுதலை என்பதை அவர் கவனமாக கையாண்டது கவனிக்கத் தக்க விடயமாகும். ஆனால் இன்னும் மேற்கொள்ள வேண்டிய ஆய்வுகள் நிறைய உள்ளன.

**“பெண்ணடிமை தீருமட்டும் பேசும் திருநாட்டு**
**மண்ணடிமைத் தீர்ந்துவருதல் முயற்கொம்பே ”,**

(பாரதிதாசன் கவிதைகள், ‘சஞ்சீவி பர்வதத்தின் சாரல்’)

பெண்ணடிமைத் தீருமட்டும் மண்ணடிமைத் தீராது என்று விளக்கத் தொடங்கிப் பெண்ணுரிமை பற்றி அவர் எழுதியுள்ளவை பல பழந்தமிழ் இலக்கியங்கள் வலியுறுத்தும் பெண்ணடிமைக் கருத்துக்களை மறுப்பதாகவும் இருப்பதைக் கவனிக்கவேண்டும். அப்படியே அவர் ஆராயமல் தமிழ் இலக்கியப் புகழ் பாடவில்லை. அதே சமயம் இம்மாதிரி காலத்திற்கு ஒவ்வாத கருத்துகள் தமிழில் காணப்படுவதால் தமிழை தரம் தாழ்த்தவும் அவர் விரும்பவில்லை. மாறாக மானுடம் போற்றும் சிறப்பு அம்சங்களை அவர் முன்னிறுத்தித் தமிழைப் போற்றியுள்ளார்.

அவருக்குத் தமிழ் என்பது பல பொருள்களைக் கொண்டது. கோவை ஞானி சொல்வது போல அகராதியில் அவர் கண்ட பொருட்களைக் காண இயலாது. பாரதிதாசனுக்குத் தமிழ் என்றால் அன்பு, அறிவு, ஆண்மை, பெண்மை, தாய்மை, வீரம், நீதி, அறம், அழகு, கலை, தவம், விடுதலை, ஆட்சி போன்ற பல பொருட்களாகும். இதிலிருந்தே அவர் தமிழை வெறும் எழுத்துக்களின் கூட்டாகக் காணவில்லை, அதை ஒரு மானுடப் பண்பாடாகக் கண்டார் என்பது புரியும். தமிழர் நில வளங்களைப் பாதுகாப்பதும் அதில் அடங்கும். தமிழரின் மீதான மொழி மற்றும் பண்பாட்டுத் திணிப்பை எதிர்ப்பதும் அவரின் முக்கிய நோக்கம். தமிழ் மக்களின் வாழ்வாதரங்களைப் பெரும் முதலாளிகள் சுரண்டுவதையும் எதிர்க்கும் புரட்சிக் குரல் அவருடையது. பின் காலனியம் இவற்றின் குரலாகத்தான் உள்ளது. பாரதிதாசனைத் தமிழ்ப் பின்காலனியத்தின் முன்னோடி என்று சொல்வதில் தயக்கமில்லை.

❖❖❖

*பேராசிரியர் இரா.முரளி*
*மேனாள் முதல்வர்*
*மதுரை கல்லூரி*

# பாவேந்தர் தமிழ்

இராமமூர்த்தி

## ***கருத்தியல் கோட்பாடு*** (Ideology)

**அணுகுமுறை**

இனி பாவேந்தரின் மொழி வளர்ச்சி தொடர்பான கருத்தியல்களை விளக்கலாம்.

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய வரலாற்றில் மகாகவி பாரதி பாரம்பரியத்தின் தொடர்ச்சியாகவும், தானே ஒரு பெரும் பாரம்பரியத்தின் தொடக்கமாகவும் விளங்குபவர் பாவேந்தர் பாரதிதாசன். அவரைப் பற்றித் தந்தை பெரியார் கூறுவது:

> ***பாரதிதாசன் சுயமரியாதை இயக்கத்தின் ஒப்பற்ற கவி என்றுதான் கூற வேண்டும். இந்த ஒரு காரணத்தினாலேயே அவர் இன்று தமிழ்நாட்டின் சிறந்த கவியாய் இருந்தும், அவருடைய புகழ் போதுமான வரையில் பரவாமல் இருக்கிறது.ஆனால் அவர் மட்டும் வெறும் புகழை விரும்புவாரானால் காலத்திற்கும் பாமர மக்களின் உணர்ச்சிக்கும் ஏற்றவாறு தம் கருத்துக்களை மாற்றிக் கொண்டு மிகச் சிறந்த கவி என்ற பெயரை எளிதில் பெற்று விடலாம். ஆனால் உண்மை, நியாயம், அறிவு முதலியவற்றைச் சிறிதும் விட்டுக் கொடுக்க இசையாத இயற்கையான பிடிவாதமுடையவராதலால் அவர் புகழை எதிர் பாராமல், தம் கொள்கைகளில் விடாப்பிடியாக இருந்து வருகிறார்.''***

இந்தக் கூற்று கூர்ந்து கவனிக்கத்தக்கது. (திருவாசகன் 1993.90)

காலத்திற்கு ஏற்றவாறும், பாமர மக்களின் உணர்ச்சிக்கு

ஏற்றவாறும் தம் கருத்துக்களை மாற்றிக் கொள்ளாமல், பழைய ஆசாரங்களிலும், மதங்களிலும் ஊறிக் கிடந்த அன்றைய சமூகத்தினைத் தன் கவிதைகளால் மாற்றப் பாடுபட்டார். அக்காலத்து வரலாற்று நிகழ்ச்சிகளையும் சமூதாயச் சிக்கல்களையும் பாடுபொருளாக எடுத்துக் கொண்டார். கடவுள், சமயம், ஆரிய திராவிட இனங்கள், தமிழகத்தின் எதிர்காலம், பெண்கல்வி, குழந்தை மணம், கைம்பெண் நிலை முதலாளித்துவ எதிர்ப்பு, பொது உடைமை ஆகியன பற்றி இவரது பாடல்கள் மக்களிடையே பெரிய மாற்றத்தை உண்டு பண்ணியிருக்கின்றன.

**இருக்கும் நிலை மாற்ற ஒரு புரட்சி மனப்பான்மை**
**ஏற்படுத்துதல் பிறர்குழைக்கும் எழுத்தாளர் கடனாம்**

(792)

என்று அன்றைய காலகட்டச் சமூதாயத்தின் நிலையை மாற்றுவதைத் தமது கடமையாகக் கொண்டு கவிதை எழுதியவர் பாரதிதாசன் ஆவார். பாரதிதாசனின் மனதிற்கு மிக நெருக்கமான பாடுபொருள்களில் தமிழும் தமிழினமும் முக்கியமானவையாகும். தமிழ் மொழியையும் தமிழ் இனத்தையும் பாரதிதாசன் அளவிற்கு யாரும் பாடவில்லை என்றே கூறவேண்டும். தமிழ் என்றால் என்ன என்ற அவரின் கருத்து இங்குச் சுட்டத்தக்கது. தமிழ் இன்பம் என்ற தலைப்பில்,

*''தமிழ் என்றாலே தமிழ் மொழியை மட்டும் குறிப்பதோடு நிற்கவில்லை. தமிழ் என்றால் தமிழர்களையும் குறிக்கின்றது. தமிழ் என்ற சொல் தமிழர் படையையும் குறிக்கும்''. (பாரதிதாசன் பேசுகிறார். பக்.57.)*

என்று கூறுகிறார். தமிழின் நிலைபற்றியும், தமிழ் வளர்ச்சி பற்றியும் தனித்தமிழ் பற்றியும் பல்வேறு கருத்துக்களைப் பாரதிதாசன் வெளியிட்டுள்ளார். அவருடைய கருத்துக்கள் எல்லாம் அளப்பரிய தமிழ்ப்பற்றால் படைக்கப்பட்டவை. உணர்வு சார்ந்தவை என்று சாதாரணமாக எடைபோட்டுவிட முடியாது.

*பாரதிதாசன் தத்துவ மேதையோ, அரசியல் விற்பன்னரோ, சட்டப் பேரறிஞரோ, மொழிநூல் வல்லுநரோ, மனித இன வரலாற்று ஆசிரியரோ அல்லர். அவர் ஒரு முழுமையான கவிஞர். எனவே இனம், மொழி சமயம் சமுதாயம் பற்றி அவர் கூறிய கருத்துக்களின் தரத்தை எடையிடுவது முறையாகாது. வீண் செயலுமாகும். அவரது கோட்பாடுகள் கவிதைகளாக மலர்ந்து மணம் பரப்புகின்றனவா அல்லது கோட்பாடுகளாகவே மொட்டவிழாது இலக்கிய இன்பத்திற்கு ஊறு செய்து நிற்கின்றனவா என்பதே நாம் கேட்க வேண்டிய, விடை அறிய வேண்டிய வினாவாகும். அவரது கொள்கைகளை வெறுப்போர் அவரது கவிதைகளைத் தூற்றுவதையும். அவரது கொள்கைகளை ஏற்றுக் கொண்டோர் கவிதையைப் போற்றுவதையும் நாம் பெரிதும் காணுகின்ற இந்நாளில் இத்தகைய ஆய்வு இன்றியமையாதது.*

என்று மருதநாயகம் (2004:106) குறிப்பிடுவார்

பாரதிதாசனின் மொழி, இனம், சமுதாயம் பற்றிய கருத்துக்களை சரியான கோட்பாடுகளின் அடிப்படையில் பார்க்கும்பொழுது தான் அவருடைய உணர்வுகளையும் புரிந்துக் கொள்ளமுடியும். பாரதிதாசனின் தமிழ்ச் சிந்தனைகளைச் சமூக மொழியியல் அடிப்படையிலும் கருத்தியல் அடிப்படையிலும் ஆராயும்பொழுது அவருடைய கருத்துக்களின் வலிமையைப் புலப்படுத்த முடியும்.

மொழியை அறிவியல் முறையில் அணுகுவது மொழியியலாகும். பாவேந்தரின் மொழி பற்றிய சிந்தனை எல்லாம் உணர்வு நிலையில் இருக்கும் பொழுது மொழியியல் அணுகுமுறையில் ஆராய்வது முறையாகுமா? என்ற கருத்து எழலாம். மொழியை அறிவுப்பூர்வமாகவும் அணுகலாம். மொழியை உணர்வுப்பூர்வமாக அணுகுவது அறிவியலுக்கு எதிரான செயல்பாடன்று. மொழியைச் சமுதாயத்தோடு இணைத்துப் பார்க்கும் பொழுது இத்தகைய அணுகுமுறைகளுக்கு இடம் இருப்பதை அறிந்துக் கொள்ளமுடியும்.மொழி, சமுதாயத்தில் பயன்படுத்தப்படும் பொழுது, சமுதாயத்தால் மொழி பாதிக்கப்படுவதும், சமுதாயம் மொழியால் பாதிக்கப்படுவதும் இயல்பே. இத்தாக்கங்களை அறிவியல் அடிப்படையில் விளக்குவது சமுதாய மொழியியல் ஆகும். ஒரு படைப்பாளி, மொழியைக் கருவியாகக் கொண்டு தன் படைப்பைப் படைக்கும்பொழுது, அப்படைப்பு மொழியால் அமைந்த நிலையில், படைப்பின் சமூக நிலையையும் விளக்க முடியும். படைப்பில் காணப்படும் சமூக மொழியியல் கூறுகளைப் படைப்பாளியின் பின்புலத்தோடு இணைத்தும் விளக்கலாம்.

பாவேந்தரின் படைப்புகளைப் பொறுத்தமட்டில் தமிழே பாடு பொருளாக அமைந்துள்ளது. எந்த ஒரு படைப்பாளனின் படைப்பிலும் அவனுடைய கருத்தியல்கள் வெளிப்பட்டு இருக்கும். பாரதிதாசனின் தமிழ் பற்றிய பாடலில், மொழி பற்றிய பல்வேறு கருத்துக்கள் வெளிப்பட்டுள்ளன. இக்கருத்தியல்கள் எவை? அவை எவ்வாறு வெளிப்படுத்தப்பட்டுள்ளன என்பதை மொழியியல் வழி விளக்கலாம்.

பாவேந்தரின் மொழி பற்றிய சிந்தனைகள் எல்லாவற்றிற்கும் மொழியியல் நெறியில் விளக்கமளிக்க இயலாமல் போகலாம். பல மொழிச் சிந்தனைகள் மொழியியல் நெறிகளுக்குப் புறம்பானவையாக இருக்கலாம். அவற்றைப் பாவேந்தரின் மொழிக் கருத்தியலாகக் கொண்டு, அவற்றை சமுதாயச் சூழலோடும், கருத்தியல் வெளிப்படுத்தப்பட்ட முறைகளோடும் விளக்கும் பொழுது, பாவேந்தரின் ஆழமான தமிழ்ப்பற்றை விளக்கிக் காட்ட

இயலும். அதற்குக் கருத்தியல், கருத்தியல் உருவாக்கம் ஆகியனப் பற்றிய அடிப்படைப் புரிதல்கள் அவசியமாகின்றன.

## *1.1 கருத்தியல்*

கருத்தியலைப் பற்றி பல்வேறு அறிஞர்கள் பலவிதமான கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர். கருத்தியலின் அடிப்படைப் பொருளே கருத்துதான். ஒரு சமூகத்தினரால் பகிர்ந்துக் கொள்ளப்படும் கருத்து கருத்தியலாக இருக்கும் ஆனால் சமூக நிலையில் ஆதிக்கச் சமூகத்தின் கருத்துக்களே கருத்தியலாகவும், பிறரது கருத்துக்கள் தவறானவை என்றும் பொருள் மாற்றமடையலாம். கருத்தியலை விளக்குவதற்கு கருத்து பற்றிய அடிப்படைத் தெளிவு அவசியமாகிறது. கருத்தைப் பின்வருமாறு வெவ்வேறு வகையில் விளக்கலாம். (வான் டிங்க் 1998).

*(1) கருத்து என்பது மனதில் உள்ள ஒன்று என்றோ, மனதின் செயல்பாட்டால் விளையும் ஒன்று என்றோ கூறலாம்.*

*(2) எண்ணங்களின் வெளிப்பாடு கருத்தாகலாம்.*

*(3) மனித அறிவின் ஒரு பகுதியாகக் கருத்து அமையலாம்.*

*(4) தனிப்பட்டதாகவோ, சமூகத்தினரால் பகிர்ந்து கொள்ளப்பட்டதாகவோ அமையலாம்.*

*(5) ஒரு முக்கியப் பொருண்மை குறித்த புதிய சிந்தனை வெளிப்பாடு எனலாம்.*

இக்கருத்தை மையமாக வைத்துக் கருத்தியல் விளக்கப்படுகிறது. ராய்மண்ட் வில்லியம்ஸ் (பிஸ்க் (1990) இருந்து எடுக்கப்பட்டது) என்பவர் கருத்தியல் பற்றி மூன்று வகையானவிளக்கங்களைத் தருவார். அவை

*(1) ஒரு குறிப்பிட்ட குழுவினருடைய நம்பிக்கைகளின் ஒழுங்கமைவு.*

*(2) அறிவியல் நெறிக்கு மாறுபடக்கூடிய நம்பிக்கைகளின் ஒழுங்கமைவு.*

*(3) பொதுக்கருத்து மற்றும் பொருண்மையை உருவாக்கும் செயல்.*

கருத்தியலைப் பல்வேறு கருத்துக்களையும், முடிச்சுகளையும் உடைய பனுவலாகவும் காண்பர். கருத்தியலை ஒரு பண்பாட்டின் மிக முக்கியமான பகுதி என்றும், ஒரு சமூகத்தினர் தங்களது உயர் மதிப்பு, வேலைப்பாகுபாடு போன்றவற்றின் வகைப்பாட்டில் உள்ள தன்னுணர்வு சார்ந்த விழிப்புணர்வு என்றும் காண்பர். பிரஞ்சு அமைப்பியல்வாதிகளும் பின் அமைப்பியலாளரும், கருத்தியலை விழிப்புணர்வுடைய ஒழுங்கமைக்கப்பட்ட கருத்துக்கள் என்பதை

விடுத்து, அது ஓர் அமைப்போடு இயங்கக்கூடிய வாழ்வியல் நடத்தை என்றும் கூறுவர்.


கருத்தியல் என்பது உளவியல் சார்ந்தும் சமூகம் சார்ந்தும் வரையறுக்கப்படுகிறது. உளவியலார், மனப்பாங்குகளின் பிறப்பிடம் கருத்தியல் என்பர். கருத்தியல்களைத் தனிமனிதன் உருவாக்குவதைவிடச் சமூகமே வரையறை செய்கிறது என்று கூறுவார். மார்க்சீயக் கருத்தியலாளர் சமூகத்தில் உள்ள வர்க்கபேதமும் வேலைப் பகிர்வுமே தங்களது கருத்தியலுக்கான அடிப்படை என்பார்கள். எனவே கருத்தியல் என்பதைத் தனிமனித உரிமையாக க் கொள்ளாமல் அதை ஒரு சமூகச் செயல்பாடாக கொள்ளவேண்டும் என்று கருதுவர்.

கருத்தியல் என்பது ஒரு வகையான உண்மைக் கருத்துக்கள் என்று கருதப்பட்டாலும், ஒரு சமூகத் தகுதியால், சமூகத் தகுதியின் விளைவால், பட்டறிவின் விளக்கத்தால் அது கருக் கொள்ளும் நிலையைப் புரிந்துக் கொள்ள வேண்டும். அதாவது சமூக அரசியல், பொருளாதார அதிகாரத் தன்மையின் தொடர்பால் கருத்தியல்கள் உருவாக்கப்படலாம். கருத்தியல் பொதுவாக ஓர் அதிகாரக் குழுவின் கருவியாகவும், சொத்தாகவும், நடவடிக்கையாகவும் கருதப்படுகிறது. அதிகாரமற்றவரின் பண்பாட்டுக் கருத்தாக்கங்களும் செயல்பாடுகளும், கருத்தியல் தன்மையற்றவை என்று அதிகாரக் குழுவால் வரையறை செய்யப்படும்.

## *1.2. கருத்தியலும் குறிப்பீட்டாக்கமும்*


கருத்தியலைக் கருத்துக்கள், சொல்லாடல்கள் அல்லது குறீயீட்டுச் செயல்பாடுகள் ஆகியவற்றின் வழியாக அதிகாரத்தைக் கைப்பற்றவோ, அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்ளவோ பயன்படுத்துவர். ஒரே பண்பாட்டைச் சேர்ந்தவர்களால் பகிர்ந்து கொள்ளப்படும் தொன்மங்களும் குறிப்புகளும் (Denotations) கருத்தியலுக்கும், குறிப்பீட்டாக்கத்திற்கும் அடிப்படையாக அமைபவை.

குறிப்பீட்டாக்கத்தைச் சசூரின் கோட்பாட்டின்படி சற்று விளக்கலாம். சசூர் ஒரு குறி என்பது குறிப்பான், குறிப்பீடு இரண்டும் இணைந்தது என்பார். பசு என்ற குறி ஒலிக்குறியாக உள்ளது. அது பசு என்ற நான்கு காலுடைய விலங்கைக் குறிக்கும் உருப்பொருளுக்கும், பசு என்றவுடன் நம் மனதில் தோன்றும் மனக்குறிக்கும் சேர்த்தே பொருள் கொடுக்கிறது. இந்த உறவைப் பின்வருமாறு விளக்குவார்.



இதைப் பசுவைப் புனிதம், அமைதி என்ற பொருள் வெளியில் உள்ளவற்றோடு தொடர்புப்படுத்துவதைக் குறிப்பீட்டாக்கம் எனலாம். இந்தக் குறிப்பீட்டாக்கம் என்பது ஒவ்வொரு பண்பாட்டிற்கும் தனித்தனியானது. பண்பாடு சார்ந்து அமைவது.

இந்த நிலையில் கருத்தியல்களும் மொழி வழியாகவோ மொழி அல்லாத பிற செயல்களின் வழியாகவோ புலப்படுத்தலாம். அவ்வாறான புலப்படுத்தலில் மொழியின் குறிப்புப் பொருள்களும், தொன்மங்களும் கருத்தியல் வெளிப்பாட்டிற்குப் பெரிதும் உதவும். இவ்வாறு தொன்மங்களும் மொழிவழியாக அமையும் பனுவலும் கருத்தியலின் பண்பை நிலைகொள்ளச் செய்கின்றன. கருத்தியலுக்கும் குறிப்பீட்டாக்கத்திற்கும் இடையே உள்ள உறவைப் பின்வரும் படம் தெளிவாகக் காட்டும்.




நம்பிக்கைக்கும் விழுமியங்களுக்கும் ஒரு வடிவம் கொடுப்பவை குறிகளாகும். இக்குறிகள் மொழியாகவும் நடத்தையாகவும் அமையலாம். இக்குறிகளைத் தொடர்ந்து பயன்படுத்துவதன் வழியாகக் கருத்தியலுக்கும் உயிர் ஊட்டப்படுவதுடன் புதிய கருத்தியல்களை உருவாக்கவும் வழிவகை செய்யப்படும். குறிகளின் வழியாகத் தொன்மங்களும் நம்பிக்கைகளும் வெளி யிடப்படும் பொழுது, அவை மக்களை, ஒத்த பண்பாட்டினராக இணங்காணவும் செய்யும். (பிஸ்க். 1982).

கருத்தியலை உறைந்துபோன விழுமியங்கள் என்பதாக அல்லாமல் ஒரு நடத்தையாகக் கொள்ள வேண்டும் என்பார் பிஸ்க்.ஒரு குறிப்பிட்ட கருத்தியலுக்கு ஒருவர் ஆட்படும் பொழுது, அக்கருத்தியலுக்கேற்ப நடத்தையும் வெளிப்படும். கருத்தியலின் மிக முக்கிய அங்கமே அதன் தேர்வுத் தன்மையும், மறைத்தல் தன்மையும்தான். இத்தகைய மறைத்தல் திரித்துக் கூறுதல் என்பன, தான் சார்ந்த ஈடுபாட்டைக் காட்டவும், பயன்படுத்தப்படுபவையாகும். அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்ள உருவாக்கும் போலியான உணர்வுகளைத் தகவல் தொடர்புச் சாதனங்கள் வழியாகப் பரப்புவதன் மூலம் கருத்தியல் பரவலாக்கப்படுகிறது.

எடுத்துக்காட்டாக ஒரு நபரை போராளியாகவும், தீவிரவாதியாகவும் பார்க்கும் பார்வை கருத்தியல் சார்ந்ததாகும். தகவல் தொடர்புச் சாதனங்கள், அரசியல் வெளியீடுகள் வழியாக இவை பெருமளவில் பரப்ப ப்படும்பொழுது அதிகாரக் கருத்தியல் வலுப்பெறுகிறது. இத்தகைய ஆதிக்கம், பட்டாளி வர்கத்தினரது பணிவை இயற்கையானதாகவும் மாற்றிக் காட்டிவிடும்.

## *1.3. கருத்தியல் மறு உற்பத்தியாக்கம்*

கருத்தியல்கள் சமூகச் செயல்பாடுகளாலும், பேச்சுகள், உரைகள் வழியாகவும் மறு உற்பத்தி செய்யப்படுகின்றன. கருத்தியல் உற்பத்தியாக்கம் என்பது தொடர்ச்சியான நிலைபெற்ற செயல்பாடாகும். கருத்தியல்கள் புதிய குழுவினருக்கு அறிமுகமாகும் பொழுதோ, புதிய பயன்பாட்டாளர்கள் வரும்பொழுதோ மறு உற்பத்திச் செய்யப்படுகின்றன. ஒரு சமுதாயத்தின் செயல்பாடுகளில் பங்கேற்பதன் வழியாகவோ (கற்றல், சொற்பொழிவு) புதிய நபர்களுக்கு அறிமுகம் செய்யப்படுவதுடன் அவர்களாலும் பயன்படுத்தப்படுகின்றன.

கருத்தியல் உற்பத்தியாக்கம் என்பதைச் சமூக நிலைகளில் பின்வரும் வழிகளில் காணலாம் அவை

(1) அமைப்பு-செயல்பாடு என்ற நிலை

இந்நிலையில் ஓர் அரசு அமைப்போ, நிறுவனமோ கருத்தியலை உருவாக்கி அதைச் செய்யல்படுத்தும். இது மேலிருந்து கீழ் நோக்கிச் செல்லும் செயல்பாடாக அமையும். கருத்து நிலையிலான நம்பிக்கைகளுக்குச் செயல்வடிவம் கொடுக்கப்படுவது இந்நிலை யில்தான்.

(2) செயல்பாடு-அமைப்பு நிலை

இந்த நிலையில் மக்களிடம் பொதுவாகப் பகிர்ந்துக் கொள்ளப்பட்ட, நிலைபெற்ற தொடர்ச்சியான கருத்தியல்கள் ஓர் அமைப்பாக உருப்பெறும். இது கீழிருந்து மேல் செல்லும் செயல்பாடாக இருக்கும்.

அதை போலக் குழுக்கருத்தியல் தனிநபர்களுக்குச் செல்லுதலும், தனிநபர் கருத்தியல் ஒரு குழு உருவாக்கத்திற்கும் அடிப்படையாக அமையலாம். கற்பித்தல், உரையாடல், சொற்பொழிவு போன்ற செயல்பாடுகளிலும் மொழியின் பல்வேறு வடிவங்களிலும் (பேச்சு எழுத்து கவிதை கட்டுரை முதலியன) கருத்தியல்கள் வெளி யிடப்படலாம்.

## *1.4. கருத்தியல் உரைக்கோவை அமைப்புகள்*

கருத்தியல் உரைக்கோவை என்பது ஒருவரது நம்பிக்கையை வெளிப்படுத்தும் உரைக்கோவையாகும். இந்நம்பிக்கைகள் வெளிப்படையாகவோ, மறைமுகமாகவோ அமையலாம். இவ்வுரைக் கோவையின் மிக முக்கியச் செயல்பாடு, அது கேட்பவரின் அல்லது வாசிப்பவரின் மனதில் ஒரு தூண்டல் விளைவை ஏற்படுத்த வேண்டும். கருத்தியல் உரைக்கோவை வழியாகக் கேட்பவரின் மனநிலையைத் தங்களின் நம்பிக்கை, குறிக்கோள், விருப்பத்திற்கு ஏற்ப மாற்றம் செய்யவும் முடியும்.

உரைக்கோவை எவ்வாறு கருத்தியலை வெளிப்படுத்தி நிற்கிறது என்பதோடு, அது எவ்வாறு பிறரால் பெறப்படுகிறது என்பதும், முக்கியமானவையாகும்.

கருத்தியலை வெளிப்படுத்தக் குறிப்பிட்ட மொழி அமைப்பு, குறிப்பிட்ட மொழி வடிவம்தான் பயன்படுத்தப்பட வேண்டும் என்று கூற இயலாது. ஆனால் ஒவ்வொரு அமைப்பும், வடிவமும் ஒவ்வொரு சூழலில் கருத்தியலை வெளிப்படுத்தலாம்.

கருத்தியல் வெளிப்பாடுகள் இரண்டு நிலைகளில் அமைகின்றன. அவை

(1) கருத்தியல் தொடர்பான நம்பிக்கைகளைப் பொதுவாக வெளிப்படுத்துதல்.

(2) நிகழ்வுகளிலும் சூழல்களிலும் குறிப்பிட்ட நம்பிக்கைகளை மறைமுகமாக வெளிப்படுத்துதல்.

எனலாம்.

ஒரே உரைகோவை அமைப்பு, ஒரு சூழலில் கருத்தியல் வெளிப்பாடாகவும், ஒரு சூழலில் கருத்தியல் அற்றதாகவும் செயல்படலாம். இந்நிலை பயன்படுத்துவோரின் விருப்பம், குறிக்கோள் தான் ஏற்றுள்ள பாத்திரம்., ஒரு குழுவின் செயல் ஆகியவற்றால் அறியப்பட வேண்டிய ஒன்றாகும். எனவே, சூழலைப் பொறுத்தவரையில், இரண்டு அமைப்புகளைக் குறிப்பிடலாம். அவை

(1) புலப்பாட்டுச் சூழல்

(2) புலப்பாட்டில் பங்கேற்பாளர் பங்கு

புலப்பாட்டுச் சூழல் என்பது பேடைப் பேச்சு. சட்டசபை உரை, துண்டறிக்கை போன்றன கருத்தியல் தூண்டல்

பங்கேற்பாளரின் பங்கு என்ற அமைப்பில் அரசியல்வாதியாக, பெரும் முதலாளியாக, சினிமா நட்சத்திரமாக ஒரு சில தகுதிகளின் அடிப்படையில் சில கருத்தியல்கள் வெளிப்படலாம்.

கருத்தியலை, இத்தகைய சமூகத் தகுதிகளைக் கொண்டவர்கள் வழியாக அறிமுகம் செய்யும்பொழுது, ஓர் அதிகாரத் தன்மையும் நம்பகத்தன்மையும் வெளிப்படும்.

அதேபோலக் கருத்தியலை வெளிப்படுத்தும் நாடகம், சினிமா போன்றவற்றில் கதாநாயகன், வில்லன் போன்ற பாத்திரங்கள் வழியாக கருத்தியல் வெளிப்படலாம். ஒவ்வொரு பாத்திரத்தைப் படைப்பதற்கும் ஒவ்வொரு கருத்து முன்னரே சமுதாயத்தில் நிலை நிறுத்தப்பட்டிருக்கும். இத்தகைய முன் கருத்துக்களின் அடிப்படையில் கருத்தியலை வெளிப்படுத்தலாம் .

மொழிநிலையில் பல்வேறு அமைப்புகளும் அவை பயன்படுத்தப்படும் விதமும் கருத்தியல் வெளிப்பாட்டிற்கு உதவலாம். ஒரு கருத்தியலை வெளிப்படுத்தும் உரைக்கோவை, பனுவலாக இருக்கும்பொழுது, பனுவலில் உள்ள எழுத்துக்களின் மாறுபாடுகூடக் கருத்தியலை வெளிப்படுத்தும். செய்தித்தாள்களில் இடம்பெறும் தலைப்புகள், பெரிய எழுத்துகள், இடம்பெறும் இடம் ஆகியன கருத்தியல் வெளிப்பாட்டிற்குச் சான்றாகும்.

வாக்கியநிலையில், வாக்கியங்களின் அமைப்பு, எந்த வகையான வாக்கியம் ஆகியனவும் கருத்தியல் சார்ந்தவை. வாக்கிய நிலையில் பின்வரும் கூறுகள் கவனிக்கத்தக்கன.

(1) வாக்கியங்கள், சொற்கள் வரும் முறை.

(2) செய்வினை செயப்பாட்டுவினை வாக்கியங்கள்.

(3) எழுவாய் வெளிப்படையாகவோ,மறைந்தோ வரும் நிலை.

(4) பதலீட்டுப் பெயர்களின் பயன்பாடு அவை வெளிப்படுத்தும் அதிகார உறவுகள்.

(5) இனங்காணல் x ஒதுக்கல் என்ற நிலையில் வாக்கியத்தில் இடம்பெறும் நாம் x பிறர் என்ற அமைப்பு.

மொழி நிலையில், கேட்போர் வாசிப்போரைக் கவரும் வகையில் அமைக்கப்படும் திரும்பத் திரும்ப வருதல், பதிலியாக வருதல், உவமை, உருவகம், முரண்கள் ஆகியன கருத்தியல் வெளிபாட்டிற்கு உதவுவன.

ஒரு பனுவல்/கவிதையின் தலைப்புக் கூடக் கருத்தியலை வெளிப்படுத்தும். ஒரு பொருண்மையின் பெரும் அமைப்பு என்ற நிலையில் இத்தலைப்பு அமைவதால் கூறவந்த மொத்தப் பொருண்மையை முன்னிறுத்தும் தன்மை கொண்டது தலைப்பு.

அதேப் போல பனுவலில் வரும் பேச்சு செயல்பாடுகளால் (Speech Acts) எச்சரித்தல், ஏவுதல், நம்பிக்கை வெளிப்படுத்துதல் போன்ற அதிகாரக் கருத்தியல் சார்பானவை. எனவே மொழிக்கூறுகளின் தன்மை, அவை பயன்படுத்தப்படும் முறை, பயன்படுத்தப்படும்

சூழல் ஆகியவற்றை வைத்துக் கருத்தியலை விளக்க முடியும்.

## *1.5 கருத்தியலின் அமைப்பு*

எந்த ஒரு கருத்தியலாக இருந்தாலும் அதை ஓர் அமைப்பு நிலையில் ஆராயலாம். அந்த வகையில் பின்வரும் ஆறு கூறுகள் மிக முக்கியமானவையாகும் அவை

(1) உறுப்பினர்கள் (2) செயல்கள் (3) குறிக்கோள் (4) விழுமியங்கள் (5)சமூகநிலை மற்றும் குழு உறவுகள் (6) சமுதாய வளமைகள்

(1) கருத்தியல் என்பது ஒரு குழுவினரின் நம்பிக்கைகள் என்ற நிலையில் அதில் உள்ள உறுப்பினர்களது நிலை அறியப்பட வேண்டும். அவை பின்வரும் வினாக்களின் வழி அறியப்படலாம்.

(1) நாம் யார்?

(2) எங்கிருந்து வந்தோம்.

(3) பார்ப்பதற்கு எவ்வாறு இருப்போம்

(4) நம்மவர்கள் யார்

(5) நம்முடன் இணையத் தகுதி பெற்றவர் யாவர்.

(2) கருத்தியல் என்பது ஒரு நடத்தை என்ற நிலையில் பின்வருவன சிந்திக்கத்தக்கன.

(1) நாம் என்ன செய்யப் போகிறோம்?

(2) நம்மிடம் எது எதிர்பார்க்கப்படுகிறது?

(3) நாம் எதற்காக இங்கே இருக்கிறோம்?

(3) கருத்தியல் ஒரு நடவடிக்கை அல்லது செயல்பாடாக வெளி யிடப்படும் பொழுது அதன் குறிக்கோள் விளக்கப்படலாம்.

(1) நாம் இந்த செயலை ஏன் செய்கிறோம்.

(2) நாம் எதை அடைய விரும்புகிறோம்.

(4) கருத்தியலுக்கான விழுமியங்கள் என்ற நிலையில் பின்வருவன விளக்கப்படலாம்.

(1) நம்முடைய தலையாய விழுமியங்கள் எவை.

(2) நம்மையும் பிறரையும் எவ்வாறு மதிப்பீடு செய்கிறோம்

(3) நம்முடைய தனித்துவம் என்ன?

(5) கருத்தியலில் பங்கேற்பவர்களின் சமூக நிலையும், சமூக

உறவுகளும் அதிகாரத்தைக் காட்டவல்லன. அந்த நிலையில்,

(1) நம்முடைய சமூகத் தகுதிகள் எவை?

(2) நம்முடைய எதிரிகள் யார்?

(3) நம்மைப் போன்றவர் யார்? நம்முடைய எதிரி எத்தகையவர்?

(6) கருத்தியலுக்கு அடிப்படையாக அமையும் மற்றொன்று சமுதாய வளமாகும். ஒத்த கருத்தியலைக் கொண்டுள்ளவர்களின் சமுதாய வல்லமை என்ன? எத்தகைய சமூக வளமைகளை நாம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.?

மேலே குறிப்பிட்டுள்ள கருத்தியல் அமைப்புகள் இனங்காணலும் இன ஒற்றுமைக்கு அடிப்படையாக அமைபவை.

## 1.6. மொழிவழிக் கருத்தியல்

மொழி வழியாக வெளிப்படும் கருத்தியலைப் பின்வரும் எடுத்துக் காட்டின் வழியாக விளக்கலாம்.

*'':தொடர்ந்து வளர்ந்து வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப உணவு உற்பத்தி செய்முறையை அறிந்திருந்தும், பெரும்பாமையோர் பட்டினியில் இருப்பதற்குக் காரணம் அறிவியல் முடிவுகள் செயல்படுத்தப்படாமையே''*

மேலே குறிப்பிட்ட ஒரு வாக்கியம் ஒரு கருத்தைத் தெரிவிக்கிறது. அக்கருத்தைக் கூறுபவர் ஒருவர். அவரின் சமுதாயப் பின்னணி ஒன்றாக உள்ளது. அதை நடைமுறைப்படுத்துபவர் வேறொருவர். அதாவது இங்கு குறிப்பிடப்படும் இரு பிரிவினருக்கும் அறிவியல் நெறிமுறைகளைப் பின்பற்றும் சமுதாயமாக இருந்தால், அங்கே கருத்தியல் என்பது எதுவும் இல்லை எனலாம். ஆனால் அவ்வாறு இல்லாத நிலையில் பின்வரும் எதிர் நிலைகளைக் காணலாம்.

அறிவியல் விவசாயம் x பண்டைய விவசாயம்

நகரம் X கிராமம்

சந்தைப்பொருளாதாரம் X தேவை சார்ந்த பொருளாதாரம்

வளர்ச்சி X நிலைப்பு

மாற்றம் X பழமை

இந்த எதிர் நிலைகளின் அடிப்படையில் பேசுபவர் நாம் என்ற அறிவியல் பண்பாட்டைச் சார்ந்தவராகவும் பிறர் என்பவர் அறிவியல் சாராதவர் என்றும் புரிந்துக் கொள்ளலாம். கருத்தியலின் அடிப்படையே நாம் X பிறர் என்பதுதான்.

மேலே குறிப்பிட்ட அணுகுமுறையில், பாவேந்தரின் மொழி பற்றிய

கருத்தியலை ஆராயலாம். பாவேந்தரின் கருத்தியல் அன்றைய சமுதாயத்தில் அதிகார வர்க்கத்தினர் உருவாக்கிய கருத்துகளுக்கு எதிர்நிலையில் கட்டமைக்கப்பட்டதாகும். அக்கருத்தியலைக் கருத்தியல் அமைப்பின் அடிப்படையில் ஆராயலாம்.

பாவேந்தரின் தமிழ், தமிழர் தொடர்பான கருத்தியல் பின்வரும் அமைப்பில் இருப்பதை அறியலாம்.

(1) தமிழரின் பழமையும் தொன்மையும்.

(2) தமிழரோடு உறவுடையவர் யார்? யார்?

(3) தமிழர்கள் என்ன செய்ய வேண்டும்

(4) தமிழர்கள் எதை அடைய வேண்டும்?

(5) தமிழரின் பண்பாடு எது?

(6) பிறரின் பண்பாடு எது?

இக்கருத்தியல் அமைப்பைப் பாவேந்தர் வெளிப்படுத்தும் முறைகள் பல்வேறு வகையாக உள்ளன. கருத்தியலுக்குத் தன்னை நடுநிலைப்படுத்தித் தனக்குத் தமிழ் எத்தகையது? என்றும் தன்னைப் போலவே நமக்கு என்ற நிலையில் தமிழர்களுக்கு மொழி எவ்வாறானது? என்றும் கூறுவார். எனவே, கருத்தியல் வெளிப்பாட்டை நான் x நாம், நாம் x பிறர், தெற்கு x வடக்கு என்ற பொது நிலையில் காணலாம்.

## *1.7 தமிழின் தொன்மை*

கருத்தியல்கள் அதிகாரச் சூழலில் தோற்றம் பெறுவதும், அதிகார வர்க்கத்தினரது ஆளுமைக்கு உட்பட்ட தகவல் தொடர்புச் சாதனங்களால் பரவலாக்கப்படுவதும் இயல்பானவை. அதிகார இனம் தங்கள் இனம், மொழி பற்றி உயர்வான கருத்துக்களைச் சமுதாயத்தில் பரவ விடுவதன் வழியாகப் பிற இனம், மொழி ஆகியவற்றைத் தாழ்ந்த நிலைக்குத் தள்ளும். பிற இனம், பிற மொழி ஆகியன தாழ்வானவை என்ற கருத்து, தன்மொழி உயர்வைக் காட்டுவதன் வழியாகவும் நிலை நிறுத்தப்படும். இத்தகைய சூழலில் எழும் எதிர்ப்புக் குரல் வேறு வகையான கருத்தியலைக் கட்டமைக்கிறது. பாவேந்தர் காலச் சூழலில் வடமொழி ஆதிக்கம், வடமொழி உயர்வு, வடமொழியின் தொன்மை ஆகியன கருத்தியலாகப் பரப்ப ப்பட்ட சூழலில் இதற்கு எதிரான கருத்தியலை உருவாக்கவேண்டிய சூழல் எழுகிறது

ஒவ்வொர் இனத்திற்கும், மொழி என்பது பொதுவான அடையாளமாக இருக்கும். அனைத்துத் தாய் மொழியாளர்களும் தங்களது மொழி பற்றிய உயர்ந்த மதிப்பீட்டுகளையே கொண்டிருப்பர். ஆனால்

ஆதிக்கச் சூழலில் இம்மதிப்பீடுகள் மாற்றப்படலாம். இத்தகைய ஆதிக்கச் சூழலில், மொழியின் தொன்மையும், மொழியின் சிறப்பும் போற்றப்படுவது அவசியமான செயல்பாடாகிறது. மொழிகளின் தொன்மையை அறிவியல் அடிப்படையில் விளக்குவது ஒரு நிலையாகும். ஆனால் மொழியின் தொன்மை என்பது இறைக் கோட்பாடோடும், உலகத் தோற்றக் கோட்பாட்டோடும், இணைக்கப்படும்பொழுது அது கருத்தியலாகிறது. மொழியின் தொன்மையும், மொழியின் இனிமையும், ஆதிக்கச் சூழலில் பேசப்படும்பொழுது, மொழிவழியாக இன உணர்வை ஊட்டுவதான செயல்பாடாகவே அமையும். இந்த நிலையில் தமிழ் மொழியின் தொன்மை தொடர்பான பாவேந்தரின் கருத்துக்களைக் காணலாம்.

**திங்களோடும் செழும்பரிதி தன்னோடும் விண்ணோடும்**
**உடுக்களோடும்**
**மங்கு கடல் இவற்றோடும் பிறந்த தமிழுடன்**
**பிறந்தோம் நாங்கள் (180)**

**மானுடம் என்னுமோர் ஆதிப்பயிர்தமிழ்**
**மக்களென் றேகுதித் தாடுவோம் (237)**

**மனித வாழ்வை**
**இனியநற் றமிழே நீதான்**
**எழுப்பினை! .(446)**

**நிலவே நீ முன் நடந்ததைக் கூறுவாய்! மெய்யாய்க் கூறுவாய்**
**இங்குச் செந்தமிழையும் உன்னையும் கூட்டி**
**இயற்கை அன்னை வளர்த்தில்லையோ பாலூட்டி (1003)**

**முன்னைத் தோன்றிய மக்கள் முதன்முதல் பேசிய**
**மொழியே! மொழியே .(1042)**

**மொழியில் உயர்ந்த து தமிழ் மொழியே பண்டு**
**முதல் நாகரிகமும் பழந்தமிழ் மக்களே! (1047)**

**ஆதி மனிதன் தமிழன்**
**ஆதி மனிதன் தமிழன்தான்**
**அவன் மொழிந்த தும் செந்தமிழ்த்தேன் (1668)**

**சொல்லார்ந்த தமிழ் மொழிக்கும் அதனின் தோற்றம்**
**தொல் பழமை அடிமுடியைக் கண்டாரில்லை** (1863)

என்று தமிழின் தொன்மையைக் கூறுவார்.

பாவேந்தரின் கருத்துகள், அவர் சார்ந்த இயக்கக் கருத்துக்களாக இருந்து, தமிழ், தமிழர் சார்ந்த கருத்துக்களாக திகழ்கின்றன. இவை அனைத்தும் வடமொழி தேவபாஷை என்ற கருத்தியலுக்கு எந்திரான கருத்தியலாகக் கருதலாம்.

தமிழின் தொன்மையும், தமிழரின் தொன்மையையும் கூறியதைப் போல் தமிழ் மொழியின் இனிமையைப் பற்றியும் பாவேந்தர் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார். பாவேந்தரின் இனிமைக் கருத்தியலை வெளிப்படுத்திய விதம் கருத்தியல்சார் குழு மனப்பான்மையை உருவாக்குவதற்காக என்று எடுத்துக் கொள்ளலாம். தமிழின் இனிமை வழியாக நான் X நாம் என்ற ஒருமைப்பாட்டை விளக்குவதை உணரலாம்.

தமிழின் இனிமை, இன்பத் தமிழ் என்றத் தலைப்புகளில் அமைந்த பாடல்களில் பாவேந்தர் தமக்குத் தமிழ் எத்தகையது என்பார். மங்கை ஒருத்தி தரும் சுகம்கூடத் தமிழுக்கு இணை யில்லை என்ற தன்னுணர்வை வெளிப்படுத்துவார். அதேபோல் எங்கள் தமிழ் என்ற தலைப்பில்,

**இனிமைத் தமிழ் மொழி எமது எமக்**
**கின்பந் தரும்படி வாய்த்தநல் அமுது!**

என்று மொழியையும் இனிமையையும் பொதுமையாக்குவார்.

தமிழின் இனிமை வழியாக நான் X நாம் என்பதை கட்டமைத்த பாவேந்தர் தமிழ் மொழியைக் காத்தல் என்ற நிலையிலும் தம்மை முன்னிறுத்திப் பிறரிடம் அதே நிலைப்பாட்டை எதிர்நோக்குவார்.

**சலுகை போனால் போகட்டும் – என்**
**அலுவல் போனால் போகட்டும்**
**தலைமுறை ஒரு கோடி கண்ட என்**
**தமிழ் விடுதலை ஆகட்டும்** (1830)

என்றும்,

**தமக்கொரு தீமை என்று நற்றமிழர்**
**எனை அழைத்திடில் தாவி**
**இமைப்பினில் ஓடித் தரக்கடவேன் நான்**
**இனிமேதாம் என் ஆவி** (240)

என்றும் மொழிக்காப்பிற்கு எதையும் இழக்கலாம் என்பார்.

தமிழ் மொழியினைக் காப்பதற்கு உயிரையும் தருவதற்கு முன்வர வேண்டும் என்ற கருத்தைக் கொண்டவர் பாவேந்தர். மொழிகாத்தல்

என்பது மிக முக்கியமான செயல்பாடாகக் கொள்ளவேண்டும். என்பதைப் பாவேந்தர் வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் நான் X நாம் என்ற கருத்தமைப்பில் கூறுவார்.

## *1.8 தமிழும் உயிரும்*

தமிழ் என்பது தமக்கு மட்டும் உயிர் என்று அல்லாமல் தமிழர்கள் அனைவரும் அதை உயிராகப் பேண வேண்டும் என்பார். உயிர் என்ற கருத்தைப் பற்றிய பாவேந்தரின் கவிதை வெளிப்பாடுகள் பல நிலைகளில் உள்ளன.

**செந்தமிழே! உயிரே நறுந்தேனே**
**செயலினை முச்சினை உனக்களித்தேனே** (237)

**இனியன என்பேன் எனினும்-தமிழை**
**என்னுயிர் என்பேன் கண்டீர்**
**தமிழும் நானும்**
**மெய்யாய் உடலுயிர் கண்டீர்** (1764)

**உன்னை வளர்பன தமிழா! உயிரை**
**உணர்வை வளர்ப்பது தமிழே**

**தமிழுக்கு அமுதென்று பேர்-அந்தத்**
**தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்** (175)

**தமிழ் எங்கள் உயிர் என்பதாலே வெல்லுந்**
**தரமுண்டு தமிழருக்கிப்புவி மேலே** (178)

**கமழும் உன்தமிழினை உயிரென ஓம்பு** (237)

**விந்தைத் தமிழ்மொழி எங்கள் மொழி அது**
**வீரத் தமிழ்மக்கள் ஆவி என்போம்** (719)

**ஒரு தமிழன் தமிழர்க்கே வாழ்கிறான்**
**உயிர் வாழ்வோன் தமிழர்க்கே தனை ஈகிறான்** (790)

தமிழின் இனிமையைக் கூறிய பாவேந்தர், தமிழை உயிராக கருதுவதற்கு அடிப்படைக் காரணம் தமிழ் மொழி வழியான இனமீட்சி என்ற கருத்தியல் சார்ந்ததாகும். ஓர் இனத்தின் உயிர்நாடியே

மொழிதான் பழம்பெருமை வாய்ந்த மொழியும், நாடும்,பிறரின் ஆதிக்கச் சூழலில் இருக்கும்பொழுது மொழியை உயிர் என்ற குறியீட்டோடு பயன்படுத்தி, மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவார்.

உயிர் என்ற கருத்தைக் கருவாகக் கொண்டு புரட்சிக் கவி என்ற குறுங்காப்பியத்தைப் புனைவார். தமிழ்க்கவியின் வல்லமையைக் கதையாக்கித் தமிழ் உணர்வை மக்களிடையே வளர்க்கப்பாகுபடுவார். கருத்தியல் வெளிப்பாட்டில் கதாநாயகன், எதிர்த் தலைவன் என்று கருத்தமைப்பைத் தமது கருத்தியலுக்குப் பயன்படுத்திக் கொள்வார்.

**தமிழறிந்த தால் வேந்தன் எனை அழைத்தான்**
**தமிழ்க்கவி யென்றெனை அவளும் காதலித்தாள்.**
**அமுதென்று சொல்லுமிந்த தமிழ், என் னாவி**
**அழிவதற்குக் காரணமாயிருந்த தென்று**
**சமுதாயம் நினைத்திடுமோ? ஐயகோ என்**
**தாய்மொழிக்குப் பழி வந்தால் சகிப்ப துண்டோ?**
**உமை ஒன்று வேண்டுகிறேன் மாசில்லாத**
**உயர்தமிழை உயிர்என்று போற்று மின்கள்! (142)**

அதேபோல எதிர்பாராத முத்தம் என்ற தலைப்பில் அமைந்த படைப்பிலும் தமிழரின் உயர்விற்காகக் கதைத் தலைவன் செத்தான் என்பதாகப் படைப்பார்.

இத்தகைய தமிழ் உயர்வே பிற்காலத்தில் தமிழ் மொழி மீட்சிக்கும் தமிழ் மொழி காத்தலுக்கும் அடிப்படையாக அமைந்தது.

### *1.9. நாம் பிறர்*

கருத்தியலின் அடிப்படைப் பாகுபாடே, நாம் x பிறர் என்பதுதான். பாவேந்தரின் நாம்பிறர் என்ற கருத்தியல் அடிப்படை, தமிழர் x ஆரியர், தமிழர் x பார்ப்பனர், தமிழ் x வடமொழி, தமிழ் x இந்தி, தமிழ் x பிறமொழிகள், தெற்கு x வடக்கு என்ற பல்வேறு நிலைகளில் உள்ளது.

**ஓர் உயிர்நான்! என் உயிர் இனம் திராவிடம்!**
**ஆரியன் அல்லேன் எனும் போதில்**
**எத்தனை மகிழ்ச்சி! எத்தனை மகிழ்ச்சி (784)**

**வீரம் பிறந்த நாட்டிற் பிறந்தவர்**
**வெற்றித் தமிழர் உலகிற் சிறந்தவர்**
**ஆரியர் அல்லர்; மறைந்தி ருந்தே**
**அம்பு பாய்ச்சும் பூரியர் அல்லர் (1549)**

என்று ஆரியரிடமிருந்து, தமிழர் வேறுபட்டவர்கள் என்பதை; உயர்ந்தவர் நாம் என்ற அடையாளத்தை உயர்ந்த பண்பாட்டுச் சிறப்பு வழியாகவும், நடை, உடை, மொழி வழியாகவும் கட்டமைப்பார்.

**நாமெல்லாம் திராவிடர்கள் என்ற எண்ணம்**
**நம் உள்ளத்தில் வேரூன்ற வேண்டும்! மேலும்**
**நாமெல்லாம் ஒரே வகுப்பார் என்ற எண்ணம்**
**நன்றாக நம் உணர்வில் ஏற வேண்டும். (1523)**

**உடையினிலே ஒன்றாதல் வேண்டும்! உண்ணும்**
**உணவினிலே ஒன்றாதல் வேண்டும்! நல்ல**
**நடையினிலே ஒன்றாதல் வேண்டும்! பேசும்**
**நாவினிலும் எண்ணத்திலும் ஒன் றாதல் வேண்டும் (1524)**

நாம் என்று ஒன்றுபடுத்தும் நிலையில், தமிழர்கள் தமிழர்களோடு இணைந்த திராவிடர்கள் என்றும் திராவிட மொழிகள் என்றும் ஒன்றிணைப்பார்.

**பண்டைத் தமிழும், தமிழில் மலர்ந்த**
**பண்ணிகர் தெலுங்கு துளுமலை யாளம்**
**கண்டைநிகர் கன்னடமெனும் மொழிகள்**
**கமழக் கலைகள் சிறந்த நாடு (900)**

தமிழர்கள் திராவிடர்கள் என்று ஒன்று சேர்க்கும் அதே நேரத்தில் தமிழர் பண்பாடு ஆரியப் பண்பாட்டிலிருந்து வேறுபட்டது என்பதையும் விளக்குவார்.

**ஒருத்தியை ஐவர் மணப்பது உங்கள் நாகரிகம்!**
**பிச்சை புகல் உயர்வென்னல் உங்கள் நாகரிகம்!**
**வருபசிக்கு மானம் விடல் உங்கள் நாகரிகம்!**
**உயிர்கொன்று வேள்வி செயல் உங்கள் நாகரிகம்!**
**உருவணக்கம் செய்வதும் உங்கள் நாகரிகம்!**
**மங்கையரை இழிவு செய்திடல் உங்கள் நாகரிகம்!**
**பெருமக்கள் ஒரு தாயின் மக்களெனச் சொன்னால்**
**பெருந்தொகை வேற்றுமை நாட்டல் உங்கள் நாகரிகம்!** (1024)

என்று ஆரியப் பண்பாட்டுக் கூறுகளையும்,

**ஒருத்தி ஒருவனை மணப்பது எங்கள் நாகரிகம்**
**ஒருத்தன் ஒருத்தியை மணப்பது எங்கள் நாகரிகம்**
**ஒருவன் ஒருத்திக்கு நிகர் எங்கள் நாகரிகம்**
**உலக மக்கள் நிகர் என்பது எங்கள் நாகரிகம்**
**கருதிச்செய் தீமைக்குக் கழுவாய் ஒன்றில்லை;**

**காவலனின் பொறுப்பதெனல் எங்கள் நாகரீகம்;**
**பெருத்த உடல் வீழ்ந்தபின் பெரிய நிலை தேடல்**
**பெருந்தவறே என்பதுதான் எம் நாகரீகமே! (1205)**

என்று தமிழரின் பண்பாட்டுக் கூறுகளையும் தருவார். இக்கருத்தியல் வெளிப்பாட்டிற்கு அவர்கையாளும் உத்தியும் கருத்தில் கொள்ளத்தக்கது.குறிஞ்சித்திட்டு என்ற கதைப்பாடலில் தமிழ்ப்பெண் X ஆரியப்பெண் என்ற எதிர்நிலையமைப்பில் தாமரை என்ற பெண், விநோதையிடம் கூறுவதாக அமைப்பார். அதேபோல 'ஒழுக்கமில்லாதவர்கள் அவர்கள்' என்ற தலைப்பில் அமைந்த கவிதையிலும் ஆரியப் பண்பாட்டினைக் காட்டுவார்.

ஆரியர்கள், வடக்கர்கள் செய்த சூழ்ச்சியின் விளைவே, தமிழரின் இந்த தாழ்ந்த நிலை என்பதை வலுவான கருத்தாகக் கொண்டவர் பாவேந்தர்.

**புலையொழுக்கம் கொண்டவர்கள் பொல்லா வடக்கர்**
**தலையெடுத்தார் இன்பத் திராவிடத்தின் தக்க**
**கலையொழுக்கம் பண்பனைத்தும் கட்டோ டொழித்து**
**நிலைபுரட்டி நம்நாட்டை நீளடிமை யாக்க ஞ் (727)**

என்றும்,

**வடநாடு தென்னாட்டை வீழ்த்தச் செய்த**
**வஞ்சகங்கள் சிறிதல்ல தம்பி (786)**

**கேரளம் என்று பிரிப்பதுவும் நாம்**
**கேடுற ஆந்திரம் பிய்ப்பதுவும்**
**சேரும் திராவிடர் சேரா தழித்திடச்**
**செய்திடும் சூழ்ச்சி அண்ணே (787)**

என்றும் வடக்கு X தெற்குக் கருத்தியலோடு, வடவரின் சூழ்ச்சியையும் வெளிப்படுத்துவார்.

வடக்கு X தெற்குக் கருத்தியலைப் பாவேந்தர், வீட்டுக் கோழியும் நாட்டுக் கோழியும் என்ற தலைப்பில் அமைந்த கவிதை வழியாகவும் வெளிப்படுத்துவார்.

**வடக்கன் தெற்கு வாழ் தமிழர்க்கு அள்ளிக்**
**கொடுப்பதாய்ச் சொல்லி குதிக்கின்றார்கள்**

. . . . . . . . . . . . .

**இங்குளார் உழைப்பின் பயனை யெல்லாம்**
**வடவர் அடியோடு விழுங்கி வாழ்பவர்**

. . . . . . . . . . . . . . . . . . .

**கம்பு போட்டுக் கழுத்தை அறுக்கும்**

**வடக்கன் ஆட்சி போன்ற இடக்கு**
**நம் தாயகத்தில் நாம் கேட்டறியோம்** (1684)

என்று வடக்கரின் சூழ்ச்சியைக் கதை வடிவிலும் வெளிப்படுத்துவார்.

இவ்வடக்கு X தெற்கு; தமிழன் X ஆரியன் என்ற கருத்தியலின் வெளிப்பாடுதான் பாவேந்தரின் இராவணன் பற்றிய கருத்துகள்

**தென் றிசையைப் பார்க்கின்றேன். என் சொல்வேன்**
**என்றன் சிந்தையெல்லாம் தோள்களெலாம் பூரிக்குதடா!**
**அன்றந்த லங்கையினை ஆண்ட மறத்தமிழன்**
**ஐயிரண்டு திசை முகத்தும் தன்புகழை வைத்தோன்!** (213)

வடவரின் சூழ்ச்சியை வெல்லத் தமிழ் என்ற பெரு உணர்ச்சியைக் கைக்கொள்ள வேண்டும் என்பதே பாவேந்தரின் கருத்து. அதை அவர்,

**வடக்கினில் தமிழர் வாழ்வை**
**வதக்கிப் பின் தெற்கில் வந்தே**
**இடக்கினைச் செய நினைத்த**
**எதிரியை, அந்நாள் தொட்டே**
**"அடக்கடா" என்று ரைத்த**
**அறங்காக்கும் தமிழே** (448)

என்று கூறுவார்.

கருத்தியல் சொல்லாடல்களில் மிக முக்கியமான ஒன்று யார் எதிரி? அவர்களுடைய செயல்கள் எவை? எவை? என்பதாகும். ஆரியர் பார்ப்பனர்கள்தாம்தமிழுக்கு எதிர் என்பதைப் பல்வேறு இடங்களில் சுட்டிக் காட்டுவார்.

**வஞ்சகர், வந்தவர் தமிழாற் செழித்தார்**
**வாழ்வினில் உயர்ந்தபின் தமிழையே பழித்தார்**
**நம் செயல் ஒழுக்கங்கள் பற்பல அழித்தார்** (239)
**முந்திய காலத்து மன்னர் நம்**
**முத்தமிழ் நாட்டினில் தொத்திடு நோய்போல்**
**வந்த வடமொழி தன்னை விட்டு**
**வைத்தத னால்வந்த தீமையைக் கண்டோம்** (716)

**வஞ்சக நரிகள் புலிக்காட்டை ஆளுமோ?**
**வடக்கர் எம்மை ஆளவும் மாளுமோ?** (789)

தமிழர்களின் சிறப்பையும் தமிழ் மொழியின் சிறப்பையும் பல்வேறு இடங்களில் கூறி, அத்தகைய மிழர்கள் விழிப்புணர்வு பெறவேண்டும் என்பதை நோக்கமாகக் கொள்வார். 'புகழ்பட வாழ்பவன் தமிழன்' என்றும் 'பொதுநலம் புரிபவன் தமிழன்'

(1048), நாடாண்டாயே, தமிழே நீ ஞாலம் ஆண்டாய் வாழ்வும் ஈந்தாய் (1001) என்றும் தமிழரின் நிலையைக் கூறுவார்.

**கேளீர் தமிழ் வரலாறு கேட்கத்**
**கேட்க அது நமக்கு முக்கனிச் சாறு** (1452)

என்று தமிழரின் வரலாற்றை நாவலந்தீவின் முதல் மொழியாகக் காட்டிப் பெருமித உணர்வை ஏற்றுவார்.

## *1.10. தமிழ் பிறமொழிகள்*

மொழிக் கருத்தியல் என்ற நிலையில் முன்னர்க் கூறியது போல வடமொழி, இந்தி, கொச்சை மொழி , ஆங்கிலம் போன்றவற்றைப் பற்றித் தமது கருத்துகளைத் தெரிவிப்பார். அவை தூய்மையாக்கச் சொல்லாடல் புதிழில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.மொழி என்பது வாழ்வோடு பின்னிப் பிணைந்த து. மொழி அழிந்தால் வாழ்வு மங்கும் என்பதை உயர்வுதாழ்வு என்ற நிலையில் வெளிப்படுத்துவார்.

**தமிழ் என்னில் எம்முயிர்ப் பொருளாம் இன்பத்**
**தமிழ்குன்றுமேல் தமிழ்நாடெங்கும் இருளாம்** (178)

**நைந்தா யெனில் நைந்து போகுமென் வாழ்வு**
**நன்னிலை உனக்கெனில் எனக்குந் தானே** (237)
**வல்லமை சேர்க்கும் வாழ்வை யுண்டாக்கும்**
**வண்டமிழ் நைந்திடில் எது நம்மைக் காக்கும்** (1043)

பாவேந்தரின் இத்தகைய சொல்லாடல்கள் வழியாகப், பிற மொழி, பிற இனத்தினரது ஆதிக்கத்தை உணர்ந்து கொள்ளலாம்.

## *1.11. கருத்தியலும் கவிதைத் தொகுப்பும்*

கருத்தியல் வெளிப்பாட்டில் தலைப்புகள், உட்தலைப்புகள் ஆகியன முக்கிய இடத்தைப் பெறுவன என்பது முன்னர்க் கூறப்பட்டது. பாவேந்தர் தாம் கூற வந்த கருத்தின் சாரத்தைத் தலைப்பாக்கி கவிதைகள் புனைந்துள்ளார். அத்தலைப்புகளில் சிலவற்றைத் தொகுத்துப் பார்த்தாலே அவரின் தமிழ் தொடர்பான கருத்தியலை விளங்கிக் கொள்ள முடியும்.

தமிழ் பற்றிய அவர் கவிதைகள் பின்வரும் தலைப்புகளில் அமைந்துள்ளன.

தமிழ் இனிமை, இன்பத் தமிழ், தமிழ் உணர்வு, தமிழ்ப்பேறு, எங்கள் தமிழ், தமிழ்க் காதல், தமிழ்க் கனவு, தமிழ் வளர்ச்சி, முதலில் உண்டானது தமிழ், இயற்றமிழ் எழில், தமிழர்க்குத் தமிழ் உயிர், சாகாத் தமிழ், கலைகள் தந்த தமிழ், வெற்றித் தமிழ்,

படைத் தமிழ் செந்தமிழ்ச் செல்வம், தமிழ் வரலாறு, தமிழுக்கு வாழ்வதே வாழ்வு, சாகின்றாய் தமிழா, தமிழ்நாட்டில் ஐந்தாம் படை, தமிழர் மீள வேண்டும், தமிழைக் கெடுப்பவர் கேடு, தமிழ் விடுதலையாகட்டும் முதலியன.

தமிழின் மேன்மையை விளக்குவதன் வழி தமிழர்களின் நிலையை மாற்றிவருவதும் பாவேந்தரின் முக்கியச் செயல்பாடாகும். அதே நேரத்தில் பிற மொழிகளைப் பற்றியும், பிறரைப் பற்றியும் கூறித் தமிழின் உயர்வை வெளிப்படுத்துவார். இந்தி எதிர்ப்புப் பாட்டு, இந்தி கட்டாயம், இந்தி ஒழிப்பது கட்டாயம், வடமொழி எதிர்ப்பு, இந்திக்கு உன்திறம் காட்டு என்று வேறு மொழிகள் பற்றியும் திராவிடர் ஒழுக்கம், திராவிடர் கடமை என்ற தலைப்புகளில் செய்ய வேண்டிய பணிகள் பற்றியும் குறிப்பிடுவார்.

## *1.12 முடிவுரை*

பாவேந்தர் தமிழ்ச் சமுதாய வளர்ச்சியை, அதன் ஒழுக்கப்பாட்டை, உயர்வை, மனித நேயத்தை, இன மானத்தை, மொழி உணர்வை, சமுதாய சீர்திருத்தத்தை த் தூண்டி தமிழரிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியவர். அவர்காலச் சமூக நிலையில் தமிழர்களை ஒன்றிணைக்க, விழிப்படையச் செய்ய, அவர் மொழியையே பலம் வாய்ந்த கருவியாகப் பயன்படுத்தினார். நைந்துப்போன, தன்னிலை மறந்த தமிழர்களைத் தமிழ்மொழி, பண்பாடு வரலாறு வழியாகத் தட்டியெழுப்பி உணர்வை ஊட்டியவர். வடமொழி ஆதிக்கத் திலிருந்து மீண்டு தமிழ் இன்று பல துறைகளிலும் சிறப்பாகச் செயல்படுவதற்கு அடிப்படைக் காரணம் பாவேந்தர் தமிழர்க்கு ஊட்டிய தமிழ் உணர்வே.

இத்தமிழ் உணர்வே, கருத்தியல் அமைப்பில் பல்வேறு நிலைகளில் வெளிப்பட்டுள்ளதை விரிவாகக் கண்டோம்.

தம்முடைய கருத்துக்களை, இன ஒற்றுமைக்காகவும், தான்பிறர், வடக்கு X தெற்கு, தமிழ் X பிறமொழிகள், என்ற எதிர் நிலைகளை உருவாக்கி வெளியிட்டுள்ளார். அவர்தம் கவிதைகளுக்கு வைத்த தலைப்புகள்கூட அவரின் கருத்தியலுக்கு துணை செய்வதாக அமைந்துள்ள பாங்கும் விளக்கப்பட்டுள்ளது.

❖❖❖

** இந்நூலில் உள்ள பாரதிதாசன் பாடல்கள் அனைத்தும் திருவாசன் சுரதா கல்லாடன் தொகுப்பில் இருந்து எடுக்கப்பட்டவை.

*பேராசிரியர் எல் .இராமமூர்த்தி,*
*கேரளா மத்திய பல்கலைக்கழகம்.*

## **தி இந்து குழுமம் தமிழ் திசை** சார்பாக வெளிடப்பட்ட

# ‘என்றும் தமிழர் தலைவர்’
# பெருநூல் வெளியீட்டு விழா

தந்தை பெரியார் பிறந்த மண்ணாகிய **ஈரோட்டில், ‘என்றும் தமிழர் தலைவர்’ நூலின் அறிமுக விழா மார்ச் 2 / 2024** சனிக்கிழமை அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. சமூக நீதிக் கூட்டமைப்பு மற்றும் புதுமலர் பதிப்பகம் மூலம் ‘புதுமலர்’ இதழாசிரியர் **கண. குறிஞ்சி** அவர்கள் ஏற்பாடு செய்திருந்த இந்நிகழ்வு, இந்நூலுக்குத் தமிழ்நாட்டில் சென்னைக்கு வெளியே நடைபெறும் முதல் கூட்டமாக அமைந்தது.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்தக் கூட்டத்தில், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் **அ. கணேசமூர்த்தி,** ஈரோடு கிழக்குத் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும் தந்தை பெரியாரின் குடும்பத்தைச் சார்ந்தவருமான **ஈ.வி.கே.எஸ். இளங்கோவன்,** திராவிட இயக்கத் தமிழர் பேரவைத் தலைவர் **பேராசிரியர் சுப. வீரபாண்டியன்,** ஆய்வறிஞர் பேராசிரியர் **வீ. அரசு,** திராவிடர் கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர் **மதிவதனி** ஆகியோர் ‘என்றும் தமிழர் தலைவர்’ நூலை விரிவாக அறிமுகப்படுத்திப் பேசினர்.

‘இந்து தமிழ் திசை’ நாளிதழின் துணை ஆசிரியரும் ‘என்றும் தமிழர் தலைவர்’ நூலின் தொகுப்பாசிரியருமான **ஆதி வள்ளியப்பன்** அவர்கள் ஏற்புரை வழங்க, தலைமை உதவி ஆசிரியர் ச. **சிவசுப்பிரமணியன்,** செய்தி ஆசிரியர் **வெ. சந்திரமோகன்,** முதுநிலை உதவி ஆசிரியர் **ச. கோபாலகிருஷ்ணன்,** உதவி ஆசிரியர் **சு. அருண் பிரசாத்** ஆகியோர் இத்தொகுப்பு உருவானதன் பின்னணியைப் பகிர்ந்தனர்.

ஈரோடு மாநகரின் முக்கிய ஆளுமைகள் பலரும் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

**‘என்றும் தமிழர் தலைவர்’** நூலுக்குப் பணம் செலுத்தி முன்பதிவு செய்திருந்த ஐம்பது பேர் மேடையில் நூல்களைப் பெற்றுக் கொண்டனர்.

இன்றைய அரசியல் சூழலில் முக்கிய வரவாக அமைந்துள்ள **‘என்றும் தமிழர் தலைவர்’** நூல், ஆக்கபூர்வமான விவாதங்களைத் தொடங்கிவைத்திருப்பது உள்ளபடியே மகிழ்ச்சியளிக்கிறது.



*என்றும் தமிழர் தலைவர் நூல் வெளியீடு*




*நூல் தொகுப்பாசிரியர் **ஆதி வள்ளியப்பன்** அவர்களுக்கு விழாத் தலைவர் **கண. குறிஞ்சி** பயனாடை அணிவித்தல்*




*வரவேற்புரை-கவிஞர்* ***ரவி குமாரசாமி***




*வாழ்த்துரை-சட்டமன்ற உறுப்பினர் / தந்தை பெரியார் குடும்ப உறவினர்* ***ஈவிகேஎஸ் இளங்கோவன்***




*வாழ்த்துரை-நாடாளுமன்ற உறுப்பினர்* ***அ. கணேசமூர்த்தி***




***மதிவதனி*** *- திராவிடர் கழகத் துணைப் பொதுச் செயலாளர்*




*கருத்துரை-ஆய்வறிஞர்* ***பேரா. வீ.அரசு***




***சுப. வீரபாண்டியன்*** *- திராவிட இயக்கத் தமிழர் பேரவைத் தலைவர்*




*தலைமை உரை : சமூகநீதிக் கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளர்* ***கண. குறிஞ்சி***




*ஏற்புரை : "என்றும் தமிழர் தலைவர்" நூல் தொகுப்பாசிரியர்* ***ஆதி.வள்ளியப்பன்***




*தலைமை உதவி ஆசிரியர்* ***ச.சிவசுப்பிரமணியன்*** *உரை*




*முதுநிலை உதவி ஆசிரியர் சு.கோபால **கிருஷ்ணன்** உரை*




*உதவி ஆசிரியர் **சு.அருண் பிரசாத்** உரை*




*செய்தி ஆசிரியர் **வெ.சந்திரமோகன்** உரை*




*பேரா. வீ. அரசு  ஆதி வள்ளியப்பன் ஈவிகேஎஸ்*
*இளங்கோவன் அ. கணேசமூர்த்தி மதிவதனி*




*நூல் வழங்கலைத் தொடங்குதல்*



*கூட்டத்தில் பார்வையாளர்கள்*



*கூட்டத்தில் பார்வையாளர்கள்*



*கூட்டத்தில் பார்வையாளர்கள்*

# பாவேந்தரின் சிந்தனைப் பரிமாணங்கள்

**கணா. குறிஞ்சி**

**"சாதி ஒழித்திடல் ஒன்று நல்ல**
**தமிழ் வளர்த்தல் மற்றொன்று**
**பாதியை நாடு மறந்தால்**
**பாதி துலங்குவ தில்லை"**
**புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.**

தந்தை பெரியார் (1879-1973 ) அண்ணல் அம்பேத்கர் (1891-1956 ) தென்னிந்தியாவின் முதல் கம்யூனிஸ்டு சிங்காரவேலர் (1860-1946) போன்ற முக்கிய ஆளுமைகள் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்தவர்தான் பாவேந்தர் பாரதிதாசன் ( 1891-1964 ) எனவே இவர்களது கருத்துக்கள் பாவேந்தரை மிகவும் ஈர்த்தன என்பதை உணரமுடிகிறது. ஆனால் அவரது சிந்தனை பல்வேறு பரிணாமங்களுக்குப் பிறகுதான் முழுப்பரிமாணம் பெற்றுள்ளது என்பதும் கருதத்தக்கது.

1913 ஆம் ஆண்டில் சரசுவதி பற்றியும், பராசக்தியைப் பற்றியும் பாரதிதாசன் அவர்கள் "ஆத்மசக்தி" இதழில் எழுதியுள்ளார்.

பசுவைத் தெய்வமாகவும், பாரத மாதாவைப் பராசக்தியாகவும் கண்டு எழுதிய பாடலும்,

காந்தி புகழ்ப் பாடல்களும், பிற தேசிய கீர்த்தனைகளும் "தேச சேவகன்" இதழில் வெளியாகி உள்ளன.

1920-ல் மயிலம் ஸ்ரீஷண்முகம் வண்ணப் பாட்டு,

1925-ல் மயிலம் ஸ்ரீ சிவசண்முகக் கடவுள் பஞ்சரத்நம்,

1926-ல் மயிலம் சுப்பிரமணியர் துதியமுது ஆகிய கவிஞரது பக்திப்பாடல்கள் வெளியாயின.

1922-ல் பாரத தேவியிடம் குடியர் தம் தெளிவு கூறல் எனும் பாடல் "வந்தேமாதரம்" இதழில் வெளியானது.

பாரத நாட்டின் விடுதலை பற்றிய பாடல்கள" "மணிக் கொடி" இதழில் வெளியாகியுள்ளது.

இப்படிப் பக்திப் பாடல்களைத் தொடர்ந்து இயற்றிக் கொண்டிருந்த கனகசுப்புரத்தினம், பாரதி மற்றும் பெரியார் ஆகியோரது செல்வாக்குக்கு உட்பட்டுப் பாரதிதாசனாக உருமாறுகிறார்.

**பாரதியுடன் தொடர்பு**

"1908-ல் பாரதி, புதுச்சேரி வருகிறார். அவர் புதுச்சேரி வந்த ஓரிரண்டு ஆண்டுகள் கழித்துத்தான் அவரோடு எனக்குப் பழக்கம் ஏற்படுகிறது. அப்பொழுது நான் 20 வயதுக் காளை............ அவருடனான தொடர்பு என்பழக்க வழக்கங்களிலும் சிந்தனையிலும் என்னை அறியாமலே சில மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. அதைக் காலப் போக்கில் நானும் உணரத் தொடங்கினேன் சுப்புரத்தினமாக இருந்த நான் பாரதிதாசனாக மாறத் தொடங்கினேன்" எனப் பாவேந்தரே கவிஞர் முருகுசுந்தரம் அவர்களிடம் கூறியுள்ளார்.

**இந்திய தேசியவாதி**

இளமையில் கப்பலோட்டிய தமிழர் வ.உ.சி. அவர்களோடு இணைந்து செயல்பட்ட மாடசாமி போன்றவர்களுடன் கவிஞர் தொடர்பில் இருந்தார். 1910 காலகட்டத்தில் இந்திய விடுதலைக்குப் போராடி வந்த தேசபக்தர்கள் காவல்துறையிடமிருந்து தப்பிக்க உதவியதோடு அவர்களைப் பாதுகாக்கவும் கவிஞர் உதவினார். பிரித்தானிய ஆட்சியர் ஆஷ் துரையைச் சுடுவதற்கான துப்பாக்கியைப் பாரதிதாசன்தான் வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் பின்னாளில்

கவிஞர், காந்தியவாதியாக மாறி 1920 ஆம் ஆண்டு சத்தியாக்கிரக இயக்கத்திலும் பங்கு கொண்டார். மேலும் காந்தியாரின் ஒத்துழையாமை இயக்கத்தைப் பாராட்டி "சுதந்திரன்" என்ற ஏட்டில் கவிதைகளை எழுதினார். தொடர்ந்து 1930ல் கதர் இராட்டினப் பாட்டு, சிறுவர் சிறுமியர் தேசிய கீதம், தொண்டர் நடைப்பாட்டு ஆகியவற்றை நூல் வடிவில் வெளியிட்டார். அத்துடன் கதர்த்துணியைத் தோளில் சுமந்து தெருத் தெருவாக விற்றார். தவிரவும், மதுவிலக்குப் பணியிலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார்.

**பெரியாருடன் பாரதிதாசன்**

1928-ல் பெரியார் புதுச்சேரிக்கு ஒரு கூட்டத்தில் கலந்துகொள்ள வந்த பொழுது, அக்கூட்டத்திலிருந்த பாரதிதாசன் பெரியாரது உரையால் மிகவும் கவரப்பட்டார். இத்தகைய தாக்கம் அவரது சிந்தனைப் போக்கைத் தலைகீழாக மாற்றியது.

"பெரியார் தோற்றுவித்த 'குடி அரசு' இதழ் சாதி மத எதிர்ப்பு, கடவுள் எதிர்ப்பு, வருணாசிரம எதிர்ப்பு ஆகியவற்றைத் தீவிரமாக வெளிப்படுத்தியது. பாரதிதாசன் இந்த இதழால் கவரப்பட்டார். சுயமரியாதை வீரரானார். 1938இல் குடி அரசு ஏட்டில் பெரியார், "தோழர் பாரதிதாசன் அவர்கள் தமிழ்நாட்டிற்குப் புதியவரல்ல. அவர் சென்ற பத்து ஆண்டுகளாகச் சுயமரியாதை இயக்கத்தில் தீவிரமாய் ஈடுபட்டு வருகின்றார். மனித சமுதாயத்தின் ஒற்றுமைக்கும் முன்னேற்றத்திற்கும் சந்தோஷ வாழ்க்கைக்கும் இன்றியமையாத புரட்சியான பல சீர்திருத்தங்களை ஆதரிப்பது மட்டுமன்றி, அவைகளை ஜன சமூகத்தில் பல வழிகளிலும் பரப்ப வேண்டுமென்ற ஆசையைக் கொண்டவர். சிறப்பாகவும் சுருக்கமாகவும் கூற வேண்டுமானால், பாரதிதாசன் அவர்கள் சுயமரியாதை இயக்கத்தின் ஒப்பற்ற கவி என்றுதான் கூறவேண்டும் -என்று எழுதியுள்ளதைக் கவிஞரின் மகனார் மன்னர் மன்னன் சுட்டிக் காட்டுகிறார்.

**'குடி அரசு' உண்டாக்கிய மாற்றம்**

கடவுள் நம்பிக்கை கொண்டவராகவும், கதரே உடுத்தும் தேசபக்தராகவும் விளங்கிய பாரதிதாசனைச் சுயமரியாதை வீரராக்கியது பெரியாரின் 'குடி அரசு' ஏடு. புதுவையில் நடந்த சுயமரியாதைப் பொதுக் கூட்டத்திற்கு வந்த பெரியாரைப் பாரதிதாசன் பாட்டு வரவேற்கின்றது.

**சுயமரியாதைப் பெயர்கொள் பயிர்செழிக்கத்**
**தொண்டு செய்யும் இராமசாமித் தலைவா!**

- என்று பெரியாரைப் போற்றும் கவிஞரின் கவிதை 'குடி அரசில்' வெளியிடப்படுகின்றது. அதன் பிறகு கடவுளர்களைப் பாடுவதைக் கவிஞர் அறவே விட்டு விட்டார்.

"சாதி வேற்றுமை சமய வேற்றுமை இவற்றை அறவே ஒழிக்க வேண்டுமானால் குடியரசின் கொள்கைகளை அஞ்சாது கொள்ளத்தான் வேண்டும்"

என்று கவிஞர் கூறினார். கவிஞருக்கு ஊரில் இதனால் பெரும் எதிர்ப்பு ஏற்பட்டது. ஆனால் அதை அவர் பொருட்படுத்தவில்லை."

( தரவு-சுயமரியாதை உலகில் பெரியாருடன் பாரதிதாசன் Tamil Virtual Academy இணையக் கட்டுரை )

1925 ஆம் ஆண்டு காங்கிரசிலிருந்து தந்தை பெரியார் வெளியேறி, 02/05/1925 அன்று "குடிஅரசு" பத்திரிகையைத் துவக்கிச் சுயமரியாதைக் கொள்கையை விளம்பரப் படுத்தி எழுதினார் என்பது குறிப்பிடத் தக்கது.

சுயமரியாதைக் கருத்துக்களால் ஈர்க்கப் பட்ட பாவேந்தர், அதைப் பரப்புவதற்காகச் சிவப்பிரகாசம், நோயெல் ஆகிய நண்பர்களோடு இணைந்து **"புதுவை முரசு"** எனும் இதழைத் தொடங்கினார். அதில் பல புனைப்பெயர்களில் கவிதை, கட்டுரை, தலையங்கம் எனப் பாரதிதாசன் எழுதினார்.

குத்தூசி குருசாமி, பூவாளூர் பொன்னம்பலனார் போன்றோரும் "புதுவை முரசு" பத்திரிகைக்கு ஆசிரியராக இருந்துள்ளனர். ஆனால், இவ்விதழ் பிறகு நிறுத்தப்பட்டது.

**சீர்திருத்தக்கவி**

சுயமரியாதைக் கருத்துக்கள் கவிஞரிடம் மேலோங்கிய பின், காந்தியம் குறித்து அவரது கருத்துகளில் மாற்றம் ஏற்படுகிறது. குறிப்பாக 1931 ஆம் ஆண்டில் புதுவை முரசில் கவிஞர் எழுதிய கட்டுரையாகிய "காந்தீயம் சாக்குருவி-

தேச காரியத்தை ஏழைகளிடமிருந்து ஆரம்பிக்க வேண்டும்" எனும் கட்டுரையில் இது தெளிவாகப் புலனாகிறது. குறிப்பாக இயந்திர வளர்ச்சியை முன்னெடுக்காமல், ஏழைகளிடம் தக்ளியைக் கொடுப்பது குறித்துக் கடுமையாக விமர்சிக்கிறார். இயந்திர வளர்ச்சியால் வேலையில்லாத் திண்டாட்டம் உண்டாகும் எனும் வாதத்தை மறுத்து, அப்படிப்பட்ட நிலை வருமானால் மக்கட்கு வேலை ஏற்படுத்தித் தருவதுதான் அறிவுடைய செயல் என்கிறார். மேலும்,

" தயவால்தான் ஏழைகளிடம் தக்ளியைக் கொடுத்து விட்டு அவர்கள் கண்ணையும் மனத்தையும் பழிவாங்கித் தொலைத்து விட்டுப் பணக்காரர்களையும், ஜாதிப் பைத்தியக்காரர்களையும் கூட்டிக்கொண்டு, கையோடு கங்கைப் புனலையும் இறந்த மாட்டின் தோலையும் எடுத்துக் கொண்டு சுயராச்சியம் கேட்கப் போக உத்தேசமா? அண்ணே முழுதும் கோணல்! .......... தொழில் துறையையும் கவனிக்காமல் நாட்டுக் கருப்பொருள்களை உபயோகிக்க வழியும் தேடாமல், படிப்பைக் கவனிக்காமல் ஏழைகள் பேரால் சுயராச்சியம் கேட்க ஜாதி சமய வெறிகளை சுயராஜ் ஜியம் சுயராஜ்ஜியம் என்று சொல்லும் காந்தீயத்தை ஏழைகள் தக்ளி சுற்றுவதன் மூலம் அதே நிலையில் வீங்கி வெடிக்கட்டும் என்று சாதியைச் சமயத்தை முதலாளியத் தன்மையைக் காக்க முயலும் காந்தீயத்தைச் சாக்குருவி என்னாமல் வேறென்னவென்று

சொல்லுவது என்று தைரியமாய்க் கேளுங்கள்!" என்று கடுமையாக விமர்சிக்கிறார். ஆனால், காந்தியார் சுட்டுக் கொல்லப்பட்டதை அறிந்ததும், "இறந்த காந்திக்கு இரங்கல்! " எனும் கவிதையை 1948 பிப்ரவரி ஒன்றாம் நாளிலும், "காந்தியண்ணல்!" எனும் கவிதையை மார்ச்சு ஒன்றாம் நாளிலும், " அண்ணல் பெயர் வாழ்க! " எனும் கவிதையை ஏப்ரல் ஒன்றாம் நாளிலும் எழுதித் தனது அஞ்சலியைப் பதிவிட்டுள்ளார்.

**"மதவெறி தன்னலம் மறைந்திட உழைத்தார்,**
**மாபெரும் நிலை நோக்கி நாட்டினை அழைத்தார்!**
**உதவா வேற்றுமை அனைத்தையும் பழித்தார்,**
**உலகின் நினைவில்தன் பெயரை வைத்திழைத்தார்!**
**பிறந்தவர் யாவரும் பெற்றறியாப் புகழ்**
**பெற்ற காந்தி அண்ணலைப் பிரிந்தோமே! "**

எனத் தனது ஆழ்ந்த இரங்கலைப் பதிவு செய்துள்ளார்.

**மூவகைத் தாக்கங்கள்**

பொதுவாகப் பாரதிதாசனின் சிந்தனைப் போக்கை மாற்றியவை, பாரதியின் தொடர்பு / பிரெஞ்சுப் புதுச்சேரி / பெரியார் ஈவெரா வின் தன்மான இயக்கம் எனக் குறிப்பிடப் படுவதுண்டு. பிரெஞ்சு மக்களின் வாழ்வு குறித்த கவிஞரது "சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம்" எனும் கட்டுரையில், இம்மூன்று கோட்பாடுகளையும் கைக்கொண்டால், தமிழ்மக்கள் வாழ்வு மேம்பாடு அடையும் எனச் சுட்டிக் காட்டுகிறார்.

வேறு எந்தச் செல்வாக்கை விடவும், கவிஞர் மீது அளவற்ற தாக்கத்தை ஏற்படுத்தியது தந்தை பெரியாரின் சிந்தனைகளே!

1929 முதல் "குடியரசு" ," பகுத்தறிவு" ஏடுகளில் பாடல், கட்டுரை, கதைகள் எனப் பாவேந்தர் எழுதி வந்தார். அவரோடு அவரது குடும்பத்தையும் பகுத்தறிவுக் கொள்கையைப் பின்பற்றச் செய்தார். தமது குடும்பத் திருமணங்களில் தாலியைத் தவிர்த்து வந்தார். குடும்பக் கட்டுப்பாடு பற்றி இந்தியாவில் பாட்டெழுதிய முதல் கவிஞராகப் பாரதிதாசன் திகழ்கிறார்.

1930-ஆம் ஆண்டிலேயே பகுத்தறிவுப் பார்வையில் " சஞ்சீவி பர்வதத்தின் சாரல் " மற்றும் " தாழ்த்தப்பட்டோர் சமத்துவப் பாட்டு"ஆகிய அவரது நூல்கள் வெளிவந்து விட்டன.

1933-ல் சிங்காரவேலர் தலைமையில் சென்னையில் நடந்த நாத்திகர் மாநாட்டின் பதிவேட்டில் "நான் ஒரு நிரந்தரமான நாத்திகன்" என்று எழுதிக் கையெழுத்திட்டார்.

1938 ஆம் ஆண்டு "பாரதிதாசன் கவிதைகள்" முதல் தொகுதியைக்

குத்தூசி குருசாமி, குஞ்சிதம் குருசாமி ஆகியோர் வெளியிட்டனர். அது தமிழிலக்கிய உலகில் பெரும் புரட்சியை உண்டாக்கியது..

1930ல் தொடங்கிய அவரது இலக்கியப் பயணம் 33 ஆண்டுகள் தொடர்ந்து, 1963 ஆம் ஆண்டில் "பன்மணித்திரள்" நூல் வெளியீட்டில் வந்து நிறைவடைந்தது.

தந்தை பெரியாரின் தாக்கத்தால் பாரதிதாசன் அவர்களது படைப்புக்களில் சாதி ஒழிப்பு, மத ஒழிப்பு, பெண் விடுதலை, கைம்பெண் மறுமணம், குழந்தை மணத்தின் கொடுமை, மூட நம்பிக்கை ஒழிப்பு, கடவுள் மறுப்பு, பார்ப்பன ஆதிக்க எதிர்ப்பு , இந்தி எதிர்ப்பு, தமிழின விடுதலை எனப் பல்வகை முற்போக்குக் கருத்துக்களைத் தாங்கிய எண்ணற்ற இலக்கியப் படைப்புகள் வெளிவந்தன.

தமிழ்ச் சமூகத்திற்கான பெரியாரின் அளப்பரிய சேவைகள் பாராட்டி,

" கொடுங்கோல் முறிக்கும் பெரியார் வாழ்க !, பெரியார் !, பெரியார் இயக்கம் வாழ்க ! நரியார் கூட்டம் ஒழிக !, பெரியார் அறப்போர், எவர் பெரியார், அவர் வாழ்க !, பெரியார் போர் வெல்லும் ! ஞாலப் பெரியார் பாதை !, வாழ்க பெரியார் ! "

போன்ற எண்ணற்ற பாடல்களைப் பாவேந்தர் எழுதிக் குவித்தார்.

**திராவிடம்**

தந்தை பெரியாரின் வழியொற்றித் திராவிடம் என்ற கருத்தியலைப் பாவேந்தர் தனது படைப்புகளில் தொடர்ந்து பதிவு செய்தார். "திராவிட நாட்டுப்பண்",எனும் இசைப்பாடலை வகுத்தளித்தார். திராவிட நாடு என்பதைப் புவிப்பரப்பின் அடிப்படையில் கண்டு,

**"செந்தமிழ் கேரளமும் ஆந்திரமும் அவை**
**சேர்ந்திடும் கன்னடம் என்பதுவும்**
**நந்தம் திராவிட நாடெனல் அல்லது**
**வந்தவர்நா டாமோ? அவை**
**வடவர்நா டாமோ?"**

எனப் "பிரிவு தீது" எனும் கவிதையில் குறிப்பிடுகிறார்." இனப் பெயர், திராவிடன் கடமை, எங்கள் திராவிடம்" போன்ற பல பாடல்களை எழுதிக் குவித்தார்.

"திராவிடர்க்கு விண்ணப்பம்" எனும் கவிதையில் , "கன்னடரே, கேரளரே, துளுவப் பாங்கீர், கவின் தெலுங்கப் பாங்கினரே உணர்வு மிக்கீர்" என விளித்து, "அடங்காத எழுச்சியினைச் செய்க ! வெற்றி அடையுமட்டும் உருவிய வாள் உறை காணாத கடும்போரை வளர்த்திடுக !" என அறைகூவல் விடுக்கின்றார். ஆனால் பின்னாளில்

அவரது கருத்து மாற்றமடைகிறது ‘‘அவனவன் நாட்டில் அவனவன் வாழ்க’’ என்ற நிலைபாட்டை எடுக்கிறார்.

இத்தருணத்தில் திராவிடம் குறித்த தந்தை பெரியாரின் நிலைபாட்டை இணைத்துக் காணவேண்டும். " பெரியார் சென்னை மாகாணத்திலிருந்துதான் பொது வாழ்வில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். சென்னை மாகாணம் என்பது தமிழர்கள் மட்டும் வாழும் பகுதியாக இருக்கவில்லை. தெலுங்கு, கன்னடம், மலையாள மொழி மக்கள் வாழ்ந்த சில மாவட்டங்களையும் சேர்த்ததுதான் சென்னை மாகாணம். அப்போது அவருடன் இணைந்து செயல்பட்டவர்கள் "தமிழ்நாடு தமிழர்க்கே!" என்றால் எங்கள் கதி என்னவென்று கேட்கிறார்கள். எனவே 1938 ஆம் ஆண்டு "தமிழ்நாடு தமிழர்க்கே!" என்றவர் 1939 ஆம் ஆண்டு "திராவிடநாடு திராவிடர்க்கே!" என்று முழக்கத்தை மாற்றுகிறார். அதற்கு விளக்கமும் அளிக்கிறார். 1940 ஆம் ஆண்டு திருவாரூரில் நடைபெற்ற கட்சியின் மாநாட்டில், "நான் கூறும் திராவிடநாடு திராவிடர்க்கே என்பது சென்னை மாகாணம்தான்" என்று தீர்மானமிடுகிறார். மீண்டும் அந்த முழக்கம் எப்போது மாறுகிறது என்றல் மொழிவாரி மாநிலங்களாக 1956 ஆம் ஆண்டு கேரள, கர்நாடக, ஆந்திர மாநிலங்கள் தமிழ்நாட்டிலிருந்து பிரிக்கப்பட்ட பின், இன்னும் எதற்குத் திராவிட நாடு என்ற முழக்கம் "தமிழ்நாடு தமிழர்க்கே!" என்றார். காரணம் அவர் பணியாற்றும் களம் மாறி யிருந்தது. ஆக 1950லேயே திராவிடநாடு திராவிடர்க்கே என்ற முழக்கம் முடிந்து விட்டது." ( தரவு-கொளத்தூர் மணி )

எனவே "திராவிடர்" என்ற சொல்லில் பெரியார் ஏற்றி இருக்கிற பொருள் " சாதியத்திற்கு, இந்து மதத்திற்கு, பெண் அடிமைத்தனத்திற்கு எதிரானவர்கள்" என்பதே ஆகும். புவி எல்லைப் பகுதியைக் கொண்டு ‘திராவிடம்’ எனக் குறிப்பிட்டது பின்னால் முற்றிலும் மாறிவிட்டது. இதே நிலைபாட்டின் அடிப்படை யில்தான் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் அணுகுமுறையும் அமைந்திருந்தது. எனவே அவரது கவிதைகளும்,பிற படைப்புகளும் அந்த தொனியிலேயே வெளிப்பட்டன.

**தமிழ்த்தேசியக் கவி**

தமிழ்த்தேசியம் எனும் கருத்து தமிழ்நாட்டில் இன்று படாத பாடு பட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால், பாவேந்தரின் தமிழ்த் தேசியம் என்பது சாரத்தில் சாதி ஒழிப்பில் மையம் கொண்டுள்ளது. இந்திய நிலவுடைமை அமைப்பே சாதியைத் தொடர்ந்து காப்பாற்றி வருவதாகவும், சாதிகளின் ஆணிவேர் இந்திய நிலவுடைமை உற்பத்தி முறையில் இருப்பதால், சாதிகளின் அழிவு இந்திய

நிலவுடைமை உற்பத்தி முறையின் அழிவோடு தொடர்புடையது என்றும் ஒரு கண்ணோட்டம் முற்போக்காளர் சிலரிடம் இருப்பதை அறிவோம். இது உண்டையே! ஆனால் இது முழு உண்மை ஆகாது. நிலவுடைமை ஒழிந்தால் சாதி ஒழிந்து விடும் என்பது நிலவுடைமைக்கும், சாதிக்குமான உறவை இது சிக்கலற்றதாகவும், கணக்கியல் வாய்ப்பாடாகவும், காரணம் விளைவு ( Cause and Effect ) என்ற நேர்கோட்டுத் தன்மையிலும் காண்பதாக அமைகிறது. நிலவுடைமை, உலகெங்கும் இருந்தது. ஆனால் அங்கெல்லாம் சாதி வேரூன்றி இருக்கவில்லை. இந்தியாவில் மட்டும் சாதி தொடர்ந்து நீடிக்கிறது என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். சாதியின் மீது பல்வேறு அரசியல், பொருளியல், பண்பாட்டுச் சக்திகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. எனவே

சாதி ஒழிப்பிற்கான போராட்டம் என்பது நீண்ட காலம் தொடரக் கூடியதாக இருக்கிறது. பொருளியல் தளத்தில் மட்டுமல்லாமல், பண்பாட்டுத் தளத்திலும் இதற்கான போராட்டத்தை நீட்டிக்க வேண்டியுள்ளது. கடந்த காலத்தைப் போல இத்தகைய போராட்டங்களைத் தனித்தனியாக நடத்தாமல், ஒருங்கிணைந்து நடத்த வேண்டிய தேவையும் எழுந்துள்ளது. இந்தப் பின்னணி யில்தான் சுயமரியாதை இயக்கத்தையும், பாவேந்தரின் சாதி ஒழிப்புக் கண்ணோட்டத்தையும் காண வேண்டி உள்ளது.

**"இருட்டறையில் உள்ளதடா உலகம், சாதி**
**இருக்கிற தென்பானும் இருக்கின் றானே!"**

என்பது சாதியின் இருத்தலைச் சகித்துக்கொள்ள முடியாத பாவேந்தரின் மனக்கட்டமைப்பை வெளிப்படுத்தும் வைர வரிகளாகும். அவரது கவிதைகளில் செம்பாதி சாதி ஒழிப்புக் குறித்தானதுதான். தீண்டாமைக் கொடுமை பற்றி வேதனையோடும் வெஞ்சினத்தோடும் அவர் எழுதிய கவிதைகள் மிகவும் குறிப்பிடத் தக்கன.

**"சேரிப் பறையர் என்றும்**
**தீண்டார் என்றும் சொல்லும்**
**வீரர் நம் உற்றாரடி-சகியே**
**வீரர் நம் உற்றாறடி"**

என்றும்,

**"துயருறத் தாழ்ந்தவர் உள்ளார் என்று**
**சொல்லிடும் தீயரைத் தூவென்று உமிழ்வாய்"**

என்றும் ஒடுக்கப்பட்டோர் சார்பாக நின்று குரல் கொடுக்கிறார். அது மட்டுமல்ல, சாதி ஒழிப்பு என்பதைத் தீண்டாமை ஒழிப்பு

என்பதோடு மட்டும் அவர் நிறுத்திக். கொள்ளவில்லை என்பது கருதத் தக்கது. பார்ப்பனர்கள் அல்லாத இடைநிலைச் சாதியினரிடையே நிலவும் சாதி வேறுபாட்டையும் அவர் சுட்டிக் காட்டிச் சாடியுள்ளார்.

**" மேலும் முதலி, செட்டி**
**வேளாளப் பிள்ளை முதல்**
**நாலாயிரம் சாதியாம்-சகியே**
**நாலாயிரம் சாதியாம்!**
**எஞ்சாதிக் கிவர் சாதி**
**இழிவென்று சண்டையிட்டுப்**
**பஞ்சாகிப் போனாரடி-சகியே**
**பஞ்சாகிப் போனாரடி!"**

எனக் கண்டிப்பதைக் காணமுடிகிறது.

மேலும் , இடைநிலைச் சாதியினர் எவ்வாறு தங்களது தேவைக்குத் தாழ்த்தப்பட்ட சாதிகளைப் பயன்படுத்திக் கொள்கின்றனர் என்பதை " ஜாதி ஆபத்து எம்டன் கப்பல் வரவு " எனும் கட்டுரையில் சிறப்பாகப் படம் பிடித்துக் காட்டுகிறார் கவிஞர். எம்டன் கப்பல் வந்த பொழுது, அதன்.தாக்குதலுக்கு அஞ்சி கீழ் சாதி எனக் கருதப்படும் மக்களிடம் "உயர் சாதியினர்" தஞ்சம் புகுவதும், எம்டன் கப்பல் ஆபத்து நீங்கியதுடன் முன்பு பெற்ற உதவியை மறந்து. தாழ்த்தப்பட்ட சாதியை ஏசுவதும், இதனால் பெரும் கலவரம் வெடித்துப் பலரும் கடுமையாகப் பாதிக்கப் பட்டதையும் குறிப்பிட்ட பின் இறுதியில் " வெட்கக் கேடு. ஜெர்மனியின் அக்ரமமான சண்டைக் கப்பலுக்குத் தப்பித்துக் கொள்ளுவது சாத்தியம். ஆனால், மனு வகுத்த ஜாதி என்னும் அக்ரமத்திற்குத் தப்பி உயிர் பிழைப்பது முடியவில்லை" எனப் புதுவை முரசு ((1931) பத்திரிகையில் எழுதினார்.

தவிரவும், நடிகமணி விசுவநாததாசு, தமிழுக்கு உயிர்நீத்த நடராசன் போன்ற ஒடுக்கப்பட்ட தியாகிகளைத் தனது கவிதையால் நிலைபெறச் செய்தார். அண்ணல் அம்பேத்கர் பற்றிய அவரது கவிதை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

**" ...................பணியில் எவர்க்கும்**
**அணியில் முன்நின்ற அம்பேத் காரின்**
**எரிமலை எண்ணமும் எழும்புயல் செயலும்**
**விரிவுல கத்தையே விழிப்புறச் செய்தன.**
**ஆரியக் கொட்டம் அடியோ டழிய**
**வீரியங் கொண்ட வெஞ்சின வேங்கை முன்**
**மதத்திமிர் அழிந்தது. சமயம் மடிந்தது"** எனும் அவரது கவிதை காலத்தால் அழியாத பதிவாகும்.

பாவேந்தரின் தமிழ்த் தேசியம் என்பது சாதி ஒழிப்பு என்பதோடு மதம், பெண்ணடிமை, இந்தி, சமசுகிருதம், பார்ப்பனியம், வடநாடு ஆகியவற்றுக்கு எதிரான கருத்தியலாக மிளிர்கிறது. இவற்றைக் குறித்து எண்ணற்ற கவிதைகளையும், கட்டுரைகளையும் அவர் எழுதிக் குவித்துள்ளார்.

கல்லும் மண்ணுமாக இருக்கும் ஒரு புவிப் பகுதிக்கு, நாடு எனும் அடையாளத்தையும், கௌரவத்தையும் தருவது மொழியே. ஒரு மக்கள் கூட்டத்தைப் பின்னிப் பிணைக்கும் "நாம்" எனும் கூட்டுணர்வைத் தருவதும் மொழியே! உலகெங்கும் இருப்பவர்கள் தத்தம் தாய்மொழிகளை நேசிக்கின்றனர் என்றால், தமிழன் தனது மொழியை வழிபடுகிறான் என்பதுதான் மெய்நடப்பாகும். இதன் வெளிப்பாடுதான் தமிழன்னை எனும் கருத்தாக்கம். இதற்குத் தமிழக வரலாற்றில் நீண்டதொரு வரலாறு உண்டு. அதன் கொடுமுடியாகத் திகழ்பவை பாவேந்தரது கவிதைகள். தமிழை இவரைப் போல ஆராதித்தவர் வேறு ஒருவர் இருப்பாரா என்பது ஐயமே! தமிழ் என்பதை மொழி என்ற எல்லையைக் கடந்து, பெரும் விழுமியங்களைத் தன்னுள் பூட்டி வைத்திருக்கும் ஒரு கருவூலமாகக் காண்கிறார் பாரதிதாசன். அவ்வகையில் அவரது தமிழ்த் தேசியம் என்பது பல்வகைப் பரிணாமங்களைக் கொண்டதாக இருக்கிறது.

"தமிழைப் பழித்தவனைத் தாய் தடுத்தாலும் விடேன்" என்பது அவரைப் பொருத்தவரை வெறும் முழக்கமல்ல. அது அவரது வாழ்வின் செவ்வியல் நெறியாகும். "பொங்கு தமிழர்க்கு இன்னல் விளைத்தால் சங்காரம் நிசமெனச் சங்கே முழங்கு!" எனவும்,

**"எனை ஈன்ற தந்தைக்கும் தாய்க்கும்**
**மக்கள் இனம் என்ற தமிழ்நாடு தனக்கும்**
**என்னால் தினையளவு நலமேனும் கிடைக்குமென்றால்**
**செத்தொழியும் நாள்எனக்குத் திருநாளன்றோ?**

எனவும் சூளுரைக்கிறார்.தமிழுக்காகப் "பச்சை இரத்தம் பரிமாறவும்" அணியமாக இருக்கிறார்.

"வேதபுரீசர் நூல் நிலையத்தில்" எனும் கட்டுரையில் தமிழ் குறித்து நடந்த ஒரு நிகழ்வைப் பாவேந்தர் சுட்டிக் காட்டுகிறார். "வங்கத்து அரவிந்தர் கூட முதலில் தமிழ் வளமுடைய மொழி அல்ல என்றுதான் நினைத்திருந்தார். உணர்வும் அறிவும் வேறுவேறு பொருளுடையது என்பதற்குத் தமிழில் ஆதாரம் உண்டா என்று பாரதியாரை அரவிந்தர் கேட்டார். அது பற்றி வருந்தியிருந்த பாரதிக்கு உணர்வு எனும் பெரும்பதம் தெரிந்து," நாடினேன் நாடி நான் கண்டு கொண்டேன்" என்ற ஆழ்வார் செய்யுளை நான் நினைவுபடுத்தி அவருக்குத் தமிழின் பெருமையைக் கூற நேர்ந்தது" எனப் பாரதிதாசனே குறிப்பிடுகிறார்.

தமிழ்த்தேசியம் என்பது தமிழ்த் தேசிய இனத்தின் இறையாண்மையில் கருக்கொண்டுள்ளது. சாதி ஒழிப்பு என்பது அதன் முதன்மைக் கூறு. தவிரவும் பார்ப்பனிய எதிர்ப்பு, இந்தி / சமசுகிருத ஆதிக்க எதிர்ப்பு, மூட நம்பிக்கை எதிர்ப்பு, முதலாளிய எதிர்ப்பு, வடஇந்திய ஆதிக்க எதிர்ப்பு, மனு சாத்திர எதிர்ப்பு போன்றவற்றையும் அது உள்ளடக்கி உள்ளது. அதனால்தான் "தமிழ்நாடு தமிழர்க்கே!" எனும் தந்தை பெரியாரின் கோட்பாட்டில் பாவேந்தர் இறுதிவரை உறுதியாக இருந்தார். தமிழ்த்தேசியக் கூறுகள் அனைத்தையும் வெளிப் படுத்துவதாகப் பாவேந்தரின் படைப்புகள் உள்ளதால்தான் அவரைத் தமிழ்த்தேசியக் கவி என அறிவுலகு கொண்டாடுகிறது.

**பொதுவுடைமைக் கவி**

ஓர். உண்மையான தமிழ்த் தேசியவாதி என்பவன் உறுதியாகப் பொதுவுடைமைவாதியாகவும் திகழ்வான் என்பதற்குப் பாவேந்தரே சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குகிறார். அவரது

**"புதியதோர் உலகம் செய்வோம் கெட்ட**
**போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்**
**பொதுவுடைமைக்கொள்கை திசையெட்டும் சேர்ப்போம்**
**புனிதமோ டதை எங்கள் உயிரென்று காப்போம்!"**

என்பது அவரது சாகா வரிகளாகும். நிலவுடைமை, முதலாளியம், வல்லரசியம் ஆகிய ஆதிக்கங்களுக்கு எதிராக உரத்து முழங்கியவர் பாவேந்தர். தவிரவும் இத்தகைய அரசியல், பொருளியல் போக்குகள், பண்பாட்டுத் துறையில் எவ்வாறு ஊடுருவி மக்களை மடை மாற்றுகின்றன என்பதைத் தனது படைப்புகள் மூலம் மக்களிடம் அவர் கொண்டு சென்றார்.

இருப்பினும் கவிஞரின் பொதுவுடைமை ஈடுபாடு குறித்துச் சுயநலமிகள் சிலர் விமர்சனம் செய்தபொழுது, அவர் கொதித்து எழுந்தார்.

**" பொதுவுடைமைக்கு பகைவனா? நான்**
**பொதுவுடமைக் காரர் எனக்குப் பகைவரா?**
**இல்லவே இல்லை; இரண்டும் சரியில்லை.**
**பாரதி பாட்டில் பற்றிய பொதுவுடமைத் தீ**
**என்றன் பாட்டு நெய்யால் வளர்ந்து**
**கொளுந்துவிட்டெரிந்து தொழிலாளரிடத்தும்**
**உழைப்பாள ரிடத்தும் உணர்வில் உணர்ச்சியில்**
**மலர்ந்து படர்ந்ததை மறுப்பவர் யாரே?**
**சிங்கார வேலர்முதல் சீவாவரையில்**

**அங்காந் திடுவர் என்பாட்டுனுக்கே!"**

எனப் பதிலடி கொடுத்தார்.

தவிரவும், சிங்காரவேலர் குறித்தும், ஜீவா குறித்தும் அவர்களது மாபெரும் சேவைகளைப் போற்றித் தனித்தனியே பாடல்கள் இயற்றியுள்ளது குறிப்பிடத்தக்கது.

மேலும்,

**"யுகமாகிநின்ற லெனின் உலகாகிநின்ற லெனின்**
**உறவாகிநின்ற லெனினே!**
**அகமாகிநின்ற லெனின் அறிவாகிநின்ற லெனின்**
**அரசாளவந்த லெனினே!**
**சுகமாகிவந்த லெனின் துணையாகிவந்த லெனின்**
**சுதந்திரமா லெனினே!"**

எனத் தோழர் லெனின் அவர்களைப் பாராட்டி 1918ல் ஜனவநோதினி இதழில் எழுதியுள்ளார். மேலும் லெனின் காலஞ் சென்ற சமயத்தில் பிப்ரவர் 12 / 1924-ல் கவிதை மூலம் புகழஞ் சலி செலுத்தினார்.

மேலும், மனிதகுலப் பகைவனான இட்லரின் வீழ்ச்சியை வரவேற்றார். "இட்லர் என்னும் குருவி, நெருப்புக்குழியில் வீழ்ந்தது" எனக் கொண்டாடினார்.

வியட்நாம் மக்கள் மீது போர்தொடுத்த அமெரிக்க வல்லரசைக் கண்டித்து அவர் எழுதிய கவிதை தேசிய விடுதலைப் போராட்டங்களின் மீது கவிஞருக்குள்ள கரிசனத்தைப் புலப்படுத்துகிறது.

**"மனவலிமை குன்றாத வியட்நாம் மக்கள்**
**மறுவாழ்வில் ஊடுருவும் முதலாளித்துவ**
**மனப்போக்கை முறியடித்தல் உலகநாட்டு**
**மன்றத்தின் முதற்கடையாகும்! ஒவ்வோர்**
**இனமக்கள் வாழ்நாடும் அவ்வவர்க்கே**
**எனும்உணர்வு விழிப்புணர்ச்சி இயற்கைஎந்த**
**இனமற்ற அமெரிக்க வெறி நாய்கட்கே**
**இனமேது? ஏது மொழி எச்சிற் சோறே**
**அமெரிக்கக் காலடியில் வியட்நாம்மக்கள்**
**ஆயிரம் ஆண்டானாலும் பணிவதில்லை**
**திமிருற்ற ஏகாதிபத்தியத்தைத்**
**திசைதோறும் எதிர்கின்றார்!"**

என அமெரிக்க வல்லரசைக்கடுமையாகச்சாடுகிறார்.

தொழிலாளர் குறித்தும், உழவர்கள் குறித்தும், கைவினைஞர்கள் குறித்தும், சிறுகுறு வணிகர்கள் குறித்தும் கூலி விவசாயிகள்

குறித்தும், அனைத்து வகை உழைப்பாளர்கள் குறித்தும் தனது படைப்புகளில் அவர்களைப் பதிவு செய்து அவர்களுக்கு ஆதரவாகத் துணை நிற்கிறார்.

**தொலை நோக்கு**

அறுபது, எழுபது ஆண்டுகளுக்கு முன்பு பாவேந்தரின் படைப்புகள் வெளியாகி இருந்தாலும், அவற்றில் பல இன்றும் பொருத்தப்பாடு மிக்கவையாகத் திகழ்கின்றன. குறிப்பாக மதத்தை வைத்துப் பிழைப்பு நடத்தும் மதவெறியர்கள் மக்களை எவ்வாறு பிளவு படுத்துகின்றனர் என்பதைத் தெளிவாகக் கவிஞர் பதிவு செய்துள்ளார்.

**"மூடத்தனத்தை முடுக்கும் மதத்தை நிர்**
**மூலப்படுத்தக் கை ஓங்குவீர் பலி**
**பீடத்தை விட்டினி நீங்குவீர்!"**

என எச்சரிக்கிறார். அது மட்டுமல்ல,

**"மிக்க மதவெறியர் மேல்நிலையை எய்திவிட்டால்**
**தக்க முஸ்லீமைத் தாக்கா திருப்பாரோ?"**

எனத் துல்லியமாக அன்றே சுட்டிக் காட்டியுள்ளார்.

**"சாதிமதம் பேசித் தனித்தனியே நீரிருந்தால்**
**தோதுதெரிந் தாரியர்கள் உம்மைத் தொலைத்திடுவார்"**

எனவும் விழிப்புணர்வு ஊட்டுகிறார்.

**" நாட்டின் தலைவர்கள் சாதி மத**
**நாய் வெறி தன்னைந றுக்குதல் வேண்டும்**
**கோட்சேயைக் கண்டன ரன்றோ-அவன்**
**கூட்டத்தின் உள்ளக்கி டக்கையும் கண்டோர்**
**கேட்டைத்த விர்த்திட வேண்டும்"**

எனவும் கூறுவது எவ்வளவு பொருத்தப்பாடு மிக்கது?

அதேபோல், "மாட்டை நினைத்தவன், மனிதனை நினைக்கவில்லை" எனும் கவிதையில் பசுக்குண்டர்களின் மனித நேயமற்ற செயலைச் சாடுகிறார்.

**பசிப்பிணி யாலே பரதவிக் கின்ற**
**நசிவினை எண்ணும் நல்லுளம்இல்லையா?**
**உடன்பிறந்தவர்கள் உயிருடன் சாகையில்**
**கடமை கருதி அவர்கள் உயிரினைக்**
**காக்க ஒருபிடி சாப்பாடு கொடுக்காமல்**
**நோக்கம் இல்லாமல் ஊக்கம் இலாமல்**
**மாந்தர்மேல் பரிவு ஏந்திடாமல் நீர்**

**கறவை கட்கும் பறவை கட்கும்**
**சங்கம் வைத்துச் சாதிப்பதென்ன?**
**உயிர்களில் மனிதஉயிர்**
**உயர்வில்லையோ?**

எனச் சாட்டையைச் சுழற்றுகிறார்.

**'துருக்கன் என்ற சொல்லை நீக்கு!**
**கத்தோலிக்கப் பித்தம் தொலைப்பாய்**
**இந்து என்ற சிந்தனை வேண்டாம்!**
**யாவரும் மனிதர் என்பது தெரிந்தால் நிலவும் பொதுவே என்பது தெரியும்**
**அறிந்து வாழ்வீர் அன்பர் கூட்டமே"**

எனச் சுட்டிக்காட்டி மனிதநேயம் வலியுறுத்துகிறார்.

அதேபோல் விநாயக வழிபாடு, தீபாவளி போன்றவை தமிழர் மரபுக்கு ஒவ்வாதவை என்பதைத் தொடர்ந்து வலியுறுத்துகிறார். இந்தி ஆதிக்கம் குறித்த அவரது எச்சரிக்கையையும், அந்த அதிகாரத்தை எதிர்த்துப் போராட வேண்டிய இன்றியமையாத் தேவையையும் அவரது கவிதைகள் நமக்கு உணர்த்திக் கொண்டே உள்ளன. தவிரவும், தமிழ் வழிபாடு, தமிழ்வழிக் கல்வி, தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பெயர்ப்பலகை போன்ற அவரது தமிழ்த் தேசியக் கனவுகள் இன்னும் நிறைவேறாமல் இருப்பதையும் உணர முடிகிறது.

**முரண்பாடுகள்**

ஏராளமாக எழுதிக் குவித்த பாவேந்தரின் கட்டுரைகளிலும், கவிதைகளிலும் ஆங்காங்கு முரண்பாடுகள் இருப்பதையும் காண முடிகிறது. குறிப்பாக குயில் இதழில் 02.02.1960 வந்த **"ஏழ்மை ஒழியுமா?"** என்ற கட்டுரையைக் குறிப்பிட வேண்டும். அதில் "ஏற்றத்தாழ்வு எப்போதும் இருக்கும். அறிவு அறியாமை அகல முடியாதவை. வறுமையும் செம்மையும் வாழ்ந்துக் கொண்டுதான் இருக்கும். இரப்பானும் ஈவானும் இரப்பதும் ஈவதும் எப்போதும் இருக்கும் இந்த இரண்டில் ஒன்று வேரற்றுப் போவதென்பது முடியவே முடியாது." என்றும் "உலகில் வறுமை வேரற்றுப் போக வழி சொல்லும் நூல், கல்வி, இயக்கம் இருக்கவே முடியாது இருக்கலாம் என்றால், அந்த வறுமையை முழுதும் ஒழிக்கவே முடியாது" என்றும், "இரப்பவர் உலகில் இல்லாவிட்டால் மக்களின் நடைமுறையில் சுவை இராது என்கிறார். (திருவள்ளுவர்) இதனால் இரப்பார் இருப்பர் இல்லாமற் போகார் இல்லாமல் செய்ய முடியாது என்று வைத்து அப்படி அவர்கள் இல்லாவிட்டால் உலக மக்களின் போக்கு வரவு நடைமுறை மரப்பாவை போவதும் வருவதும் போல

இருக்கும். சுவையற்ற வாழ்க்கையில் முடியும்" என்று கூறுகிறார்.

**இரப்பாரை இல்லாயான் ஈர்ங்காண்பா மாஞாலம்**
**மரப்பாவை சென்றுவந் தற்று**

(குறள்)

இவ்வாறு நாம் கூறுவதால், தமிழ்ச் சான்றோர் இவ்வாறு கூறுவதால், ஏழைகளே முன்னேற்றமுறச் செய்யும் முயற்சியை எதிர்ப்பதாக எண்ணிவிடக் கூடாது. அதுபோலவே பொதுவுடமைக்காரர்கள் செல்வநிலையில் மக்கள் நிகர் என்ற நிலையை உண்டாக்கி விட்டோம், உண்டாக்கி விடுவோம் என்று அவிழ்க்கும் பொய் மூட்டைகளை முழுதும் நம்பி விடவேண்டும் என்று எண்ணிவிடக் கூடாது. ஏழ்மையின் வேரையே அறுத்துவிடுவோம் என்று சொல்வோர் வாய்ப்பந்தல் போடுவோரே என பாவேந்தர் எழுதுவது வியப்பாக உள்ளது. இது நம்பிக்கையின்மையை வெளிப்படுத்துவதாக உள்ளது.

இதே போன்ற முரணான கண்ணோட்டம் காந்தி, நேரு, காமராசு குறித்த அவரது அணுகுமுறையிலும் காணலாம். இருப்பினும் பாரதிதாசன் எனும் மாபெரும் மலையில் உள்ள இப்படிப்பட்ட சறுக்கல்கள் அந்த மலையின் பெருமையைச் சிதைத்து விடாது. என்பதும் உண்மையே.

**பிரபஞ்சக் கவி**

பாரதிதாசன் பகுத்தறிவுக் கவி மட்டுமல்ல, தமிழ்த்தேசியக் கவி மட்டுமல்ல, பொதுவுடைமைக் கவி மட்டுமல்ல, உலகு தழுவிய பிரபஞ்சக் கவியும் ஆவார். மனித நேயம் , மனித ஆற்றல், மனித சுதந்திரம் போன்றவை குறித்து அவர் யாத்த கவிதைகள் சர்வதேசத் தரம் வாய்ந்தவை என்பதில் ஐயம் ஏதும் இருக்க முடியாது. பாவேந்தரின் கவிதைகளை ஆங்கிலம் போன்ற பிற மொழிகளில் மொழியாக்கம் செய்து வெளியிட வேண்டியது அரசின் கடமையாகும்.

அரசியல் ஏற்றத் தாழ்வுகளுக்கு ஏற்ப, அவரது படைப்புகளில் சிற்சில முரண்பாடுகள் இருப்பினும், தமிழ் இலக்கியத்தில் ஓர் கலங்கரை விளக்காக அவர் என்றும் திகழ்வார் என்பதில் ஐயம் ஏதும் இருக்க முடியாது.

**பார்வை நூல்கள்**


*(1) பாரதிராசன் கவிதைகள் தொகுதிகள்*

*(1) (2) (3) (4) பூம்புகார் பதிப்பகம், சென்னை.*

*(2) மானுடம் போற்று (பாரதிதாசன் கட்டுரைகள்)*

*பூம்புகார் பிரசுரம் பிரஸ், சென்னை.*

*(3) பாரதிதாசன்-முருகு சுந்தரம்-சாகித்திய அகாதெமி, சென்னை.*

*(4) பாரதிதாசன் பேசுகிறார் பாவேந்தர் பாரதிதாசன் பூம்புகார் பதிப்பகம் சென்னை.*

*(5) "பெரியாரின் செயல்வடிவத் தமிழ்த்தேசியம்" கொளத்தூர் மணி-கட்டுரை பெரியாரும் தமிழ்த் தேசியமும் தொகுப்பு நூல் சிற்றுளி வெளியீடு, சென்னை.*

*(6) தமிழர் தலைவர்-சாமி. சிதம்பரனார்-பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடு, சென்னை.*


❖❖❖

# வட்ட மேசையில் சுயமரியாதை இதழியலின் இருக்கை

**மணிகோ பன்னீர்செல்வம்**

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் அதிகார மறுவரையறை நெருக்கடியை ஒட்டி உருவானதே வட்ட மேசை மாநாடுகள். இதில் இந்தியாவைச்சேர்ந்த பல்வேறு தரப்பினர் தத்தமது பிரதிநிதித்துவம் சார்ந்த தேவைகளோடு அந்த உயர் அரங்கில் இருக்கையைப் பெற்றிருந்தனர். அதில் சுதேச அதிகார முகவர்களும் மக்கள் விடுதலை வேட்கையைக்கொண்ட சிந்தனையாளர்களும் இடம் பெற்று இருந்தனர்.

ஆனால் அவர்களுக்கு அந்த அதிகாரமுகவர்கள் வட்டமேசையில் செயல்படும் போதே அதே கண்ணோட்டத்தெளிவோடு இந்தியாவில் செய்திகளாக மாற்றித்தரும் பத்திரிகை நிறுவனங்கள் இருந்ததைப்போல இவர்களுக்கு இருந்திருக்கவில்லை. பங்கேற்றவர்களே இந்தியா வந்த பிறகு பதிவுசெய்து வெளி யிட்டால்தான் உண்டு (அம்பேத்கரின் சிந்தனைகளுக்கு ஏற்பட்ட நிலை) என்ற நிலை இருந்தது. இந்தச் சூழமைவில் மக்கள் விடுதலையாளர்களின் உயரிய நோக்கையும் சுதேச அதிகாரமுகவர்களின் சுயநலத் தொலைநோக்கையும் தனது விமரிசனக் கண்ணோட்டத்தோடு இழைந்து எழுத்தறிவு பரவி யிருந்த எட்டுத்திக்கும் பரப்பியது சுயமரியாதை இதழியல். அதில் ஒரு ஆற்றல் வாய்ந்த படைக்கலன் புதுவை முரசு.

ஒருசொல் பாயிரம் : மருணீக்கியார்

மருணீக்கியார் (டாக்டர்) அம்பேத்கரையும் நாங்கள் இழந்தோம்,

தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட பெருந்தொகையினராகிய எமக்கெல்லாம் தலைவர் நீங்களே ! சார்ந்து கடைத்தேற எண்ணுவோர் நீங்களே! இப்படியல்லவா செதுக்கி முடித்தது ஒரு செப்பேடு! (இளங்கோ, டாக்டர், ச.சு, பதி.1994:114) என்று இதழ்கள் வழி ஒடுக்கப்பட்ட மக்களின் சுயநிர்ணய வாழ்வுக்காய்ப் போராடிய அம்பேத்கரின் இழப்பை உணர்ந்து தனது குயில் ஏட்டின் (குரல்- 1, இசை-39, 3.3. 1959) வாயிலாகப் பாரதிதாசன் ஓங்கி முழங்கினார். பாரதிதாசன் மேற்கண்டவாறு காட்டும் மருணீக்கியார் (மருள் + நீக்கியார்) என்பது மருள் என்றால் மயக்கம், மருள் நீக்கியார் என்றால் மயக்கத்தை நீக்கித் தெளிவைத் தருபவர் என்று பொருள் கொள்ளலாம்.

இந்து மத மயக்கத்தில் ஆழ்ந்திருந்த மக்களின் மருள் நீக்கி, மானுட விடுதலை என்னும் தெளிவைத் தந்தவர் புரட்சியாளர் அம்பேத்கர் என்பதைத்தான் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் வலியுறுத்துகிறார். என்றபோதும் அம்பேத்கர் கல்வித்துறை சார்ந்து பெற்ற டாக்டர் பட்டத்திற்கு இணையான தமிழ்ச்சொல்லாக இதைப்பாவிக்கிறார் எனக்கொள்ள இடமுண்டு (மருட்சி+நீக்குதல்).

இந்தியத் துணைக்கண்டத்துத் தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட பெருந்தொகையினராகிய இந்தியதுணைக்கண்டத்து மக்களின் தலைவரான அம்பேத்கரின் செயற்பாட்டை மிக நுணுக்கமாகத் தனது ஆக்கங்களில் பதிவுசெய்கிறார்.

1.2.1952-இல் தொண்டு இதழில் (புகழ்மலர்கள் எனும் தொகுப்பில் 1978-இல்) அம்பேத்கர் வாழ்க! அவர்வழி செல்க! என்னும் தலைப்பில் தனிப்பாடலாக அம்பேத்கரின் ஆளுமையைப் பாடினார் பாரதிதாசன்.

இந்திய வரலாற்றில் 1930-களில் இருந்தே அம்பேத்கரின் அரசியல் குறித்த செயற்பாட்டை பாரதிதாசன் கவனித்து வந்தார். ‘ஸ்வராஜ்யம்’ (புதுவை முரசு, 24.11.1930, ப.10-11), காந்தியின் மேல் நம்பிக்கையில்லை, காந்தி பார்ப்பனத் தலைவரே! (பு.மு..5.10.1931, பாவேந்தம்-22, ப.12-14) ‘வட்டமேஜையில் காடைக் கூடுகள்’ (பு.மு,12.10.1931,பாவேந்தம்-22, ப.12-13) மூளைவைத்யம் (பு.மு.19.10.1937,பாவேந்தம்-22, ப.17-18) ஆதிதிராவிடர்கட்குச் சோதனைக்காலம் (பு.மு.7.12.1931, பாவேந்தம்-22, ப.14 -16) நமது கடமையென்ன? (காந்தியா? சுயமரியாதையா? (பு.மு.18.1.1932, ப.14-17) தோழர் காந்தி கடவுள் அவதாரமா? (பு.மு.25.1.1932,பாவேந்தம்-22, ப.12-13) போன்ற பாரதிதாசனின் கட்டுரைகள் முதன்மையானதாகும்.

**ஸ்வராஜ்யம் பற்றிய சுயமரியாதை நோக்கு**

இந்திய விடுதலைப் போராட்டக் காலத்தில் பிரிட்டிசாரை எதிர்த்து

ஸ்வராஜ்யம் என்பதாக காந்தியின் காங்கிரஸ் போராடிய போது சமூக விடுதலையே முதன்மையான முரண் என்பதாக அம்பேத்கர் பேசினார். காந்தியையும் காங்கிரசையும் எதிர்கொண்டார். இந்துதேசீய பார்ப்பன ஏடுகளின் விமரிசனத்தையும் அம்பேத்கர் எதிர்கொண்டார். இசுலாமியருக்கு எதிரான இந்து பெரும்பான்மை வாதத்திற்குத் தலித் மக்களின் எண்ணிக்கை ஓர் இன்றியமையாத சேர்க்கையாக உணரப்பட்டது.ஆகவே, நவ இந்து உருவாக்கத்தில் ஓர் இடராத அங்கமாகத் தலித்துகள் பொருந்தி இருக்க வேண்டும் என்று அவர்கள் விரும்பினர். அம்பேத்கரோ சமூகப் பண்பாட்டுத்தளத்திலும் அரசியல் தளத்திலும் தனி வெகுமதி பெற்று (பிரிட்டிசாரிடம் இருந்து ) வரலாற்றில் தனித்ததோர் சமூகமாகப் பயணிக்க சிந்தித்தும்,எழுதியும் கொண்டி ருந்தார். இந்தச்சூழலில், வட்டமேசைகள் கூட்டப்பட்டன.

1930-களிலிருந்து (1931, 32) இரண்டு ஆண்டுகள் புதுவை முரசில் பாரதிதாசன் எழுதிய வட்டமேசை மாநாடுகள் பற்றிய கட்டுரைகள் சிறப்பானவையாகும். அதாவது 1930-இல் முதல் வட்டமேசை மாநாட்டிலும் 1931-இல் இரண்டாம் வட்டமேசை மாநாட்டிலும் தாழ்த்தப்பட்ட மக்களின் அதிகாரம் தொடர்பான சிக்கல்களில் காந்தி நடந்துகொண்ட நிலையும் அதை எதிர்கொண்ட அம்பேத்கரின் செயற்பாடும் குறித்தே அக்கட்டுரைகள் என்பதை நினைவில் கொள்க.

காந்திகாலத்தில் பேசப்பட்ட ‘ஸ்வராஜ்யம்’ எனும் நிலைப்பாட்டிற்கெதிரான புள்ளியிலிருந்தே பாரதிதாசனின் விமரிசனம் அமையத் தொடங்கியது. ‘ஸ்வராஜ்யம்’.ஒருவர் கொடுப்பதல்ல பேத விரோதபந்தங்கள் அற்று மக்கள் ஒற்றுமையடைவதேயாகும். சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம், என்ற மூன்று கொள்கைக்கும் இடமே இல்லாத மக்களிடம் நாட்டுப்பற்று வராது என்பது பாரதிதாசனின் நிலையாகும். (பாவேந்தம், தொகுதி - 22, ப.15) அம்பேத்கர் பவுத்த நவீனத்துவத்தைக் கையில் ஏந்துவதற்கு முன் (1956) அவர்வெகுகாலம் ஏந்திப்பிடித்தது பிரஞ்சுப்புரட்சியிலிருந்து கிடைத்த ஐரோப்பிய நவீனத்துவமே. இந்த நவீனத்துவத்தைபாரதிதாசன் தன் பிறப்பிடத்தில்(புதுவை) இருந்தே இயல்பாகப்பெற்றார். சுதந்திர உணர்ச்சியுள்ள சிற்சிலர் தமக்குள்ள செல்வாக்கைக் கொண்டு தேச மக்களைத் தம் இலட்சியம் நோக்கி இழுத்துச் செல்ல நினைப்பதால் எதிர்பார்க்கும் பலன் கிடைக்காது. (மேலது, ப.15) எனக் காங்கிரசின் தலைவர்களைச் சாடுகிறார். மக்கள் ஒன்று கலக்காதபடி இடையிடையே மதபேதம், சாதிபேதம், மூடத்தனம் என்கிற திரைப் போட்டிருப்பதே காரணம் என்னும் ஆய்வை முன்வைக்கிறார் பாரதிதாசன்.

இந்தியாவின் சுதந்திரத்திற்குப் பிறகே சாதி, மத, மூடத்தன ஒழிப்பு என்னும் கருத்தில்பாரதிதாசனுக்கு உடன்பாடில்லை.அரசுகள் எந்த சீர்திருத்தத்தையும் மேற்கொள்வதில்லை. மாறாக, சீர்திருத்தத்தை நிலை நாட்டிய இயக்கமே அரசாளும் தகுதியுடையதாக மாறும். சாதி, மத, மூடத்தன ஒழிப்பே மக்கள் விடுதலை என்பதே கவிஞர் பாரதிதாசனின் பார்வையாகும்.

1930, 31, 32-இல் நடைபெற்ற வட்டமேசை மாநாடுகள், அதில் பங்குபெற்ற காந்தியாரின் நிலை, அம்பேத்கரின்செயற்பாடுகள் குறித்து பாரதிதாசன் எடுத்துரைத்த கருத்துக்களைத் திறனாய்வு செய்யும் முன் காந்திய காங்கிரசின் பழமைவாதக் கண்ணோட்டத்தைப் பாவேந்தர் பதிவுசெய்துள்ளவற்றை முதலில் உரையாடுவோம்.

காங்கிரசின் ஆங்கிலம் கற்ற பிரிட்டிசாரின் கல்வி நாகரிகம் போன்றவற்றில் அறிவுள்ள நேரு பல வழக்கறிஞர்கள் போன்றோர் அனுப்பப்படாமல் இந்து மதத்தின் வாழ்வா? சாவா? பிரச்சனையில் காந்தியே நேரடிப் பிரதிநிதித்துவம் பெற்றது ஆழ்ந்து யோசிக்கத்தக்கது.

**நாட்டைச்சுற்றிய ராட்டை**

இது குறித்து பாரதிதாசன் புதுவை முரசில் எழுதிய 'தக்ளியும் ராட்டினமும்' (பு.மு.6.4.1931, ப.10-11) 'தூத்துக்குடி, காரைக்குடி மகாநாடுகள்' (பு.மு.20.04.1931, ப.10-11) கதரா? தூக்குக்கயிறா? (பு.மு.21.9.1931, ப.3) திரு.ராமநாதனுக்கு ஜே!. (பு.மு.8.6.1931, ப.10-11) போன்ற கட்டுரைகள் கவனிக்கத்தக்கன. (பாவேந்தம், தொகுதி - 22)

தக்ளி (Drop Spindle) என்பது பஞ்சிலிருந்து நூல் நூற்கப் பயன்பட்ட முதன்மைக் கருவியாகும். கைராட்டை பயன்பாட்டிற்கு முன் இக்கருவி, நடைப்பயணத்திலும் எளிமையாக 'கைநூற்பு நூல்' தயாரிக்கப் பயன்பட்டது. ராட்டினத்தைவிட தக்ளி எனும் மிகவும் வேகமான ஒருமுறையைத் திரு.காந்தியும் அவரது சிஷ்ய கோடிகளும் கண்டுபிடித்தார்கள். பார்ப்பன வசதிக்காய் இம்முறையை கண்டுபிடித்ததாகவும் தக்ளி ராட்டினம் சுற்றவேண்டிய அவசியத்தைப் பரப்புரை செய்த பார்ப்பனர்களாகிய காங்கிரசின் செயற்பாட்டைத் 'தேசீயத் திருவிளையாடல்களில்' ஒன்று என்கிறார் பாரதிதாசன் (பாவேந்தம் தொகுதி - 22)

தக்ளி, கைராட்டை, சாதனங்களின்பொருளியல், பண்பாட்டுப் பின்புலம் குறியீட்டு ரீதியிலான அர்த்தங்கள் பழமைவாதப்பலன்கள் (Claude Markovits) உடையன. வர்ண அடிப்படையிலானமக்கள் தொகைக்கணக்கெடுப்பின் படிசூத்திர, பஞ்சம மக்களின் எண்ணிக்கை மிகுதி எவ்வளவு பின்தங்கிய

உற்பத்தி சாதனங்களைப் பயன்படுத்தி எப்பொருளை உற்பத்தி செய்தாலும், அந்தஉற்பத்திஅளவுமேலுள்ளவர்ணத்தவரின் சிறிய எண்ணிக்கைக்கு ஏற்ப உயிர்வாழ்க்கைக்குப் போதுமானதே ஆகும். ஆனால் பேரெண்ணிக்கையிலான ஒடுக்கப்பட்ட மக்களின் தேவையைப் பின் தங்கிய உற்பத்தி முறையால் ஈடுசெய்ய முடியாது. அதில் உயர்வர்ணத்தாருக்கு எந்தப் பொறுப்பு கடனும் இல்லை. இயந்திரவகை உற்பத்தியால் மட்டுமே அதை ஈடுசெய்ய முடியும்.பிரிட்டிசுகாலனிய நலம்புரி (Welfare state) அரசு அந்த நோக்கையும் உள்ளடக்கிய சந்தை நலனை நோக்கியப் பாதை யிலேயே நடக்கிறது. இயந்திரவகை உற்பத்தியை நோக்கி நகர்கிறது. இந்து மீட்புவாதிகள். அவர்ணர்களின் நலன் பற்றிய அசட்டையோடும், பாராமுகத்தோடும் ஆனால், அதிகார அடையாள வேட்டையோடும். கைராட்டையைப் புனிதப்படுத்தி உச்சி முகர்ந்து கொண்டிருந்தனர்.

**ஆசானுக்கும் அப்பால்**

பாரதி ஆசானே ஆவார்.பாரதியின் ஆசான்களெல்லாம் ஆசான்களல்ல. (திலகர், லஜபதி, நிவேதிதை, விவேகானந்தர்) அந்த மரபில் புதிதாக அம்பேத்கரே அவருக்கு ஆசானாக உறுப்பெருகிறார். தலைமையின் செல்வாக்கு வீச்சிலிருந்து கட்டப்பெறுவதல்ல தேசியம். குடிமைப்பண்புகள் ஒருமையுற்று அரசியலாக ஓங்குவதில் உள்ளது தேசியம்.(பா.22. பக்.15) பார்ப்பனீய, இந்து மீட்புவாதத் தலைவர்கள், அரசியல் (காலனியத் திடமிருந்து) விடுதலைபெற்று அரசாங்கம் (State) நடத்தும் பொறுப்பு தங்களிடம் வழங்கப்பட்ட பிறகே சாதிய, பால்நிலை, பாகுபாடுகள் ஒழிக்கப்பட முடியும் என்று சட்டம் செய்யும் இறைமை வாதத்திலிருந்து (Sovereignty) வாதிடுகின்றனர். மாறாகக் குடியாட்சி அதிகாரம் இந்தப் பார்ப்பனப் பிரிவினரிடம் வருவதற்கு முன்பே மன்னராட்சி சமஸ்தான ஆட்சியுரிமையை சி.பி. ராமசாமி போல இவர்கள் யாரும் சுவைத்து வரவே செய்தனர். அங்கு சாதியை ஒழிக்கா விட்டால் கூடப் பரவாயில்லை அங்கெல்லாம் சாதியப் பாகுபாட்டு நெறிகளைக் கடுமையாகவே கடைப்பிடித்தது பார்ப்பனியம், சமஸ்தானஅதிகாரத்திலிருந்து, காலனிய (குடியாட்சி) கட்டமைப்பில் பேரம் பேசுகிறதே ஒழிய, காலனிய (நாடாளுமன்ற எதிர்க்கட்சிக்கட்டமைப்பிலிருந்து) விடுதலைக்கான உரையாடலை இந்த இந்து மீட்புவாதிகள் மேற்கொண்டதே இல்லை.

**நூலின் பின்னுள்ள கண்டு**

பருத்தி மூலப்பொருள் இலண்டனுக்கு ஏற்றுமதி ஆவதும் செம்மை செய்த ஆடைகள் இந்தியச் சந்தைக்கு வருவதும், இந்தியர்கள் உற்பத்தியாளர் ஊழியர்கள் என்ற நிலை

யிலிருந்து கீழிறக்கப்பட்டு உபயோகிப்பாளர் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். ஏகாதிபத்தியத்தின் துணி அரசியலை இப்படி எதிர் கொண்ட காந்தியார் இரும்பு, நிலக்கரி, மின்சாதனங்கள், நூல் (அச்சுக்காகிதம்) போன்றவற்றை எப்படி மாற்றுகளோடு எதிர்கொள்வார் என்கிற கேலி சுயமரியாதை இயக்கத்தினரிடம் தொடர்ந்து வெளிப்பட்டே வந்தது. இந்த இராட்டை தக்ளி, கதர் அரசியல் உத்திரபிரதேசத்திலோ, வங்கத்திலோ, ஒடிசா, பீகார், மத்தியப்பிரதேசத்து வைதீகச் சமூகங்களிலோ காலூன்ற முடியவில்லை. ஆனால் இந்தியத் துணைக் கண்டத்தின் மேற்கு, தெற்கு மாகாணங்களில் காலூன்றியது. இது காந்தியத் தலைமை யிலான இந்தியாவைக் கட்டியெழுப்ப விரும்பியதன் வெளிப்பாடே எனக் கொள்ளலாம்.

**ஆட்சிக்கு அச்சாரம்**

இந்துதேசியக்கனவை நிர்மாணிப்பதில் காதிக்குப் பொருளியல், தொழிலியல் களத்தில் ஒரு பங்கு இருப்பதைப்போலவே மொழி நிலையில் சமஸ்கிருதமும் இந்தியும் அதற்கு அடிக்கற்களாக விளங்கின கீதை நூல். இந்துதேசிய விடுதலைப்போராளிகளால் உத்வேகம் தரும் நூலாக உயர்த்திப் பிடிக்கப்பட்டது. அனைவரும் அறிந்த உண்மை.அம்பேத்கரும்,பாரதிதாசனும் அதைதொடர்ந்து சாடி வந்தார்கள்.

State apparatns களாகிய நாடாளுமன்றம், நீதிமன்றம், ஆட்சித் துறைகள் (அரசு இயந்திரம்) எதற்கும் தயாராகாத ஒரு மொழி அதன் பெரும்பான்மைக்காக ஆட்சி மொழியாக ஏற்கப்படவேண்டும் என மாற்றுவதை வற்புறுத்துவதன் அபத்தத்தை தொடர்ந்துசாடி வந்தனர்.

காங்கிரசு சட்ட மறுப்பு என்பதையும் அரசோடு ஒத்துழையாமை என்பதையும், மேல் தோற்றத்தில், துணிப் புறக்கணிப்பு, உப்புஉரிமை, வெள்ளையனே வெளியேறு என்று ஒப்பனை செய்தாலும் ஆழத்தில், வருணாசிரம மீளுருவாக்கம், சநாதன மறு நிர்மாணம் பார்ப்பனியத் தலைமை, சாதீயத்தின் இருப்பை வலிறுத்தல் என்பவற்றின் குறியீடாக இராம ராஜ்ஜியம் என்கிற அரசியல் வகைமையை முன் நிறுத்துவதைப் பார்க்கிறோம். அந்த இந்தியக் குறியீட்டை உரித்து உலக நிலைமையில் வைத்துப் பொருள் கொண்டால் மதமும் அரசும் இணைந்திருந்த நவீன மக்களாட்சியத்திற்கு முந்தைய மன்னர்,மடத் தலைவர் கூட்டரசையே இந்து தேசியம் வலியுறுத்தியிருப்பதாக பொருள் படுகிறது. பிரெஞ்சுப் புரட்சிக்கு முந்தைய அந்த பழமைவாத ஆட்சியியல் வடிவத்தை மீளுருவாக்கம் செய்யவே, பிரிட்டிஷ் அரசியல் சூழலுக்குத்தக தற்காலிகமாக ஒரு கட்சி என்கிற நவீன வடிவத்தைக் காங்கிரசு

எட்டுகிறது.

காங்கிரசின் அந்நியத் துணிப்புறக்கணிப்பும் அந்நிய அரசமைப்பு சார் சிந்தனைகள் புறக்கணிப்பும், அதன் முதன்மை அங்கத்தினர்களான பார்ப்பனர்களால் (avant guard) தீவிரமாக வற்புறுத்தப்படுகின்றன. ஆனால் நீதிமன்றம் என்கிற (State apparatus) சார்ந்து தொழில் நடத்தி, தேவைகளில் நிறைவெய்தி அரசியல் வாழ்வில் தலைமையைக் கைப்பற்றும் வழக்கறிஞர்கள் (விஜயராகவாச்சாரியார், வெங்கடரமணஅய்யங்கார், இன்னும் பலர்) ஏன் அந்தத் தொழில் களத்தில் அந்நியச் சிந்தனைப் புறக்கணிப்பை மேற்கொள்வதில்லை. பொது வெளியில் மட்டும் குடிமக்களுக்குப் புறக்கணிப்பு அரசியலை திகட்டத் திகட்டப் புகட்டுவதேன் என்பது காந்தியத்துக்கு சுயமரியாதை முகாம் சார்ந்து பாரதிதாசன் எழுப்பும் முதன்மைக் கேள்வியாகும். முன் சொன்னவர்கள் ஏன் அந்த தக்ளி அரசியலை மேற்கொள்வதில்லை.

காங்கிரசு நிர்மாணப்பணிகள் காரணமாகவே தீண்டாமை ஒழிப்பு முன்னேறியதாக காந்தி கோருகிறார். அம்பேத்கர் நோக்கு: வட்ட மேசை கூட்டத்தின் தலையீடு காரணமாகவே காங்கிரசு அந்த நிர்மாணப்பணிகளுக்கு வந்து சேர்ந்தது.மற்றபடி அதன் தத்துவம், தலைமை தொண்டர் படை என அனைத்து அடுக்குகளும் பழமைவாதத்தின் படிவங்களே என்பது பாரதிதாசனின் நோக்காகும்.

**மக்கள் கட்சி ஆட்சி மக்களாட்சி**

இயக்கங்கள், சமூகத்திலுள்ள பல்வேறு மக்கள் பிரிவினரின் உரிமைக்குரிய அரசியலை ஒரு கட்சியாகத் தன்வயப்படுத்தி ஏகாதிபத்திய எதிர்ப்பாகவோ அல்லது அதற்கு முன் நிபந்தனையான சமூக விடுதலைக்குரிய ஒற்றுமையாகவோ முன்னிறுத்துகின்றன. ஆனால் அப்படி தன் வயப்படுத்திய உரிமை அரசியலை ஒரு கட்சியமைப்பின் உடைமைப் பொருள் போல் பாவித்து, அதன் சமூக வேர்களாகிய குடிகளின் பிணைப்பிலிருந்து அகற்றி விட்டு அந்த கருத்தாக்கத்தைக் (உரிமைஅரசியல்) கட்சி நிலைமைகளிலிருந்து மட்டும் பரிசீலித்து நகர்த்திச் செல்வது பொருந்தாது எனவும் காலந்தோறும் அந்த நிலைப்பாட்டில் மேற்கொள்ளப்படும் சிறு சிறு மாற்றங்கள் அதற்குரிய மக்கள் கூட்டத்தாரிடம் ஒப்புதலாகப் பெற வேண்டும் என்றும், அந்த விமர்சனத்தைச் சுயமரியாதை இயக்கத்தின் மீதே பாரதிதாசன் முன்வைப்பதும் அவரின் முதிர்ந்த ஜனநாயக வேட்கைக்கும் இயக்கங்களுக்குரிய மக்கள் உரிமைக் கடப்பாட்டுக்கும் ஆன சான்றாகக் கொள்ளலாம்.

**முரண்பட்டோர் அமர்ந்த வட்டமேசை**

முதல் உலகப்போரை அடுத்து பிரிட்டிசாருக்கு ஐரோப்பாவிலும் அவர்களது ஆப்பிரிக்கா, ஆசியா காலனிகளிலும் ஏற்பட்ட

நெருக்கடிகளை எதிர்கொள்ளும் பொருட்டும் நீண்டகால அளவில் ஏற்படக்கூடிய இழப்புகளை மட்டுப்படுத்த அதிகாரப் பகிர்வு, இரட்டையாட்சி, வகுப்புவாரி உரிமை (Communal reward) மாகாண மத்திய அரசாங்க உறவுகளை உறுதியாக்கம் (Consolidation) செய்வது என்ற நோக்கில் மாண்டேகு செம்ஸ் போர்டு ஒப்பந்தங்கள் வழியாக இரட்டையாட்சி முறையைத் தொடங்கி வைத்தன.

காங்கிரஸ் அந்த வகையில் அரைச் சுதந்திரத்தை ஏற்க இயலாது என வீம்பு பேசிற்று. களத்தில் அவர்களை எதிர்த்த நீதிக்கட்சி போன்றோர்அந்த இரட்டையாட்சி அதிகாரத்தில் பங்கேற்கத் தொடங்கினர். காங்கிரஸ் எதிர்பார்த்தது போலன்றி இந்தப் புதிய அரசதிகாரத்தின் தலையீட்டால் சமூகப் (வர்ணதர்மசனாதனம்) பொருளியல் (பனியா) நிலைமைகள் ஆட்டம் கண்டன.. காங்கிரசின் தனிப் பிரதிநிதித்துவ வீம்பையும் அசைத்துப் பார்த்தன.

இந்தநிலையில் அந்த ஒப்பந்தத்தின் (மாசெ) நிகழ்வுப் போக்கில் அடுத்ததாக அரங்கேறவிருந்த முதல் வட்ட மேசை மாநாட்டைத் ‘‘தானெழுந்த மூப்பாக’’ மறுத்தது. காங்கிரசிலிருந்த அதிகார வேட்கையுள்ள பார்ப்பனர்கள் காந்தியின் இந்த முடிவின் மீது எரிச்சலை வெளிப்படுத்தினர். ஆகவே ஒப்பந்த நிகழ்வுப் போக்கின் அடுத்த அரங்கேற்றமாகவிருந்த இரண்டாம் வட்ட மேசை மாநாட்டுக்கு நான் வருவேன் என காந்தியும் காங்கிரசும் முண்டியடித்தன. மட்டுமின்றி தானே இந்தியாவின் ஏகப்பிரதிநிதி என்றும் அதையெதிர் தரப்பும் (பிரிட்டிசார்) ஏற்கவேண்டுமென்றும் பிடிவாதமாக நின்றனர்.

இதன் காரணம் இரட்டையாட்சி அதிகாரப்பகிர்வு தொடங்க, வகுப்புவாரி உரிமை (Communal reward) என்கிற சமூகநீதிக்கான வெகுமதி வரையிலான நிகழ்வுகள் ஏற்படுத்தி இருக்கிற சனாதன சமூகக் குலைவுகளைத்தடுத்து நிறுத்தும் வேகமும் மூர்க்கமும் அதில் வெளிப்பட்டது.

ஆங்கிலேயர்கள் மலைத்துப் போகும் வண்ணம் பேராற்றலோடு அம்பேத்கர் வாதாடிக் கொண்டிருக்கிறார். காந்தியாரால் அந்தரத்தில் எதிர்கொள்ளவும் முடியவில்லை. ஆங்கிலேய விவாத மன்றத்தின் ஆதரவுமில்லை. சனாதனச் சமூகக் குலைவுகள் பெருகுவதைப் பொறுத்துக் கொள்ளவும் இயலவில்லை. சமூக நீதிதரப்பாளர்களை (அம்பேட்கர், நீதிக்கட்சியினர், முஸ்ஸீம்லீக்) மட்டு மீறிய இழிவு படுத்தும் இழித்துப்பழித்தும் பேசத்தொடங்கினர். இந்த பின்புலத் திலேயே இந்நிகழ்வு போக்கில் சுயமரியாதை இயக்கத்தின் நோக்கை தன் கூர்த்தமதி நுட்பத்தோடுத் தனது கட்டுரையை வரையலானார் பாரதிதாசன்.

**ஆணவச்சுதந்திரம் அடைந்துவிட்டோர்**

ஏகாதிபத்திய எதிர்ப்பில் தனி பிரதிநிதித்துவம் கோருகிற காங்கிரசு, விடுதலை என்னும் தனிக்கோரிக்கையை மட்டும் முன் நிறுத்துகிறது. பல்வேறு தரப்பினரின் விருப்பு வெறுப்புகளையும் பிரதிநிதித்துவம் செய்ய அனுமதிக்கவில்லை. அவை அரசியல் அடையாளமாகவும் திரள அனுமதிக்கவில்லை. இந்தத் தவறான போக்கு காரணமாக விடுதலை தாமதப்பட்டுச் சமூகம் அல்லலுற்றாலும் தனக்குக் கிடைத்திருக்கிற சுதேச மன்னர்களின் சமஸ்தான அதிகாரங்களில் நிறைவடைந்து தொடர்ந்து மூர்க்கனின் பிடிவாதத்தோடு ஒரே பேரத்தைத் தொடர்ந்து பேசி வருகிறது. அதன் உட்கிடை என்னவென்றால் காலனிய எதிர்ப்பு என்கிற நிகழ்கால நெருக்கடிக்கு ஆட்பட்டு (உடன்பட்டு) சனாதன ஒழிப்பு, சாதியொழிப்பு, பெண் விடுதலை, மூட நம்பிக்கை ஒழிப்பு போன்ற கோரிக்கைகளைப் போராட்ட களத்திற்குள் அனுமதித்துவிட்டால் விடுதலைக்கு (கிடைக்கும் போது) பிறகு அமைக்கவிருக்கிற. தங்களது இலட்சியமான இந்து சனாதன சமூகத்தில் இந்த கோரிக்கைகள் பெரும் வெடிப்புகளை ஏற்படுத்தும் என்று ஊகித்தே தாமதித்தும் சகித்தும் கொண்டும் வந்தனர்.

எந்த வகையிலும் உலகின் புதிய அரசியல் நிலைமைகளின் அழுத்தத்திற்கு ஆட்பட்டுப் புது ஜனநாயக அரசு அமைந்துவிடாமல் சனாதன அரசு வடிவத்தையே புதிய நிலைமைகளுக்கு மாற்றீடு செய்வதில் காங்கிரசு திடசித்தமாக இருந்தது. இதன் அத்தனை அலையடிப்புகளையும் வட்ட மேசை உரையாடல்களில் காங்கிரஸ் வாதுரைகளில் வெளிப்படுவதைக் காணலாம். இதை பிரெஞ்சு விடுதலை மரபின் செழிப்புகளோடு பிறந்து வளர்ந்த புரட்சிக் கவிஞர் ஆழமாக உணர்ந்து நுணுக்கமாக வெளிப்படுத்தத் தொடங்கினார்.

1921இல் இரட்டை ஆட்சி அதிகாரத்தைப் பயன்படுத்தி நீதிக்கட்சி சமூகப் பொருளியல் பண்பாட்டு நிலைமைகளில் வேகமான சமூக அசைவுகளை உருவாக்கத் தொடங்கியது. பெற்றால் முழு விடுதலை என வீராப்பு பேசி புறமொதுக்கிய காங்கிரசு இயக்கம் சமூக நிலைகளில் அரசியல் வாய்ப்பால் ஏற்படும் அசைவுகளைக் கண்டு பதற்றமடைந்தது. காங்கிரசு இயக்கத்தில் திலகர், கோகலே யுகம் முடிந்து காந்தியுகம் தொடங்கி இருந்த அதே சமயத்தில் முழுமையான பார்ப்பனிய மீட்பு இயக்கங்களான ஆர்எஸ்எஸ் போன்றவை உருவாகியிருந்தன.

காங்கிரசில் புதிதாக உருவாகியிருந்த காந்தி தலைமையில் திலகர் விட்ட இடத்திலிருந்துத் தொடங்கியிருந்த பார்ப்பன மீட்புவாத இயக்கங்களைச் சார்வதாகும் என்று தமிழகப் பார்ப்பனர்கள் தடுமாறி இருந்தனர். இந்த இக்கட்டான தருணத்தில் ராஜாஜி என்ற

உள்ளூர்ப் பிரதிநிதி காந்தியே இன்றைய நம் வரலாற்றுத் தேர்வாக இருக்கமுடியும் என்று பரிந்துரைத்ததன் பேரிலும், நீதிக்கட்சி ஆட்சியை வீழ்த்திக் காங்கிரசு ஆட்சியை அமர்த்தியதன் (1937) நம்பிக்கையினாலும் காங்கிரசு உற்சாகம் அடைந்திருந்தது.

சென்னையின் பத்திராதிபர்களான பார்ப்பனர்களும் வழக்குரைஞர், நீதிபதிகளான பார்ப்பனர்களும் அரசு உயர் பதவிகளில் இருந்த பார்ப்பனர்களும் இன்னும் சிலரும் கட்டுக்கோப்பாக நலிந்து கொண்டிருந்த நீதிக் கட்சியினரையும் புதுத்தெம்போடு வளர்ந்து கொண்டிருந்த சுயமரியாதைக் கட்சியினைரையும் இதே போல் மக்கள் இயக்கத்திலிருந்து வெடித்த விடுதலையின் பேரோசையான அம்பேத்கரின் குரலையும் கடுமையாகச் சாடத் தொடங்கினர்.

சுதேசமித்ரன், தினமணி, இந்து போன்ற இதழ்கள் மிக அர்ப்பணிப்போடு இந்தக் காரியத்தைச் செய்து வந்தனர். இந்தச் சூழலிலேயே சென்னையின் அறிவியல் தொழிற்நுட்பம் சார்ந்த வளர்ச்சி நவீன தொழிற் நுட்பம் சார்ந்து சுயமரியாதை பண்பாட்டுக்குச் (தொடர்வண்டி, நடைமேடை, உணவு உண்ணும் உரிமை) சாதகமாக இருந்தது போலவே இதழ்கள், நீதிமன்றங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் சார்ந்த பார்ப்பனர்கள் சென்னைக்கு ஒரு எதிர்மறையான பிற்போக்கு அடையாளத்தை வழங்கிவந்தனர்.

இந்த வரலாற்றுப் பின்னணியை உணர்ந்தபடியே பாரதிதாசன் தனது அறிவுப் படைக்கலன்களைப் பாய்ச்சத் தொடங்கினார். சுருக்கமாக உரைப்பதெனில் பழைமைவாதக் கருத்துருவாக்க முகாம் மீது பகுத்தறிவுப் பாசறையின் மீது நின்று அம்புமாரி பொழியத் தொடங்கினார்.

**வகுப்புவாரி உரிமையிலிருந்து இரட்டை வாக்குரிமை**

ராஜாஜியை முகவராகக் கொண்ட தமிழகக் காங்கிரசு இந்திய தலைமையாகக் காந்தியைக் கொண்டு பிரிட்டிசாரின் அதிகாரப் பகிர்வு உரையாடல் அரங்கில் பெற்றால் முழுவிடுதலை அதுக்கு பிரதிநிதி உயர் வர்ணத்தார் மட்டுமே என்கிற எதிர்ப்புரட்சி அரசியலை மேற்கொண்டு வந்தனர்.

சுயமரியாதை இயக்கத்தின் பெரியாரைத் தூண்டு விசையாகக் கொண்டு உருவான வகுப்புவாரி உரிமை தனித்தொகுதி இந்தியளவிலான தலைவராகப் புரட்சியாளர் அம்பேத்கர் மையங் கொண்டே இயங்கிவந்தது. என்பது சுயமரியாதை இதழியலில் பரவலாகக் காணக்கூடியதே. பாரதிதாசன் ஆக்கங்களில் இன்னும் கூர்மைப்பட்டு அம்பேத்கருக்கு ஆதரவு தெரிவித்து வலியுறுத்திய சுயமரியாதைத் தலைவர்கள் மட்டுமில்லாது பரந்துபட்ட வெகுமக்களின் ஆதரவு அனைத்தையும் திரட்டி ஓர்

இயற்றமிழ் ஆவணமாக முன்வைத்தார் பாரதிதாசன். (ப-.243) காந்தியம் பிரிட்டிசு ஏகாதிபத்தியத்திற்கு எதிராக உருவாக்குகிற உரையாடல் களத்தை அதிலிருந்து விலக்கி ஒதுக்கப்பட்டோர் (தாழ்த்தப்பட்டோர்) சார்பாக வளர்த்தெடுப்பது பாரதிதாசனின் இலக்கியத் தேர்ச்சியையும் அரசியல் உறுதிப் பாட்டையும் காட்டுகிறது. அந்நியத்துணி பகிசுகரிப்பு, சுதேசி கதர் ஆதரவு என்கிற எதிர்மை உயர் வர்ணத்தாரின் நலன் ஒடுக்கப்பட்டோர் நலன் என்கிற எதிர்வின் கருத்துத்தொடர்ச்சியாக அமைப்பதை (Polemics) வளர்த்தெடுப்பதைப் பார்க்கலாம்.

ஐரோப்பிய அறிவொளி மரபின் காரணமாகச் சமூகத் தளத்தில் ஏற்பட்ட மறுமலர்ச்சி ஐரோப்பிய தேசங்களின் அரசமைப்புகளில் தனி ஒருவர் (குடிமகன்/ள்) உரிமையை உறுதிசெய்தது. அம்பேத்கர் இங்கு அரசமைப்பு வாய்ப்பைப் பெற்று அதே முயற்சியைச் செய்தபோது தோல்வியுற்றதை அறிவோம்.

**வட்டமேசையில் படர்ந்த சதுர்வருணம் :**

காங்கிரசைத் தலைமை அடையாளமாகக் கொண்ட பலவகைப்பட்ட பழமைவாதிகள் உரிமை அளிக்க ஏற்றுக்கொண்ட கடைசி அலகு சாதி, குடும்பம் போன்ற வைதீகச் சமூக அலகுகளே அன்றி தனிநபர் அலகு அல்ல. இந்தப் பிற்காலத்திய விளைவு வட்டமேசை காலத்திலேயே வெளிப்படுவதைப் பாரதிதாசன் அதைமுன் உணர்ந்து வட்டமிட்டுக் காட்டுவதையும் ஆழ்ந்து நோக்கவேண்டும்.

காடைக்கூடுகள் இங்கிலாந்து வட்டமேசைக்குக் கொண்டு போகப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு கூட்டிலுள்ள பக்ஷிகளும் தங்கள் கூடுகளில் இருந்தபடியே தமக்கு விடுதலை கேட்கின்றன. நன்றாக ஞாபகமிருக்கட்டும் காடைகள் தம்தம் கூடுகளிலிருந்து வெளிவரவேண்டிய அவசியமில்லாத முறையில் அனுபவிக்கத்தக்க விடுதலை தமக்கா (காடைகட்கா) காடைக்கூடுகட்கா என்பதை நன்றாக யோசித்துப் பார்க்க வேண்டும். விடுதலை என ஒன்று கிடைக்குமானால் அதன்படி அந்தந்தக் காடைக்கூட்டம் அந்தந்தக் கூடுகளில் உலவமுடியும். விடுதலைக்குமுன் இருந்த நிலையே விடுதலைக்குப் பின்னும் என்பது தவிர இதில் நூதனமென்ன? இப்படிப்பட்ட விடுதலை பெறத்தானா அவைகள் அங்கு சென்றும் முரண்படுகின்றன என்று சிலர் ஆச்சரியப்படலாம். மதக்கூடுகளில் அடைப்பட்டுச் சாதி உயர்வு தாழ்வு முதலிய மயக்கத்தையுமுடைய பக்ஷிகட்கு அது சகஜம் என்று நாம் கூறுகிறோம்.(பாவேந்தம் தொகுதி- 22, ப-251)

**முடிவுரை அல்ல முற்றியமுரண்**

தனித்தொகுதித் தீர்வையொட்டிக் காங்கிரசுகாரர்களும் பலவகைப்பட்ட பழமைவாதிகளும் தாழ்த்தப்பட்டோர்க்கு

இவ்வுரிமையை மறுக்கக் காரணம் கால ஓட்டத்தில் இந்த நடவடிக்கை தாழ்த்தப்பட்டோர் ஆளுமையை குன்றிபோகச் செய்யும், தனிமைப்படுத்தும் என்பதைக் தவிர்க்கவே இப்படிச் சொல்வதாக வாதிட்டனர். உண்மையில் வரலாற்றின் கடந்த காலத்தில் ஏற்பட்ட குலைவுகளுக்கும் சிதைவுகளுக்கும் இழப்பீடாகவே இந்த உரிமையைக் கோருகிறோம். அதை மறைப்பதற்கு இந்த முறை எதிர்காலத்தைக் காட்டுவது பச்சை மோசடியாகும் என்று சுயமரியாதையாளர் கருதினர். பாரதிதாசன் சில எளிய சான்றுகள் வாயிலாக தனது வாசகர்களுக்கு விளக்கலானார். (பாவேந்தம்-22,ப.253, 373)

காங்கிரசு என்ற அரசியல் இயக்கம் விடுதலைக்கான முன்னோடி படை என்கிற பொருளில் விடுதலை பற்றிய மாற்றுப் பார்வைகளும் கருத்தும் கொண்ட இந்தியர் பலருக்கும் பதிலளிக்கும் பொறுப்பும் கடப்பாடும் உள்ளதேயாகும். அதைத் தவிர்க்கவும் தாண்டிச் செல்லவும் அந்த முன்னோடி படையின் முதன்மை அலகாகிய பார்ப்பனர்கள் காந்தி என்கிற விசித்திரத் தலைமையை அதன் உன்னதங்களை ஓர் அரசியலற்ற அரசியலாகப் பயன்படுத்தி வந்தனர்.

அப்போது புதிதாக வந்த கிராமப்போன் ரெக்கார்டுகள். இந்தப் பக்த ஜன சேவையில் ஈடுபட்டதை பாரதிதாசன் அம்பலப்படுத்துகிறார். விவாதம் தத்துவத்திலிருந்து சரிந்து தனிநபர் மீது (தலைமை) விழுந்த அவலம் இந்திய அரசியலில் அங்கேதான் அரங்கேறியது.

**ஆளுமைமுரண் : அகப்பகை,புறப்பகை**

இந்த வரலாற்றுத்தடத்திலேயே தனிவாக்களர் தொகுதி உரிமையை ஆதரித்துத் தீவிரமான நிலைகளை நோக்கிப் பயணித்த பாரதிதாசன் தமிழகத் தாழ்த்தப்பட்டோரான எம்.சி.ராசா அவர்களின் தனிநபர் சார்ந்து ஆளுமை வழிப்பட்ட விலகல்களைக் கண்டிக்கும் எல்லைக்கு முன்னேறினார். அந்த மறுப்புரைகள் நயத்தகு நாகரிகத்தோடு எம்.சி.ராசாவை நகர்த்தி வைத்துவிட்டு காங்கிரசோடு நேரடியாகக் கடுந்தீவிரத்தோடு மோதுவதைக் காணமுடிகிறது. தனித்தொகுதி உரிமையில் மாறுபட்ட கண்ணோட்டங்களை முன்வைப்பதில் பலருக்கும் உரிமை உண்டு. ஆனால் ‘இந்துமத நீக்கம்’ வேண்டாம் என்கிற முன்முடிவோடு தனித்தொகுதி உரிமையை மறுப்பது வரலாற்றில் தாழ்த்தப்பட்டோரை அழித்தொழிக்கும் காந்தியத்திற்குத் துணைபோவதாக சுயமரியாதையாளர்கள் எண்ணினர். அதற்குத் தலித் வரலாற்று ஆளுமையாளர் எம்.சி.ராசா, அம்பேத்கர் என்கிற விடுதலையாளரோடு கொண்ட ஆளுமை முரண் ஒரு முக்கியமான பங்கு வகித்திருப்பதை உணரமுடிகிறது.

தமிழகத்தைச் சார்ந்த தாழ்த்தப்பட்ட தலைவர்கள் பலரும் பாரதிதாசன் முன்வைக்கும் தரப்பையே ஆதரித்தனர் என்பது தெளிவு. தனித்தொகுதி உரிமைக்கு அவர் காரணமில்லை என்றபோதும் எம்.சி ராசாவின் மாறுபட்ட முடிவுகள் தாழ்த்தப்பட்டோர் அரசியலைத் தமிழக நிலைக்களன் சார்ந்துத் தடுமாறச் செய்தது உண்மை.

❖❖❖

*பேராசிரியர் மணிகோ. பன்னீர்செல்வம்*

*பாவேந்தர்பாரதிதாசன் ஆய்விருக்கை,*
*உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்,*
*சென்னை*

# கவிதையின் மையத்திலும் அதன் ஓரங்களிலும்
# பாரதிதாசனின் ''அழகின் சிரிப்பு''

எஸ். சண்முகம்

1

தமிழ் கவிதையின் பண்பில் இருபதாம் நூற்றாண்டில் பல பெருமாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. பத்தொன்பதாம் நூற்றாண்டில் வள்ளலாரின் ஆறாம் திருமுறையின் வழியே அவர் முன்வைத்த கவிதையாடல் என்பது சங்காலம் தொடங்கி அவருடைய காலம்வரை தொடர்ந்த கவிதையாக்கத்தை, வள்ளலார் உள்வயப்படுத்திக் கொண்டார். அந்த கூறுகள் அவரது பாடல்களின் உள்ளுறையாக்கத்தில் மற்றும் மொழிவெளிப்பாட்டுடன் இயைந்தும் வித்தியாசப்பட்டும் இருந்தது. வள்ளலாரின் ஆறாம் திருமுறையின் பிரதியாக்க நுட்பங்கள், இருபதாம் நூற்றாண்டின் தொடக்க கால கவிதையாக்கத்தை பாதித்தன. மேலும் பாரதியாரின் ''வசன கவிதை'' மொழியின் வடிவ பண்பு புதுக்கவிதையின் முன்னுந்துதலாக அமைந்தது. இதன்வழியே பார்த்தோமெனில் பாரதிதாசன் இருபதாம் நூற்றாண்டின் கவிதையில் தமிழின் சங்க மரபை முழுமையாக கிரகித்தவர் எனலாம். அவர் ஒரு புதிய இடையீட்டை செய்தவர். புதுக்கவிதை வடிவத்திற்கும் மரபு கவிதை கட்டமைப்பிற்கும் மத்தியில் அவரது எழுத்தாக்கங்கள் ஊடாடின. அதோடன்றி அவரது கால கவிதை பரப்பில் 'தமிழ்' என்ற சொல்லின் பொருண்மையை பன்மையாக்கத்திற்கு உட்படுத்தியவர். அவர் இம்மை வாழ்வின் கூறுகளையும், இயற்கையையும், தமிழையும்

தனது கவிதையில் இழையோட செய்தவர். தமிழ் கவிதையின் பிரதியாக்க உத்திக்குள் தமிழை கவிதையின் மையத்திலும் அதன் ஓரங்களிலும் பொருண்மை படுத்தினார். அவர் காலத்திய தமிழர்களது அகவாழ்வையும் / புறவாழ்வையும் தனது கவிதையாடலின் மொழிக்குள் கையாண்டார். தமிழை இயற்கையின் அங்கமாகவும் அதன் வியாபகமாகவும் மாற்றினார்.

பாரதிதாசன் கவிதைகள் மரபு வடிவத்தில் எழுதப்பட்டிருந்தாலும், அதன் உள்ளார்ந்த வெளிப்பாடுகள் புதிய கவிதையாடல்களை கொண்டிருந்தன. புதுக்கவிதையின் வெளிப்பாட்டு முறைக்கான உந்துதல்கள் பாரதிதாசன் கவிதை வரிகளில் காணமுடியும். அவரது பல கவிதை படைப்புகளுக்கு மத்தியில் தனித்துவமானதாக ''அழகின் சிரிப்பு'' விளங்குகிறது. அதன் சிறப்பம்சம் என்பது அதன் காட்சி ரீதியான இயற்கை என்பது மட்டுமல்ல. அதன் பிரத்யேக பண்பு என்னவென்றால், அப்பிரதி தன்னுள் சங்க கவிதையின் காட்சி கூறுகளை மட்டுமே உள்ளடக்கி கொண்டிராமல், அதன் இம்மைவாழ்வின் அலகையும் அழகின் சிரிப்பில் ஒன்றிணைத்திருப்பது ஒருபுறமிருந்தாலும்; தமிழ் மறுமலர்ச்சியை கவிதையாக்க உத்தியாக பயன்படுத்தியுள்ளது. மேலும் அவரது ‘சஞ்சீவி பர்வதத்தின் சாரல்’ என்ற தொடக்க கால படைப்பில் காணப்பட்ட மொழிவயமான காட்சித் தன்மை பின்னாளில் அவரது 'அழகின் சிரிப்பு' கவிதை நூலில் விரிவடைந்து வெளிப்பட்டது. ‘நிலப்பரப்பை’ குறியீடாக மாற்றும் கவிதை உத்தி பாரதிதாசனின் பல கவிதைகளில் இழையோடுவதை நம்மால் காண முடியும். 'தமிழை' ஒரு கூட்டு நினைவாகவும் நினவிலியாகவும் அவரது கவிதைகளில் அமைகின்றன. தமிழை தனது ஆவியாகவும், 'வியப்பின் வைப்பே' எனவும் சொல்கிறார், '' ஆடற் றமிழேநீ என்றன் ஆவி'' (147) என்ற வரியில் ஆவி என்ற கூறுவதை பொதுவாக அச்சொல் 'உயிர்' என்று பொருள் கொள்கிறார்கள்.. அவ்வாறு உயிர்த்தன்மையுடைய ‘தமிழ்’ பாரதிதாசன் கவிதைகளில் தமிழர்களின் ''கூட்டு நினவிலி'' என்று கூறவும் இடமுண்டு. இயற்கையை பல்வேறு பரிமாணங்களில் எழுதும் போது ''தமிழ்'' என்பது ஒரு குறியீடாகக் கவிதையின் anterior ஆகச் செயலாற்றுகிறது. தமிழ் என்ற சொல் அவரது கவிதைகளின் இயற்கூறாக விளங்குகிறது. இது பாரதிதாசனின் கவிதையாக்கத்தின் நுண்ணிய வெளிப்பாடாகும்...

**''வளர்பிறை போல்வ ளர்ந்த**
**தமிழரில் அறிஞர்கள் தங்கள்**
**உளத்தையும் உலகில் ஆழ்ந்த**
**வளத்தையும் எழுத்துச் சொல்லால்**
**விளக்கிடும் இயல்மு திர்ந்தும்**

**அளப்பிலா உவகை ஆடற்**
**றமிழே என்றன் ஆவி"**
**அழகின் சிரிப்பு**

(147)

2

அழகின் சிரிப்பில் பாரதிதாசன் 'தமிழ்' என்ற குறியீட்டை மென்மேலும் தனது கவிதையாடலின் பரப்பில் நீட்சி கொள்ள செய்கிறார். தமிழ் குறித்த தனது கவிதைகளின் பொருண்மை வெளியை, அழகின் சிரிப்பு நூலின் 16ஆம் பகுதிக்கு தமிழ் என்று தலைப்பிட்டுள்ளார். அத்தலைப்பில் அடங்கியுள்ள கவிதைகளில், அதே தொகுப்பில் முந்தைய கவிதைகளின் வழியே கட்டமைக்கப்பட்ட சொல்லாடல்களின் வரையறையாக்கத்தை முழுமைப்படுத்துகிறார். அப்பகுதியில் தமிழின் தோற்றம் துவங்கி இசை கூத்தின் முனை / இயற்றமிழ் எழில் / தமிழர்க்கு தமிழ் உயிர் / சாகாத தமிழ் / கலைகள் தந்த தமிழ் / முன்னூலில் அயலார் நஞ்சம் / பகைக்கஞ்சாத் தமிழ் / வெற்றித் தமிழ் / படைத் தமிழ் என்று தலைப்பிடப்பட்டுள்ளன.

**"புனல்சூழ்ந்து வடிந்து போன**
**நிலத்திலே புதிய நாளை**
**மனிதப்பைங் கூழ்மு ளைத்தே**
**வகுத்தது மனித வாழ்வை**
**இனியநற் றமிழே நீதான்**
**எழுப்பினை தமிழன் கண்ட**
**கனவு தான் இந்நாள் வையக்**
**கவிவாழ்வாய் மலர்ந்த தன்றோ"**

(144)

3

இயற்கையின் எண்ணிலியான அசைவுகளை பல்வேறு காட்சிகளாக பிரதியாக்கம் செய்திருக்கும் பாரதிதாசனின் ''அழகின் சிரிப்பு'' தமிழின் மொழிபிம்பத்தை அகவயப்படுத்தியுள்ளது நூலை வாசிக்கையில் விளங்கும். இயற்கை எனும் கட்டற்ற எழிலை மொழிவயப்படுத்தும் அதிநேர்த்தி வியப்பளிக்கக் கூடிய ஒன்றாக உள்ளது. அதிலும் சில இருண்மையான புலங்களை பேசும் இடங்களை சொல்வதெனில் ''இருள்'' பற்றி பாரதிதாசன் எழுதியுள்ள ''இருளே உன்சீர் ஓவியர் அறிந்தி ருப்பார்'' (120) எனும் வரிகளைக் குறிப்பிட வேண்டும். ''அழகின் சிரிப்பு'' பகுதி 13 இல் 'இருள்' என்ற பகுதியில் 'பிறப்பும் இறப்பும்' என்ற தலைப்பிலுள்ள கவிதை

**"வானொடு நீபி றந்தாய்**
**மறுபடி கடலில் தோன்றும்**
**மீன்என உயிர்உ டல்கள்**
**விளைந்தன எவ்விடத்தும்**
**நீநிறை வுற்றாய் எங்கும்**
**பொருளுண்டேல் நிழலுண்டன்றோ**
**பானையில் இருப்பாய் பாலின்**
**அணுதோறும் பரந்தி ருப்பாய்"**

(119)

மேலே நான் குறிப்பிட்டுள்ள கவிதை ''வானொடு எனத் தொடங்கி அணுதோறும் பரந் திருப்பாய்'' என முடிகிறது. பாரதிதாசனின் கவிதைகளில், தமிழை பற்றியோ அல்லது ஒளி / இருள் ஆகியவைகளை பற்றி எழுதும்போதோ பெருவெளி துவங்கி நுண்ணியவற்றுள் பயணிப்பதை காண முடியும். இப்பண்பு அவரது கவிதைகளின் உட்சரடாக ஊடுபாவி செல்வதை காணலாம். இத்தகைய சிந்தனாமுறை அவருக்கு எங்கிருந்து வந்தது என ஆய்வு செய்வதென்பது கவிதையியல் பற்றி அறிய மிக உதவியாக இருக்கும். தமிழ் கவிதை மரபிலிருந்து இவரது கவிதைகள் இத்தன்மைகளை அடைந்திருக்கிறது. அதேபோல் சர்வவியாபகம் என்ற பொருண்மைக்குள் தமிழையும் / ஒளியையும் / இருளையும் மொழியின் தோற்றம் என்ற கருதுகோளுடன் இணைக்கிறார். இம்மூன்றிற்கிடையில் கவிதையாடலின் உட்பரப்பு கட்டமைக்கப்படுகிறது. அதில் தமிழ் ஒளி இருள் என்ற மூன்றும் மற்றொன்றின் விளிம்பில் இயங்குவதை உணரமுடியும். ஒற்றைப் பொருளில் பயன்படுத்தாமல், ஒன்றில் மற்றொன்றாகவும் வேறுவேறாகவும் மாறி கவிதையின் பொருண்மையைக் கூட்டுகிறது. அடிப்படையில் இந்த கவிதைகளின் அமைப்பின் ஆழத்தில் தமிழரின் இயற்கைசார் வாழ்வியலிலிருந்து சற்றும் அகலாத அதேசமயம் பாரதிதாசன் தன் காலத்தின் தமிழ் மறுமலர்ச்சி, ஒரு புதிய எல்லையை ''தமிழ்'' என்ற குறியீட்டின் வழியே அடைந்தது. மேலும் தமிழின் நாதமார்ந்த தன்மை (sonority) என்பது இவரது அனைத்து கவிதைகளின் அடிநாதமாக விளங்குவது தமிழின் தனித்தன்மையாக உள்ளது. ''அழகின் சிரிப்பு'' இன் இப்பாடல் இவைகளை சொல்லுகிறது...

**"பழந்தமிழ் மக்கள் அந்நாள்**
**பறவைகள் விலங்கு வண்டு**
**தழைமூங்கில் இசைத்த தைத்தாம்**
**தழுவியே இசைத்த தாலே**

**எழும்இசைத் தமிழே! இன்பம்**
**எய்தியே குதித் தாலே**
**விழியுண்ணப் பிறந்த கூத்து**
**தமிழே! என் வியப்பின் வைப்பே.**

(145)

❖❖❖

*எஸ். சண்முகம்*
*எழுத்தாளர்*
*விமர்சகர்*

# பெரியார் ஒளியில் பாரதிதாசன்

**செந்தலை ந. கவுதமன்**

பாரதியார் வழியாகப் பெரியாரை வந்தடைந்தவர் பாரதிதாசன். முப்பது வயது வரை முக்திக்கு வழிதேடும் கடவுள் பாடல்களையே பாடிக் கொண்டிருந்தார்.

**முப்பது ஆண்டுகள் முடியும்வரைக்கும் நான்**
**எழுதிய அனைத்தும் என்ன சொல்லும்?**
**கடவுள் இதோ என்று மக்கட்கு காட்டிச்**
**சுடச்சுட அவன் அருள் துய்ப்பீர் என்னும்**

உரை எழுதி விளக்க வேண்டிய செறிவான தமிழில் இறைநெறிப் பாடல்களை எழுதிக் கொண்டிருந்த தம்மை, எளிய தமிழில் மக்கள் வாழ்க்கையைப் பாட செய்தவர்பாரதியார் என்பதைப் பாரதிதாசனே கூறுகிறார்.

**பாடலில் பழமுறை பழநடை என்பதோர்**
**காடு முழுவதும் கண்டபின் கடைசியாய்ச்**
**சுப்ரமணிய பாரதி தோன்றி என்**
**பாட்டிற்குப் புதுமுறை புதுநடை காட்டினான்.**

பகுத்தறிவு, சமதருமம், தமிழ்தேசியம் எனத் தம் படைப்புகள்புதிய முகடுகளைத் தொடுவதற்குத் காரணமானோர் பெரியாரும் பாரதியாருமே என்பதில், இறுதிக் காலம்வரை அவர் உறுதியாக இருந்தார்.

***நாம் இளமைப் போதினில் முருகனைப் புகழ்ந்தோம்,***
***பாடினோம் ஆனால் நாளடைவில் முருகன்.***
***புகழதக்க ஒரு பொருளன்று எனக் கண்டோம்***
***முருகனைப் பாடுவதை விட்டோம்.***

*பாரதி தமிழ்பாட்டுக்கு ஒரு புதுநடைக் கண்ட புலவன். பாரதியைப் புகழ்ந்தோம், பாடினோம் நாம் புகழ்வதற்கும் பாடுவதற்கும் பாரதியைவிட ஒருவர் இருக்கின்றாரா? அவர் யார் என்று ஆராய்ந்துக் கொண்டிருந்தோம்.*

*குன்று உடைக்கும் தோளும் நெருப்பு மழைக்குச் சிரித்த உதடுகளும் இருகிய துறவி உள்ளமும் ஒரே இடத்தில் கண்டோம். இந்த அணுகுண்டு பட்டறைதாம் பெரியார் என்பதைக் கண்டோம்.*

*குயில் 10.05.1960*

இரா.இளவரசு ப.தி.ஆ., குயிலோசை, திருச்சி 2022, பக். 233,234.

**மொழிப்போர் தந்த எழுத்து**

இந்தி திணிப்பை எதிர்த்துத் தமிழ்நாட்டில் நடந்த 1938 ஆம் ஆண்டு முதலாவது மொழிப்போரை வழிநடத்தியவர் தந்தைபெரியார். கல்வியின் வழியாக இந்தி திணிக்கப்படுவதால் , பள்ளியின் முன்பு மறியல் போரைச் சென்னையில் தொடங்கினார். மொழிப்போர் வீரர்கள் தங்கும் பாசறை இருந்ததோ ஈரோட்டில் !

**சைவம் அழிந்தால் உயிரூட்டிக் கொள்ளலாம்**
**தமிழ் அழிந்தால் மீட்க வழியில்லை**

-என அறிவித்துப் பெரியார் பின்னால் அணிதிரளச் செய்தார் மறைமலையடிகள்.

மறைமலையடிகளாரையும் அவர் மாணவரான ச.சோம சுந்தரபாரதியையும் மொழிப்போர் முகங்களாக முன்னிருத்தி ஒன்றரை ஆண்டுக்காலம் பெரியார் நடத்திய போராட்டம் 21.02.1940இல் வெற்றி பெற்றது; கட்டாய இந்தி திணிப்புஆணை திரும்பப் பெறப்பட்டது. அந்த பிப்ரவரி 21ஆம் நாள் இப்போது உலகத் தாய்மொழி நாளாக க்கொண்டாடப்படும் நாள்.

மாதம் ஐநூறு உருபா ஊதியத்தில் அலுவல் தருவதாகவும், இந்தியை எதிர்க்க வேண்டாம் என்றும் ஆசை காட்டி மறைமலை அடிகளாரிடம் தொ.பா.மீனாட்சி சுந்தரனாரைத் தூது விட்டார் சி.இராஜகோபாலாச்சாரியார். காறித்துப்பி விரட்டியடித்துள்ளார் அடிகளார். இதைக் குயில் 09.09.1958 இதழில் நினைவுக்கூர்ந்து,

*மீனாக்கி அழகு (தெ.பொ.மீ) மறைமலை அடிகளிடம் வந்து என்ன சொல்லி அழுதது தெரியுமா? திங்கள் ஒன்றுக்கு ஐநூறு வெண்பொற்காசுகள் வருமானத்தில் அலுவல் தருவார் ஆச்சாரியார், நீங்கள் இந்தியை எதிர்காதீர்கள் என்றார். கான்று உமிழ்ந்து துரத்தினார் அடிகள்.*

கட்சி, மதம், சாதி, வேறுபாடு கடந்து தமிழர் அனைவரும் பெரியார் தலைமையில் போராடி வெற்றி பெற்ற 1938 மொழிப்போர்

தமிழ்நாடு கண்ட முதலாவது தமிழ்த்தேசியப்போர்.

அந்தப் போருக்குக் கலை இலக்கிய வலிமையூட்டுவோராய் இருவர் எழுந்தனர். அவர்களால் தொய்வின்றித் தொடர்ந்தது மொழிப்போர். கவிதைக்குப் பாவேந்தர் பாரதிதாசன், மேடைக்கும் உரைநடைக்கும் அறிஞர் அண்ணா என மொழிப்போரால் வெளிப்பட்ட இருவரையும் தாங்கிப் பிடித்துத் தழுவிக் கொண்டது தமிழ்நாடு.

***கலை, இலக்கிய பண்பாட்டுப்படை இல்லாத இயக்கம் செயலாற்றல் இழந்த மந்தமான இயக்கம் என அறிவுறுத்துவார் தோழர் மா.வோ. திராவிட இயக்கத்தின் கலை, இலக்கிய பண்பாட்டுப் படைக்குத் தலைமை தாங்கின பாரதிதாசன் படைப்புகள்.***

வெகுமக்களின் சிக்கலைத் தீர்க்கும் ஏணியாகப் பயன்பட்டு இனத்தை உயர்த்துவதற்கே இலக்கியம் என்பது பாரதிதாசன் கொள்கை.

**மக்கள் தொகுதி எக் குறை யாலே**
**மிக்க துன்பம் மேவு கின்றதோ**
**அக்குறை தீர்க்கும் ஆற்றல்வாய்ந் தோனைச்**
**சிக்கென பிடித்து சீர் பெறல் இயற்கை**

வறுமை, வளமை என ஏற்றத்தாழ்வாக உள்ள சமூகத்தைச் சமப்படுத்தும் பணியைச் செய்பவனே எழுத்தாளன் என தகுதி வரையறையும் செய்தார்.

**மேடு பள்ளங் களைக் கண்டே நலம்**
**விதைக்க எழுதுவோன் எழுத்தாளன்**

தனக்குழைக்கும் எழுத்தாளர், வருமானமே முதன்மை என வாழ்வோர்! பிறர்க்கு உழைக்கும் எழுத்தாளர், சுரண்டல் சமூகத்தில் புரட்சி மனப்பான்மையை உருவாக்குவதே கடமை. எனக் கருதுவோர்! எழுத்தாளரை இப்படி இருவகையாகப் பகுத்துக் காட்டுவார் பாவேந்தர்.

**இருக்குநிலை மாற்றுமொரு**
**புரட்சி மனப்பான்மை**
**ஏற்படுத்தல் பிறர்குழைக்கும்**
**எழுத்தாளர் கடனாம்**

கருத்து எவ்வளவு முக்கியமோ, மொழி நடையும் அவ்வளவு முக்கியம் என்பார்.

**இலக்கணமும் இலக்கியமும்**
**அறியாதான் ஏடெழுதுதல்**
**கேடு நல்கும்**

என்று தமிழியக்கம் நூலில் இலக்கணப் பிழையின்றி எழுதுவதே தமிழுக்கும் தமிழர்க்கும் நலம் சேர்க்கும் என்று வலியுறுத்துவார்.

**எழுத்துலக வாசல் திறப்பு**

பாரதிதாசனுக்கு எழுத்துலக வாசலைத் திறந்துக் காட்டியவர் பாரதியார். தமிழ் பாஷைக்கு ஒரு புதிய நிகண்டு வேண்டும் எனும் கட்டுரைதான் முதன்முதலில் அச்சேறிய பாரதிதாசன் எழுத்து. சுதேசிமித்ரன் 26.05.1914 இதழில் கனக சுப்புரத்தினம் எனும் பெயரில் கட்டுரை வெளியானபொழுது இவருக்கு 23 வயது. பாரதியாருக்கு 32 வயது இருவருக்கும் ஒன்பது ஆண்டு வயது வேறுபாடு.

பாரதியைச் சந்தித்தபின் தம்பாடல்களில் கடவுள் பெற்றிருந்த இடத்தை கதரும் காந்தியடிகளும் நாட்டு விடுதலையுணர்வும் பெறுமாறு மாற்றம் செய்தார். தெய்வப்பற்று அமர்ந்த இடத்தில் தேசப்பற்றை உட்கார வைத்தார்.

ஆசிரியராக நிரவியில் 27.06.1909ஆம் நாள் பணியாற்றத் தொடங்கியபொழுது கனக சுப்புரத்தினமாக மட்டுமே இருந்தார். ஆசிரியராகப் பணியேற்ற சில மாதங்களில் பாரதியாரோடு நேர்ந்த சந்திப்பால் பாரதிதாசனாக உருமாற்றம் பெற்றார்.

பாரதியார் 1921 இல் மறைந்த பின்பும் காந்தியப் பற்றையும் விடுதலை இயக்கத் தொடர்பையும் கைவிடவில்லை. பாரதி மறைந்து ஏழாண்டுகளுக்குப் பின்பே 1928 இல் பெரியார் இயக்கத் தொடர்பைப் பெற்றார்.

**பாரதிதாசன் என்ற பெயர் ஏன்?**

பாரதிதாசனோடு உரிமையாகப் பேசும் பட்டுக்கோட்டை அழகிரி ஒருமுறை கேட்டார் "பாரதின்னா பாப்பான். தாசன்னா அடிமை. நீ என்ன பாப்பானுக்கு அடிமையா?"

விளையாட்டாகப் பேசிக் கொண்டிருந்த பாரதிதாசன், பாரதியார்ப் பெயரை தாழ்வாகப் பேசியதும் வெடித்துவிட்டார், ‘ ஆமாண்டா! நான் அடிமை தாண்டா!

பாரதி மீது ஏற்பட்ட பற்றே பின்பு பெரியாரியக்கப் பற்று உருவாவதற்குக் காரணம் என்கின்ற பாரதிதாசன் பெயர் வைத்த தற்கான காரணத்தையும் கூறுகிறார்.

***நான் பாரதிதாசன் என்ற புனைப்பெயர் வைத்துக் கொண்டுள்ளேன். அதற்குக் காரணம், அப்போது அவர் என் உள்ளத்தில் முதலிடம் வெற்றிருந்ததுதான்.***

***சாதிக் கொள்கையை உண்மையாக எதிர்த்தவர் பாரதியார்தாம்!***

*அவருக்கு முன் அவ்வாறு எதிர்த்தவரைக் கண்டதில்லை. பாரதி எதிர்த்துப் பணிபுரிய தொடங்கிய பன்னாட்களுக்குப் பின்னரே பெரியார் இயக்கம் தோன்றியது.*

*பாரதியார் இறந்தபின், சாதியை எதிர்த்த சீர்திருத்தங்களை ஆதரித்த பெரியாரை ஆதரிக்கத் தொடங்கினேன். இன்று வரை ஆதரித்து வருகிறேன். இனியும் அந்தக் கொள்கையைத்தான் ஆதரிப்பேன்.*

(குயில் இதழ் 20.09.1960)

புதுவையில் வாசிக்கக் கிடைத்த குடியரசு இதழும் 1928இல் மயிலாடுதுறையில் கேட்க நேர்ந்த பெரியாரின் பேச்சுமே பகுத்தறிவுப் பாதையில் பாரதிதாசனை நடைபோட வைத்துள்ளன.

பகுத்தறிவுக் கொள்கையையும் பெரியாரின் தலைமையையும் இறுதிக்காலம் வரை பாரதித்தாசன் கைவிடாமல் காப்பாற்றி வந்தார்.

பெரியாரின் ஆளுமைப் பண்புகளையும் இயக்கப் பணிகளையும் கொள்கை நுட்பத்தையும் பார்த்துப் பார்த்து வியந்த பாரதிதாசன் அவற்றை எழுத்து வாகனத்தில் ஏற்றி இலக்கியங்களாக உலவ வைத்தார்.

பெரியாரும் பெரியாரின் கருத்து நிலைகளும் பெரியார் வழிநடந்தோரும் பாரதிதாசனால் இலக்கியமாக ஏந்தப் பெற்றனர். அதனால் நாடு கடந்தும் போற்றப் பெறும் அரிய நிலை திராவிட இயக்கத்திற்கு எளிதாக வாய்த்தது.

இலக்கியத் தகுதி எய்தியதால் , தமிழுள்ள காலம் வரை சாகாநிலையைப் பகுத்தறிவு இயக்கம் பாரதிதாசனால் பெற்றது.

**படைப்புப்பாதை.**

தம் எழுத்தின் திசை இதுதான் என அழுத்திச் சொன்னவர் அவர். தம் படைப்புகளின் அணிவகுப்பு நடக்கும் பகுத்தறிவுப் பாதை இதுவே என உரத்துச் சொன்ன ஆண்மையாளரைத் தமிழ் இலக்கியம் அதற்குமுன் பார்த்தது இல்லை.

பெரியார் பாதையில் நடைபோடுவதே தம் எழுத்தின் இலக்கு என வரையறுத்துச் சொல்கிறார்;

*எனக்குக் கடவுள் நம்பிக்கைக் கிடையாது. அது தீர்ந்த தால் தான் மக்கள் உருப்பட முடியும். என்பது என் எண்ணம். கடவுள் நம்பிக்கை அதிகரித்திருப்பதைத் தமக்குச் சாதகமாக்கிப் பிழைக்கும் கூட்டத்திற்கு நான் விரோதி.*

*சாதி, மதம் மனிதனுக்கு அவசியமில்லை. இருக்கக்கூடாது. மேலும் பார்ப்பனர் இத்தமிழ்நாட்டின் முற்போக்குக்கு முட்டுக்கட்டை. பார்ப்பனீயம் ஒழிய வேண்டும் என்பது என் எண்ணம் இவை என் கொள்கை என்பதைத் தமிழ்நாடு முழுதும் அறியும் நான் என் எண்ணமாக*

*எதையாவது எழுத நேர்ந்தால் இவற்றிற்கு அரண் செய்வதாகத்தான் எழுத முடியும்..*

(பாரதிதாசன், நகரதூதன் 15.09.1940, பக். 18)

**பரந்த அறிவுப் பார்வை**

பாரதிதாசன் 29.04.1891இல் பிறந்தார்,21.04.1964இல் மறைந்தார். நாட்டு விடுதலைக்கான இந்திய விடுதலை இயக்கமும் சமூக விடுதலைக்கான திராவிட இயக்கமும் பொருளியல் விடுதலைக்கான பொதுவுடமை இயக்கமும் தோன்றி வளர்ந்த காலத்தில் வாழ்ந்தவர் பாரதிதாசன்.

இலக்கியமும் வரலாறும் சமுதாயத்தால் உருவாக்கப்படுவதும் சமூகத்தை அவ்விரண்டும் இன்னொரு படிக்கு முன்னேற்றுவதும் இயல்பான ஒன்று. சமூகம் மாறுகின்ற போது இலக்கியமும் வரலாறும் விரிவுபெறுகின்றன. அப்போது மாற்றத்தின் இன்னொரு படியைச் சமூகம் எட்டி முன்னேறுகிறது. சமூகத்தின் ஒரு பகுதியாக இருக்கும் எழுத்தாளருக்கும் இது பொருந்தும்.

இந்திய அளவிலும் உலக அளவிலும் ஏற்பட்ட மாற்றங்கள் பாரதிதாசனைப் பாதித்துள்ளன.

அயர்லாந்து வெர்ஹேரன்,சேக்சுபியர் விக்டர் யூகோ, டால்ஸ்டாய், இரவீந்திரநாத் தாகூர், காளிதாசன், முதலியோரை நன்கு அறிந்திருந்தார் என்பதற்கு அவர் பாடல்களே சான்றாக உள்ளன.

**அயர்லாந்தில் வெர்ஹேரன்**
**எனும் கவிஞன் ஐரீஷ்மொழி**
**வளரச்செய்தான்**
**அயர்லாந்தும் அதன்பிறகே**
**உணர்வுபெற லாயிற்றென்(று)**
**அறிஞர் சொல்வார்**

ஸ்ரீசுப்ரமணிய பாரதி கவிதா மண்டலம் 01.12.1935

**ஜாரின் கொடுமை தாங்கா உருசியம்**
**ஏருற லெனினை ஈன்றே தீரும்**
**செல்வர் சில்லோர் நல்வாழ் வுக்கே**
**எல்லா மக்களும் என்ற பிரான்சில்**
**குடிகள் குடிகட்கு எனக்கவி குவிக்க**
**விக்டர் யூகோ மேவினான் அன்றோ**

(திருச்சிப் வானொலி பாட்டரங்கப் பாடல் 01.09.1946)

இந்திய தேசியப்பற்றிலிருந்து விடுபட்டு திராவிட இயக்கப்

பற்றுக்கு மாறி, ஒடுக்கப்பட்ட மக்களின் உயர்வுக்குப் பாடுபடும். தமிழ்த் தேசிய பாவலராக பாரதிதாசன் மலர்ச்சி பெற்றதற்கு அவரின் பரந்த அறிவும் உலகப் பார்வையும் ஒரு காரணம்,

பெரியாரின் தலைமையை ஏற்றுக் கொண்ட அவர், பண்பாட்டு ஒடுக்குமுறைக்கு எதிரான போர்முரசாகத் தம் படைப்புகளை ஒலிக்க வைத்தார்.

**பாரதிதாசன் புதியபோக்குகள்**

பல்வேறு புதிய பாடுபொருட்களைத் தமிழ் இலக்கியம் சந்தித்தது பாரதிதாசன் வழியாகத்தான்,

தமிழ்ப் பாவலர்களில் பாரதிதாசனுக்கு முன் எவரும் நாடகம் எழுதியதில்லை. திராவிடர் இயக்கத்திலும் பகுத்தறிவு முழங்கிய முதல் நாடகம் பாரதிதாசன் எழுதிய இரணியன் அல்லது இணையற்ற வீரன் நாடகம்தான்!

கதர், மதுவிலக்கு, கைம்பெண் மறுமணம், பற்றி பாரதி பாடியதில்லை; பாரதிதாசன் பாடியுள்ளார்.

பெரியார் குடும்பக் கட்டுபாட்டை ஆதரித்து 1929 இல் குரல்கொடுத்தார்.

**காதலுக்கு வழிவைத்துக் கருப்பாதை சாத்த**
**கதவொன்று கண்டறிவோம் இதில் என்ன குற்றம்?**

என அதனையே பாடலாக்கிவிட்டார் பாரதிதாசன் குடும்பக் கட்டுப்பாட்டை வலியுறுத்தி இந்தியத் துணைகண்டத்தில் எழுந்த முதல் இலக்கிய குரலாக அவர் பாடல் பாராட்டப்பெறுகிறது.

நாட்டு நடப்புகளை உடனுக்குடன் பாட்டு வாகனத்தில் ஏற்றி விடுவது பாரதிதாசன் வழக்கம்.

**குவெட்டாவில் கூட்டுக்கொலை**

**பீகார் புகம்பம்**

**ஜாதி ஆபத்து எம்டன் கப்பல் வரவு**

முதலிய படைப்புகள் அவர் எண்ணங்களையும் கூர்மையான பார்வையும் வெளிப்படுத்துபவை.

தமிழ், தமிழர், தமிழ்நாடு என அழுத்திப் பேசியதற்கு அவர் உலக் மொழிகளையும் தேசிய இனங்களின் விடுதலை வரலாற்றையும் அறிந்த தனால் பெற்ற விழிப்புணர்ச்சிதான் காரணம்.

இந்தியத் துணைக்கண்டத்தில் கடவுள் மறுப்பை உரத்துப் பேசும் முதல் நாத்திக இயக்கம் இந்து சுயாக்கியானிகள் சங்கம் என்ற பெயரில் எழுந்தது. அந்த அமைப்பு நடத்திய தத்துவவிவேசினி (1882-1888) இந்தியாவின் முதல் நாத்திக இதழ்.

வள்ளலார் பற்று மிகுந்த குடும்பத்தில் பிறந்த பாரதிதாசனை மதச்சார்பற்ற அவ்விதழ் ஈர்த்துள்ளது. பாரதிதாசன் படித்த த த்துவ்வேசினி இதழ்த்தொகுப்பு அவர் கையொழுத்துடன் சென்னை அண்ணா அறிவாலயம் நூலகத்தில் இப்போதும் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

சிதறிக் கிடந்த முற்போக்கு இயக்கங்கள் பெரியாரியக்க தொடர்பிற்குப் பின் முழு உருவம் பெற்று பாரதிதாசன் வழியாக ஆற்றலுடன் பேசத் தொடங்கின.

**கடவுள் கடவுள் என்றெ தற்கும்**
**கதறு கின்ற மனிதர்காள்**
**கடவுள் என்ற நாம தேயம்**
**கழறி டாத நாளிலும்**
**உடைமை முற்றும் பொதுமை யாக**
**உலகு நன்று வாழ்ந்ததாம்**
**கடையர் செல்வர் என்ற கொள்கை**
**கடவுள் பேர்இ ழைத்ததே**

சமூகச் சிக்கல்களைத் தீர்க்க விரும்புமிடத்தில் கடவுள் மறுப்பு இருந்தே தீரும் எனப் பாரதிதாசன் சிந்தனை முதிர்ச்சியோடு தெளிவுபடுத்தினார்.

சுயமரியாதை என்று பெரியார் சொன்னது கூட, அவ்வையார் சொன்னதன் தொடர்ச்சியே என்று தமிழ் மரபிலிருந்து வேர்காட்டும் தனித்தன்மையை பாரதிதாசனிடம் பார்க்கிறோம்.

**“சுயமரியாதை என்பதற்குத் தன்மானம்**
**என்பது பொருளாதலின் தேசமக்கள்**
**எல்லாம் தம் மரியாதையைக் காத்தல்**
**வேண்டும் என்பதே சுயமரியாதைக் கொள்கையாம்.**
**"தேட்டம் மரியாதை**
**காணும் மகிதலத்தீர் என**
**ஔவை மொழிந்த தாய் வழங்கும்**
**முதுமொழியும் காண்க**

(புதுவை முரசு 10.11.1930, பக், 10)

(பாவேந்தர் 22 ஆம் தொகுதி, தமிழ்மண் 2009, பக். 3)

**திருமந்திரம் திருவாசகம்**

பழந்தமிழ் இலக்கியங்களைப் பகுத்தறிவுத் தராசில் எடைப்போட்டுக் காட்டியவர் பாவேந்தர் பாரதிதாசன். திருமூலர் பாடியவை மூவாயிரம் பாடல்கள் எனச் சேக்கிழார் குறிப்பிட்டுள்ளார்.

இப்பொழுது கிடைக்கும் திருமந்திரத்தில் 47 பாடல்கள் கூடுதலாக கிடைக்கின்றன. அவை இடைச்செருகல் எனப் பாட்டிலேயே பகுத்தறிவுக் கணைதொடுத்தார்.

**மூவா யிரம்சொன்னார் மூலனென்றார் சேக்கிழார்**
**பாவேது மேல் நாற்பான் ஏழ்?**

பாரதிதாசன் பன்மணித்திரள், பக். 288

பாவேந்தம் 17 ஆம் தொகுதி,பக்.176

திருமூலர் பாடியனவாக 47 பாடல்களை இடையில் சொருகிய வைதீகர்கள் திருமூலர் காலத்தில் தமிழ்நாட்டிலேயே இல்லாத விநாயகர் வணக்கத்தையும் நுழைத்துள்ளார்கள். என்று அம்பலப்படுத்தினார். திருமந்திரத்தின் முதற்பாடல் "ஒன்றவன் தானே" எனத் தொடங்குமென்று சேக்கிழார் கூறியதையும் பாட்டாகவே நினைவுபடுத்தினார்.

**ஒன்றவன்தானே எனல்என்று சேக்கிழார்**
**நன்று நவின்றார்அன் றோ?**
**ஐந்து கரத்தினை ஆனதொரு செய்யுள்செய்து**
**முந்தவைத்தார் மூலன் நூலில்**

பிள்ளையார் வழிபாடு உருவாவதற்கு முன்பே உருவெடுத்த நூல் திருவாசகம் என்று பகுத்தறிவை பக்தி வழியிலும் விளங்கவைத்த தனித்தன்மை பாவேந்தருக்கே உரியது.

**கூனாம் கொடும் பல்லன் தோன்றுமுன் தோன்றியதே**
**தேனாம் திரு வாசகம்**

**பெரியார் வழி முதல் மூன்று நூல்**

பெரியார் இயக்கத் தொடர்பினைப் பெற்றபின், சமுதாய விடுதலையை நோக்கமாகக் கொண்டு 1930 இல் மூன்று நூல்களை வெளியிட்டார்.

**தாழ்த்தப்பட்டோர் சமத்துவப் பாட்டு**

**சுயமரியாதை சுடர்**

சஞ்சீவி பர்வதத்தின் சாரல்

அனைவரையும் படைத்தது கடவுள் எனபது உண்மையானால்,

கோவிலுக்குள் நுழையும் உரிமை அனைவருக்கும் இருக்க வேண்டுமே! நாய், காகம் நுழைய அனுமதிக்கிறார்கள் நாயைவிடக் கீழானவர்களா தாழ்த்தப்பட்டோர் ? பாரதிதாசன் கேட்டார்.

**குக்கலும் காகமும் கோவிலில் போவதில்**
**கொஞ்சமும் தீட்டில்லையோ? நாட்டு**
**மக்களி லேசிலர் மாத்திரம் அந்த**

**வகையிலும் கூட்டிலையோ!**

தமிழில் தோன்றிய தலித் இலக்கியத்தில் முதல் வரிசைக்குரிய நூல் பாரதிதாசனின் தாய்த்தப்பட்டோர் சமத்துவ பாட்டு

**சேரி பறையரென்றும்**
**தீண்டாதார் என்றும் சொல்லும்**
**வீரர் நம் உற்றாரடி-சகியே**
**வீரர் நம் உற்றாரடி**

தாழ்த்தப்பட்டோரை நம் உறவினராகப் பார்க்க வேண்டும். எனச் சொல்லும் பாரதிதாசன் ஆரியரையும் வேதத்தையும் ஏற்க மறுத்த வீரர்களை சேரியில் வைத்தார்கள் என வரலாற்றுப் பார்வையுடன் விளக்குகிறார்.

**பழி வேதம் ஒப்போமென்ற**
**பண்டைத் தமிழர் தம்மை**
**கழுவேற்றிக் கொன்றாரடி-சகியே**
**கழுவேற்றிக் கொன்றாரடி**
**ஆரியர் தமை ஒப்பா**
**ஆதித் திராவிடரைத்**
**சேரியில் வைத்தாரடி-சகியே**
**சேரியில் வைத்தாரடி**

தாழ்த்தப்பட்டோர் நெஞ்சத்தில் பாரதிதாசன் நிலைத்திருப்பதைக் காரணத்தோடு விளக்குகிறார் ஆர்.கே.கண்ணன்.

“சமயம் கிடைக்கிறபோதெல்லாம் தமது கவிதையில் பாரதிதாசன் பொதுவுடமையைப் பற்றி வீறுடன் பாடுகிறார் என்ற விஷயத்தை இத்துடன் கூட்டிக் கொண்டு ஒரு கணம் சிந்தித்துப் பார்ப்போமானால் சேரி மக்களின் அன்புக்கு அவர் பாத்திரமாயிருப்பதில் உள்ள வரலாற்று வகைப்பட்ட முக்கியத்துவமும் அர்த்தமும் புலனாகும்.

மனிதனுக்கு கார்க்கி கற்பிக்கின்ற சிறப்பை, மாண்பை, மேன்மையை நம் நாட்டு நிலைமைக்கு பொருத்தி அர்த்தம் காண வேண்டுமென்றால் குறைந்தபட்சம் பாரதிதாசனை புரிந்துக் கொள்ளவாவது நாம் முயற்சிக்க வேண்டும்.

(ஆர்.கே.கண்ணன், பாரதிதாசன் பணியும் அணியும், என்.சி.பி.எச். 2005,பக். 2122)

**சுயமிரியாதைச் சுடர்**

இந்நூலுக்கு புதுவைமுரசு 09.11.1931 இதழில் வெளிவந்துள்ள விளம்பரம் இது:-

***இதில் பத்து எளிய தமிழ் விருத்தங்கள்***

*வெகு இனிமையாகவும் எல்லோரும்*

*பொருள் தெரிந்துக் கொள்ளக்கூடிய*

*வகையிலும் அமைந்துள்ளன.*

*கிண்டற்காரன் எழுதியது. கவிச்சுவை*

*உடையது. விலை காலணா (0.0.3)*

*நூறு புத்தகம் ரூ 1.*

பாரதிதாசன் இந்நூலை "கிண்டற்காரன்" எனும் புனைபெயரில் வெளியிட்டுள்ளார்.

குத்தூசி குருசாமி அவர்களுக்கு இந்நூலைக் காணிக்கையாக்கி உள்ளார். "புதுவைமுரசு ஆசிரியர் எஸ்.குருசாமி பி.ஏ. அவர்கட்கு ஸமர்பணம்" என எழுதியதோடு பாடலும் எழுதியுள்ளார்.

**திருவாரூர்த் தேரைத் தெரிசித்துப் போக**
**வருவார் கழுத்து வளைக்க வளை யாதது போல்**
**நட்ட தலை நிமிர்த்தும் நம்பிக்கை யில்லாமல்**
**தொட்ட எழுதுகோல் தொட்ட படியுழைக்கும்**
**ஆசிரிய ராக அமர்ந்த குருசாமி**
**பேசரிய வாய்மையன் என் நண்பன் அன்னோன்**
**உயர்முன் சமர்ப்பித்தேன் உரைத்த இதன்பேர்**
**சுயமரி யாதைச் சுடர்**

புதுவைமுரசு இதழுக்கு 29.12.1930 முதல் 04.05.1931 வரை ஆசிரியர் பொறுப்பு வகித்தவர் குத்தூசி குருசாமி. பாரதிதாசன் எழுதிய கவிதைகளைத் திரட்டிப் பாரதிதாசன் கவிதைகள் என நூலாக முதன்முதல் 1938 இல் வெளியிட்டோர் குத்தூசி குருசாமி குஞ்சிதம் குருசாமி இருவரும்

**நகையோ பகட்டான ஆடைகளோ**
**அணிந்து வரக்கூடாது எனப் பாதரியார்**
**தேவாலய அனுமதிக்கு விதிவகுத்துள்ளார்**
**அந்த அறிவிப்புக்குப் பின் தேவாலயத்திற்கு வரும்**
**பக்தர்கள் எண்ணிக்கை குறைந்துவிட்டது**
**பக்தர்கள் தேவாலயம் வருவது பக்திக்காக**
**அல்ல, வசதியைப் பறைசாற்ற**

என்ற

உண்மை பாதரியாருக்கு அதன்பின் புரிந்தது. அதற்குப்பின் வந்த அறிவிப்பைக் கிண்டலாகச் சொல்கிறது பாவேந்தர் பாடல்

**நிலைகண்ட பாதிரியின் எட்டுறுப் பேஅன்றி**
**நீள் இமைகள் உதடு நாக்கும்**
**நிறைய நகைபோடலாம் கோயிலில் முகம் பார்க்க**
**நிலைக்கண்ணாடியும் உண்டென**
**இலை போட்(டு) அழைத்ததும் நகைபோட்ட பக்தர்கள்**
**எல்லலோரும் வந்து சேர்ந்தார்**
**ஏசுநா தர்மட்டும் அங்கு வரவில்லையே**
**இனிய பாரத தேசமே**
**சஞ்சீவி பர்வதத்தின் சாரல்**

புதுவைமுரசு 10.11.1930 இதழில் வெளிவந்த இந்த நூலுக்கான விளம்பரம்

***சஞ்சீவி பர்வதத்தின் சாரல் பாரதிதாஸன்***

***விலை அணா 1. அஞ்சலில் பெற விலை 1.5 அணா ஸ்டாம்ப் அனுப்ப வேண்டும்.***

தாழ்த்தப்பட்டோர் சமத்துவப் பாட்டு, சுயமரியாதைச் சுடர், சஞ்சீவி பர்வதத்தின் சாரல் எனும் மூன்னு நூல்களும் முறையே தீண்டாமைக் கொடுமை, சுயமரியாதை, மூடநம்பிக்கை ஒழிப்பு பற்றிப் பேசுவன

இம்மூன்றிலும் சஞ்சீவி பர்வதத்தின் சாரல் கற்பனைக் கதையாக அமைந்தது. இராமாயண எதிர்ப்பையும் இந்திய விடுதலையைவிட சமூக விடுதலையே முதன்மையானது என்பதையும் மூடநம்பிக்கை ஒழிப்பையும் பெண்மையின் உயர்வையும் நயம்பட விளக்கும் அழகிய பாவியம்.

சென்னையிலிருந்து மாமல்லபுரத்திற்குப் படகில் செல்லும் பொழுது அரங்கேற்றப்பட்ட பாவியம் இது. மயிலை சீனி வேங்கடசாமி, சாமி சிதம்பரனார், நாரண துரைகண்ணன், குத்தூசி குருசாமி, மாயவரம் நடராசன் முதலியோர்.

**சஞ்சீவி பர்வத சாரல்–எனச்**
**சாற்றும் சுவடி திறந்து**
**அஞ்சாறு பக்கம் முடித்தார் மிக்க**
**ஆசையி னால் ஒரு தோழர்**
*படகில் பாவியம் அரங்கேற்றிய நிகழ்ச்சியை*
*மகாபலிபுரச் செலவு எனத் தனிகவிதையாகப்*
**படைத்துள்ளார் பாரதிதாசன்.**
**சுயமரியாதை வீரர்களின்**
**பாதங்களில் இந்நூலைச்**
**ஸமர்பணம் செய்கிறேன்**

*இந்நூலுக்கான காணிக்கை வாசகமாக இதனை*
*எழுதித் தம் சுயமரியாதை நெஞ்சை*
*உயர்த்திக் காட்டியுள்ளார் பாரதிதாசன்*

**மூடப்பழக்கம் முடிவற்ற கண்ணுறக்கம்**
**ஓடுவது என்றோ ஒழிவது என்றோ**

பாவேந்தர் ஏக்கத்தின் கவடிவமே சஞ்சீவி பர்வதத்தின் சாரல்

**பெரியார் புகழ்**

அறிவுக் கண்களைத் திறந்து தன்மான மூச்சு வழங்கித் தமிழரை நிமிர்ந்து நடக்க வைத்தவர் பெரியார். தம் இலக்கியக் கைகளால் அவரை ஏந்தி ஏந்திப் பாராட்டி மகிழ்ந்த பாவலர்களில் பாரதிதாசனுக்கு இணையான ஒருவரைக் காட்டுவது இயலாது.

**ஈரோட்டார் என்பெரியார்**

**மக்களிலே தாழ்வுயர்வு**
**போராட்டம் வேரற்றுப்**
**போனால் உலகில்**
**நலிவில்லை எய்தும்**
**நலமென் றருளினார்**

என் பெரியார் என உரிமை பாராட்டும் பாரதிதாசன் அவர்தாம் பெரியார் என எல்லோருக்கும் அடையாளம் காட்டுவார்.

சிறையிலிருந்து விடுதலையான பெரியாரைப் பல்லா யிரக்கணக்கான மக்கள் சிதம்பரத்தில் 29.06.1958 ஆம் நாள் அழகிய தேரில் அமரவைத்து ஊர்வலமாக அழைத்து வரும் காட்சியைப் பார்த்ததும் பாரதிதாசன் மனம் துள்ளுகிறது. அங்கேயே தாள் வாங்கி அக்காட்சியை அப்படியே கவிதை ஓவியமாக்குகிறார்.

**அவர்தாம் பெரியார் பார்**
**அவர்தாம் பெரியார்**
**அன்பு மக்கள் கடலின் மீதில்**
**அறிவுத் தேக்கம் தங்கத் தேரில் (அவர்தாம்)**
**தொண்டு செய்து பழுத்தபழம்**
**தூய தாடி மார்பில் விழும்**
**மண்டைச் சுரப்பை உலகுதொழும்**
**மனக் குகையில் சிறுத்தை எழும் (அவர்தாம்)**

குயில் 26.08.1958 இதழில் வெளிவந்த முழுப்பாடல், சீர்காழி கோவிந்தராசன் குரலில் இசைத்தட்டாகவும் வெளிவந்தது.

பெரியார் பற்றிப் பாவேந்தர் பாடிய அனைத்தும் புதிய நோக்கின.

“நிலவு போன்ற முகம்” என்பதற்கு மாறாக பெரியார் முகம் போன்ற நிலவு எனப் பாடுவார்.

**மக்கள் வாழும் உலகினில்**
**மதங்கள் சாதி வேற்றுமை**
**சுக்கு நூறாய் ஆக்கிய**
**தூய பெரியார் முகம் என**
**அக்க ரைக்கண் தோன்றிடும்**
**அழகு நிலவில் மூழ்குவாய்**

திராவிட இயக்கத்தின் முதல் பகுத்தறிவு நாடகமான **இரணியன் அல்லது இணையற்ற வீரன்** நாடகத்தை 09.09.1934 இல் நூலாக்கிய போது தந்தை பெரியாருக்கு காணிக்கையாக்கினார்.

**சுயமரியாதை இயக்கங் கண்டாரும்**
**பார்ப்பனரல்லாத மக்கட்கு உழைப்பதை**
**தன் கடன் எனக் கொண்டாரும்**
**தற்பொழுது தமிழுக்காகச் சிறையிலிருப்போருமாகிய**
**தமிழர் திலகம் புரட்சியின் சிகரம்**
**பெரியார் ஈ.வெ.ராமசாமி அவர்களுக்கு**
**இந்நூல் ஏற்புடைத்து**

பகுத்தறிவுக் கருத்தைப் பரப்புவதில் இந்நாடகத்திற்கு உள்ள

ஆற்றலைக் கண்டு அஞ்சிய அன்றைய ஆட்சியாளர்கள், நூலைத் தடை செய்ததோடு நாடகமாக நடித்தவர்களையும் ஒப்பனையைக் கூட கலைக்கவிடாமல் விலங்கிட்டு வீதியில் நடக்க வைத்து இழுத்துச் சென்ற நிகழ்ச்சிகளெல்லாம் என்றும் நினைவூட்டப்பட வேண்டியவை.

**நாத்திக நெஞ்சம்**

சென்னை எழும்பூரில் ஒயிட்சு மண்டபத்தில் 31.12.1933 ஆம் ஆண்டு நிகழ்த்திய நாத்திகர் மாநாட்டில் நான் நிரந்தரமான நாத்திகன் என எழுதிக் கையொழுத்திட்டார் பாரதிதாசன்.

**காசைப் பிடுங்கிடு தற்கே - பலர்**
**கடவுளெ ன்பார்இரு காதையும் மூடு**
**கூசி நடுங்கிடு தம்பி–கெட்ட**
**கோயிலென் றால்ஒரு காதத்தில் ஓடு**

இந்த அறிவுரையை இறுதிவரை தாமும் தம் வாழ்க்கையில் பின்பற்றினார்

இறக்கும் தருவாயில் சென்னை மருத்துவமனையில் படுத்திருந்த பாரதிதாசன் நெற்றியில் அப்பா என்றழைத்தபடி அன்பு மிகுதியால்

ஒரு பெண் திருநீறு பூச முயன்றார். "என்ன மந்திரமா" எனச் சினத்துடன் சீறியபடி மதச்சின்னத்தை தட்டிவிட்ட நாத்திக நெஞ்சுரம் இறுதிவரை அவரிடம் மாறாமல் இருந்தது

**தமிழ்ப்பாடல் மதம்சாதி மூட எண்ணம்**
**தரும்பாட்டாய் இருப்பதிலும் இலாமை நன்று**

இப்படி அடித்துப் பேசும் ஆண்மையே அவரின் அடையாளம். பக்திப் பாடல் எழுதுவோரைப் பார்த்துச் சொற்களை எறிகணையாக்கி வீசுவார்.

**மாடுகளும் வழக்கத்தால் செக்கைச் சுற்றும்**
**மடையர்களும் எழுதிடுவார் கடவுள் பாடல்**

மடத்தலைவர்களைச் சார்ந்து வயிறு வளர்க்கும் புலமையாளர்களை எண்ணி மனம் வருந்துவார்.

**குடிக்கவும் நீரற்று இருக்கும்-ஏழைக்**
**கூட்டத்தை எண்ணாமல்**
**கொடுந்தடி யர்க்கு**
**மடங்கட்டி வைத்ததி னாலே  தம்பி**
**வசங்கெட்டுப் போனது நம்நன் னாடு**

தீர்வையும் தெளிவையும் ஒருங்கு நிறுத்தி சிந்திப்பன பாரதிதாசன் பாடல்கள்.

**எப்பொழு தும்னை லெனினால் ஸ்டாலினால்**
**புதுமை கொணர்ந்த பொதுமை நாட்டை**
**மதுத்தமி ழாலே மடுக்கும்என் பாட்டு**

தம் அரசியல் பார்வையை தெளிவுப்படுத்தும் பாரதிதாசன் ஜனசக்தி முதல் இதழுக்காகப் பாடல் எழுதிக் கொடுத்தார்.

**புதியதோர் உலகம் செய்வோம் – கெட்ட**
**போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்**
**பொதுவுடமைக் கொள்கை**
**திசையெட்டும் சேர்ப்போம்**

முதலாளி, மதவாதி இருவரையும் எதிரிகள் பட்டியலில் நிறுத்திப் புதிய பார்வையை வழங்கினார்.

**கடவுளை மதத்தை காப்பவர் என்போர்**
**கருணை இலாநிலம் பொருள்நனி கொண்டோர்**
**உடைமை பறித்தஇக் கொடியரில் கொடியர்**
**ஒழிந்தபின் பேநலம் உறுவரிவ் வுலகோர்**

முதுகில் அமர்ந்த முதலாளி, மூளைக்குள் அமர்ந்த மதவாதி இருதரப்பையும் ஒருசேரத் துடைத்தெறிவதன் மூலமே உலகம் நலமடையும் என்பது பாரதிதாசன் தரும் தெளிவு.

உலகின் பொதுச்சிக்கல் மதம் இந்த மண்ணின் தனிச்சிக்கல் சாதி இவற்றைப் புதுப்பாதையில் புலப்படுத்துவது பெரியார் நெறி.

மக்களை அடக்கி ஆள நினைக்கும் ஆதிக்கவாதிகள் மக்களின் அறிவு இருட்டாகவே இருக்கவேண்டும் என்று எண்ணுகிறார்கள்.

**ஆலயம் சாமி அமைத்தவர் யாரடி தோழி? மக்கள்**
**அறிவை இருட்டாக்கி ஆள நினைப்பவர் தோழா!**

கலை இலக்கியம் மூலம் சிந்தனைக்குக் குழிபறிக்கும் சீரழிவுக் காரர்களை மன்னிக்ககூடாது என்பார் பாரதிதாசன்.

**ராமாயணம் சொல்லி நாளைக் கழிக்கின்ற**
**ஏமாந்தார் காசுக்கு எஜமானன்**

என்று காலக்கொலையும் கருத்துக் கொலையும் செய்கின்ற மதவாதப் பேச்சு வணிகர்கள் குறித்து எச்சரிக்கை செய்வார்.

**மாணுறும் தன்னம்பிக்கை வளர்ப்பது நலமா?**
**வயப்படும் பக்தியினால் பயப்படல் நலமா?**

என வினா எழுப்பி, தன்னம்பிக்கைத் தரும் பகுத்தறிவுப் படைப்புக்கு வலிமை சேர்த்தன பாரதிதாசனின் படைப்புகள்.

**எதிர்ப்பு நெருப்பில் கருகாதவர்**

வருண ஒழிப்பு, சமதர்ம சமூக அமைப்பு, தமிழ்த் தேசிய விழிப்புணர்ச்சி எனும் இலக்குகளை நோக்கியே பாரதிதாசன் படைப்புகள் நகர்ந்தன.

நம்பிய கருத்தை நடைமுறைபடுத்துபவனே மனிதன். இடத்திற்கு ஏற்ப தன்னை விலைபேசி விற்பவன் மனித விலங்கு. இந்த வரையறையோடு வாழ்ந்தவர் பாரதிதாசன்.

**பெற்றதன் கொள்கையை பிறர்கை மாற்றுவோன்**
**உற்றது உரைக்கும் ஒழுக்கம் தீர்ந்தவன்**
**கொள்கையை விலைக்கு கொடுக்கும் மனிதன்**
**மனிதருள் வாய்ந்த மனித விலங்கு**

அச்சத்திலிருந்தும் ஒடுக்குமுறையிலிருந்தும் மனிதரை விடுதலை செய்வது பெரியார் நெறி அதனையே தன் இலக்கிய நெறியாக ஏற்றுக் கொண்டவர் பாரதிதாசன்

நடைமுறைகளையும் உலக நிகழ்வுகளையும் கணக்கில் எடுத்து முன்னேறிய அவர் படைப்புகள், சமூக அடுக்குகளை மோதிச் சிதைப்பதையே நோக்கமாகக் கொண்டவை.

பாரதிதாசனின் குறிக்கோள் வாசகமும் கையொப்பமும் கேட்டு 04.10.1942 இல் மடலிட்ட செட்டி நாட்டரசரின் பெயரனுக்கு அவர் இப்படி எழுதி அனுப்பினார்.

**"சாதிகள் இல்லை மதம் மக்கட்கு அபின்**
**கடவுள் நம்பிக்கை தன்னம்பிக்கை எதிர்ப்பு**
**சாதிப்பற்று சமயப்பற்று**
**கடவுள் நம்பிக்கை இவை ஒழிய வேண்டும்**
**ஒழியாதவரை மக்கள் முன்னேற்றமில்லை**
**நீ புரட்சியைத் தூண்டு, புரட்சி செய்.**

புரட்சியைத் தூண்டிவிட்டு ஒதுங்கிக் கொள்பவராக இல்லாமல், நீயும் பங்கெடு என ஆணையிடுகிறார் பாரதிதாசன். அந்த உணர்வின் விளைச்சலாய் மலர்ந்தவையே அவரின் படைப்புகள்.

**நன்றிங்கு வாழ்ந்திட வேண்டும்-உரம்**
**வேண்டும்-திறம்**
**வேண்டும்-நம்**
**ஞாலம் பெரியார் சொல்லும் பாதையினை**
**விடாதே**
**விடுதலைப் பெரும்பயன் ஈண்டும்**

உலகப் பெரியாராகப் பார்த்து அவர் கருத்து மழையில் விடுதலைப் பயிர் முளைக்க உழைக்குமாறு அழைத்த அந்தக் குரல் இன்னும் நெடுங்காலத்திற்குக் கேட்டுக் கொண்டிருக்கும்.

❖❖❖

*செந்தலை ந. கவுதமன்*
*தமிழ்நாட்டரசின்*
*பாவேந்தர் பாரதிதாசன்*
*விருதாளர்.*

*இதழுக்கு ஆதரவு நல்கியோருக்கு நன்றி.*

| | |
|---|---|
| ***ஜவகர், திருவாரூர்*** | *ரூ.1000* |
| ***அறிவன், கோவை*** | *ரூ.1,000* |
| ***காலன்துரை, சென்னை*** | *ரூ.1,000* |
| ***கமலக்கண்ணன், ஈரோடு*** | *ரூ.1,000.* |
| ***மணியன், சென்னை*** | *ரூ.1,000* |
| ***தனசேகர், ஈரோடு*** | *ரூ.1,000* |
| *செந்தலை* ***ந. கவுதமன், சூலூர்.*** | *ரூ.1,000* |

# புதுமலர் இதழ் கிடைக்கும் இடங்கள்

| | |
|---|---|
| பாரதி புத்தகாலயம்,<br>சென்னை. | 72995 79627 |
| ஈரோடு. | 92454 48353 |
| டிஸ்கவரி புக் பேலஸ்<br>சென்னை. | 87545 07070 |
| பனுவல் புத்தக நிலையம்<br>சென்னை. | 97890 09666 |
| அருவி பொத்தக உலகம்<br>சென்னை | 90929 48002 |
| விஜயா பதிப்பகம்<br>கோவை. | 90470 87058 |
| என் சி பி ஹெச்<br>மதுரை. | 94430 44106 |
| திருச்சி | 94425 88495 |
| கோவை. | 94427 64286 |
| ஈரோடு. | 90475 71857 |
| எதிர் வெளியீடு<br>பொள்ளாச்சி | 98650 05084 |
| பாலம் புத்தக நிலையம்<br>சேலம் | 94432 22007 |

❖❖❖